தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் 467

# வைகுந்த அம்மானை



**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

## சரசுவதி மகால் நூலகம்

2004

விலை ரு. [illegible]

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 467

# வைகுந்த அம்மானை

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

புலவர் வீ. சொக்கலிங்கம்

தமிழாசிரியர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்**

2004 விலை ரூ. 160

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

... ✱ ...


| | |
|---|---|
| நூற் பெயர் | : வைகுந்த அம்மானை |
| பதிப்பாசிரியர் | : புலவர் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீடு எண் | : 467 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : செப்டம்பர் 2004 |
| தாள் | : 11.2 கி.கி. தமிழ்நாடு |
| நூல்அளவு | : 34×48 செ.மீ. |
| பக்கங்கள் | : 358 |
| படிகள் | : 250 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வேலன் பிரஸ்,<br>132, S.P. கோயில் தெரு, சிதம்பரம்.<br>☎ 220118 |
| புத்தகக் கட்டு | : அட்டைக் கட்டு |
| பொருள் | : இலக்கியம் |
| விலை | : 160—00 |

# வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் மேனாள் தமிழ்ப் பண்டிதர் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்களால் தமிழ்ச் சுவடிகள் பிரிவில் வரிசை எண். 911 குறிக்கப்பெற்ற 35 ஏடுகளைக் கொண்ட "வைகுந்த அம்மானை" எனும் ஓலைச்சுவடியும், 1368-ஆம் எண் குறிக்கப்பெற்ற 329 ஏடுகளைக் கொண்ட "வைகுந்த அம்மானை" எனும் ஓலைச்சுவடியும், பதிப்பிக்கப்பெற்று வெளிவருவதே இந்நூலாகும்.

பகைவர்க்கும் அருள்வேண்டும் எனும் உயர்குண நீதியைப் புகட்டுவதே இந்நூலின் சாரமாகும் பாரதக் கதையை மையமாகக் கொண்டு அமைந்த இவ்வம்மானை நூலில் பல இன்னல்களுக்குப் பிறகு வைகுந்தம் புகுந்த பாண்டவர்களில் மூத்தவரான தருமர், தங்களுக்குத் தாங்கொணாத இன்னல்கள் செய்த துரியோதனாதியர் முதலான கௌர வர்கள் நரக லோகத்தில் படும் இன்னல்கள் கண்டு பொறாதவராய், அவர்களுக்கும் சுவர்க்கப்பேறு கிட்டவேண்டும் என்பதற்காகத் தனது தருமத்தில் பாதியைத் தந்து அவர்களையும் சுவர்க்கத்திற்கு அழைத்த தையே அம்மானைப் பாடல்கள் வழி இந்நூல் விவரிக்கின்றது.

இங்கு பதிப்பிக்கப் பெற்ற இரண்டு வைகுந்த அம்மானைச் சுவடி களைத் தவிர இந்நூலகத்தில் உள்ள இதே தலைப்பில் அமைந்த பிற சுவடிகளையும், அச்சு நூல்களையும் ஒப்பிட்டு பதிப்பாசிரியர் நல்ல முகவுரையும் எழுதியுள்ளார். இந்நூல் தமிழ் இலக்கிய உலகிற்கு நல்ல வரவாக அமையும் என நம்புகிறேன்.

இந்நூல் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலைச் செம்மையுற பதிப்பித்த பதிப்பாசிரியர் புலவர் வி. சொக்கலிங்கம், சிறந்த பதிப்பாக வெளிக்கொணர்ந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது)மற்றும் சரசுவதி மாகல் நூலக நிருவாக அலுவலர் திரு. வே. **இலட்சுமணன், M.A.**, வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் மு. பாலசுப்ரமணியன் ஆகியோரையும், நூல் வடிவம் தந்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

டாக்டர். **ஜெ. ராதாகிருஷ்ணன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
**இயக்குநர்**,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
31—8—2004

# முன்னுரை

"பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத் தீசன்
கண் சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்!

இது, வான் கலந்த மாணிக்க வாசகரின் தேன்கலந்த திருவாசகத்தின் அம்மானைப் பகுதியில் காணப்படுவது.

அம்மனை - தாய் என்னும் பொருளில் வருவது. அம்மானை என்பது, அம்மனை என்பதன் விளியாகக் கொள்ளல் தகும். இச்சொல் ஈறுதிரிந்து 'அம்மானாய்!', 'அம்மானே!' எனவும் வரும். பெண்கள் கையால் காய்களை வீசி எறிந்து ஆடும் விளையாட்டையும், அதற்குப் பயன் படுத்திய (கூழாங்கல்) காய்களையும், அவ்விளையாட்டில் அவர்கள் பாடிய பாடலையும் குறிக்க "அம்மானை" என்பது பயன்படுந்தப் பட்டுள்ளமையை இலக்கிய வளர்ச்சியில் நாம் காணலாகும்.

அம்மானை விளையாட்டை, இளம் பெண்கள் தங்கள் இல்லங் களிலும், தெருவீதிகளிலும் விளையாடுவது வழக்கம்.

"அம்மனை தம் கையில் கொண்டு அங்கு அணியிழையார்
தம்மனையில் பாடும் தகையேலோர் அம்மானை !"

( — சிலப்பதிகாரம் - வாழ்ந்து - 20)

இது, இல்லத்தில் விளையாடுவது.

*பொன்னின் புகார் முத்தின் அம்மனையும் தென்நாகை*
*நன்னிலத்தின் நகைக் கழங்கும் — சென்னிதன்*
*கொற்கைக் குளிர்முத்த வல்சியும் சோறடுகை*
*கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப் — பொற்கொடியார்*
*வீதி புகுந்து விளையாடும் எல்லைக்கண் — என்பது*

ஒட்டக்கூத்தர் பாடிய விக்கிரம சோழனுலா.

அம்மானை ஆடும் பெண்கள் எத்தகைய நிலையில் இருந்து ஆடிப் பாடினர் என்பதை மாணிக்கவாசகர் திருவாசகம் அம்மானைப் பகுதியில் கூறுகிறார். அது:

*கையார் வளைசிலம்பக் காதார் குழையாட*
*மையார் குழல்புரள தேன்பாய வண்டொலிப்ப*
*செய்யானை வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்தறியாக்*
*கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு*
*மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை*
*ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானை.*

என்பது

முதன் முதலாக சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் ''அம்மானை வரி'' — வினாவும் விடையுமாக வரும் இசைப்பாட்டு

*"வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்*
*ஓங்கரணம் காத்த உறவோன் யார்? - அம்மானை*
*ஓங்கரணம் காத்த உறவோன் உயர் விசும்பில்*
*தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண், அம்மானை*
*சோழன் புகார் நகரம் பாடேலோர் அம்மானை!"*

இதனுள், வினாவும் விடையுமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

சிலேடையாகப் பாடப்படும் அம்மானை "மூவரம்மானை". அதன் முதற்பாடல்:

" புந்தி வணங்குழும் பொருவிலாப் பிள்ளையார்
தந்திமுகன் குடவயிறன் சப்பாணி - அம்மானை
தந்திமுகன் குடவயிறன் சப்பாணி ஆமாகில்
இந்தவயிற்றுக் கினாளெங்கே? - அம்மானை
இன்றென்றே ஈசன் இரக்கலுற்றார் - அம்மானை "

மற்றெரு பாடல் நகைச்சுவையாக உள்ளதோடு, ஒருவரியில் ஒரு வரலாற்றைக் கூறும் நுண்ணறிவு பாராட்டுக்குரியது. அது

" ஈசன் பசுவாகி ஏமனொரு கன்றாகி
வீசுபுக ழாரூரின் வீதிவந்தா ரம்மானை
வீசுபுக ழாரூரின் வீதிவந்தா ராமாகில்
காசளவு பாலுங் கறவாதோ அம்மானை.
கன்றையுதை காலி கறக்குமோ அம்மானை "

இதில், முன்னிரண்டு அடிகள் மனுநீதிச்சோழன் வரலாறு. கடைசி அடி மார்க்கண்டேயன் வரலாறு. இம் மூவரம்மானை சிலேடை நயத்தில் சிறந்தது. மற்ற பாடல்களில்

"வாயில் மண்போட்டு வாங்குவர்காண் அம்மானை"
(இவர் வைத்தியநாதர்)

" தப்புந் துறையறிந்து தப்புவர்காண் அம்மானை "
முதலான வரிகள் பொருள் செறிந்தவை.

கலம்பகங்களிலும் " அம்மானை "ப் பாடல்கள் வரும் மதுரைக் கலம்பகத்தில்

" இருவருக்கும் காண்பரிய ஈசன் மதுரேசனார்
விருதுகட்டி அங்கம் வெட்டி வென்றனர்காண் அம்மானை

*விருதுகட்டி அங்கம் வெட்டி வென்றனரேயாமாகில்*
*அருமையுடன் பொன்றிருகூறு ஆவதேன் அம்மானை*
*ஆனாலுங் காயமிலை ஐயரவர்க் கம்மானை "*

யாப்பருங்கல விருத்தியில் நிலைவெளி விருத்தத்திற்கு (சூ.68) எடுத்துக்காட்டுச் செய்யுளாகக் காட்டப்பட்டுள்ளதில் அடிதோறும் அம்மானாய்!' வருவது காணப்படுகிறது. அது:

*" சேயரி நாட்டமுஞ் செவ்வாயு மல்குலுமோ - அம்மானாய்*
*அம்மலருந் தொண்டையுமாழியந் திண்டேரும் - அம்மானாய்*
*மாயிருந்தானை மயிடன் தலையின்மேல் - அம்மானாய்,*
*பாயின சீரடிப்பாவை பகவதிக்கே - அம்மானாய்.*

பெண்பாற் பிள்ளைத் தமிழில் "அம்மானைப் பருவம்" என்ற தலைப்பு காணப்படும். அதில் பாட்டுடைத் தலைவியை 'அம்மானை யாடியருளே!' என்றும், 'ஆடுக அம்மனையே!' என்றும் வேண்டிக் கொள்ளும் இயல்பு காணப்படுகிறது.

உலா இலக்கியங்களிலும், மகளிருடைய விளையாட்டாக அம்மானை காணப்படும். தனிப்பாடல்களாகவும் அம்மானைப் பாடல்கள் காணப்படும்.

இவைகளின் வளர்நிலைதான் கதைப் பாடல்களாக வரும் அம்மானைப் பாடல்களாகும். இவற்றை ஆங்கிலத்தில் பாலட் (Ballad) என்பதனோடு ஒப்பிடலாம் என்பர் புலவர்மணி மு. சண்முகம்பிள்ளை அவர்கள்

' அம்மானைப் பாடல் ' என்பது, கதைப்பாடலின் வேற்றுப் பெயராகவே நிலைத்து விட்டது. முதற்கண் அம்மானைப் பாடல்களாக வளர்ந்து பெருகியபின் ' கதை அம்மானை ' உருப் பெற்றன.

இந்தக் கதையம்மானைப் பாடல்கள், மக்களின் வாய்மொழி இலக்கியம் போல், எளிய பேச்சு நடையில் காணப்படினும், மோனை

நயமும், அடுக்குத் தொடர் அழுத்தமும் அமையப் புலவர்கள் படைத்த படைப்புக்களே. கதையமைப்பில் பயன்படுத்தப்பட்டுவரும் பாடலைக் கலிப்பாவின் வளர்ச்சி என்கிறார், வண்ணச்சரம் தண்டபாணி சுவாமிகள்.

இதனைச் சிலர் தரவு கொச்சகமாக, நாற்சீர் கொண்டு அமைவது என்றும் கருதுகின்றனர். இவ்வாறு கொச்சகச்சீர் கொண்டு பாடுதல் சிறப்புடையதன்று என்றும் சுவாமிகள் கூறுகின்றார்கள். எனவே, வெண் கலிப்பா வகையினவாய் வருதல், அம்மானைக்கதைப் பாடல்களுக்கு சிறப்பாகும் என்பது தெரியவருகின்றது.

அம்மானைக் கதைப் பாடல்களின் ஆதிகருத்தா புகழேந்திப் புலவர் என்பது செவிவழிச் செய்தி.

சோழப் பேரரசின் அரசவையில், ஆத்தானப் புலவராக வீற்றி ருந்தவர் ஒட்டக்கூத்தர். பாண்டிநாட்டுப் புகழேந்திப் புலவர் அரச வைக்கு வந்ததால், இருபுலவர்களுக்கும் பகைமை ஏற்படவே, புகழேந்திப் புலவரைச் சிறைபிலடைத்தான் மன்னன். அவர் சிறையிலிருந்த காலை, அருகிலிருந்த கிணற்றில் தண்ணீர் எடுக்கவந்த பெண்களுக்கு ஏற்றதாக எளிய நடையில் கதை அம்மானைப் பாடல்களை பாடி மகிழ்வித்து, அவர்களது போற்றுதலைப் பெற்றார், என்று விநோத ரச மஞ்சரியில். அட்டாவதானம் வீரசாமிச்செட்டியார் அவர்கள் இந்தச் செவிவழிச் செய்தியினைக் கூறியுள்ளார்.

அல்லி அரசாணிமாலை, பவளக்கொடி மாலை, அபிமன்னன் சுந்தரிமாலை, பஞ்சபாண்டவர் வனவாசம், வைகுந்த அம்மானை முதலியவற்றில், பஞ்சபாண்டவர் வனவாசம் மக்களால் பெரிதும் போற்றப்பட்ட அம்மானை. அடுத்ததாக வைகுந்த அம்மானை.

அடுத்தபடியாக சித்திரபுத்திர நயினார் கதை, அமராவதிக்கதை சிறுத்தொண்டன்கதை, நல்லதங்காள் கதை, புவனேந்திரன் அம்மானை, அரிச்சந்திரன் கதை முதலியன இரண்டாவது இடத்தைப் பெறுகின்றன.

சிவகங்கை அம்மானை, இராமப்பய்யன் அம்மானை, தேசிங்கு ராசன் கதை, மதுரைவீரன் அம்மானை முதலியன வரலாற்று

அடிப்படையில் எழுந்தன. சிலப்பதிகார அடிப்படையில் கோவிலன் கதை எழுந்தது. இதில் வரலாற்றுக்கு முரண்பட்ட செய்திகளும் இருந்தன. அது புலவரின் கற்பனை என்பர். இதன் இறுதியில், கண்ணகியைக் காளி தேவியாக, திருவொற்றியூரில் திருக்கோயிலில் திகழும் 'வட்டப் பாறை அம்மனாக' இப்புலவர் கூறியுள்ளார்.

## வைகுந்த அம்மானை

பாரதப் போர் முடிந்து, தருமர் பட்டாபிஷேகம் பெற்று ஆண்டு வரும் நாளில் துவாபரயுகம் முடிந்து கலியுகம் தொடங்க உள்ளதால், கலியுகத்தில் நீதி நேர்மை தவறிவிடும் என்று எண்ணி, தருமர் முதலான ஐவர், துரோபதையாளுடன் கானகம்புக்கு பல இன்னல்களையும், இடர்களையும் கடந்து செல்லும்போது, துரோபதை, சகாதேவன், நகுலன் அருச்சுனன், பீமன் ஆகியவர்கள் ஒவ்வொருவராக மரணமெய்திய பின்னர், தனித்து செல்லும் போது பல இன்னல்களைக் கடந்து வைகுந்தம் அடைகின்றார். என்பது இந்த அம்மானை கூறுவது.

மற்றொரு அம்மானையில், மகா பாரதப் போரில் குருகுலத்தார் 101 வர் போர்க்களத்தில் மாண்டதன் பின், தருமர் தம்பியுடன் வாழ்ந்து, வீமன் மகன் பரிசித்துவுக்குப் பட்டம் கட்டினார். பின் செனமேசன் பிறந்தான். துவாபரயுகம் போய் கலியுகம் வருகுதென்று தருமர், 'துரோபதை, வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோருடன் கானக வழிநடந்து, பல இன்னல்களை அடைந்து, வழியில், ஒவ்வொருவராக இறக்க, இறுதியில், தருமர் வைகுண்டம் சென்றதை விரித்துக் கூறுகிறது.

பிள்ளைத்தமிழ் பருவங்களை பரிசித்துவுக்கு ஏற்றி கவிபுனைந்திருப்பது வியக்கத்தக்கது.

## கதைகள்

இதில் வரும், உபகதைகள் எல்லாம் மிகச்சிறந்தனவாக உள்ளன. அவற்றுள் ஒன்று.

வெளியூர் வேதியன் ஒருவன் வந்து, உள்ளூர் வேதியனிடம் தங்க இடம் கேட்டான். இவனும் ஒரு குறிப்பிட்ட இடத்தை இலவசமாகத்

தந்தான். அவன்கட்ட மண்தோண்டும் போது புதையல் எடுத்தான. அதை, மனை தந்தவனிடம் கொடுக்க, அவன் வாங்க மறுத்தான்.

புதையல் எடுத்தவன், "நீ மனையைத்தான் தந்தாய், அதிலுள்ள புதையலைத்தரவில்லை. அதனால் உனக்கே சொந்தம். எடுத்துக்கொள்" என்றான். அதற்கு அவன்,

"நிலத்தைக் கொடுக்கும் போதே அதில் உள்ளதெல்லாம் உனக்கே சொந்தம் என்பது தான் நியதி. மேலும், நான் புதையலைப் பார்க்க வில்லை. அது கண்டவனுக்கே சொந்தம். அதனால் நீயே எடுத்துக் கொள்" என்றான்.

வழக்கு தருமரிடம் சென்றது. அவர் "ஒருவாரம் கழித்து வாருங்கள்," என்று அனுப்பினார். நான்கு நாட்களில் கலியுகம் பிறந்து விட்டது. பின்னர் வந்த இருவரும், புதையல் தங்கள் தங்களுக்கே சொந்தம் என்று வாதாடினர்.

இது கலியின் கீர்த்தி (பக்கம் 108 - 113)

திருமாலின் அவதாரச் சிறப்புக்கள், அவர்தம் கருணைத்திறன் பேசப்பட்டுள்ளன.

முன்பு காட்டில், பரிசித்து, தவமுனிவர் மீது, பாம்பினை இட்டதனால், அம்முனிவர், 'உனக்கு பாம்பினால் மரணம்' எனச் சாப மிட்டதை சோதிடர்கள் பரிசித்திடம் சொல்ல, அதனால், கடல் நடுவே மாளிகை அமைத்துக் காவல் வைத்து அதிலிருக்க, கார்க்கோடகன் எனும் பாம்பு, எலுமிச்சம்பழ உருவில் கடலில் மிதந்துவர, அதனை பரிசித்து எடுத்துக் கண்களில் ஒத்த, அவ்வரவம் தீண்டி பரிசித்து இறந்தான். என்பது அழகாக வருணிக்கப்பட்டுளது.

விதியின் பயனை விலக்க, ஒருவன் மொட்டை அடித்துக் கொண்டு பனை மரத்தின் அடியில் படுத்திருக்க பனம் பழம் விழுந்து இறந்தான். அதுபோல பரிசித்து மாய்ந்தான்.

மகன் செனமேசன், தந்தையை உயிர்ப்பிக்க முயன்றான். வேள்வி நடத்தினான். சர்ப்பத்தை அழிக்கத் தீ தொடர்ந்தது.

அயிராபதம் மூலம் இந்திரனை அடைந்து விபரம் கூறியது. சினமேசனுக்கு இந்திரன் சீட்டெழுதி அனுப்பினான். அதில் முனிவன் மேல் செத்தபாம்பினை இட்டநிகழ்ச்சி கூறப்பட்டிருந்தது. அதனைக் கண்டு பயந்து பரிசித்துவுக்கு ஈமச்சடங்குகள் செய்தான்.

தபசி, பாம்பின் விஷம் நீக்கி மன்னனைப் பிழைக்கவைக்க வருகையில், பாம்பு எதிர்நின்று, ''அவன் சாம்பலாகிவிட்டான்; நீர் ஏன் போறீர்'' என்றது. அதற்கு அவர், 'சாம்பலைச்சேர்த்து உருவாக்கி உயிர்ப்பிக்கிறேன்' என்றார். பாம்பு, அப்படியானால்'இந்த மாமரத்தைச் சாம்பலாக்குகிறேன், நீ அதனை மறுபடியும் உருவாக்கு' என்று கூறி மாமரத்தினைச் சாம்பலாக்கியது. அது முடியாமல் தவசி போய்விட்டான்.

விநாயகர் கொம்பையொடித்து மேருவில், பாரதக்கதையை எழுதின வரலாறு வியாச முனிவர் மூலம் சொல்லப்பட்டது. வியாசர், செனமேசனுக்கு வரலாறு கூறுகிறார். முனிவர் மொழி கேளாமல், சூது விளையாடி சண்டையிட்டார்கள். விதிவசத்தால், வனவாசம் போய், துன்பம் அனுபவித்தார்கள். யாகம் செய்தால் பிரமகத்தி தோஷம் வரும் என்று சொல்லி விண்ணடைந்தார் முனிவர்.

மீறி, செனமேசன் யாகம் செய்தான். அந்தணன் மயக்கமுற்று எதிரே புலிவருவது போன்ற பிரமை கண்டு, யாகத்தீயில் விழுந்து இறந்தான். முனிவர் சாபப்படி, செனமேசனுக்கு பிரம்மகத்தி தோஷம் வந்தது. வருந்தினான், பிறகு வியாசர் வந்தார். பாரதக்கதை கேட்டால் பிரம்மகத்தி தோஷம் தீரு மென்றார்.

பாரதப் போரில், வீமன் வீசியெறிந்த மத்தயானை அந்தரத்தில் சுழன்று இறந்து விழுந்தது என்று கூற, 'அது பொய்' என்று சினமேசன் கூற, உடன் அவன் உடலில் வெண்மேகம் கண்டது. பரிகாரம் கேட்டான். ''மீண்டும் பாரதக்கதைகேட்டால் பிரமகத்தி நீங்கும். கரும்பட்டாடை போர்த்திக்கொண்டு, பஞ்சவர்கள் வைகுண்டம் சேர்ந்த கதை கேட்டால் கரும்பட்டாடை வெண்பட்டாடையாகி வெண்மேகமும் நீங்கும்'' என்றார். அவ்வாறே கேட்க, பிரமகத்தியும் வெண்மேகமும் தீர்ந்தது.

இப்படிப்பட்ட கொடிய நோய்களே தீரும்போது, நாம் இக்கதையைப் படித்தாலோ, கேட்டாலோ நம்முடைய துன்பங்கள், இன்னல்கள் நீங்கி இன்புற்றிருக்கலாம் என்பது பெற்றோம்.

## பழமொழிகள்

இந்நூலில் பழமொழிகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சில:

1. உத்த மருமகன்றனக்கு ஒதுங்கிநின்ற மாமியைப்போல். (பக்கம் 171)
2. புண்தனையே கீறி புரையறவே தனாற்றி பண்புடனே தானிருந்தால் பகையாதே ஆறிவிடும். (பக்கம் 223)
3. குவலயத்தில் செல்வக் கொம்பிழந்த மந்தியைப்போல். (பக்கம் 232)
4. பிறவிப் பெருங்கடலைப் பெரியோர்கள் நீந்துதல்போல்.

மற்றும் பல

## சமய ஒற்றுமை

இந்நூல், சைவ, வைணவ வேறுபாடின்றி பாடப்பட்டுளது. பஞ்சாட்சரம் வாழ்க. எட்டெழுத்தும் வாழ்க. என்பதிலிருந்து, இது புலனாகிறது. பஞ்சாட்சரம், 'நமசிவாய', சைவம். எட்டெழுத்து, 'ஓம் நமோ நாராயணாய' வைணவம்.

(96 - வது வரி)

*" நன்றாய்ச் சிவன்றனையும், நாரா யணன்றனையும்*
*ஒன்றாகக் காண்போர் உலகில் மிகவாழி"* (வரிகள் 100,101)
*'விறுதிருநாமமுடன், வெண்ணீறு முண்டாக'* (வரி 98)

ஆங்காங்கே, வரிகள் விடுபட்டும், சீர்கள் குறைந்தும் மிகுந்தும் காணப்படுகின்றன. 125-ஆம் பக்கத்தில் 'பறையாமல்' என்ற சொல் வருகிறது. சொல்லாமல் என்பதனை பறையாமல் என்று சொல்வது மலையாளத்தில் இன்றும் உளது. நல்ல தமிழ்ச் சொல் இது வாகும்.

பக்கம் 97-ல் 'உச்சாயமாய்ப் பேசி' என்ற புதிய சொல் காணப் படுகிறது. பழங்காலத்தில் ஆம் 'என்றசொல்', ஓம் என்றே வழங்கி வந்துளது ஓமென்று சம்மதித்து' பக்கம் 241,

உலகவழக்குச் சொற்களும் பேச்சு வழக்குச் சொற்களும் மருஉச் சொற்களும் மிகுந்து காணப்படுகின்றன.

சிவபூசைக்கு மலரெடுக்க வந்தவர்கள், பெண்ணாசை கொண்டு மயங்கி, மலைப்பாம்பு முதலான சாபம் பெற்றுப் பின் பஞ்சவர்களால் சாப நீக்கம் பெற்ற செய்தி நீதி புகட்டுகிறது.

ஐம்புலனை ஒன்றாக்கி, ரேசக,பூரக கும்பக தியானத்தில் கணபதி வந்துதித்தது பக்கம் 174-இல் காண்லாம்.

போர் பொருது வைகுண்டம் சேர்ந்தோம் என தகுதி மீறிச் சொன்னதால், மலை பஞ்சவரால் விமோசனம் பெற்றது பக்கம்-184.

முனிதேவி - காளி - முனிவனைச் சேர்ந்ததால் குதிரை முகமான பாவம் 185 - ஆம் பக்கம்.

பீமன் ஒருவனே, தோள்கள் மீது, தருமர், அருச்சுணன், கைகள் இரண்டிலும், நகுல சகாதேவர்கள், முதுகில் துரோபதையாள் ஆகியோ ரைத் தூக்கிக்கொண்டு ஆறு கடத்தல், அதிசயமும், பீமனின் உடல் வலியுமாகக் காணப்படுகிறது பக்கம் 186.

ஆறு அணங்கானது, நீதி முனிதேவி, நித்தகன்னி தூங்குமூஞ்சி ஆறானது. ஐவரால் சாப நீக்கம் பெற்றது. பக்கம் 181-187.

மரண அவத்தையும், ஐம்பூதங்கள் ஒன்றினுள் ஒன்று ஒடுங்குவதுத் துரோபதை மரணத்தால் கூறப்படுகிறது, பக்கம் 188, 191-ஆம் பக்கம் சிங்கம் வேதியனானது.

விசுவாசமுனி பூசைக்கு மலர் கொய்யச் சென்றபோது சிங்கத்தின் சண்டை பார்த்து நின்று, பூசைக்குக் காலதாமதமானதால் சிங்கமாகச் சபித்தல் - ஐவாரல் சாப நீக்கம் பெறல் பக்கம் - 192.

முனிவர் முகத்தைப் பார்க்க, பால் பழம் முதலான உணவுப் பொருள்கள் வந்தது வியப்பு. பக்கம் - 193.

## நூலாசிரியர்

இந்நூல் ஆசிரியர் தன் பெயர் கூறுமிடத்து, சீரங்கராசர் சீடன் என்றும், வேங்கியருள் வடவன் என்றும், கூறியுள்ளார்.

*'' எண்ணரிய சீரங்க ராசருட தன்சீஷர்*
*மண்ணுலகில் வேங்கியருள் வடவன் மனமகிழ்ந்து'*

என்பதனல் அறிய முடிகிறது. மேலும்.

*'வாக்கருளிச் செய்ய வடவ னுரைத்த கதை*
*சொல்லுகிறேன் வீனாநகர் சோமலிங்கர் தாள்போற்றி'*

என்பதனாலும் அறிய முடிகிறது. பிறசெய்திகள் தெரியவில்லை.

இதன் ஆசிரியர் தென்வீரையாம் பதியார் என்பது சில இடங்களில் காணப்படுகிறது. இவரைப் பற்றிய செய்திகளும் அறிய இயவில்லை.

சில கதைப்பாடல்களை அம்மானை என்ற பெயரில் புகழேந்திப் புலவர் பாடியதாக அறியக்கிடைக்கிறது. அந்தவரிசையில், அவர் இயற்றியதாகவே ஒரு வைகுந்த அம்மானை இருக்கலாமோ என எண்ண இடமிருக்கிறது.

## அரிய செய்திகள்

இந்நூலில் வியக்கத்தக்க செய்திகள்பல கூறப்பட்டுள்ளன. கானகத்தில் இடும்பி என்பாள் வழிமறிக்க, அவள் வாய்க்குள் சென்று பாண்டவர்கள் வெளிவந்தனர். அதனால் அவள் சாப நீக்கம் பெற்று துரோபதை போலானாள் என்று கூறப்பட்டுள்ளது. யோகிமுனி மகள் சிலகன்னி, முனிவன்யாகத்தைக்கண்டதால் அரக்கியானாள் அவள் இவ்வாறு சாபநீக்கம் பெற்றாள். (பக்கம் 195)

202-வது வரியில் கைலாய அரக்கன் பேசப்டுகிறான். தருமன் கூறியதாக வரும் கதைகள், அமுதங்கடைந்தது, திரிபுரமெரித்தது,

நரசிம்மர்கதை, திருமறைக்காட்டில் எலி விளக்கைத் தூண்டியதால் பேறு பெற்றது, மகாபலிகதை, திருவண்ணாமலை கதை முதலியன.

ஓரடி மண்ணுக்காக பாதாளத்தில் தள்ள வேண்டியதற்குப் பதிலாக விண்ணுலகுக்கனுப்பியது புதுமை. உலகத்தோற்ற ஒடுக்கத்தத் துவம், திருமால் திருவிளையாடல்கள், திருமாலும், பிரமனும் போரிட்ட வருணனை சிறப்பு, சிவன் தழல்மலையாகக் காணப்பட்டது போன்ற திருவண்ணாமலை கதை முதலியன படித்து இன்புறத்தக்கன.

கண்ணனை வதைக்க வந்த, கம்சன், சகடாசுரன், பூதனை, கன்று குணிலா எறிந்தது: விளவுதீர்த்தது, மருது உதைத்தது காளிங்க நடனம் முதலியனவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

303 - ஆம் பக்கத்தில், பாவங்கள், பாதகங்கள் பட்டியல் தரப்பட்டுள்ளது.

309 - 310-ல்சுவர்க்கத்தில் புண்ணியம் செய்தவர்கள் பட்டியல் காணப்படுகிறது.

311-ல் நரகத்தில் பாவம் செய்தவர்கள் பட்டியல் பேசப்பட்டுளது. அநீதியாளர்களாகிய துரியோதனாதியர் நூற்றுவர்கள் பாழ்நரகில் கிடந்ததாகப் பாடப்பட்டுள்ளது.

மற்றும் பல

எமது சரசுவதி மகால் சுவடி எண்கள், 911, 1368, ஆகிய சுவடியையும், அச்சு நூல் பெரிய எழுத்து வைகுந்த அம்மானையையும் ஆய்வு செய்து, அதனதன் சிறப்புக்களையும் எடுத்துக் கூறி, இந்நூல் வெளிவருகின்றது. எண் 1368 உள்ள ஏட்டுச்சுவடியானது (329 ஏடுகள் உள்ளது) தஞ்சாவூர் மாவட்டம் தேவங்குடியைச் சேர்ந்த ஜே. பார்த்த சாரதி நாயுடு என்பவர் சரஸ்வதி மகாலுக்கு அன்பளிப்பாக வழங்கப் பெற்றதாகும்.

இதனை அச்சிட்டுத்தர அனுமதி அளித்த சரசுவதி மகால் நூலக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியத்தலைவர் அவர்கட்கும், திருவாக

அலுவலர் வே. இலட்சுமணன் M.A., அவர்கட்கும், வெளியீட்டு மேலாளர் குடவாயில் முனைவர் மு. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த, சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எமது நன்றியினைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் என் அறியாமையினால் ஏற்பட்ட பிழைகள் இருப்பின் அவைகளைப் பொறுத்துக் கொள்வதோடு அவைகளைச்சுட்டி எமக்குத் தெரிவிப்பின் இனிவரும் பதிப்புகளில் திருத்தி வெளியிட ஏதுவாகும்.

இப்பணி இனிதே நிறைவெய்தத் துணைநின்ற பாம்பொருளின் திருவடித்தாமரைகளை விணங்கி மகிழ்கின்றேன்.

இங்ஙனம்,

புலவர். **வீ. சொக்கலிங்கம்**
முன்னாள் தமிழ்ப்பண்டிதர்.
சரசுவதி மகால்

தஞ்சாவூர்
24 - 8 - 2004

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும் சுவடி எழுதியோரும், அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துவது வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்
6-9-2004

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குனர்
சரசுவதி மகால் நூலகம்

# வைகுந்த அம்மானை

## கதைச் சுருக்கம்*

"ஓம் குரு வாழ்க" என்று பாண்டவர்கள், மனையாள் துரோபதையுடன் 'உலகமே மாயம்' என்றெண்ணிப் பற்றற்று இருக்கின்றனர். மண்ணுளோர், விண்ணுளோர், தேவர்கள், மூவர், வேதியர், முனிவர் ஞானிகள் கலைபல கற்ற தமிழர்கள் வாழவும் இருக்கின்றனர்.

நெடியமாலாகிய கண்ணன் அறியும்படியாக, பாண்டவர்கள், தருமநியாயம் செய்து பூவுலகினை ஆண்டு வருகின்றனர். அப்போது, அபிமன்யுவின் மகனான பரிச்சித்துவின் மனைவி, கருவுற்றுப் பூரண கருப்பவதியா யிருந்தாள்.

உலகளந்த மாயனாகிய கண்ணபிரான், கலியுகம் வருவதற்கு முன், உலக விவகாரங்களை யெல்லாம் பேசுதற்கு, தூதர்களை அழைத்துப் பாண்டவர்களை அழைத்துவரச் சொன்னான். தூதர்கள், அத்தினாபுரம் சென்று அழைக்க. தருமர் புறப்படலானார். தம்பியர்களையும் புறப்படச் சொன்னார். தருமர், குதிரையிலேறிப் புறப்பட்டார். தம்பிமார் நால்வரும் தருமர் பின்னே இராம நாமத்தைச் சொல்லிக் கொண்டே நடந்தார்கள்.

துவாரகையை அடைந்து, கண்ணபிரானைக்கண்டு துதித்து, வணங்கி, 'உம்மை விட்டு நாங்கள் பிரிவதில்லை அச்சுதா! உன் தயவினாலே பூமியில் இருந்தோம். இனி, பிரிவுக்காலம் வந்தால் மலைக்கலாகாது நாராயணா! உன்னை வணங்குகின்றோம்! என்றார்' தருமர். தம்பியர் நால்வரையும். 'கண்ணபிரான்' ஏவல் கேட்போம் வாருங்கள்' என்று அழைத்தார். பிறகு, கண்ணபிரானிடம். 'நாங்கள் எல்லோரும் வந்துவிட்டோம்' என்றார்.

---

சுவடி எண். 911

கண்ணன், அவர்களை நோக்கி, 'நான் இந்த நகரத்தை விட்டுக் கானகம் செல்கிறேன். நீங்கள் உலகத்தை, சுகமே ஆண்டிருங்கள்' என்றான். அதற்குத் தருமர், "என்ன கராணம் பற்றிச் சொல்கிறீர்கள்"? என்றார், கண்ணபிரான். "கலி வருகின்றான்; கலியுகம் பிறக்கப் போகிறது. அதனால் வனம் போகின்றேன். என் பெயரைச் சொல்லி அரசாண்டிருங்கள்" என்றான்.

இப்படிச் சொன்னவுடன் பாண்டவர்கள், முகம் வாடி, "அப்படிச் சொன்னால் நாங்களும் வருகின்றோம்" என்று கூறினார்கள். அதற்குக் கண்ணபிரான். "நீங்கள் நிலையாக இருங்கள்" என்று கூறிவிட்டு வனத்திற்குப் புறப்பட்டான். அதற்குப் பஞ்சவர்கள், "நீங்கள் கானில் வாட, நாங்கள் பூமியில், நாட்டில் இருக்க வேண்டுமோ?" என்று கூறிப் புலம்பினர்.

"கண்ணபிரானே! நீங்கள் வனம் செல்வது நியாயமோ? யாருக்காக வனம் செல்கின்றீர்; அவரை நாங்கள் கொல்கின்றோம்" என்று கூறிக் கீழே விழுந்து புலம்பி யழுது, 'கைலாச பதியே! எம் திருமாலைக் காத்தருளும்' எனக் கதறினர்.

அப்போது, கண்ணபிரான் உடல் வியர்த்தது. கோழையுடன் சிலேட்டுமம் மேலிட, ஆவி ஒடுங்கியது. கண்ணபிரான் வைகுண்டம் சேர்ந்தான்.

பாண்டவர்கள், திருமாலாகிய கண்ணன் உடலை அடக்கம் செய்து புலம்பி யழுதனர், பின்னர், அவ்விடம் விட்டகன்று, ஆயுதங்களை எடுத்துத் தலைமேல் வைத்துக் கொண்டு. 'தருமரிடம் செல்வோம்' என்று புறப்பட்டனர். (ஆவி பிரியும் போதும், அடக்கம் செய்யும் போதும் தருமர் இல்லை போலும்.)

தருமரைக் கண்டு சொல்ல, துரோபதையும் அழுதாள். அப்போது, அவள்முன் கண்ணன் தோன்றி, "கானில் வருவதானால், வேடர்களால் துன்புறாவண்ணம், முனிவர் போல் உருவம் மாறி வருக!" என்றான்.

அவ்வாறே, தாசரி வேடமும், சடைமுடி வேடமும் கொண்டு கானகத்தில் வர, அது கண்டு வேடர்கள் மலைத்து நின்றனர். 'மாயனார் வனம் வந்துள்ளார்; வேடர்கள் துன்புறுத்தவில்லை!' என்று சொல்லித்

தருமர் மூக்கில் விரலை வைத்தார். தம்பியரை அழைத்து, 'நாம் இனி என்ன செய்வோம்'' என்று கேட்டார். தம்பியர், அதற்கு, 'இனி நாம் வைகுண்டம் சேர்வோம்' என்றனர்.

அதற்குத் தருமர், 'நீங்கள் இளைய வயதுடையவர்கள், பூமியை. சுற்றம் சூழ ஆண்டு கொண்டிருங்கள்'' என்றார். அது கேட்ட அவர்கள். ''பூமியில் புரட்டுக்கள் ஆரம்பமாகி விட்டன; இனி இருப்பது ஞாயமல்ல'' என்றனர்.

அது கேட்ட தருமர், ''பஞ்சவர்கள் செய்த பாவத்தால் கலிபிறந்து விட்டான். இனி, பஞ்சவர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பது ஞாய மல்ல. இப்படிப்பட்ட அதிசயங்கள் நடக்கும் என்று தான் கண்ணன், முன்பே வைகுண்டம் சேர்ந்தார். அதனைக் கண்டோம். நாமும் இருந்தால் நம்மைக் கலி விடாது. அதனால் நமக்குக் காலம் முடிந்து விட்டது என்று கூறினார்.

மேலும். ''நாம் துவாபரயுகத்தில் வாழ்ந்தோம். மனுமுறையோடு ஆண்டோம். இனி இருந்தால், 'தருமர்' என்கிற என் பெயரும் போய் விடும். அதனால் கலிக்குத் தப்பி வைகுண்டம் சேர்வோம்'' என்று கூறினார். பிறகு, ''கலியுகம் வருமுன் கண்ணன் வைகுண்டம் சேர்ந்த அவ்வழியே நாமும் செல்வோம்'' என்று மேலும் கூறினார்.

''வைகுண்டத்தில், வானவர், மாதவர், முனிவர்கள், தேவர் முதலானோர் புகழ்வர். நல்ல இசை முழக்கம் இருக்கும். மேனகை நடன மாடுவாள். பல சுகங்கள் அங்குண்டு'' என்று வைகுண்டப் பெருமைகளை எடுத்துக் கூறியபின், தருமர், தம்பியரை நோக்கி, ''இக்கானில் உள்ள வேடர்களோடு போரிட்டால், நிச்சயம் நமக்குத் தோல்வியே, புறங்கண்டு வாழ நமக்குச் சகியாது.'' என்றார்.

பிறகு கண்ணனை நினைந்து, ''கரியமாலே! உன்னைப்பிரிந்து, மறந்து உலகில் வாழமாட்டோம். உன்னிடம் வர எங்களுக்குத் துணை புரியவேண்டும். கானில் நடந்து வருகின்றோம். துன்புறாமல் வழிகாட்டும் திருமாலே! வாய் பேசாமல், 'சித்தன் போக்கே சிவன் போக்கு' என்று

வருகின்றோம். கோபாலா! சரணம். எங்களை ஆட்கொள்ள வேணும். தடை, இடையூறுகள் வாராமல் காக்க வேண்டும் பெருமாளே! என்று கூறினார்.

மேலும் தருமர், "இவ்வுலகில் எனக்கு வழிகாட்டியாக இருந்து, என்னை நடத்தியது போல், எனக்குப் பரத்திற்கும் வழிகாட்டி நடத்து வாயாக. இப்போது. நாங்கள், தேசம், நாடு, நகரம் யாவும் இழந்து உன்னையே பற்றிப் பிடித்தோம். ஐவரும் வைகுண்டம் வருகின்றோம். கை தந்து காப்பாற்றும். என்று கூறி "இராகவா! முகுந்தா!! போற்றி" எனத் துதித்தார்.

பின்னர், "கோவிந்தா! தம்பியர் நால்வர், மனைவி, நான் ஆக ஆறு பேருக்கும் வைகுண்டம் தரவேண்டும் துதித்துக்கொண்டே நாங்கள் வருகின்றோம்." என்றார் தருமர்.

விதியின் பயனை விலக்கக் கருதி, ஒருவன் வீட்டை விட்டுப் போய் பனைமரத்தடியில் படுத்தான். பனம் பழம் அவன் தலையில் விழ, அவன் மாண்டான்.

பரீட்சித்து அரவினாலே மாண்டான். பரிச்சித்து மகன் சனமேசயனை சிங்காசனத்திருத்திப் பட்டங் கட்டினர். நல்லாட்சி நடந்தது. அறநூல் களைக் கேட்டு மகிழ்ந்தான். அதுகாலை, மேருமலையில், பாரதத்தினைத் தன் கோடு கொண்டு விநாயகப்பெருமான் எழுதினார்.

இவ்வாறு குருகுலத்திற்குப் புகழ் தேடித்தந்த கண்ணனைப் போற்றினர். பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் பகை முடிக்க அறிவைப் பயன்படுத்தினான் கண்ணன் என்று துதித்தனர்.

முன்னாளில், வேத வியாசர் சொற்படி, 'சனமேசயன் யாகம் நிறை வெய்தாது' என்றிருந்தும், சனமேசயன் இருந்து யாகம் செய்து கொண்டிருக்கும் போது, மறையவருக்கு மயக்கம் வந்தது, தூக்கமும் வந்தது, தூங்கிவிட்டார். தூக்கத்தில், புலி தன்னை அடித்துக் கொல்ல வருவது போல் கனவு கண்டார். விழித்தெழும் போது, அவர் மயக்கத் தினா, தீயில் விழுந்து விடாமல் காத்தற் பொருட்டு, தருப்பையினைக்

கொண்டு, கழுத்துப் பிடரியில் தாங்கும் போது, புலிதான் தாக்குகிறது என்றெண்ணிப் பயந்து யாகாக்கினியிலேயே விழுந்து விட்டான்.

சனமேசயன், ''வேதவியாசர் சொன்னது பலித்தது'' என்று கூறி வருந்திபிருந்தான். மறுபடியும், சனமேசயன், கருநிறப்பட்டுடுத்தி, வேத வியாசரைத் துதித்துப் புகழ்ந்து கேட்க, அவர், அவனை வெண் பட்டணிந்து வரச்செய்து, அவனது மனக்கவலையைப் போக்கினார். மன்னனும் மனந்தெளிந்தான்.

இப்பால், பாண்டவர்கள், கோபாலரிடம் வைகுந்தம் வரவேண்டு மென்று வேண்டுகின்றனர். ''அன்று, வாழ்நாளில் உதவி செய்து காத்தது போல் இன்றும் காக்க வேண்டும். உன் அடியார்கட்கு இடர்வராமல் காப்பாற்ற வேண்டும். நாங்கள் வைகுண்டம் வரவேண்டும். வேறொரு சிந்தனையும் இல்லாமல் வரவேண்டும். எங்கள் பொறிபுலன்களை, நீ அடக்கியாள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டனர்.

''நெருப்பாறு தெரிகின்றது. அதனைத் தாண்ட இயலாது தவிக் கின்றோம். அதனைத் தாண்ட வழி சொல்வாய், கனலைப் புனலாக்கிக் காக்க வேண்டும். எம் பயத்தைப் போக்க வேண்டும்! சுவாமி இது சமயம் வரவேண்டும்'' என்று கூறிப் புலம்பினர்.

''வல்லமைக்கு உகந்த விநாயகரே! போற்றி!! ஐந்து கரமும், ஒரு மருப்பும் உடைய கணபதியே வரவேண்டும். மால்மருகனே! சரணம் வைகுண்டம் அறிய வழிகாட்டும்'' என்று வேண்டினர்.

துரோபதை வந்து நாரணனை வேண்டினாள். ''துயிலுரிந்தபோது காத்த அச்சுதனே! இப்போது உன்னை நம்பினேன். கலிவருமுன் வந்தணைந்தோம். வைகுண்டம் தாரும். ஐவர்க்கும் முன்னே, எனக்கு வைகுண்டம் தாரும். இந்த வனத்தில் உடலை விட்டு வைகுண்டம் வர, உனது மலர்த்தாள் தருவாய். நமன் என்னை அணுகாமல், உனது புட்பரதத்தினை அருளல் வேண்டும். கணபதியே! வைகுந்தக் கதவு திறக்க வேண்டும்'', என்று துரோபதை வேண்டினாள்.

பின்னர் காளிதேவியை வேண்டுகிறாள். கேதாரமலை மட்டும் சேர மலை வண்டுகள் முதலான துன்பத்தினின்றும் காக்க வேண்டும் என வேண்டினாள். காளியைத் தன்முன் வரவேண்டும் என்று வேண்டினாள்.

பின்னர் முகுந்தனை வேண்டினாள். கணவன்மார்களுடன் வைகுண்டம் வரவேண்டினாள். மரணம் ஏற்படும் போது உண்டாகும் இடர்களைய வேண்டினாள்.

(இதன்பின் 5 பாடல்கள் இல்லை)

கந்தன், கணபதி, உமையாளுடன் நந்தகோபாலர் வரவேண்டும் என்று வேண்டினர். ''துரோபதையும் சகாதேவரும் வைகுந்தம் சேர்ந்தனர். நகுலன் வருகின்றேன். தருமர், வீமன், அருச்சுனர் மூவரும் பின்னே வருகின்றனர். எனக்கருள் செய்வாய்'' என்று நகுலன் வேண்டினான். வைகுண்டம் அருள வேண்டும்' என்று கேட்டான் (வைகுண்டம், சேர்ந்தான்.)

பின்னர், அருச்சுனன், வைகுண்டம் வரத்திருமாலை வேண்டினான். 'ஆதியில் உனக்குச் சீடன் உன்னைப் போற்றுகின்றேன். வைகுண்டம் அருள்வாய் நாராயணரே! போற்றுகின்றேன்' என்று கூறிக்கொண்டே வைகுண்டம் சேர்ந்தான்.

இதனை அடுத்து பீமன், 'நால்வரும், உன் திருவடி அடைந்து விட்டனர்; தருமர், பின்னே வருகின்றார். மாயனே காக்க வேண்டும்' என்றான். ஆதிமூலத்தைத் துதித்தான். ''வாயுவின் புதல்வனான பீமன் வருகிறேன், உன் திருவடி தொழ வருகின்றேன். வெண்ணையுண்ட மாயனே! போற்றுகின்றேன் நெஞ்சம் புகுந்து காக்க வேண்டும். என் துயர்களைய வேண்டும்'' என மேலும் வேண்டி நின்றான். உடலைக் கிடத்திவிட்டு வைகுண்டஞ் சேர்ந்தான்.

கடைசியாகத் தருமர் தனித்து நின்று, ''சூரிய சந்திரர்களே! மலர்களே! வாவிகளே! பீமன் இவ்வழி வரக் கண்டீர்களோ? நாகமே! வானரங்காள்! பீமன் இவ்வழி வரக் கண்டீரோ? மூங்கில்களே! காட்டு விலங்குகளே! என் தம்பிமார் இவ்வழி வரக் கண்டீரோ? நாகவல்லி! பூகவல்லிகளே! அருச்சுனன் இவ்வழி வரக்கண்டீரோ? காட்டுப்புலிகளே! கரடிகளே! யாளிகளே! நகுலன் இவ்வழி வரக்கண்டீரோ? மயில்காள்! அன்னங்காள்! சகாதேவன் இவ்வழி வரக்கண்டீரோ?' என்று புலம்பினார்.

தருமர், ''திருமாலே! எனக்கு வைகுண்டம் தாரும்.வைகுண்டத்தில் எப்போதும் இருக்க வரம நுள வேண்டும். தம்பியரைப் பிரிந்து வருந்து கிறேன். என்னைப் பிரியாதவர்களோடு நானும் பிரியாமல் இருக்க வேண்டும். இப்போது நான் தனியே இருப்பதனால் நீயே துணையாக 'வரவேண்டும். இவ்வுடலைவிட்டு வைகுண்டம் வருவேனோ?இவ்வுடலோடு வரமுடியாது'' என்று கூறிச் சிவபெருமானை வேண்டினார், சிவபெருமானே! இவ்வுடலோடேயே வைகுண்டம் வர அருள்புரிய வேண்டும்' என மேலும் சிவனை வேண்டினார்.

திருகோணமலையருகே சென்றார். சிவனை வழிபட்டார். 'சிவ பெருமானே! உடலுடன் வருகின்றேன். என்னைக் காத்தருள வேண்டும். திருமாலுடனேயே இருக்க வேண்டும். என் முன்னே, கடல், ஆறுகள் எல்லாம் தோன்றுகின்றன. பீமன் முதலான தம்பிமார்கள் இல்லாததால் என்னால் அவற்றை நீந்திக் கடக்க முடியவில்லை' என்றார்.

திருமாலை நினைந்து, கோபாலா! இந்நதியைத் தடுக்கவேண்டும். வழியில் தோன்றும் இதர மாய்கைகளை நீக்கிக் காத்தருளல் வேண்டும். இல்லாத பகைகளை எல்லாம் எதிர்விடுத்தால் சிறியேன் தாங்கமாட்டேன் உன்னையல்லால் எனக்கு வேறு துணையில்லை திருமாலே! பலவகை யான துன்பங்கள் தோன்றுகின்றனவே. அவற்றைத் தெளிய முடிய வில்லையே உனது திருவிளையாடலை யான் அறியேனோ! இந்த இடர் கள் யாவும் அகலத் துணைபுரிய வேண்டும். ஆறு தாண்ட வழி காட்ட வேண்டும்'' என்று துதித்துக் கேட்டார்.

மேலும் தருமர், ''துளபமார்பனே! எனக்கு நீயே துணையாக இருந்தருள வேண்டும். துயரங்களினின்றும் கரையேற்ற வேண்டும். உடலைக் கிடத்தி உயிர் வாடுகின்றேன். எனக்குத் துணைசெய். உனது கைதந்து கரையேற்ற வேண்டும். இறவாதிருக்கும் வைகுண்டம் தர தயவுசெய்து கை தாரும்'' என்று புலம்பினார்.

மீண்டும் தருமர், ''யான் செய்த பாவங்களினாலும், சூதினால் நாடிழந்து வனம் புக்கதாலும் நரகம் சேர்ந்துள்ளேன். கைதந்தாளும். நான், மாயனார் தூது சென்றதைக் கூட மதிக்கவில்லை. அரசு தோற்றேன். கைகொடுத்தாளும் கோபாலா! நீர்நாய், முதலை முதலானவை என்னைப் பற்றி இழுக்கின்றன தொல்லை தருகின்றன. இதுவரை வருந்தியது போதும். கை தாரும்.இந்நரக வேதனையினின்றும் கரையேற்றி வைகுண்டம் தாரும்''எனத் தொழுது புலம்பி வேண்டினார்.

கண்ணபிரான், தருமருக்குக் காட்சி கொடுத்தார். தருமர், பல வாறாகத் துதித்தார். அடி பணிந்தார். தருமர் வைகுண்டம் சேர்ந்தார். திருமாலாகிய கண்ணனைப் பல படியாகப் போற்றிப் புகழ்ந்தார். திருமாலை நோக்கிக் ''கண்ணா! உன்னை அணைந்ததால் சுக மடைந்தேன். 'வைகுண்டம்' என்று சொன்னாலே வினையகலும். நான் வைகுண்டம் பெற்றேன். திருமாலே உன்னை வணங்கிப் போற்று கின்றேன். விட்டகுறை நிறைவேற முடிசூட்ட வேண்டுகிறேன்'' என்றார்.

மேலும் திருமாலிடம் ''கரிய மாலே! கலியுகத்தில் தொல்லைப் பட்டுழலா வண்ணம் காத்தருள வேண்டும் கலிக்குப் பயந்து நாங்கள் ஐவரும் துரோபதையுடன் வைகுந்தம் வந்தோம். குருகுலத்தரசர்க் கெல்லாம் அருள வேண்டும்'' என்று வேண்டி இராம நாமத்தின் மகிமை கூறினார்.

சனிக்கிழமை திருமாலுக்கு உகந்த நாள், ஆதலால் அன்று விரத மிருந்து, சனிக்கிழமையாகிய இன்று இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.

சுவடி எண். 911

# வைகுந்த அம்மானை

## காப்பு

### விருத்தம்

வாரிசூ ழுலகு தன்னில் மன்னுயிர் துதிப்ப வேண்டி
சீரிய தமிழி னாலே தெரிந்துநா னம்மானை பாட
ஆரிய னனந்த நாமன் அச்சுதன் கமலக் கண்ணன்
பாரிய மேக வண்ணன் பச்சைமால் பதமே காப்பு.

பார்தனை யளந்த மாயன் பஞ்சவர் சகாய தூதன்
மேர்தனை எடுத்து முன்னாள் விண்மழை தடுத்த மூலஞ்
சீர்பதம் வணங்கி ஐவர் தெரிந்துவை குந்தஞ் சேர்ந்த
ஓர்கதையம் மானை யாக உரைக்கமால் பதமே காப்பு.

சிவமயம்

# வைகுந்த அம்மானை

### விருத்தம்

ஓம்குரு வாழ வென்று உலகெலா மகல நீக்கிப்
பாங்குட னஞ்சு பேரும் பத்தினி துரோப தையு
மீங்குள்ள கரும மெல்லா மெள்ளள வாசை யற்று
தீங்கிது செகமென் றெண்ணித்[1] திரவியில் நடந்த ஞாயம். 1

### வாழ்த்து

மண்ணுள்ளோர் வாழ வென்றும் மற்றுள்ள தேவர் மூவர்
விண்ணுள்ளோர் வாழ வென்றும் வேதியர் முனிவர் ஞானக்
கண்ணுள்ளோர் வாழ வென்றுங் கலைபகர் தமிழோர் யாவும்[2]
எண்ணுள்ள கால மெல்லா மிருந்துநீ டூழி வாழ்க! 2

---

1. சிகமென்றெண்ணி என்றுளது (செகம்-ஜெகம்-உலகம்)
2. யாரும் எனல் பொருந்தும்

### பாண்டவர் உலகாளுதல்

ஐவரு மிருந்து பாரி லனேகனாள் சீமை யாண்டு
செய்வது தரும ஞாயந் தராசுபோல் நிறையாய் நின்று
கைவருங் கரும மெல்லாம் கரியமா லறியப் பின்னும்
மெய்வரும் புதுமை கண்டு மேதினி யாளும் நாளில். 3

### பரீட்சித்து மனைவி கருவுற்றிருத்தல்

சித்தசு ரூப னான தீரன்வா ளபிமன் மைந்தன்
பத்தச ளெவர்க்கும் நல்ல பரிசித்து வேந்தன் றேவி
எத்திசை மதிக்க வேதான் ஏந்திழை காப்ப மாகி
வெத்திசை[1] மாதம் பத்தும் விளங்கவே சுமந்தாள் மாது 4

### கண்ணன் ஐவரை அழைத்து வரச்சொல்லல்

காசினி யளந்த மாயன் கலியுகம் வருமுன் தாமும்
பேசியே கொள்வோ மென்று பிரபஞ்ச விபர மெல்லாம்
ராசிய[2] மாகத் தூதர் நாளிகை தன்னில் சென்று
தேசிக ரைவர் தன்னைச் சீக்கிரங் கொடுவா வென்றார். 5

### தூதர் அத்தினாபுரம் சென்று அழைக்க, தருமர் புறப்படல்

உற்றொரு வசனங் கேட்டு ஒருநொடி யதனில் தூதர்
அத்தனார் புரியில் சென்று ஐவரை வணங்கிக் கண்டு
கத்தனா ரருளிப் பாடல் கருதியே உரைத்த போது
சித்தமே மகிழ்ந்து தன்மர் சீக்கிரம் பயண மென்றார். 6

### தருமர், தம்பியர்களைப் புறப்படச் சொல்லல்

தம்பியர் நால்வர் தன்னைத் தருமரு மருக ழைத்து
உம்பர்கோன் தம்பி ரானார் உலகினை யளந்த மாயன்
நம்பியு உண்மை யாத ராசிய மருளிச் செய்ய
இன்பமாய் வருக வென்றார் ஏதொன்றும் தெரிய வேணும். 7

---

1. வெற்றி செய் 2. ரகசியம்

### தருமன் குதிரையில் ஏறுதல்

ஆயனார் தூதன் வந்தான் அருளின தெல்லாஞ் சொன்னான்
மாயனா ருண்மை கண்டு வணங்கிநாம் வார்த்தை சொல்லி
நேயமாய் வருவோம் நீங்கள் நிமிசத்தில் வாரு மென்னத்
தூயதோர் தரும ராசன் துரகத மீதி லானார் 8

### தம்பியர் நால்வரும் இராமநாமத்தைச் சொல்லிக் கொண்டு பின்னே செல்லல்

### வேறு

வீமன் விசைய னகுலனுமாய் வேத ராசர் சகாதேவன்
தாமோ தரனார் தமைக்காணத் தரும ருடனே பின்செல்ல
ராம அரி(ஹரி) ராம(ராம) (ராமா) ராகவ ராமவென்று
சோம சேகர னைக்காணத் துரிய மாய்நடந் தாரைவர். 9

### கண்ணபிரானை அடைந்து வணங்குதல்

### வேறு

எங்குமாய் நின்ற மூர்த்தி ஈரேழு லோக மெங்கும்[1]
அங்குமா யிங்கு மாகி ஆருயிர்க் கெல்லாந் தானாய்ப்
பொங்குபூ ரணமாய் நின்ற பொன்னலங் காரா போற்றி
தங்குவ தில்லை நாங்கள் தரணியி லும்மை விட்டு. 10

### போங்காலம் வந்தால் புத்தி மலைக்கலாகாது எனல்

ஆவதோர் கால மெல்லாம் அச்சுதன் தயவினாலே[2]
போவதோர் காலம் வந்தால்ப் புத்தியு மலைக்க லாமோ
சாவதோர் காலம் வந்தால்ச் சற்றிங்கே[3] தரிக்க லாமோ
நாவது ரெண்டு சொல்லோம் நாராயணா போற்றி போற்றி! 11

---

1. லோகம் என்றுளது
2. சியவினாலே என்றுளது
3. சத்திங்கை என்றுளது

**தம்பியரை அழைத்து, கண்ணபிரான் ஏவல்கேட்டல்**

தம்பியர் மகுட மன்னர் சகலரும் வாரு மென்ன
எம்பிரா னருளிச் செய்த ஏவல்கேட் டேதோ வென்று
நம்பிநா ரணரே வந்தோம் நாதனே சரண மென்றுந்
தம்பிரா னடிகள் போற்றிச் சாத்தகி யாள்வார்[1] நின்றார். 12

**கண்ணன் நான் கானகம் செல்ல வேண்டும் நீங்கள்**
**அரசாளுங்கள் எனல்**

நின்றதோர் தம்பி மற்ற நிருபர்தன் முகத்தை நோக்கி
மன்றல னந்த கோபர் மானிலம் விட்டுக் கானில்
பொன்றவே வேணும் நான்தான் புவிதனை யாண்டு நீங்கள்
தென்றலங் காமன் போலச் செகத்தினில் வாழு மென்றார். 13

**காரணங் கேட்டலும், கலிவருவதைக் கூறுதலும்**

கரியமா லருளிச் செய்த காரண மேதோ வென்று
தெரியவே விபரங் கேட்கத் தேசிக ரறிந்து நன்றாய்
அரியதோர் கலியன் வாரான் அரியதோர் வனத்தில் போனோம்
பெரியதோர் புவனம் எந்தன் பெயர்தனைச் செலுத்தி வாழும். 14

**தருமர் நாங்களும் வருகிறோமெனல்,**
**கண்ணன் தடுத்துப்புறப்படல்**

இப்படி இறையோன் சொல்ல ஏங்கியே முகங்கள் வாடி
அப்படிச் சொன்னீ ரானால் அடியரும் வரோ மென்று
செப்பிடத் திருமால் தானுந் தெரியவே உண்மை யாக
வைப்பினி லீருங் களென்று வனம்புக நடந்தா ரையர்! 15

**பாண்டவர் புலம்புதல்**

அய்யகோ ராம ராமா அய்வரைப் பிரிந்து கானில்
மெய்யது புழுதி தாவ மேனியும் நிறமும் வேறாய்
நய்யவும் வசமோ உந்தன் நாமமு மறந்து நாங்கள்
உய்யவோ இனிமேற் பாரி லுண்ணவும் வேணு மோதான். 16

---

1. பரிச்சித்து மனைவி பூமடந்தை. அவள் தந்தை துளசிமகாராசன் அவன் தந்தை சாத்தகியாழ்வார்

**'யாருக்காகச் செல்கின்றீரோ அவரைக் கொல்லுகிறோம் எனல்'**

காயமும் வருமோ எங்கள் கண்ணா கண்ணா கண்ணாளா
ஞாயமு மிதுவோ ஐயா நாங்களுஞ் சகிக்க லாமோ
மாயனை எய்தா ராரோ மாயனென் றறிந்தி லாரோ
ஆயனே எவரார் சொல்லு மவனுயிர் கொல்வோ மென்றார். 17

**பாண்டவர் விழுந்து புலம்புதல்**
**வேறு**

பார்ப்பார் விழுவா ரெழுந்திருப்பார் பழியோ குலையோ [1]முடிந்துதென்பார்
கேள்ப்பார் திருமால் முகம்பார்ப்பார் கெதியோ மதியோ விதியென்பார்.
ஏற்பா ரிதுதான் செய்தபிழை எய்தார் படுவா ரித்துயரங்
கார்ப்பார் திருமால் தனைநாளுங் கயிலைக் கடவு ளவர்தாமே! 18

**கண்ணபிரான் வைகுண்டஞ் சேர்ந்தார்**

நிலம் பரந்து விழிசொருகி நெருப்புந் தணிந்து நீர்மேலாய்க்
கோலம் பெரிய உடல்வேர்த்துக் கோழை யுடனே சிலேட்டுமமும்
ஆலம் பெரிய பிடரிறுகி ஆவி யொடுங்கி யறிவசந்து
சீலம் பெருகும் வைகுண்டஞ் சேர்ந்தார் முகுந்தன் செகத்தை விட்டு. 19

**கண்ணன் உடலை அடக்கம் செய்தல்**

விட்டுப் பிரிந்த திருமாலை வீமன் விசையன் றானெடுத்துத்
தொட்டுப் புவியி னுள்ளடக்கித் துயரத் துடனே விழுந்தழுது,
கட்டுப் பிரிந்து தெனவேங்கிக் [2]கானந் தனையே விட்டகன்று
பட்டுப் பறந்து ஆயுதத்தைப் பதறா தெடுத்தார் தலைமீதில். 20

**தம்பியர் தருமரிடம் சொல்லப்புறப்படல்**
**வேறு**

ஆயுதந் தலைமேற் கொண்டு அருச்சுனன் வீமன் றானு
மாயனை யிழந்தோ மென்று மனமெல்லா மிடைந்து புண்ணாய்
தூயதோர் தருமர் கேள்க்கச் சொல்லுவோம் வாரு மென்ன
நேயமா யவடம் விட்டு நிமிசத்தில் வருவ தானார்! 21

---

1. கெலையோ. 2. காந்த என்றுளது

**வேடர் தொல்லை தராவண்ணம் உருமாறிவரச் சொல்லல்**

தேவியா ரழுத போது செங்கண்மால் தனக்குத் தோத்தி[1]
பாவியர் வேடர் தாமும் பங்கமே செய்யா வண்ணம்
ஒவிய மான பெண்கள் உருவெல்லாம் மாற்றி முன்னாள்
தாவிய ரிஷிபோ லாகித் தரணியில் வருக வென்றார். 22

**வேடங்கண்டு வேடர் மலைத்தல்**

தப்புடன் சங்கு தாளந் தாதர்போல் வேடங் கொண்டு
இப்புவி தனிலே வேட ரேங்கியே முகங்கள் வாடி
ஒப்புடன் தாவி யாடி ஓங்கிய சடையும் வாகும்
மெய்ப்புடன் வந்தார் கண்டார் வேடரு மலைத்து நின்றார்! 23

**தருமர் வியந்து, மூக்கில் விரலை வைத்தல்**

மாயவ னுலகை யாண்டு வனத்தினில் வந்தா ரென்று
நேயமாய் வேடர் வந்து நிலமைகைக் கொண்டா ரென்று
தூயதோர் தருமர் தானுஞ் சொல்லியோர் விரலை மூக்கில்
ஞாயமோ சிவனே யென்று நைந்துடல் சோர்ந்தி ருந்தரர். 24

**தருமர், தம்பியரைக் கேட்க, தம்பியர் வைகுண்டம் செல்வோம் எனல்**

இப்பவுஞ் செய்தி யென்ன என்றுதான் தம்பி மாரை
ஒப்புட னழைத்து முன்னே உண்மையே தென்று கேட்க
அப்புர மினிமே லென்ன அண்ணரே யிந்த ஞாயம்
மெய்ப்புட னிவடம் விட்டு விரையவை குண்டஞ் சேர்வோம். 25

**நீங்கள் இளையவர்கள் பூவுலகை ஆண்டிருங்கள் எனல்**

இளையவர் நீங்க ளின்ன மிருந்துதான் புவன மீதில்
கிளைவழி யுடனுங் கூடிக் கிள்ளைகள் மகுட மன்னர்
பழையவர்[2] தமருந் தாயும் பாக்கிய மனேக மெல்லாங்
குழைவர[3] நினைந்து வாழ்ந்து குவலையத் திருங்க ளென்றார். 26

---

1. தோன்றி    2. பளையவர் என்றுளது.
3. குளைவர என்றுளது (குறைவர)

### (பொய்) புரட்டு தொடங்கிவிட்டது இனிஇருப்பது தருமமல்ல எனல்

அந்தணர் வழக்குங் கண்டோம் அடிக்கடி பிரட்டுங் கண்டோம்
இந்தமா நிலத்தில் நாமும் இருப்பதுங் கரும மல்ல
அந்தநா ளரசுக் காலம் ஆண்டுதான் முடிந்து மீண்டு
வந்தநாள் வந்து தானால் வழக்கென்ன வழக்கு ஞாயம். 27

### பஞ்சவர் பாவத்தால் கலியன் வந்தான் எனல்

பஞ்சவர் பாவங் கொண்டு பாரினில் கலியன் வந்தான்
என்செய்வோம் தம்பி மாரே இப்படி யுலகந் தன்னில்
முன்செய்த ஞாயம் போல முற்றுமோ இனிமேல் நம்மால்
பஞ்சவ ரென்று சொன்னால் பாவனை[1] முடியா தென்றே! 28

### நமக்குக் காலம் முடிந்துவிட்டது எனல்

ஆண்டவர் நடந்தா ரிந்த அதிசயம் வருமென் றெண்ணி
நீண்டவர் முனிந்து போன நிச்சய நிசமுங் கண்டோம்
பாண்டவர் புதல்வர் நாமும் பாரினி லிருந்தோ மானால்
மூண்டதோர் கலிவி டாது முடிந்தது நமக்குக் காலம். 29

### வைகுண்டம் சேர்வோம் என்று கூறுதல்

வாழ்ந்தது துவாப ரத்தில் மனுநெறி முறைமை நீதி
தாழ்ந்தது கலியு கத்தில் தன்மரென் பேரும் போகும்
சூழ்ந்ததோர் கலியைத் தப்பி சுகம்பெறவை குண்டஞ் சேர
ஆழ்ந்ததோர் புவியை விட்டு அகலுவோம் அகலு வோமே! 30

### கண்ணன் சென்ற வழியே செல்வோம் எனல்

நாரணர் நம்மை விட்டு நடந்துவை குண்டஞ் சேர்ந்தார்
காரணர் முடிந்த கோலங் கலியுகம் வருமென் றெண்ணி
ஆரணன் றன்னை யீன்ற அச்சுதன் பச்சை மால்காண்
பூரணர் நடந்த மார்க்கம் போறது கரும மின்றே! 31

---

1. பாவினை என்றுளது.

### வைகுண்டத்தில் இருக்கும் சுகங்கள் இவை எனல்

வானவ ரிமையோர் மற்ற மாதவர் முனிவர் தேவர்
தானவ ரிஷிகள் வேதத் தபோதனர் புகழ்தல் செய்ய
ஞாலமு மினிய கீத ராகமு மிசைகள் கூறு
மேனகை பணிகள் மாற வெகுசுக மவடந் தானே ! 32

### போரில் புறங்கண்டு வாழ சகியாது எனல்

வீமனே விசையா தம்பி மேதினி தன்னி லுங்கள்
நேமமும் பிலனும் வாங்கி நெடியமால் போனா ரன்றே
சாமமாய் வேடர் முன்போய்ச் சமரினில் புறமுங் காட்டி
நாமினி யுலகில் வாழ நமக்கினி சகியா தென்றே !

### திருமாலை வேண்டுதல்

மாத்திரைப்1 போதா னாலு மாயனை மறந்து பாரில்
கோத்திரத் துடனே கூடிக் குலாவுதல் செய்யோம் நாங்கள்
பாத்திர மறிந்து வேத பாக்கியஞ் செல்ல வாரோம்
சூத்திரத் துடனே வந்து துணைசெய்வாய் கரிய மாலே ! 33

### வழி பிசகாமல் நடத்த வேண்டுதல்

### வேறு

நாடி நடந்து தான்வாறோம் நகரும் பதியும் விட்டேகிக்
கூடி நடந்து வழியேதான் குறித்துத் திசையைத் தானோக்கி
வாடி யிடைந்து மருகாமல் மனமே தானா யுளம்புகுந்து
தேடித் திகைத்துத் திரியாமல்ச் செவ்வே நடத்தும் திருமாலே ! 34

### வாய் பேசாது வருகின்றோம் எனல்

சித்தன் போக்கும் சிவன்போக்கும் சீவன் போக்கும் மேலாகி
மத்தன் போக்கும் மனம்போக்கும் வானத் திருந்த மழைபோக்குங்
கத்தன் வாக்குங் காரியங்கள் கண்(டார்) விண்டார் கொண்டாரோ.
சத்தம் போக்கோ மினிப்பேசோஞ் சாமி நந்த கோபாலா ! 35

---

1. மாத்துரை என்றுளது.

### எங்களை ஆட்கொள்ளவேண்டும் எனல்

சரணஞ் சர(ணங்) கோபாலா சாமி சரணந் தருவாய்நீ
கரணம் பொறிகள் புலன்குணங்கள் காமக் குரோதம் (அணு)காமல்
திரண மிதுவே செடமாகத் திரவிய மதுவே பெரிதாக
மரண மறியா துடலாக்கி வந்தாட் கொள்ள (வரு) வாயே ! 37

### தடை இடைகளிலிருந்து காக்க வேண்டுதல்

வழியிற் பயங்கள் தடையிடைகள் மற்று முளதோ விக்கினங்கள்
தெளியப் படுத்தி யடியார்க(ள்) திகைத்து மலைத்து நில்லாமல்ப்
பழிகள் வினைகள் அணுகாமல் பால்போ லுளமும் பூரணமாய்
வெளியில் அறிவு வெளியாகி வெளியே வருவாய் பெருமாளே ! 38

### நல்வழிகாட்டி வழிநடத்த வேண்டுதல்

கருத்தைப் பொருளாய்த் திரப்படுத்திக் கன்மக் (கூ)ட்டை யறுத்தெறிந்து
திருத்தி யறிவை நிலைநிறுத்தித் திருந்தாப் புனலைப் வேரறுத்து
குருத்தைக் [1]கொழு(ந்)தை முனைகூட்டி கோழும் பேறவே வகைப்படுத்தி
இருத்தி நடத்தி வழிகூட்டி இயக்கும் பெரிய பெருமாளே ! 39

### இகத்தில் வழிகாட்டி நடத்தியது போல் பரத்திற்கும் வழிகாட்டவேண்டும் எனல்

நானோர் வசன மல்லாது இரண்டு மிகவே சொல்லறியேன்
தானோ தானே தானாகத் தனக்குக்குத் தானே நினைவாகி
ஏனோ எனைநீ வந்தாண்டாய் இகத்தி லெவர்க்குந் தெரிந்தறிய
வானோ ரறிய வழிகாட்டி வருவாய் பெரிய பெருமாளே ! 40

### உன்பற்றே பற்றென் றிருந்தே னெனல்

தேச மிழந்து செகமிழந்து சேனை தளங்கள் தானிழந்து
வாச மிழந்து மனையிழந்து மைந்தர் பெண்டிர் தனையிழந்து
பாச மொழிந்து பகையொழிந்துன் பாத மலற்றாள் பொருளாகி
நேச மிழந்த நினவதிலே நின்றே வளர்ந்த பெருமாளே ! 41

---

1. கொழுகொம் எனல் வேண்டும்

### ஐவரும் வைகுண்டம் வருகிறோம்; கைதந்து காரும் எனல்

### வேறு

ஐவருந் துணிந்து வாரோம் அவ்விடமே கதிக ளென்று
தெய்வமே பொருளென் றெண்ணித் தெரிசினை காணக் கண்கள்
மெய்வழி திருமால் பாதம் வென்று(வை) குண்டஞ் சேரக்
கைதரு மாலே போற்றிக் கருணையங் கடவு ளானே! 42

### இராகவனைத் துதித்தல்

(இ)ராகவா முகுந்தா போற்றி இராச(கோ) பாலா போற்றி
ஏகமாய் நின்றாய் போற்றி எம்பெரு மாளே போற்றி
லோகநா யகனே போற்றி நூல்ப(ல) வறிந்தாய் போற்றி
நாகமேற் றுயின்றாய் போற்றி இராமனே போற்றி போற்றி! 43

### எங்கள் ஆறுபேருக்கும் வைகுண்டம் தா எனல்

மந்திரப் பொருளே உன்னை வழுத்திநான் துதித்துப் போற்றி
தந்திரத் துடனே எந்தன் தம்பியா நாலு பேரும்
ஐ(ந்)தமர் குழலி னாளும் ஐவரோ டாறு பேரும்
சந்திரப் பதியாம் வைகுண்டந் தன்னையே நோக்(கி) வாரோம். 44

### வைகுண்டம் வருகிறோம் எனல்

அரிகரி ராமா ராமா அச்சுதா நந்த சோபா
கரியமா லுந்தி பூத்த கார்(முகில்) மேக வண்ணா
பெரியவா நந்த சேஷா பிரமனைப் பெற்ற மாயா
உரியவர் பஞ்ச வர்க்கு உகந்தவர் வா(ரோம்) வாரோம். 45

### விதி வலிது என உவமையுடன் கூறல்

### வேறு

விதியின் பயனை விலக்கவென்று விரும்பி ஒருத்தன் முன்னாளில்
அதிய(த்) தலையைத் தான்(சிரை)த்து அகன்று பிழைத்து வருவோமென்று
சதியே வருவ தறியாமல் தாழை நிழலிற் போய்ப்படுக்க
வி(திதா)ன் மொட்டைத் தலைதனிலே விழுமாம் பனையின் கனிதானே!
46

## பரீட்சித்து அரவினால் மாளல்

தலையில் விதித்த விதிதனக்கு (தலை)யைச் சிரைத்தான் பட்டதுபோல்
அலையி லொளித்த பரீச்சித்தும் அமர்ந்த(ான்) அரவு விசத்தாலே(ல)
(கொலையே) செய்தோர் பழிபாவங் குலையாய் முடிந்து தெனவோங்கி
மலையா திருந்த மன்னரெல்லாம் மலைத்தே யுலைந்து குலைந்தாரே! 47

## செனமே செயனுக்குப் பட்டங்கட்டச் சொலல்

## வேறு

ஏங்கினார் முகங்கள் வாடி என்செய்வோம் என்று சொல்லித்
தாங்கினார் பரீசித் தைத்தான் தலமெல்லா மபைய மென்று
தூங்கினார் தலைக விழுந்து துயர(மும்) வேறு வேறாய்
ஓங்கினார் செனமேசன் கேள்க்க உத்திர மெழுது மென்றார் 48

## செனமே செயன் உலகை ஆளுதல்

பஞ்சவர் (பெயர)னென்று பரீசித்து விஷங்கள் தீண்டி
துஞ்சின தாகை யாலே சுத்தன்சென மேசன் றன்னை
(மி)ஞ்சுசிங்கா சனத்தில் வைத்து வேந்தரு மமைச்சர் தானும்
அஞ்சலென் றடிகள் போற்றி அவனியி (லி)ருந்தா ரன்றே 49

## நீதி தறாவது ஆட்சிபுரிதல்

இப்படி யனேகங் காலம் இருந்தர சியற்கை செய்து
சொற்படி தவறா வாய்மை (சோர்)வர நடத்தல் செய்து
முற்படி ஞாயம் போல முன்னவ னிவனா மென்று
அப்படி யிருந்து பாரி (லவனியை) யாளும் நாளில் 50

## அறநூல்களை கற்றுப் புகழ்படைத்தாள்

ஆகம வேத ஞான அருந்தமிழ்க் கவிதை நூல்கள்
பாகமா யுணர(க் கே)ட்டுப் பத்தியாய்ப் பெரியோர் தன்பால்
போகவும் வரவுந் தண்மை புகழது மதுரம் பொங்க
ஏக(சிங்) காச னத்தி லிருந்துடன் வாழும் நாளில் 51

## மேருமலையில் விநாயகர் கோடுகொண்டு பாரதம் எழுதுதல்

பாரத முடியு முன்னாள்ப் பயின்றதோர் வேத மெல்லா
மேர்(தனில்) ஆதி யாக விநாயகன் கோடு கொண்டு
சீரது சிறக்கக் கீறிச் செகந்தனி லுதித்த வேந்தர்
போது (கொள்ள) வேண்டிப் புகன்றது தேவர் தாமே! 52

## குருகுலத்துக்குக் குருவாயிருந்து பகைமுடித்த கண்ணனே போற்றி எனல்

குருகுலத் தோர்கட் கெல்லாங் குருவென வந்து தோன்(றி)
கருவுரு வகுத்துக் காட்டி காசினி யாளு மென்று
அருகுதா னிறுத்திப் புத்தி அறிவுடன் தெளிவும் சொ(ல்)லிப் 53
பெருகுசீர் புவனந் தன்னால் பெரும்பகை முடித்தாய் போற்றி!

## அறிவினால் பகை தவிர்த்தது

பஞ்சவர் நூற்(று வர்க்)கும் பகையது வருவ துண்டோ
அஞ்சலென் றமர்த்தி நீரும் அறிவினால் விபரஞ் சொல்லி
மிஞ்(சவு)ம் பகைசெய் வாரோ வேதமா முனியே வுந்தன்
வஞ்சமே வஞ்ச மல்லால் மற்றொன்றால் முடி(யு) மோதான். 54

## யாகம் செய்யும் வேதியனுக்குத் தூக்கம்வர, மன்னன் உபசரித்தல்

## வேறு

முன்னாள் முனிவன் சொற்படிக்கு முடிக்கும் யாகந் தனிலேதான்
இன்னாள் ம(ய)க்கம் வருவதற்கு ஏதோ மறையோன் போலிருந்து
சொன்னான் வேத யாகமதில் தூக்க மிகவே (மேல)சந்து
தன்னால் மயங்கி வீழாமல் சன்னை செய்தான் தார்வேந்தன். 55

## புலியென்று பயந்து அந்தணன் யாகத்தீயில் விழல்

அய்யோ மறையோ (னக்கி)னியில் அசந்து வீழ்வா னென்றெண்ணி
கையால் தெர்ப்பை தனைக்கொண்டு கழுத்தில் பிட(ரி கை) தொட்டு
வெய்ய புலிதான் பாய்ந்து தென்று வெருவிப் பயந்து மறையோனும்
நெய்யி லெரி(யும் சுடர்)தனிலே நேராய் விழுந்து நிமிர்ந்தானே! 56

### வேதவியாசர் சொன்னது பலித்தது

வேத வியாசர் முன்னாளில் விளம்பும் வசன முள்ள(படி)
தேச முழுதுஞ் சிறப்புளது தெரிந்து பார்க்கச் சமனிதமாய்
பூத மளைந்த தயிர்போல புவனம் (மிருந்த) வகைமோச
நீத மிருந்தும் நெறியிருந்தும் நில்லா வண்ணம் ளிதாச்சே. 57

### வேத வியாசரைச் செனமேசயன் கேட்டல்

விதித்த விதியைப் பாராமல் வேத வியாசர் தனைநோக்கி
எதுத்துச் செய்தி கேட்டபல னிப்போ நமக்குப் பலித்துதென்று
மதித்து நினைவில் செனமேசன் மனது கலங்கித் தெளிந்தறிவாய்த்
துதித்துப் புகழ்ந்து முனிதனையுஞ் சேர மகிழ்ந்து சொன்னானே. 58

### வேதவியாசர் மனம் தேற்றுதல்

சோல்லிய கதையைக் கேள்க்கச் சுரதமாய் மனதைத் தேற்றி
பல்லிய வசன மெல்லாம் பரிவுடன் தெரிய நன்றாய்த்
துல்லிய மாகக் கேட்டுத் துயரற விருமை போக்(கி)
மெல்லிய பட்டுப் போற்றி வீத்திருந் தரசன் கேட்க 59

### சனமேசயன் பிரமை நீங்கி மனந்தெளிதல்

### வேறு

கருதிய[1] பட்டுப் போற்றிக் கதைதனை யுற்றுக் கேட்டால்
கருநிறம் வாங்கி வெள்ளைக் கதித்தவெண் பட்ட தானால்
வருமொரு விறுமை[2] நீங்கி மனத்துயர் தீரு மென்று
குருமுனி உரைத்த நேசங் குணமெனக் கொண்டான் மன்னன் 60

### கோபாலரிடம் விடை கேட்டல்

### வேறு

தேக மிழந்து வாராமல்ச் சிடத்தை மிகவே தான்சுமந்து
ஆக மகிழ்ந்து வருவோர் தம்மடிகள் சுடுமோ கோபாலா
தாக மிகுந்த தவிப்பினையும் சாரா துடலிற் தயவுசெய்து
மேகஞ் சிறந்த மேனியனே விடைதா நந்த கோபாலா ! 61

---

1. கருநிறப் எனல் பொருந்தும் 2. பிரமை

### அன்று காத்ததுபோல் இன்றும் காக்க வேண்டுதல்

ஒன்று மறியோம் பொருளறியோம் உன்னை யல்லா துணர்(வ)றியோம்
நன்று மறியோந் தீதறியோம் நந்தா முகுந்தா ந(ரசிம்மா)
அன்று சகாய மிகுத்திருந்து அடியா ரெங்க ளிடர்தீர்த்தாய்
குன்று மனங்கள் குன்றாமல்க் குடி(கார் நந்த) கோபாலா ! 62

### அடியார் கட்கிடர் வாராமல் காக்க வேண்டும்

அடியார்க் கிடரு வாராமல் அங்கே வருவாய் பிரியாமல்
வடிவேல் கரத்தான் மாமனெனும் மாயா நேய முடனேதான்
கடுவாய் மிருகம் கண்டோடக் கடிய சுரங்க ளணுகாமல்
நெடியோ னெனவே வந்தருள்வாய் நீயே நந்த கோபாலா ! 63

### வைகுண்டம் வர அருள வேண்டுதல்

உருவா யுருவி லுருவேரி உடலில் புகுந்து தனதாகி
வெருவாய் குழறி யுள்ளார் வெறோர் கவனம் நினையாமல்க்
கருவாய் மலர்கள் பிரியாமல் காத்(தாய் கா)த்த சிறையெதிர்முன்
வருவா யடியார் வைகுண்டம் வரவே நந்த கோபாலா ! 64

### பொறிபுலன்களை அடக்கி அருள வேண்டுதல்

மனது விறுமை[1] (பொல்லா)து மாயக் குரங்கு வலுச்சேட்டை
எனது யெனது பலனின்பம் என்றென் றியங்கும் பொறிபுலனைத்
தனது தனது (எண்ணா)மல்த் தானாய்த் தானாய்த் தனித்துன்பம்
உனது பதியே கெதியாக உதவும் நந்த கோபாலா ! 65

### நெருப்பாறு கண்டு அது தாண்ட வழி கேட்டல்

#### வேறு

ஆயனே நந்த கோபா அச்சுதா பச்சை மாலே
மாயனே சமைய மிப்போ வந்துநீர் காக்க வேணுந்
தூயனே நெருப்பு வெள்ளஞ் சுழிஎறிந் தோடக் கண்டேன்
நேயனே ஆறு தாண்ட நெடியவா துணையா வாயே ! 66

---

1. பிரமை

### கனலைப் புனலாக்கிக் காக்க வேண்டுதல்

### குறுவிருத்தம்

நெருப்பா றுடைய வலுவேகம் நீயே யறிவாய் நானறியேன்
(கருப்பா) றெனவே கனல்தன்னைக் கையா லளைந்து தகையாறத்
திருப்பாய் கனலைப் புனலாக்கிச் செவ்வே (வழியுந் திறந்து) நல்ல
தருப்போ லுதவுங் கோபாலா! சரணஞ் சரணஞ் சரணுமக்கே! 67

### என் பயம் தெளிவித்து ஆளவர எனல்

அனலா (யெழுந்து) வருந்தீயை அடியேன் கண்டு பயந்துநொந்து
புனலே கண்ணி லிருந்தொழுகப் புண்ணா யெ(ழுந்து) புலம்புகிறேன்
கனலே புனலாய்க் கொண்டருளிக் கர்ப்பித் தருள்வாய் கண்ணுதலே
எனலா (யோ)ங்கி யடியார்முன் இனிவா நந்த கோபாலா! 68

### சுவாமி ! இது சமயம் வரவேணும் எனல்

மூலப் பொருளே முதல்பொருளே முத்(தே) வித்தாய் முளைத்தெழுந்த
ஞாலப் பொருளே எவ்வுயிர்க்கும் நடுவா யிருந்த நாயகமே
கோலத் (துடனே) யுள்ளிருந்து குருவாய் மூலக் கிழங்காகிச்
சாலத் திருத்தி எனையாளுஞ் சாமி யிதுகா ணிதுசமை(யம்) 69

### வல்லபைக்கு அருளிய விநாயகா போற்றி எனல்

### வேறு

வல்லபை தனக்கு நேசம் வைத்ததும் உன்னைப் போல
நில்லய்யா யென்று நேசம் நினைவு(டன்) கலந்து பாரில்
மெல்லவே மயக்கி விட்ட விறுமையை அகற்றி அப்பால்
செல்லவே நடத்து மைய்யா திருவடி சரணந் தானே! 70

### கணபதியே வரவேணும் எனல்

### வேறு

ஐந்து கரமும் ஒருமருப்பும் அகன்ற செவியுந் சிறுகண்ணுந்
தொந்தி வயறும் புகர்முகமுந் தூல உடலு மிருபதமுந்
தந்தி வடிவு மிருமணியுஞ் சத்த மொலிப்ப மத்தாரை[1]
சிந்தி யொழுக அடியேன்முன் தெரிய வருவாய் கணபதியே! 71

---

1. மாத்தாரை

### மால்மருகா சரணம் எனல்

### வேறு

கடதட விகடித நடனஞ் சரணம் கரிமுகி லரிதிரு மருகா சரணம்
வடவரை யதிரிட வந்தாய் சரணம் தருகளி றெனவுருக் கொண்டாய்
சரணம்
அடவியி லடிதடு மாறியு மடியேன் அன்புடன் மனதினி லுனையே நினைய
நடமிடு சீவசுத நானென வந்தாய் நாதா கணபதி சரணஞ் சரணம்! 72

### கணபதியே வைகுண்டம் அறியும் வழிகாட்டும்

### வேறு

இடைந்தேன் மனது புண்ணாகி எங்கே எவட மென்றசந்து
குடைந்தே நினைவு குடல்கும்பிக் கோழை யிறல் வழுவுனது[1]
கடந்தே துடர்ந்து பின்சென்று கத்த னெனது கணபதியை
அடைத்தேன் சரணம் வைகுண்டம் அறியும் படிக்கு வழிகாட்டும் 73

### துரோபதை வந்து வேண்டுதல்

பஞ்சவர் தமக்கும் நானும் பாஞ்சாலி வந்து தோன்றி
பஞ்சவா ளைந்து பேர்க்கும் பாரியா யிருந்து பாரில்
துஞ்சவே சூது வென்று துர்ச்சனன் துயிலைக் கொய்ய
அஞ்சலென் றருளிச் செய்த அச்சுதா நம்பி னேனே! 74

### கலி வருமுன் வந்தோம், வைகுண்டம் சேரவை எனல்

மேரினில் பொறித்த வுண்மை வியாசர்சொல் படியா யிந்த
பாரினில் பகையு மற்றுப் பார்த்தனை யாண்டு மிப்பால்
ஊர்தனில் கலியன் வாரான் என்றைவ ரொதுங்கி வந்தோஞ்
சீரினி லடியா ளாற்றுமஞ்[2] சேரவை குண்டந் தாரும் 75

### ஐவர்க்கும் முன்னே எனக்கு வைகுண்டம் தாரும் என்று துரோபதை கேட்டல்

ஐவர்க்குந் தேவி யாகி அழியாத கன்னி தானாய்
ஐவரைப் பிரியா திந்த அவனியி லிருந்து வாழ்ந்து
ஐவரும் அடியாள் தானும் அருந்தவஞ் சேர வந்தோம்
ஐவர்க்கும் முன்னே வாரேன் அரியவை குண்டந் தாரும் 76

---

1. வழுவாது எனல் பொருந்தும் 2. ஆத்மம்

### இவ்வனத்தில் உயிர் இழந்து வைகுண்டம் சேர வரமருள் எனல்

### வேறு

வந்த விடத்தி லிட(ெ)வளியில் மரண மெனக்குச் சரியெனவே
இந்த வனத்தி லுடலிழந்து எளியா ளுந்தன் பதஞ்சேர
விந்த கிரிக்கு வழிகூட்டி வேறோர் துன்ப மணுகாமல்
நந்தா முகுந்தா வைகுந்தா நாதா மலற்றாள் தருவாயே ! 77

### துரோபதை புட்ப ரதம் வேண்டுதல்

என்னை நமனு மணுகாமல் எதிரே புட்ப ரதம்வருக
உன்னை மனதில் மறவாமல் உரைவேன் வருவேன் வைகுண்டம்
பின்னை மனது பதறாமல் பிடித்த பிடியுந் தவறாமல்
முன்னே வருவாய் கோபாலா முகுந்தா சரணஞ் சரணுமக்கே ! 78

### வைகுந்தக் கதவு திறக்க கணபதியை வேண்டுதல்

வருந்து மடியார் தவக்கொழுந்தே மத்த கெஜமே வழிதிறவும்
இருந்த பதியு மிடமும்விட்டு இங்கே வந்தோம் வைகுண்டம்
பொருந்தும் படியாய் வழிகூட்டிப் போவென் றருளும் புகர்முகனே
திருந்தும் முனிவர் தமைக்காணத் திறவுங் கதவு சிவக்கொழுந்தே! 79

### மீண்டும் கணபதியைக் கதவு திறக்க வேண்டுதல்

வாச முனிவர் துருவாசர் மலற்றாள் பணிந்து வரங்கேட்க
நேச முடனே வழிதிறவும் நெடியோன் மருகா அடியார்கள்
தாச ருனது சரணடைந்து தயங்கா நினவு தானருள்வீர்
ஈசர் மகனே கணபதியே எளியாட் குனது கதவுதிற 80

### வைகுண்ட வாசலடைந்து கதவு திறக்க வேண்டுதல்

### வேறு

கற்பகக் களிறே யுந்தன் காவலாம் வாசல் தன்னில்
நிற்பதோ ரடியா ரிங்கே நேசமா யவ்விடந் தன்னில்
உற்பன மாக வந்து உயர்முனி பாதங் காண
விற்பன வாசல் முடல் வெளிதிறந் தழையு மய்யா ! 81

### வியாச முனிவரைக் காணக் கதவு திறக்க வேண்டுதல்

#### வேறு

அய்யா கதவு திறந்தருளி அடியார் தன்னை வாவென்று
மெய்யா சரண முதவிசெய்யும் வேழ முகனே கணபதியே
செய்யா வினோதஞ் செய்தருளும் சித்தே வித்தே சிவக்கொழுந்தே
கையால் கதவு திறந்தருளுங் கண்டே முனியைத் தெண்டனிட 82

### காளியை வேண்டுதல்

வக்கிர தந்த முகக்கமல வடிவு மிலங்குஞ் சடைமுடியும்
உக்கிர கோர விழிமருட்டும் உபைய கரமுமறு கையில்வாள்
சக்கர விசய திரிசூலி சாலி நீலி கோமாரி
துர்க்கை கவுரி சாமுண்டி துதித்தே னுனையே துணைசெய்வாய் 83

#### இதுவுமது

காளி பகவதி கங்காளி கரிய மேக வலங்காரி
ஏழை யடியார் தனக்கிரங்கி இடையூ றின்றி வழிகாட்ட
வேளை யிதுகாண் மாதாவே விடைதா வென்று வந்தடுத்தேன்
ஆளே எந்த னாயாளே அம்மா வந்து துணைசெய்வாய்! 84

### காளியைத் தன்முன் வரவேணுமென்று வேண்டுதல்

#### வேறு

துந்துமி பிடாரி செல்வி தோதகி மசான ருத்திரி
இந்துசேர் பிறையெ யிற்று இடாகினி மகிட தாரி
சிந்துரத் திலத வட்ட மரகதத்திரி சூல மேந்தி
வந்துமுன் தோன்ற வேணும் மரகத வடிவி னாளே! 85

### கேதரா மலைமட்டும் சேர மலைவண்டு முதலானதிலிருந்து காக்க வேண்டுதல்

#### வேறு

தாது மலர்ந்த குழலணங்கே சமைய மிதுகாண் வழிகாட்ட
மாது தனது கேதார மட்டுஞ் சேர மலைவுண்டு
ஏது பிழைகள் வந்தாலும் எளியா ரிடமே நீயிருந்து
தீது பகைக ளணுகாமல் செவ்வே நடத்தும் பராபரையே! 86

### தன்முன் வரவேணுமென்று வேண்டுதல்

நடக்குந் துயர மறிந்துனது நாட்ட மதனால் கண்டிரங்கி
அடக்க முடைய பொருளறியும் அம்மா எனது செயலாலே
கடக்க வேணும் வழிதுலையக் காண வேணும் வைகுண்டம்
வடக்கு வாசல் மடக்கொடியே வருவாய் என்முன் வருவாயே! 87

### முகுந்தனே துணைசெய்வாய் எனல்

ஏது மறியேன் எனையறியேன் எல்லா வுயிர்க்குங் கடலாகும்
வாது சிறிய வழக்கோரம் மனதிலிருந்து வலுவுரைத்து
தீது பகரும் நாயேனைச் செனன மிழந்து வருக வென்று
தூது வரவு மிருப்பேனோ சுகந்தா முகுந்தா துணைநீயே! 88

### கணவன் மார்களுடன் வைகுந்தம் வர வேண்டுதல்

வீமன் விசையன் நகுலனுடன் வேத ஞான தன்மருமாய்
நேம முடனே வைகுண்டம் நெடியோ னடியே துணையாக
ராம தாச ரெனவேதான் நடந்து நுமது[1] நகர்தேடி
எம தூத ரணுகாமல் இதமா யுதவி செய்வாயே! 89

### மரண பயமின்றி அருள வேண்டுதல்

நாடி தளர்ந்து மதிமறந்து நடுக்க மிகுந்து பிராணவுயிர்
ஓடி யுழன்று திசைவாய்வு உள்ளே யடங்கி மெய்பதரி
வாடி மனது தடுமாறி மயக்க மிரும விளைப்புடனே
கூடி வரவும் பண்ணாமல் கொண்டாட் கொள்வாய் கோபாலா! 90

காய மிழந்து நடுவழியில் .. ... ... ... ... ...

(20-வது ஏடு காணப் படாததால் 91 முதல் 95-ல் பாதிவரை பாடல்கள் இல்லை)

... ... ... ... ... ... ... ... புலனால் கலங்கி நில்லாமல்
கிரண வொளிபோல் மாசகற்றிக் கிருபை யுடைய வைகுண்டஞ்
சரண பதவி தந்தருள்வாய் சாமி நந்த கோபாலா! 95

---

1. ருமது என்றுளது

**கந்தன், கணபதி, உமை முதலானோருடன் நாராயணா வரவேண்டும் எனல்**

உந்தன் மலற்றா ளெந்தனுக்கு உற்ற துணையா யிப்போது
வந்தேன் வந்தேனென்றருளி வருவா யடியேன் மலையாமல்
கந்த னுடனே கணபதியும் கச்சி யுமையா ளாயாளும்
நந்தா முகுந்தா கோவிந்தா நாரா யணனே நமஸ்காரம் 96

**துரோபதையும், சகாதேவன் ஆகிய இரண்டு பேரும் வைகுண்டம் சேர பின்னே நகுலன் போதல்**

**வேறு**

ஆண்டவா வுந்தன் பாதம் அடைக்கலங் காரு மென்றேன்
மாண்டது ரெண்டு பேரும் வைகுண்டம் வந்து சேர்ந்தார்
பாண்டவர் மைந்தர் தன்னில் பாய்பரி நகுலன் வாரேன்
நீண்டவர் யென்முன் வந்து நீதுணை செய்கு வாயே! 97

**தருமர், வீமன் அருச்சுனன் ஆகிய மூவரும் பின்னே வருகின்றனர் எனல்**

தூயதோர் தருமர் வீமர் துலங்கிய விசையன் றானும்
நேயமாய்ப் பின்னே வாரார் நீண்டவை குண்டந் தேடி
மாயவர் கருணை கூர்ந்து வந்துநீர் துணைய தாகக்
காயமா யுடலிற் சீவன் கழறுமுன் துணைசெய் வாயே! 98

பாவியேன் பூமி தன்னில் படுத்துடல் கிடத்திப் போட்டு
ஆவியே யுந்தன் பாதம் அடையவென் றோடி வாரேன்
தாவியே மறலி வந்து தடையிடை பண்ணா வண்ணம்
காவியே வாவா வென்று கோவிந்தா அருள்செய் வாயே! 99

**நகுலன் வைகுண்டம் தா என்று கேட்டல்**

**வேறு**

திக்கு மறியேன் திசையறியேன் தேவர் செயலையானறியேன்
மெய்க்கு மொருசொற் பொருளறியேன் வினையேன் வேண்டி வாவெனவே
தக்கும் பொருள்நீ தானாகிச் சகல துணையும்[1] நீரெனக்கு
நிற்கும் நிலையகம் வைகுண்டம் நீயே தருக நினைத்தருள்வாய்! 100

---

1. துளையும் என்றுளது.

இதுவுமது

பெரிய திருமால் வைகுண்டம் பெறவே ஐவர் பிரியமுடன்
அரிய துணையள் தானிழந்து அரியே துணையாய் மனதிலெண்ணித்
துரிய வெளியுந் தான்கடந்து தோற்ற மொடுக்கம் பராபரத்துள்
விரியுங் கமலப் பதஞ்சேர வேணு மருள்செய் கோபாலா! 101

இதுவுமது

வேறு

அண்டரு முனிவர் கேட்க அகிலமீ ரேழுஞ் சாட்சி
விண்டதோ ருடலிற் சீவன் மெய்மறந் துன்னைத் தேடி
உண்டென நம்பி வாரேன் உற்றதோர் துணைவே றில்லை
மண்டலா மாது பாகா மாயனே துணைசெய் வாயே! 102

இதுவுமது

வேறு

கண்ணுங் கருத்து மொன்றாகக் கவனம் போக்கி யுயிர்களைந்து
எண்ணு மெழுத்து மயராமல் அட்டாட் சரத்தைப் பிரியாமல்
நண்ணும் பாதத்தி லனுதினமும் நாரா யணனே தஞ்சமென்றே
விண்ணும் புவியும் பாந்துநின்ற விந்தை மலற்றாள் தருவாயே! 103

இதுவுமது

வேறு

அந்தணர்க் கரசே வேத அகண்டமே அளவில் லாத
சுந்தரப் புயனே மாலே சுருதியின் முடிவே யிப்போ
உந்தனக் கபய மையா உற்றதோர் வேளை தன்னில்
எந்தனைக் காரும் வந்து ஏழையேன் மயங்கா வண்ணம்! 104

இதுவுமது

வேறு

நாபிக் கமலத் தர்சிருப்பில் நடுவே குடியா யிருக்கினுமென்
நாவுக் குணர்வு தடுமாறி அதிலே கலங்கி மதிமயங்கி
பாவிக் குன்து திருமலற்றாள் பதிதான் முத்தி[1] பெறவுமுயிர்
சீவிக்கும் போது வைகுண்டஞ் சேர்ப்பாய் தனியே விழுகாமல்[2] 105

---

1. முற்றி என்றுளது  2. விருகாமல் என்றுளது

### பெருமாள் வர வேண்டுதல்

பொருமல் தவிர நீவருவாய் பூத தயவு முனக்கிலையோ
அருமை யறிவாய் முன்னிருந்த ஐவ ருடைய நினைவறிவாய்
சிறுமை யுடைய அடியேனைச் சிறந்தவை குண்டந் தனைசேர்க்கப்
பெருமை யுனது பெருமாளே பேசா தோடி வருவாயே ! 106

### நகுலன் வைகுண்ட மடைதல்

கலங்கும் வேளை தனக்கிரங்கிக் கலங்கா தென்று பயந்தீர்க்க
மலங்கு மனதை மிகத்திருத்தி மயங்கா வண்ணந் தனைக்காட்டி
இலங்கும் வடிவே எனக்கரிய எதிரே வந்துன் திருநாமம்
அலங்கா ரங்கா பரங்காணு மறியோம் நந்த கோபாலா ! 107

### நகுலன் வைகுண்டஞ் சேர, அருச்சுனன் கூறல்

ஏமனு மனுகா னென்னை இருள்களு மனுகா திப்போ
ராமனே ராமா வென்று நாமமு மறவா தாலே
வீமனுக் கிளைய வீரன் விசையனே சூர னென்பேர்
சாமிசா ரதியாய் நின்ற தகைமையா லணுகா ரன்றே ! 108

### அருச்சுனன் திருமாலை வேண்டுதல்

மூவரும் வந்தோம் வந்தோம் முருந்தனே வானி லுள்ள
தேவரு மறிய வந்தோம் சிறந்தவை குண்டந் தன்னில்
யாவரு மறிய வந்தோம் அரியபாஞ் சாலி வந்தாள்
நீவரும் நினைவு சொன்னேன் நெடியமா லருள்செய் வாயே ! 109

### கண்ணனே உனக்குச் சீடன் நான், எனைக்காக்கவேண்டும்

ஆதியி லுனக்குச் சீடன் அனுதினம் பிரிய நேசம்
நீதியி லுபாய மாகி நெறியறி விவேக முன்னே
பாதியு முனதாய் நிற்கும் பார்த்தனென் றெவரு மாய்தல்
சேதியு1 மறியும் நந்த கோபனே திருத்தாள் போற்றி ! 110

---

1. செய்தியும்

### வைகுண்டம் வேண்டுதல்

### வேறு

கூடிய மறலி தானேது கமலக் கண்ண னிங்கிருக்க
முடிய வினைக ளணுகாது முகுந்தா முகுந்தா வெனத்துதிக்க
விடிய உதிர்த்த கதிர்போலே விந்தை மலரும் வைகுண்டம்
நெடிய பதவி யுண்டாகி நீயே யருள்வாய் கோபாலா ! 111

### நாராயணரைப் போற்றுதல் (வைகுண்ட மடைதல்)

### வேறு

ஐவர்க்குஞ் சகாய முன்னாள் அடைக்கலந் தந்த மாலே
தெய்வர்க்குந் தெய்வ மாகித் தேவனா யிருந்த மூர்த்தி
உய்வர்க்கு மருளீ தென்று உள்ளத்தி லன்பு காட்டி
மெய்வர்க்க மாகி நின்ற வேதநா ரணரே போற்றி ! 112

### பீமன் வேண்டுதல்

அருமறைப் பொருளே உன்னை அடைந்தவ ரைவ ரென்றோ
திருமறை யுடையாய் நால்வர் திருவடி சரணஞ் சேர்ந்தோம்
தருமரும் பிறகே வாரார் தனிவழி தனிய னாகி
வரும் வழி பயமு மல்லால் மாயனே வந்து காரும் ! 113

### பச்சை மாலைத் துதித்தல்

இன்பமும் பொருளும் நீயே இகபர சுகமும் நீயே
அன்பருக் கன்ப னீயே அச்சுதா பச்சை மாலே
துன்பமும் இழந்து நாயேன் சுருதியே பொருளா யெண்ணி
நின்பதி தேடி வாரேன் நெடியவா போற்றி போற்றி ! 114

### ஆதிமூலத்தைத் துதித்தல்

அருந்தவர்க் கெட்டா மூலம் ஆதியா மனாதி மூலம்
பொருந்துவார் நேசந் தன்னில் பூரண மான மூலம்
திருந்தயெட் டெழுத்தாம் மூலம் செகதல மளந்த மூலம்
வருந்தவே வந்த மூலம் வைகுண்ட மூலம் தானே ! 115

### வாயுவின் புதல்வனான பீமன் வருகிறேன் எனல்

மாருதப்பிர சண்ட கோர வாயுவின் புதல்வன் வாரேன்
பாரதப் போர்மு டித்த பாரியவ் வீரன் வாரேன்
நாரதப் பிரிய ரான நாரணா நந்த கோபா
வாருதி சயனத் தோனே மாயனே போற்றி போற்றி ! 116

### திருமாலே உந்தன் பாதம் தொழவருகிறேன் எனல்

கத்தனே கரிய மாலே காரணா சிவந்த பாதா
முத்தனே முதல்வா பச்சை முகுந்தனே நந்த கோபா
அத்தனே அடியேன் வீமன் அடியிணைத் தொழுக வாரேன்.
சுத்தனே சுவாமி நாதா சுந்தரா நந்த கோபா ! 117

### வெண்ணையுண்ட மாயனைப் போற்றுதல்

அளவிலா தனந்த னாதா அரிகரி ராம னாதா
களவினால் வெண்ணை யுண்ட கரியவா பெரிய மாலே
துளபமே யணியு மூர்த்தி சோதியே சுருதி வாழ்வே
தளபமே களப வாசா சானகி நேயா போற்றி ! 118

### நெஞ்சம் புகுந்து காக்க வேணும் எனல்

அஞ்சினர்க் கஞ்சா மன்றாய் அகண்டமா யருளி நின்றாய்
கஞ்சமா மலற்றாள் காண கருதியான் வருக நேசந்
துஞ்சலா லலையா வண்ணந் துணைப்பத மருளி யென்றன்
நெஞ்சமே புகுந்து காக்க நீலமா முகிலே போற்றி ! 119

### துயர்களைய வேண்டினான்

காணவுங் கால தாக்க காட்டவு மிருதாள் தன்னைப்
பூணவும் பணிவ தாகப் பொருளெனச் சிரமேற் கொள்ளத்
தோணவும் வருவாய் மாய்கைத் துயரறக் களைவா யென்றும்
நாணமு மகற்றிச் செவ்வே நடத்துவாய் கரிய மாலே! 120

### வீமன் வைகுண்டம் சேர்தல்

### வேறு

முன்னாள் முதல்வா முகில் வண்ணா முகுந்தா நந்த கோபாலா
உன்னா ளாகி யிருந்தடியேன் உடலே கிடத்தி உயிர்பிரிந்து
இன்னாள் வந்த படியாலே இப்போ வந்தேன் வைகுண்டம்
தன்னா ளெனவே தற்காக்கச் சரணஞ் சரணங் கோபாலா ! 121

### வைகுண்ட வாசனைப் போற்றுதல்

### வேறு

அங்குச கரனே போற்றி அரிநம சிவாயா போற்றி
எங்குமாய் நின்றாய் போற்றி ஏழைபங் காளா போற்றி
சங்குசக்கிரா யுதனே போற்றி சாரங்க தரனே போற்றி
பொங்குபூ ரணனே போற்றி பூமகள் நண்பா[1] போற்றி ! 122

### தருமர் புலம்பல்

### கொச்சகம்

அந்தரமே யேகவெளி அம்பரமே மண்குலங்கள்
சந்திரனே சூரியனே தம்பிமார் நால்வருந்தான்
இந்திரனே இறையவனே எந்தவழி வந்தார் சொல்
செந்திருமால் வைகுண்டஞ் சேர்ந்தாரோ சேரலையோ ! 123

### மலர்களே வாவிகளே பீமனைக் கண்டீரோ எனல்

பாரே பருவரையே பனிமலர்காள் செண்பகஞ்சேர்
மேரே பரிமளமே மேதினியிற் கானகமே
சீரே சிறந்துபொங்குஞ் சிந்துநதி வாவிகளே
நேரே எனக்கிளைய நெடுவீமன்வரக் காணீரோ ! 124

### நாகங்கள் வானரம் முதலானவற்றைக் கேட்டல்

நாகமே நீள்சாராய் நஞ்சுணங்கு மாவிரியா
பூகமே வானரமே போற்றுஞ்சிறு புள்ளினமே
காகமே மேகவண்ணர் கண்ணருட வைகுண்டத்துக்
கேகவே வீ(ம) னிங்குவரக் காணீரோ 125

---

1. கணவா எனல் பொருந்தும்

### என்தம்பியர்களைக் கண்டீரோ என்று மூங்கில் முதலானவற்றைக் கேட்டல்

நாக்கரசே பேராலே நாகவல்லி யூகவல்லி
நோக்கரிய மூங்கில்களே நூதனமா யிங்கேயொரு
போக்கரிய வில்லி புரந்தரனார் தனைருளும்
ஆர்க்கு மிகுந்தழகன் அருச்சுனரைக் காணீரோ ! 126

### விலங்குகளைக் கேட்டல் நகுலன்வரக்கண்டீரோ எனல்

காட்டுப் புலியே காடி பன்றி யாளிகளே
கோட்டுத் திகிரிமத குஞ்சரமே யிப்போது
நாட்டுப் பரிநகுலன் நாரணரைத் தான்தேடி
மேட்டுக் கிரியேறி விரைந்துவரக் காணீரோ ! 127

### சகா தேவனைக் கண்டீரோ எனல்

ஆடும் மயிலினங்க(ாள்) அன்னங்காள் கிஞ்சுகங்காள்
நீடுங் குயிலினங்காள் நீலவண்ணர் தாமிருக்கும்
வீடுவை குண்டமென வேதன் சகாதேவன்
ஓடுவது மிங்கெனக்கோர்[1] உண்மையாய்ச் சொல்வீரே ! 128

### தருமன் வைகுண்டம் வேண்டல்

ஏதறியேன் யானும் இடம்வலமுந் தானறியேன்
தீதறியேன் பொய்யுரையேன் திருவுளமே யல்லாது
சூதறியேன் வஞ்சந் நெறிவறியேன் நீயறிவாய்
மாதுறையு மார்பாவுன் வைகுண்டந் தாருமையா ! 129

### வைகுண்டச் சிறப்புரைத்தல்

வைகுண்டம் வைகுண்டம் வைகுண்ட மென்தனுக்கு
வைகுண்ட மேகெதியாய் வாழும் வரமருள்வாய்
வைகுண்ட மென்றொருக்கால் வாயினால் தானுரைத்தால்
வைகுண்ட மேபெறுக மாலருளிச் செய்வாயே ! 130

---

1. மிங்கினக்கோ என்றுளது

### தம்பியரைப் பிரிந்து வருந்துதல்
### வேறு

வழியுந் திசையுந் திசையிதென்று வழிதா னறியத் தெரியாமல்
இளையோர் பிரிந்த நாள்முதலாய் எளியேன் மனது தெளியாமல்
விழிநீர் சொரிய மெய்சோர விட்டாய் வெட்ட (வெளி)தனிலே
அழியா தோரு வாரிசேர்[1] அடியேன் மலையா தருள்வாயே ! 131

### வைகுந்தம் வேண்டுதல்

என்னைப் பிரியா திருந்தோர்கள் எங்கே எங்கே வந்தார்பார்
உன்னைப் பிரியா நானிருந்தும் உலையில் மெழுகு (போலானேன்)
தன்னைத் தெரியா தலைவேனோ தடுத்தாட் கொண்டு வைகுண்டம்
பின்னைப் பதவி எனக்கருளிப் பிரியா தி(ருக்க) வரந்தாரும் 132

### துணையாக வரவேண்டுதல்

தாரு மெனக்குச் சீர்பாதந் தனியே வழியில் மலையாமல்
வாரு மெனக்குத் துணையாக வந்தா லெனது துயர்தீரும்
ஆரு மெனக்குத் துணையில்லை அடியே னொருத்த னானதினால்
காரு முனது பதஞ்சேர்க்கக் கண்பார் நந்த கோபாலா ![2] 133

### உடலை விட்டு வைகுண்டம் வருவேனா எனல்

ஆசையா யிருந்த பொய்க்கூட்டை அடருங் காமப் பொக்கிஷத்தை
ஓசை யிருந்த துருத்திதனை உடைந்து வளியுங் கிறுமியுடல்
வாச மிருந்த சலமலத்தை மருவி யடியே னித்தூரம்
பாச முடிந்த பருஞ்சுமையைப் பரத்தே செலுத்த வருவேனோ ! 134

### உடலோடு அங்கு வரமுடியாது எனல்

எல்லா முனது செயலாக[3] ஏக வெளியே தாயாக
நில்லா நிலையில் நின்றோனே நினவி னடுவே யசையாமல்
அல்லா லொருவ னுண்டெனவே அடியேன் மனதி லனுதினமும்
சொல்லாப் பெருமை தனையடையச் சுமையோ டவடம் வருவேனோ ! 135

---

1. அழியா திருக்கும் திருமாலே எனல் பொருந்தும்
2. இங்கு கொச்சகம் முற்றும் என்றுள்ளது
3. சியலாக என்றுளது.

## இதுவுமது

பிறவித் துணைகள் தனையிழந்து பேய்போல் தனியே கானகத்தில்
அறவே மனது தடுமாறி அடியேன் தெளியா துழன்றுநெடுந்
திறவி தனையே பொருளெனவே சிவனே யுந்தன் கிருபையினால்
உறவாம் பெரிய வைகுண்டம் உடலோ டவடம் சேர்வேனோ! 136

## சிவனை வேண்டுதல்

ஒன்றாய் ரெண்டாய் மூன்றாகி ஓரஞ் செழுத்தா யுயிர்பலவாய்
நின்றா யகண்ட வெளிதானாய் நித்தா சுத்த படிகமதாய்[1]
நன்றா யொளிவுக் குள்ளொளிவாய் நடனம் புரிந்த சிவசிவனே
என்றா லடியேற் கிரங்கியிப்போ இறைவா என்முன் வருவாயே! 137

## உடலோடு வைகுண்டம் சேர சிவனை வேண்டுதல்

கோலத் துடனே அடியேனுங் குருநா டதனை விட்டேகி
ஞாலத் துடனே துயரமெல்லாம் நன்றாய்க் களைந்து வழிதோறுந்
தூலத் துடனே வைகுண்டம் சேர்க்கப் பதவி தான்சேர
ஆலத் துடையாய் துணைசெய்வாய் அறனே உனது சரண்சரணம்! 138

## திரிகோண மலை யருகே சென்று சிவனை வழிபடல்

வந்தே னுனது திரிகோண மலையி னருகே தானிருந்து
செந்தே னொழுகும் நதிமூழ்கிச் சிவனே சிவனே எனத்தொழுது
நொந்தே திகைத்து வழிதேடி நோன்பு விரதம் மறவாமல்
உந்தே உனது மலர்றாளே உதவி எனக்குத் தருவாயே! 139

## சிவனைத் துதித்தல்

### வேறு

மாறனை விழித்த கண்ணும் மான்மழு தரித்த கையும்
வீரனை புரந்த வாளும் விடைமிசை யிருந்த காவ
கோரனை யுதைத்த தாளுங் குஞ்சர முரித்துப் போர்த்துஞ்
சீரினைத் தெரிப லந்தாள் சிவசிவா நமசி வாயா! 140

---

1. ஸ்படிகம்.

## காத்தருள வேண்டுதல்

### வேறு

என்று மரிய பொருளாகி ஏக பரமுந் தானாகி
அன்று முதலா யின்றளவும் அணுவா அளவுக் கதீதமதாய்
நின்று நெடிய புவனமெல்லாம் நீயா யிருந்த பரஞ்சுடரே
ஒன்று மறியேன் உமைபாகா உடையா ருடைய படிகாரும் 141

## உடலுடன் வருகிறேன் எனல்

### வேறு

காசினி தன்னில் வாழ்ந்து கருமமே மிகவுஞ் செய்து
பாசிநீர் போலே யானும் பாரைவிட் டகன்று செல்ல
தேசிக னாகி யிந்தச் செடத்தையுஞ் சுமந்து கொண்டு
வாசனை யுடனே யுந்தன் மலரடி பெறுக வாரேன் 142

## திருமாலுடனிருக்கச் சிவனை வேண்டுதல்

மாயனார் வாழு கின்ற வைகுண்டந் தன்னி[1] லென்னை
ஆயனோ டருகி ருக்க அருளியே கடாட்சந் தாரும்
தூயனே நமசி வாயா சோதியே அனாதி மூலம்
நாயனே துணைய தாக[2] நடத்துவாய் நமசி வாயா ! 143

## ஆறு கடக்கத் துணையில்லை எனல்

ஆளிய[3] நதியுங் கண்டேன் அக்கரை கடக்க வென்றால்
நீளிய ஆறு தன்னை நீந்தவு மாட்டே னிப்போ
வாளியோர் வீம னில்லை மற்றுள்ள தம்பி யில்லை
தூளிய துணையு மில்லைச் சுந்தரா நந்த கோபா ! 144

## நதியைத் தடுக்கவேண்டுதல்

அக்கமும்[4] நீயே யெந்தன் ஆத்தும தேகம் நீயே
பக்கமும் நீயே யல்லால் பாவினை[5] வேறு காணேன்
சிக்கமும் திகைப்பும் நீக்கித் திரையெனும் நதியைத் தானே
நிக்கவே நிலத்தோ டொன்ற நீயருள் நந்த கோபா ! 145

---

1. தன்னை என்றுளது. 2. துணையாக என்றுளது.
3. ஆழியும் எனல் பொருந்தும் ; இதுழகர(ழி)எதுகை எனல் பொருந்தும்
4. நெடிற்கீழ் எதுகை போலும். 5. பாவனை

### வழியில் வெகுமாய்கை தோன்றல்

### வேறு

வருந்தி யுனையே யான்தேடி வரவே வழியில் வெகுமாய்கை
பொருந்தி மயக்கி மிகப்பகட்டிப் பொல்லா நினவே பெருகத்
திருந்தி நினலில் தானினைத்தால் சிறியே னதற்கு யிடோதான்
அருந்தி யுனது பதஞ்சேர அருள்வாய் நந்த கோபாலா! 146

### இடர்களை எதிர் விடுத்தால் சிறியேன் தாங்கமாட்டேன் எனல்

எல்லாப் பாடும் பட்டறிந்தேன் இளையோர் பிரிந்த நாள் முதலாய்
பொல்லாப் பொழிய வேறில்லை பூத தயவு முனக்கிலையோ
சொல்லால் பெரிய வைகுண்டம் துரையே உன்னை நாடிவந்தால்
இல்லாப் பகையும் எதிர்விடுத்தால் இளையேன் இளையேன்
கோபாலா! 147

### எனக்குத் துணையார் எனல்

கல்லோ மரமோ துணையெனக்கு காடோ செடியோ ஆதரவு
புல்லோ புனலோ துணையெனக்கு பூடோ நிலமோ ஆதரவு
அல்லோ நீரு மறியார்போல் அகன்றே யிருந்தால் துணையார்சொல்
வல்லோர் புகழும் பெரியோனே மாயா நந்த கோபாலா! 148

### பலவகைத் துன்பங்கள் தோன்றல்

ஆறுங் குளமும் மலைசிலைபோல் அடருங் கரடி புலிகள்சிங்கம்
ஏறுங் களிறு பூதகணம் இருண்ட அரக்கர் தனைப்போல
தூறுங் கடிய இருள்போலுந் தோன்றி மிகவே துன்பம்செய்தால்
தேறுங் கருமம் எந்தவிதந் தெளியுந் திறமும் நீர்தாமே! 149

### எல்லாம் உனது திருவிளையாடலே

கெருடா1 வுனது விளையாடல் நேராய் அறிவேன் கோலமுதல்
திருடா வுனது திறமறியச் செய்யா யுனது தொழிலறிவேன்
வருடார் தனையும் வருடாய்நீ மாயா மாயா உபாயமும்நீ
கெருடாள் வாரே யுனதுசெய்தி கேட்டே யிருப்பேன் கோபாலா! 150

---

1. நெருடா என்றுளது.

### இடரகலத் துணைசெய் எனல்

துடரும் வினைகள் துடராமல் துன்பச் சலத்தி லழுந்தாமல்
அடரும் பகைக ளெதிராமல் அருமைப் பொருளே அடியேற்கு
இடரும் அகலத் துணைப்பதத்தை எனது சிரமே லனுதினமும்
படரும் படியாய்க் கிருபைசெய்து பாராய் நந்த கோபாலா 151

### ஆறுதாண்ட வழிகேட்டுத் துதித்தல்
### வேறு

சீரிய தேவா போற்றிச் செந்திரு மாலே போற்றி
ஆரிய ராமா போற்றி ஆழியில் துயில்வாய் போற்றி
பாரிய ஆறு தாண்டப் பரிவுடன் பாதை தோன்றக்
காரிய மாக வந்து கண்ணினில் தோன்று வாயே ! 152

### துளபமார்பனே துணைசெய்வாய்

மாமணித் துளப மாலை மார்பினி லிலங்க வெய்யோன்
பூமணிக் களப மேனிப் புளகித நளின மாக
நாமணி வயிர முத்தும் நவமணி புனைந்து மெந்தன்
தாமணிச் சிரமே நிற்குஞ் சச்சுதா நந்த கோபா ! 153

### துயரிலழுந்தாமல் கரையேற்ற வேண்டுதல்
### வேறு

தம்பி துணையே யான்செய்த சதிகே டனைத்தும் பொறுத்தருளி
வெம்பித் துயரி லழுந்தாமல் வேண்டி யெனையே கரையேற
நம்பிக் கரத்தா லெடுத்தணைத்து நடத்து முழுதுந் தன்மரென
எம்பித் தருள்செய் வைகுண்டம் இருக்க நினையுந் தவமுனக்கே ! 154

### உயிர்வாடும் மயக்கத்தைத் தீர்த்தருள் எனல்
### வேறு

யான்செய்த வினையி னாலே அழுந்தினேன் நரகில் வீழ்ந்து
தான்செய்த தவத்தி னாலே தன்மரென் றிங்கே வந்தீர்
ஊன்செய்த பகையும் பூவில் உடல்தனைக் கிடத்திப் போட்டு
வான்செறி உயிர்தான் வாடும் மயக்கமும் தீர்ப்பாய் எம்பி ! 155

### கைதந்து கரையேற்ற வேண்டுதல்
### வேறு

முன்னா ளிருந்த பகைவினைகள் முழுது மறந்து நினையாமல்
இன்னா ளெனக்குத் துணையாக இரங்கிக் கசத்தில் கிடவாமல்
மன்னா வுனது கைதந்து வாவா வென்று கரையேற்றச்
சொன்னால் மறலி ஒமென்று துயரந் தீர்ப்பா னுனக்காக! 156

### இறவாதிருக்கும் வைகுண்டம் தாரும் எனல்

பிறவி மயக்கந் தெரியாமல் பேதா பேத மிகநினைந்தேன்
திறவிச் சுகத்தின் பெருமைதனைத் திரண மளவு தோற்றாமல்
அறவே கொடுமை பண்ணிவிட்டேன் அந்தப் பொறுமை நீர்பொறுத்து
இறவா திருக்கும் வைகுண்டம் எய்தும் படியாய்க் கைதாரும்! 157

### தயவு செய்து கைதாரும் எனல்

பேரால் பெரிய தன்மரெனப் போறீர் பொறுமை யதனாலே
நேராய் யானுந் தன்மனென நின்றேன் கொடுமை யதனாலே
பாராய் புவியி லுன்னையென்னைப் பகவார்[1] பிரியார் பாரதத்தில்
சீராய் மனது தயவுடனே திறமாய் வந்து கைதாரும்! 158

### யான் செய்த பாவத்தால் நரகம்சேர்ந்துள்ளேன் கைதா எனல்
### வேறு

பஞ்சவா ளஞ்சு பேர்க்கும் பாஞ்சாலி தனக்கும் யானே
வஞ்சமாய்ச் செய்த பாவ மட்டல்ல சொல்லக் கேளும்
கொஞ்சமாய் நினைத்த புத்தி கொடியதோர் நரகஞ் சேர்ந்தேன்
தஞ்சமென் றுன்னைச் சொன்னேன் தன்மருன் கையே தாரும்! 159

### சூதினால் பஞ்சவர்களை வனத்தில் விடுத்தேன் நரகஞ் சேர்ந்தேன் எனல்

சூதினால் கபடஞ் செய்து துரத்தினேன் வனத்தில் யானும்
ஏதினால் குவலை யத்தில் இப்படி நரகம் புக்க
வாதினால் பகையே செய்து வங்கிஷ முழுது மாண்டு
தீதினால் நரகஞ் சேர்ந்தேன் செயதன்மா கையே தாரும்! 160

---

1. பகைவர் எனல் வேண்டும்

**மாயனார் தூது வந்தமைக்கூட மதித்தேனில்லை**

மாயனார் தூது வந்தார் மதித்துநான் துதித்தே னில்லை
ஆயனார் மனைத்துக் கேறா ஆகஞ்செய் அரசு தோற்றேன்
தூயனார் பாதம் போற்றித் தொழுதைவர் கதியே பெற்றீர்
வேயனார்க் காகத் தன்மா விரைந்திரு கையே தாரும்! 161

**நீர்நாய் முதலை முதலியன தொல்லை தருகின்றன கைதாரும்**
**வேறு**

பொறுமை யுடைய தன்மரேநீர் போனா லெனக்குக் கதியில்லை
சிறுமி யுடலைத் துளைக்குதுபார் கெஞ்சி யழுது பரதவிக்க
உறுமி யதட்டி நீர்நாயு முறுக்கி முதலை பிடித்திழுக்கச்
சிறுமை நெடுநாள் பட்டலுத்தேன் தெய்வப் பிறப்பே கைதாரும்! 162

**நரகத்தை விட்டுக் கரையேற்ற வேண்டுதல்**

வேற்றுமை யுனக்கே தப்பா மெய்யுயி (ர்விடு)கைக்[1] கெல்லாம்
பாற்றிப னான மூர்த்தி பராபரம் வந்தாய் சேர்ந்தாய்
நாற்றிசை புகழுங் கீர்த்தி நரகம்விட் டகல என்னை
ஏற்றியே கரையில் விட்டு இருக்கவை குண்டந் தாரும்! 163

**கண்ணன் காட்சி கொடுத்தல்**
**வேறு**

கண்ட பொழுதே கலிதீர்ந்தேன் கரும வினையுங் கசடறுத்தேன்
அண்டர் புகழும் பொற்பாதம் அடியேன் பணியத் தவம்பெற்றேன்
தொண்ட னிவனா மென்றுருகிச் சொல்லும் பெரிய வைகுண்டம்
குண்ட மதிலே யெனை யிருத்தும் கோவே நந்த கோபாலா! 164

**தருமர் வைகுண்டஞ் சேர்தல்**
**வேறு**

ஆதலால் உன்னைக் கண்டேன் அல்லிரு ளகன்று திப்போ
மாதவா எனது சிந்தை மயக்கமுந் தீர்ந்தேன் தீர்ந்தேன்
சீதவா துளப மார்பா தேவகி நந்த கோபா
கீதவா யிசைகள் சேருங் கிஷ்ட்டினா வைகுண்டஞ் சேர்ந்தேன்! 165

---

1. மெய்யுயிருகைக் என்றுளது

### கண்ணனைத் துதித்தல்

சானகி ராம ராம சாரங்க தேவா ராமா
மானகர் அயோத்தி ராமா மாதவா வாசு தேவா
ஓநமோ ராம ராமா உலகினை யளந்த மாயா
தானவா உனது பாதஞ் சரணமே கண்டேன் கண்டேன்! 166

### கண்ணன் தொட்டணைத்தார் சுகம்பெற்றேன் எனல்
வேறு

பட்டேன் புவியி லுழன்றடியேன் பாசங் களைந்து வருமளவும்
விட்டே னுணர்வு தனைமறந்து விரத முனது வைகுண்டம்
மட்டேன் அரிய நடந்துவந்தேன் மறலி மலரோன் வானவருந்
தொட்டே யணைத்தார் சுகம்பெற்றேன் தொழுதே னுனைநான்
தொழுதேனே! 167

### வைகுண்டம் என்று சொன்னால் வினையகலும் எனல்
வேறு

வைகுண்ட வாசஞ் சேர வருவது எளிதோ வுந்தன்
வைகுண்ட மென்று சொன்னால் வரும்வினை யகன்று போமே
வைகுண்ட ராச ராசே வடமலை யானே இப்போ
வைகுண்டந் தந்தாய் பெற்றேன் வைகுண்டஞ் சேர்ந்தேன்
யானே! 168

### திருமாலைத் துதித்தல்
வேறு

சங்கு சக்கர ராகு ராகவ சாரசா கரவ சீகரா
தரும மென்றெனை யருமை செய்தொரு சாமி வெங்கிட நாயகா
எங்கும் நிட்கள ரூப மாகிய எம்பி ரானுயர் தம்பிரான்
எனது சற்குரு சரண பொற்பதம் இறைவனே துணை மரவனே

---

1. ஓம் நமோ

## திருமாலை துதித்தல்
### வேறு

பொங்கு பூரகா மங்கை மாரொடு புருஷ மேருவு தாரகா
பொன்னலங் கிருத ராச பூஷணா பொன்ன ரங்கமீ ரங்கமே
செங்கண் மாலழ கெங்கள் நாயகா செகப ராபர வஸ்துவே
சிறீம னாரணா ராம ராகவா சேது மாதவ ராமனே ! 169

## இதுவு மது
### வேறு

ராமராம அரிராம கேசவா ராமராம ராமானுசா
வாமரூப விசுவாம கேதாமத வாமதேவ சிவராமனே
நாமமே திருநாம மாயிரம் நாமமாகிய நாரணா
சோமசீதரு சோதி நாயகா சோலைமாமலை மாயனே ! 170

## வெங்கிடகிரியானை வணங்குதல்
### வேறு

சுகந்த வாச துளபமுகுந்தா தொக்கு டதொகு தொகுதோம்
முகுந்த தேவர் களபகஸ்தூரி மோகா முராரி செயசெய
தகுந்தித குந்திகு தாதிகு தாதிகு சரணஞ் சரணுரே
மிகுந்த வாசனை திமிர்ந்த தோமள வெங்கிடகிரிமலையானே
சரணம் ! 171

## வைகுந்த பதியைப் போற்றுதல்
### வேறு

நாத கீத(ர)குநர்தனே கிருபை ராம சந்திரவி மானமே
போத வேதவை குந்த மேபதி புகழும் எங்கள் பராபரா
ஓத வேவொரு பத்து முத்தனை உண்மை யாகவி ருத்தமும்
ஓத வேதரு பாத மேகெதி ஒன்றி லெனதுயர் கண்டிலேன் ! 172

## பகைமுடித்த பரந்தாமனைப் போற்றுதல்
### வேறு

பூருவத் தரசு நாட்டிப் பூவுல கனைத்தும் பூட்டி
வேறுசொற் பகையுங் காட்டி மித்திர பேத மாகக்
கூறுமுற் கதையுங் காட்டிக் குலைத்தொழில் புரிய வீட்டில்
பேறுபெற் றைவ ரென்று பெரும்பகை முடித்தாய் போற்றி ! 173

### விட்ட குறை நிறைவேற முடி சூட்டவேண்டுதல்

### வேறு

அடியேன்[1] செய்த பிழைபொறுத்தீர் அரசு நிறுத்தி வினையறுத்தீர்
சிறியே னுனது பயலாகச் சித்த மிரங்கி யனுதினமும்
வெறிபோ யகல வகைபுரிந்தீர் விட்ட குறையும் நிறைவேறக்
குறியா மகுட முடிசூட்டுங் கோவே எனது குலக்கொழுந்தே! 174

### கலியுகத்தில் மெலியாமல் காத்தருள்

இன்னஞ் சிறியேன் கலியுகத்தில் இருந்து மெலிந்து யிடையாமல்
முன்னஞ்சு பேர்க்கும் நூற்றுவர்க்கும் மொழியும் விபர மதுபோல
வின்னஞ் சுமறா நடுஞாயம் விரும்பி யுரைத்து அடியேனை
தன்னெஞ் சறிவு தானதுபோல் தற்காத் தருளுந் தயாபரனே! 175

### கலிக்குப் பயந்து ஐவர் வைகுந்த மடைந்தனர்

முன்னாள் நடந்த மொழிவசமு முறையு மெனக்குத் தெரியாது
இன்னாள் நடக்கும் விபரீதத்தால் என்னை மறந்து சடையாமல்
அன்னாள் கலியன் வந்ததினால் ஐவ ரகன்றார் அரியிடத்தில்
பின்னா ளுமக்கு நாயடியேன் பேசா தடிமை யாள்வாயே! 176

### குருகுலத் தரசர்க் கெல்லாம் அருள வேண்டுதல்

### வேறு

குருகுலத் தரசர்க் கெல்லாம் கொற்றவா உற்ற வேளை
வருகெனச் சமைய மென்பேன் வந்தருள் புரிந்து நீரும்
குருவெனத் தடுத்தாட் கொண்டு கொற்றவா அடியேன் மீதில்
தருவெனக் கனக மீயும் சற்குரு நாதா போற்றி! 177

---

1. அறியேன் எனல் பொருந்தும்

## இராம நாமத்தின் மகிமைகூறல்

அரிகரி ராமா வென்றால் அகன்றிடுங் கொடிய பாவம்
அரிகரி ராமா வென்றால் அநேகமாஞ் செல்வஞ் சேரும்
அரிகரி ராமா வென்றால் அறங்களும் மிகுந்து வாழும்
அரிகரி ராமா வென்றால் அவர்கள்மெய்ஞ் ஞானி யாமே! 178

## சனிக்கிழமை விரதமிருந்து சனிக்கிழமை முடித்தது

மந்த வாரமும் வைகுண்ட மாலுக்கு
எந்த வாரமும் ஈடல்ல என்றுதான்
அந்த வாரமும் விரதம் அனுட்டித்து
இந்த வாரம் எழுதி முகிந்ததே! 179

முச்சுட ராகி நின்ற முடிந்ததோர் சோதி பாதம்
அச்சுத னயனுங் காணா அகண்டமா யளவில் லாத
சச்சுதா னந்த மான சதாசிவ குரு(வை)வ(ப்) பாட
மெச்சுட ருதய மான விளக்கொளி யுமையைச் சொல்வாம்

கண்ணுக்குள் மணியாய் நின்ற காண குரு(வைப் பாட)
விண்ணுக்குள் ளொளிப ரந்து மெய்ப்(பொ)பாருள் விளக்க மாகி
மண்ணுக்குள் ளெவர்க்(கு) வளிதக நின்றோர்க் கெல்லாம்
யொண்ணுக்கு ளொண்றாய் நின்ற யும்மையே யுரைக்க லுற்றாம்

## சுவடி எண் 1368-ன் கதைச்சுருக்கம்

மகாபாரதப் போர் நிகழ்ந்தது. போர்க்களத்திலேயே துரியோதனன் முதலான நூற்றொருவரும் மாண்டதற்பின், தருமர், தம்பியருடன் முடிசூடி வாழ்ந்து, பின் வீமன் மகன் பரீசித்துக்குப் பட்டம் கட்டினர். பின், செனமேசெயன் பிறந்தான். பிள்ளைப்பருவ வருணனை சிறப்பாகக் காணப்படுகிறது. கலியுகம் பிறப்பதனால் நியாயம் நிலைக்காது என்றெண்ணி பின் அவனுக்குப் பட்டம் கட்டி ஆட்சி நடந்தது. வைகுண்டம் செல்ல எண்ணினர்.

## கலியுகம் பிறக்கு முன்னும், பின்னும்

உள்ளூர் வேதியனிடம், வெளியூர் அந்தணன் ஒருவன் வந்து, தங்க இடம் கேட்டான். அவன் தந்த இடத்தில் வீடுகட்ட மண்தோண்டும்போது புதையல் தென்பட்டது. அதை எடுத்து மனை தந்தவனிடம் கொடுத்தான். மனை தந்தவன், "புதையலை நான் காணவில்லை; கண்டவனுக்கேதான் சொந்தம், நீயே வைத்துப் பெருக வாழ்வாயாக" என்று சொல்லி வாங்க மறுத்தான்.

"நீ, மனையைத்தான் தந்தாய், புதையலைத் தரவில்லை. உன் முன்னோர்கள் வைத்த புதையல் இது உனக்கே சொந்தம் எனக்கூறி" கொள்ளச் சொன்னான்.

வழக்கு மன்றேறியது. இருவர் சொல்வதும் ஞாயமே என்று வழக்குத் தீர்க்கும் நீதியாளர்கள் திகைத்தனர். அப்போது, தருமர் ஐந்தாம்நாள் வரச்சொல்லி இருவரையும் அனுப்பினார். மூன்றாம்நாள் துவாபரயுகம் முடிந்து கலியுகம் பிறந்தது. 5-ஆம்நாள் வந்தவர்கள், பூமி தந்தவனுக்கே புதையல் சொந்தம் என்றும், கண்டவனுக்கே புதையல் சொந்தம் என்றும் மாறி வழக்குரைத்தனர். நீதிபதிகள், "அந்தணர்கள் வழக்கில் அநியாயம் கண்டோம்; இது கலியின் கீர்த்தி" என்றனர்.

## வைகுண்டம் செல்ல எண்ணுதல்

கலி வந்ததனால் நியாயம் நிலக்காது என்றெண்ணித் தம்பியருடன் தருமர் வனவாசம் செல்ல எண்ணிப் பரீசித்துவுக்குப் பட்டம் சூட்டி விட்டுப் புறப்பட்டனர். குந்தியம்மாளிடம் சென்று வணங்கினர். முனிவரின் மகிழ்வால் பாண்டவர்கள் பிறந்த வரலாற்றைக் கூறினாள். வருந்தினாள்.

விடைபெற்ற பஞ்சவர்கள் துரோபதையுடன் வைகுண்டம் சேரப் புறப்பட்டனர்.

திருமாலின், அவதாரச்சிறப்புகள் பேசப்படுகின்றன. முன்பு, காட்டில் பரீசித்து தவமுனிவர் மீது பாம்பினை இட்டதனால், அம்முனிவர் பாம்பினால் உனக்கு மரண மெனச் சபித்தார். பரீசித்து இப்போது ஆளும்போது சோதிடர்கள் கூறினார்கள். உபாயமும் கூறினர். அதன்படி, கடல் நடுவே மாளிகை அமைத்துத் தங்கினான். கார்க்கோடகன் எனும் பாம்பு எலுமிச்சம்பழ உருவெடுத்து மிதந்துவர, அதனை மன்னன் வாங்கி கண்களில் ஒத்த, அரவம் தீண்டி இறந்தான். இது விதியின் பயன்.

விதியின் பயனை விளக்க ஒருகதை கூறப்படுகிறது. ஒருவன் மொட்டை அடித்துக் கொண்டு, ஒரு பனை மரத்தின் அடியில் படுத்தான். அவன் தலையில் பனம்பழம் விழுந்தது. இறந்தான் அதுபோல பரீசித்து இறந்தான்.

மகன் சனமேசன், தந்தையை உயிர்ப்பிக்கச் செய்த வேள்வியில் எழுந்த தீ சர்ப்பத்தை அழிக்கத் துரத்தியது. சர்ப்பம் அயிராவதத்தின் உதவியுடன் இந்திரனை அடைந்து செய்தி கூற, இந்திரன், சனமேசனுக்கு சீட்டெழுதி அனுப்பினான். அதில், முனிவர் மீது பாம்பினை இட்டவரலாறு கண்டு பயந்து, பரீசித்துவுக்கு ஈமச் சடங்குகள் செய்தான்.

ஒரு தபசி, பாம்பின் விடம் நீக்கி மன்னனை உயிர்ப்பிக்க வந்தான். பாம்பு எதிர்நின்று மன்னன் சாம்பலானதைக் கூறியது' சாம்பலைச் சேர்த்து உயிர்ப்பிப்பேன் என்றார் தபசி. அதற்குநாகம். 'நான் ஒரு பசுமரத்தைக் கொத்தி எரியூட்டிச் சாம்பலாக்குகிறேன். அதனை மீண்டும் பசுமரமாக்கும் என்றது. மாமரத்தைத்தீண்டியது. முனிவரால் பசுமர மாக்க இயல வில்லை. நாகத்திடம், நாகமணி பெற்றுக் கொண்டு முனிவர் சென்றார்.

பின்னர் செயவிசயர் முதலானோர் ஆண்டனர். விநாயகப் பெருமாள், தன் ஒரு கொம்பினை ஒடித்து மேருமலையில் பாரதக் கதை எழுதிய வரலாறு கூறப்படுகிறது. இவ்வரலாற்றினை வியாசமுனிவர் செனமேசனுக்குக் கூறுகிறார் :

முனிவர்கள் மொழி கேளாமல், சூது விளையாடி, எல்லாமிழந்து, விதிவசத்தால், வனவாசம் போய்த் துன்பம் அனுபவித்தனர் என்று

கூறினார். செனமேசன் யாகம் செய்ய விரும்பினான். 'நீ யாகம் செய்தால் உனக்குப் பிரமகத்தி தோஷம் வரும்'என்று கூறிவிட்டு விண்ணுலகு சேர்ந்தார்.

அதனைக் கேளாமல், செனமேசன், பெரியதோர் யாகம் செய்தான். ஓர் அந்தணன் யாகப் புகையில் மயக்கமுற்றான். அவனை எழுப்ப தருப்பையால் மன்னன் அவன் முகத்தில் தொட, அது கண்டு அதனைப் புலி என்று மருண்டு, யாகத்தீயில் விழுந்து மாண்டான். உடன், செனமேசனுக்கு பிரமஹத்தி ஏற்பட்டது. முனிவர் கூறியபடி பிரஹத்தி தோஷம் வந்து. விட்டது. என்று வருத்தினான். அப்போது வியாசர் வந்தார். நீ பாரதக் கதையைக் கேட்டால் இப்பிரமஹத்தி தோஷம் நீங்கும், என்றார்.

உடன் வல்லுநர்களை அழைத்து, பாரதம் சொல்லச் சொன்னான் அவர்கள் கூறும்போது, 'வீமன் வீசியெறிந்த மதயானை அந்தரத்தில் சுழன்று இறந்து விழுந்தது' என்றனர். அதுகேட்டமன்னன், இது பொய் என்றான். உடன் அவன் உடல் முழுவதும் வெண்மேக வியாதி கண்டது. அதற்குப் பரிகாரம் கேட்டான். கரும்பட்டாடை தரித்து, பஞ்சவர்கள் வைகுண்டம் சேர்ந்த கதையைப் படித்தால், கரும்பட்டாடை வெண் பட்டாடை ஆகும். அப்போது, வெண்மேகமும், பிரமகத்தியும் தீரும் என்றனர். அவ்வாறே கேட்கலுற்றான்.

## பஞ்சவர்கள் வைகுந்தம் செல்லும் கதை தொடங்குகிறது

தருமர், தம்பியருடனும், துரோபதையுடனும், வடக்கு நோக்கிப் புறப்படுகின்றனர். நீராடி மரவுரிதரித்துச் செல்லும்போது, வனத்திலே

கலியன், தன் தாயார் தலைமீது சுமையேத்தி, தன் மனைவியைத் தோள்மீதேற்றி எதிரே வந்தான். கண்டு அதிசயித்து, மருத வனங்கடந்து. கணபதியை வணங்கினர். அவரும் வந்து, வைகுண்டம் செல்லும் வழி காட்டி மறைந்தார். மேகநாதனென்றொரு கந்தருவன் எதிர்வந்து, அத்தினாபுரம் திரும்பிச் செல்லுங்கள்; இல்லையேல் போருக்கு வாருங்கள் என்றான். நாங்கள் போர் செய்யமாட்டோம் என்றனர். உடன் பாய்ந்து துரோபதையைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு புறப்பட்டான். வீமன் போரிட்டு அவனை விரட்டி, துரோபதையைக் காப்பாற்றினான்.

செல்லும் வழியில், ஒரு பொய்கையும், ஒரு முனிவர் ஆச்சிரமமும் கண்டு, கேட்டனர். இது நாக கன்னிகைகள் வந்து நீராடும் பொய்கை என்றார். உதயத்தில் நாககன்னிகையரைக் கண்டார்கள். அவர்கள், ''நீங்கள் நாகலோகம் வந்து விடுங்கள். நீங்கள் மன்னராகலாம்'' என்றனர். வாருமென அழைத்தனர். மறுத்தனர்; சென்றுவிட்டார்கள்.

மேலும் நடந்து செல்லும் போது, ஒரு பெரிய நாகம்வந்து அறுவரையும் விழுங்கியது. பீமன். சிறு கத்தியினால், அதன் வயிற்றைக்கீற எல்லோரும் வெளியே வந்தனர். அந்த அரவம் ஒரு பார்ப்பன வடிவம் பெற்று எதிரே நின்றது. பஞ்சவர்கள் விசாரித்தனர். அவன். 'நான் ஒரு ரிஷியின் சீடன். மலரெடுக்கச் சென்று, அங்கு அரம்பையரைக் கண்டு மயங்கி, காலதாமதமாக வந்ததால். பூசைக்கு மலர் தாமதமானதால் என்னை நாகமாகச் சபித்து, பஞ்சவர்களால் உன் சாபம் நீங்கும் என்றும் கூறினார். என்றுகூறிச் சென்றான்.

மேலும் வழிநடந்தனர். அங்கு அண்டமுகடளவும் மலை நின்றது. அதனைத் தெண்டாயுதத்தால் வீமன் அடித்தான். அது வேதியனாக மாறியது. அவன் : நான் பகைவரை வென்றேன். அவர்கள் வைகுண்டம் தாருமென்றனர். 'தந்தோம்' என்றேன். அதனால். மாயன், என்னை மலையாகென்று சபித்துப் பஞ்சவர்களால் உன் சாபம் தீருமென்றார். சாபம் நீங்கியது ; போகிறேன்' என்று சொல்லிப்போனான்.

எதிரே ஒரு பேராறு கண்டனர். வீமன், தன் இருதோள்மீது, தருமன் அருச்சுனனையும் இரு கைகளில் நகுல சகாதேவர்களையும்' முதுகில் துரோபதையையும் சுமந்து ஆற்றைக்கடந்தனர். அப்போது ஆறு அணங்கானது. அது: ''நீதமுனி மனைவி நித்தகன்னி நான். ஒருநாள் நான் அதிகமாகத் தூங்கிவிட்டேன். அதனால், ஆறாகச் சபித்து, பஞ்சவர்களால் சாபம் நீங்கும் என்றார்கள். அதனால், நான் சாபம் நீங்கப்பெற்றேன்'' என்று கூறிப் போனாள்.

மேலும் நடக்கும்போது, தீநிமித்தம் கண்டது. துரோபதைக்குப் பொல்லாது என்றது. அவளுக்கு மயக்கம் வந்தது. அறிவு மயங்கி அசதி வந்தது. திருமாலைத் துதித்தாள். அந்தர மங்கையர் மலர்தூவ தேவ விமானம் வந்தது. வைகுண்டம் சேர்ந்தாள். சடங்குகள் முடித்தனர். இமையோர் மடந்தையவள் பாரதப்போர் முடிக்கத் துரோபதையாக வந்தாள் என்று கூறினார். நடந்தனர் வெகுதூரம்.

அங்கு ஒரு குகையினின்றும் ஒருசிங்கம் வந்தது. அதனை வீமன் கொன்றான். அது வேதியராயிற்று, விபரம் கேட்டனர். அதற்கு அவன் : "நான் விசுவமுனிக்கு மலரெடுக்கச் சென்றேன். அங்கு இரண்டு சிங்கங்கள் சண்டையிட அதனைக்கண்டு வந்ததால், பூசைக்கு நேரமாயிற்று. அதனால் என்னைச் சிங்கமாகச் சபித்தார், பஞ்சவர்கள் வரும்போது சாபம் நீங்கும் என்றார், தீர்ந்தது ; சென்றுவருகிறேன்" என்றுபோனான்.

வழியில், ஒரு மாமுனியைக் கண்டார்கள். அவர், அவர்களைத் தன் முகத்தைப் பார்க்கச் சொன்னார். பார்த்தார்கள். அதிலிருந்து, பால், பழம் முதலியன வந்தன. உண்டு மகிழ்ந்தனர். வைகுண்டத்திற்கு வழிகேட்டனர். அவர், கேதாரம் வரை வழிகூறினார். நடந்தனர்.

பெரிய இடும்பி ஒருத்தி அங்கே படுத்திருந்தாள். சுற்றிலும் வழி இல்லை. வாய்வழியே நுழைந்தனர். துரோபதைபோல் உருக்கொண்டெழுந்தாள் வரலாறு கேட்டனர். "யோகமுனி என்தகப்பன், உத்தசிவகன்னி என்பெயர். பெண்களுடன், தகப்பன் செய்யும் வேள்வியைக் கண்டதனால் அரக்கியானேன். ஐவரால் சாபம் தீருமென்றார். தீர்ந்தேன். செல்கிறேன்" என்று சென்றாள்.

நெடுந்தூரம் சென்று வழிகாணாமல், கணபதியைக் கை தொழுதனர். அங்கு கதவுகள் திறக்கப்பட்டன. சிவனை வழிபட்டனர். முனிவரையும், மாயனையும் நினைந்து செல்லுங்கால் வழியில் காளியை வணங்கினர். காளி வழிகாட்டினாள்.

நெடுந்தூரம் நடந்தார்கள். கைலாசன் என்னும் அரக்கன் வழியில் எதிரே மலையாய் நின்றனன். கடக்க முடியாமல் திகைத்தனர். திடீரென்று அரகக்ன் அவர்களை எட்டிப் பிடித்தான். வீமன் போரிட்டு அவனைக் கொன்றான். நெடுந்தூரம் நடந்தார்கள். அங்கு அவர்கள் சிவனை வழிபடுகின்றனர். சிவனது பெருமைகள் பேசப்படுகின்றன.

அமுதங் கடைந்த வரலாறு. கடல் கடைந்தது. விடம் மூவுலகையும் கலக்கியது. சிவனைத்தேவர்கள் பணிந்தனர். விடத்தை உண்டார். பார்வதி கழுத்தைப் பிடிக்க நீலகண்டரானார்.எல்லோரும்பிழைத்தனர்.

தருமர் முப்புரம் எரித்தகதை கூறுகிறார். திரிபுராதியர் களைத் திருமால்மூலம் சிவபூசை மறக்கச் செய்தார். அதனால் மேருவை வில்லாக்கி, வாசுகியை நாணாக்கி, திருமாலை அம்பாக்கி வந்தும், சிரித்தே, எரித்து அழித்தார் அவர்களை. கதைகேட்டு நடந்தார்கள். மேலும் ஒரு கதைசொல்லும்படிக் கேட்டான் வீமன்.

இரணியன் பிரகலாதன் கதையைக் கூறினார். தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான் என்றதனால், தூணில் திருமால் நரசிம்மமாகத் தோன்றி இரணியனை அழித்தார். மேலும் ஒருகதை கேட்டனர்.

திருமறைக்காட்டில், திருவிளக்கில் நெய்யுண்ண வந்த எலி, அறியாமலேயே திரியினை வாலால் தூண்டிவிட அது நன்கு எரிந்த காரணத்தால் அதனை மாபெலிச் சக்கரவர்த்தியாக்கினார். திருமால் அவனிடம் மூன்றடி மண் கேட்டு விண்ணையும், மண்ணையும் அளந்து, 3-ஆவது அடியினை அவன்தலைமேல் வைக்காமல், தேவலோகத்தில் சிறைவைத்தார் என்றார்.

உலகத்தோற்றம் முதலான தத்துவங்களையும், சிவன், விஷ்ணு, பிரமன் மூவரும் வாதிட்டதையும், பிரமனும் விஷ்ணுவும் போரிட்டதையும், சிவனிடம் முறைபிட்டதையும், அவர் கொடுங்கனலாய் வளர்ந்ததையும், பிரமவிஷ்ணுக்கள் கண்டு மயங்கினதையும், அடிமுடியறிய, திருமால் வராகமாகப் பூமியைக் குடைந்து சென்று காணாமல் திரும்பிவந்ததையும், பிரமன் அன்னப்பறவையாகி திருமுடிகாணச் சென்று காணமுடியாமல் தவித்தபோது, திருமுடியினின்றும் வந்த தாழம்பூவினைப் பொய்ச்சாட்சி சொல்ல வைத்ததையும் அதனால் பிரமனுக்குப் பூவுலகில் கோயில், குளம், பூசை இல்லால் போகட்டும் என்றதையும், பிறகு மன்னித்துப் படைப்புத் தொழிலைத் தந்ததையும், பின்சோதிப் பிழம்பு அருணாசல மானதையும் எடுத்துரைத்தார் தருமர். இக்கதை கூறி பலகாததூரம் நடந்தனர். பின்னர் கிருஷ்ணருடைய லீலைகளை யெல்லாம் கூறி மகிழ்ந்தனர்.

அப்போது, கிருஷ்ணர். ஆதி கருடனை அனுப்பி தருமர் நிலையறிந்து வருமாறு பணித்தார். கருடன் அன்ன வடிவாய் வந்து எதிர்நின்று கேட்க, "வைகுண்டம் போரோம்" என்றுகூற, அன்னம், "உங்களுக்கு வைகுண்டம் கிட்டாது; திரும்பிப் போங்கள்" என்று கூற எங்களுக்குப் பெருமாளாசை மட்டுமே உளது; வேறு ஆசையில்லை என்று தருமர் கூற, அன்னம் வைகுண்டம் சேர்ந்து, திருமாலிடத்தில்,

பஞ்சவர்களின் திருமால் பக்தியை எடுத்துக் கூறியது. அத்துடன், 'அவர்களுக்கு வைகுண்டம் தரவேண்டும்'' என்றும் வேண்டியது. உடன் சக்கரத்தை அனுப்பி, பஞ்சவரைக் காக்கச் சொன்னார்.

சிலநாட்களில் சகாதேவனுக்கு, இறுதிக்காலம் தெரிந்தது. வைகுண்டம் சேர்ந்தான். வெகுதூரம் நடந்தார்கள். அங்கு வரும்காசி கங்கை தீர்த்தத்தில் கன்னியரும் தேவர்களும் நீராட வந்தார்கள், அவர்களை வணங்கிச் சென்றார்கள்.

சகாதேவன் பிரிந்த காரணத்தை பீமன் கேட்க, தர்மர் 'பாரதப் போரில் களப்பலிக்கு அரவானைக் குறிப்பிட்டதனால் இவன் இறந்தான்' என்றார்.

வழியில், இந்திரன் மகளும், இருகன்னியர்களும், ''நீங்கள் யார்?'' என்று கேட்க, ''நாங்கள் பஞ்சவர்கள்; வைகுண்டம் செல்கின்றோம்'' என, அவர்களுக்குத், தருமரின், நடுநிலைத்தீர்ப்பு ஒன்று நினைவுக்குவந்தது.

புருஷாமிருகப் பால் வேணுமென்று தாய்கேட்க, அதற்கு, வீமன், கானகம் சென்று தந்திரமாகக் கொண்டுவரும்போது, புருஷா மிருகம் போரிட, இருவரும் தருமரிடம் முறையிட, தம்பி பீமனுடலிற் சரிபாதி புருஷாமிருகத்துக்குத் தரவேணுமென்று, 'தச்சரை அழைக்க புருஷா மிருகம், தருமரின் ஞாயம் கண்டு மகிழ்ந்து போனதைக் கன்னியர்கள் கேட்டிருக்கின்றனர். அத்துடன், வீமனுடைய பிரபலத்தையும் கேட்டிருக்கின்றனர். வீமன், இடும்பன் முதலானோரை வெற்றிகொண்டதையும், அருச்சுனன் பாசுபதம் பெற்றதையும், பரிக்கு நகுலன் என்பதையும், காலமறிதலில் சகாதேவனையும் பற்றிச் கேட்டிருக்கின்றனர். தருமர், இவர்களை அவர்களிடம் அறிமுகப்படுத்தினார்.

அவர்கள், ''வாருங்கள் தேவலோகம் செல்லலாம்'' என்றதோடு அவர்களையும் விரும்பினார்கள். தருமன் முதலானோர் மறுத்து

வழிநடந்தனர். வழியில் வானரங்கள் வழிமறித்து யாரெனக்கேட்டு, 'இங்கேயே இருங்கள்' என்றன. மறுத்து வழிநடந்தனர்.

நகுலனுக்கு மயக்கம் வர, வழக்கம்போல் தேவ விமானம் வந்து கொண்டு சென்றது. அது குறித்து வீமன் தருமரைக் கேட்க, தருமர். நகுலன் தான் கற்ற கல்வியைப் பிறருக்கு வழங்காமல் இருந்தான் அதனால் கானகத்தில் இறந்தான்'' என்று கூறினார்.

கடந்து சென்றனர். எதிரே மதயானை வந்தது. வீமன் போரிட்டான்; அடக்கினான். யானை அந்தணராக உருமாறியது. அது, 'நான் அகத்தியரின் சிவபூசைக்கு மலரெடுக்கச் சென்றபோது, யானைகள் புணர்வதைக் கண்டிருந்து தாமதமாக வந்ததால், என்னை மதயானையாகும்படி சபித்தார். வீமனால் சாபம் நீங்கும் என்றார்'' என்று கூறிப்போனார். நடந்தனர் வெகுதூரம்.

எதிரே ஒருமுனிவரைக் கண்டனர். அவர், ''எனக்கு ஐயாயிரம்பேர் மக்கள் உள்ளனர். அவர்களை மணங்கொண்டு,இங்கேயே நாடாண்டிரும்'' என்றார்; மறுத்து மேல் நடந்தனர்.

அங்கே, இரண்டு பெண்கள், ஊசியின்மேல் காலூன்றித் தவம் செய்து கொண்டிருந்தனர். அவர்களிடம் ஆசிபெற்றுப் புறப்பட்டனர். சிறிது தூரத்தில், அகத்தியர். முதலான 9 முனிவர்களை வணங்கி அப்பால் சித்தர்களைக் கண்டு வணங்கி ஆசி பெற்றுச் சென்றனர்.

விசயன் மயங்கினான். 10 விருத்தங்கள் இறைவனைத் துதித்துப்பாடினான். புஷ்பகவிமானம் வந்தது. விசயனை அழைத்துச் சென்றது. வைகுண்டம் சேர்ந்தான்.

தன்மரும், வீமனும் நடந்து சென்ற போது, பன்றி வடிவில் வந்தவன், வீமனால் அந்தணனாக மாறி, ''கார்மேக முனியின் சீடன் நான், வேள்விக்குச் சமித்துக் கொண்டுவரச் சென்று தாமதித்து வந்ததால் பன்றியாகச்சபித்து வீமனால் விமோசனம் என்றார்'' என்று கூறிப் போனான்.

சக்கரம் வந்தது, 'வீமனுக்கு முடிவு' என்று சொல்ல, தெய்வ விமானம் வந்து அழைத்துச் சென்றது, வைகுண்டம் சேர்ந்தான். தருமர் புல்லறிவு வந்து புலம்பினார். நாரணரே துணையென்று புலம்பினார்.

சக்கரம் வந்து, தன்மருக்குத் தூக்கத்தைத் தந்தது தூங்கினார். எழுந்து நடக்கும் போது, அங்கு ஒரு பெருமலையைக் கண்டு அஞ்சினார். கண்ணனைத் துதித்தார். சக்கரம் வந்து, மலையைப் பெயர்த்து. நடுக்கடலில் போட்டது. பின், புருஷாமிருகம் வந்து, 'முன்பு நீதிகூறியதை மறவேன். இங்கே அரசனாயிரு' என்றது. மறுத்ததால் அனுப்பிவைத்தது, திரிகோணமலை அடைந்து சிவதரிசனம் செய்து நடந்தார். தேவலோகப் பட்சிவந்து, விபரம்கேட்டு அனுப்பிவைத்தது. பின் கிருஷ்ணபட்சி வந்து விபரம் கேட்டது, விபரம் கூறியபின் 'நீயார் ?' என்று கேட்டார், தருமர். அதற்கு, அது, ''பார்வதியாள் வளர்த்த கிளியினைக் கொன்றதால், கிளியாகென்று சபித்தார். நானிருப்பது இவ்விடத்தில்தான். நான் உன்னை இவ்விடத்திற்கு அரசனாக்குகிறேன்'' என்றது. மறுத்து வழிநடந்தார்.

ஒரு மலையில் தங்கினார். பன்றி ஒன்று வந்து பார்த்துச் சென்றது வழி நடந்தார். ஒரு பொய்கையில், தேவலோகக் கன்னியர் வந்து நீராடினர். அவர்கள் தருமரைத் தேவலோகத்திற்கு அழைத்தனர். 'முடிசூட்டி ஏவல் செய்வோம்' என்றனர். மறுத்தார். நடந்தார். கங்கையில் நீராடி சிவபூசை முடித்தார். அருகில் இருந்த ஆறு ஆழமெனக்கருதித் திருமாலைத் துதித்தார். கோபாலர் சொல்ல ஆறு வழிவிட்டது. நடந்தார்.

கோபாலர், எமனை அழைத்து, தருமரைச் சோதிக்கும்படிக் கூறவே, எமன், புழுத்த நாயாக உருமாறிவந்து, இருவரும் வழிநடக்க, ஆறு ஒன்று குறுக்கிட்டது. தருமரிடம் நாய், 'என்னை அக்கரை கொண்டு சேர்' என்றது நாயைத் தோள்மீது சுமந்து ஆற்றில் நடந்தார். கழுத்தளவு தண்ணீர் வந்ததும், நாயைத் தலைமீது வைத்துக் கொண்டு நடந்தார். கிருமிகள் தருமர் முகத்து வழியே இறங்கி உடல்முழுதும் நெளிந்தன.

நாய், தருமரிடம், ' நான் மாபாவி. என்னால் நீ அவதிப்படுகிறாய். என்னைத் தண்ணீரில் தள்ளிவிடு.'' என்றது. அதற்குத் தருமர், 'உன்னைச் சாகவிடாது பத்திரமாக அக்கரை சேர்ப்பேன். தண்ணீரில் வந்தது உனக்கு வலித்ததோ?'' என்றார்.

மகிழ்ந்த எமன், தன். சுய உருவைக்காட்டித் தருமரை முத்தமிட்டு, ''வைகுண்டம் போ'' என்று சொல்லிவிட்டு எமலோகம் சென்றார். பின் கேதாரமலையை அடைந்தார். வைகுண்டத்தில், சக்கரம் திருமாலிடம், தர்மரைக் காக்க வேண்டியது. உடன் இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் எல்லோரும் புறப்பட்டு வந்து, தன்மனாக் குளத்தில் மூழ்கச் சொன்னார். தருமர் மூழ்கியதும், பழைய உருமாறிப் பசும்பொன் நிறமானார். அவர் களுடன் தேரேறி இயக்கர் பதி சென்றார். தம்பியர்கள் இருக்கும் இடம் கேட்டார்.ருத்ரநகர் முடிசூட மறுத்து மறலியைச் சந்தித்தார். அவர் தன் பதவியைத் தருகிறேன்; முடிசூட்டிக்கொள் என்றார். மறுத்தார். ஏழு நரகங்களையும் பார்த்து வரச்சென்றார்.

சுவர்க்கத்திலுள்ளவர்களின் தருமங்களைக் கேட்டு அறிந்தார். (தருமங்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது) நரகம் காணப் புறப்பட்டார். நரகக்கொடுமைகளைக் கண்டு வருந்தினார். அங்கு நூற்றொருவர் நரக வேதனை அடைவதைக்கண்டார். துரியோதனன் தர்மரிடம் மன்னிப்புக் கேட்டான். தன்னை ஈடேற்ற வேண்டுகிறான். எமனிடம் தருமர் சென்று நான் செய்த தருமத்தில் பாதியைத் துரியோதனனுக்குத் தருகிறேன். அவரை நரகத்திலிருந்து கரையேற்ற வேண்டுமென்று வேண்டினார். கிங்கிலியர் கரையேற்றினர். துரியோதனனைத் தருமர் தழுவிக் கட்டிக் கொண்டார்.

''இராசரிஷி இவர்; இவருக்கு ரெத்தின முடிசூட்டுங்கள்'' என்றான் எமன். தருமர் முடிசூட விரும்பாமல், எமனிடம் வைகுண்டம் கேட்டார்' பிரமன், தருமரிடம், ''இங்கே உன்னை அரசாள வைக்கிறேன்'' என்றார். மறுத்ததால், தருமரைப் பிரமன்'பிரமரிஷி' என்றார்.அவரிடம் வைகுண்டம் கேட்டார்.

வைகுண்டம் அலங்கரிக்கப்பட்டது. திருமால் கருடன் மீதேறி தருமரெதிர்வந்தார். பாதத்தில் விழுந்து வணங்கினார் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். பிரமன், இந்திரன் முதலானோர் தருமரைக் கட்டியணைத்தனர். பொற்கோயிலில் தருமரை வைத்தனர்.

வைகுண்டத்தைச் சுற்றிப் பார்க்கப்புறப்பட்டனர். மாபெலிவந்து வணங்கினான், தருமர் வரலாற்றினை மாயன் கூறினார். தருமரின் தர்மத்தையும். மனு நீதியையும் எடுத்துரைத்தார்.புருஷா மிருகத்துக்காக, வீமனின் உடலில் சரிபாதி தரவிழைந்தான் என்பது முதலானவை கூற மாபெலி தருமரைக் கட்டித்தழுவினார். பீமன் முதலானோரையும் துரோபதையையும் கண்டு தழுவினார் தருமர். முடிசூட்டிக்கொண்டு வைகுந்தத்தில் துரோபதை, தம்பியருடன் வீற்றிருந்தார்.

என்று கதை சொல்ல. செனமேசன் கேட்டு செவிடு நீங்கினான். கரும்பட்டு வெண்பட்டானது. பிரமகத்தி நீங்கியது. நன்றாகப் பேசினான். பஞ்சவர்க்குப் பூதலத்திப் கோயிலெடுத்துப் பூசித்தான். இக்கோயிலை வணங்கினால் வினைகள் தீரும். நோயகலும். (நோய்கள் பட்டியல் தரப் பட்டுள்ளது) பிள்ளை வரம் கிடைக்கும்.

வியாசர் சொல்படி, சனமேசன் முடிசூடி ஆண்டுவந்தான், வியாசர் வாழ்த்தி விட்டுச் சென்றார்.

இக்கதையை எழுதிப் படித்தோரும், சொன்னோரும் சொல்லக் கேட்டோரும், 'வைகுண்டம்' என்று சொன்னோரும், வந்த வினையகன்று வல்வினைகள் தீரப்பெற்று விஷ்ணு பதமடைவர். இக்கதை வெங்கியருள் வடவன் விளம்பியது.

சொக்கலிங்கம் மீனாட்சி துணை

ஹரி ஓம்

வாரிசூ ழுலகு தன்னில் மன்னுயி ரனைத்தும் வாழ்க
சீரிய தமிழினாலே தேடியம் மானை பாட
ஆரிய னந்த ராமன் அச்சுதன் கமலக் கண்ணன்
பாரிய மேக வணர்ன் பச்சைமால் பதமே காப்பாம்.

பார்தனை யளந்த மாயன் பஞ்சவர் சகாயன் தூதன்
மேர்தனை யெடுத்து முன்னாள் யினமழை தடுத்த மூலம்
சீர்பதம் வணங்கி ஐவர் தெரிந்துவை குண்டஞ் சேர்ந்த
ஓர்கதை அம்மானை யாக உரைக்காமல் பதமே காப்பாம்.

வைகுண்ட வாசகர் கிருபை செய்ய
வாசுதேவன் மைந்தன் துணை
ஆதிபராபர வஸ்துவே துணை

நன்றாக

கந்தனே செந்தமிழ்சொல் கணபதியே காப்பாமே
எந்தன் குருவாழ்க ஈசுபரனே முன்னடவாய்
தந்தி முகத்தோனே சரசோதி வாக்கருள்வாய்
அந்தி மதிசூடும் அரனார் திருமகனே
முந்திப் பரமேசர்திரு வாயால் மொழிந்தபடி
இப்புவியி லுள்ளோர் எழுதிப் படிப்பதற்கு
செப்புகிறேன் லெச்சுமியை சீதேவி நின்றிலங்க
வேலனு மாலயனும் விரும்பியதோர் வேந்தர்களும்
ஞாலமதில் மெய்ஞ்ஞானம் நாமே பரமபதம்[1]

---

1. பரமேபதம் என்றுளது

சீலமுட னேகுந் தெவிட்டாக் கனியதுவாம்
வாலசர சோதிநிதம் வந்திருந்து கூத்தாட
மகாபார தக்கதையை வகுத்துரைத்த சாத்திரத்தில்
அவன்தான் சூதன் அரவக் கொடியுடையோன்

மகாபாவி செய்த வஞ்சகமெல் லாம் பொறுத்து
அய்வ ரய்வர் பொருதுதிரி யோதனனை
வென்றுபுவி யானத்து விஷ்ணுபதஞ் சேர்ந்தகதை
ஒன்று மறியேன் உரைத்தேன் புவிமீதில்
பெரியோர் பொறுத்தருளும் பிள்ளை யிவனென்று
தெரியாதான் சொன்னமொழி செந்தமிழோர் தான்பொறுப்பீர்!

பாவாணர் பாதம் பணிந்து மிகநினைந்து
நாலான சீர்பாதம் நமஸ்கரித்து நான்தொழுது
சொல்லுகுறேன் நானடியேன் சொற்பெரிய அம்மானை.

சீரார் புவிவாழ்க திசைகளெட்டுந் தான்வாழ்க
திங்களு மும்மாரி சிறந்து மிகப்பொழிய
பொங்குபுகழ் காவேரி பொய்யாம லெந்நாளும்
தேசஞ் செழித்துவர செங்கோல் தழைத்தோங்க
ராசன் புவியாள நல்தவங்க ளுண்டாக
தேவா லையம்விளங்க திருப்பதிய ளுண்டாக
மூவர் முதலான முப்பத்து முக்கொடி
தேவர்களும் வாழ்கச் செங்கதிரோன் தான்வாழ்க

நாரா யணர்வாழ்க நான்மறையோர் தான்வாழ்க
காராரு மந்தவத்தோர் தபோதனருந் தான்வாழ்க
பஞ்சாட் சரமும் பகருமொரு யெட்டெழுத்தும்
துஞ்சாம லென்றுந் துதிப்போர் மிகவாழ்க

வீறுதிரு நாமமுடன் வெண்ணீறு முண்டாக
கூறுமுப தேசமென்றும் குன்றாம லேவாழ்க
நன்றாய் சிவன்றனையும் நாராய ணன்றனையும்
ஒன்றாகக் காண்போர் உலகில் மிகவாழ்க

இல்லோரு முள்ளோரும் எளியோரும் வல்லோரும்
நல்லோரு மிப்புவியில் நாட்டில் மிகவாழ்க

எண்ணரிய சீரெங்க ராசருடன் தன்சீஷர்
மண்ணுலகில் வெங்கியருள் வடவன் மனமகிழ்ந்து
அல்ல லறவே அரும்வினைகள் தானறவே
சொல்லும்லவ குண்டகதை சொல்லியே நான்பாட

தண்ணீர்சேர் வீதியிலே தழைத்தாலின் கீழிருக்கும்
விண்ணவர்கள் போற்றும் விநாயகனே முன்னடவாய்
தோராத சூரனையுந் துஞ்சு கிறவுஞ்சனையும்
வேரோ டறுத்தெறியும் வேலவனே முன்னடவாய்

துவளு மிடையாளே சோர்கலைக்கு வல்லாளே
தவள நிறத்தாளே சரசோதி வாககருள்வாய்

தெரிந்து கலைபகருஞ் செந்தமிழோர் தங்கள் முன்னே
அரியலவ குண்டகதை அம்மானை சொல்வதுதான்
மாசமு மானிலத்தில் மாரி பொழிவது போல்
பேசரிய மென்பனிதான் பெய்வதுபோ லம்மானை!

காவில் குயில்கூவ சண்டத் தொனியாக
கூவிக் குளறுமந்தக் கூகையொக்கு மம்மானை!
ஆதலால் யானுரைத்த அம்மானை தன்னிலொரு
யேதுபிழை வந்தாலும் யென்னைநிபஞ் சொல்லாமல்

நேசமுட னேபெரியோர் நிந்தனையள் சொல்லாமல்
வாசமுள்ள பாடலொன்று மானிலத்தோர் கொண்டாட
சிந்தை மகிழ்ந்துகொள்ளுஞ் சிறியே னுரைத்ததமிழ்
சபதங்கள் சொல்லாமல் தாரணியி லுள்ளோர்கள்
ஆசையுடன் படித்து அன்புவைத்துக் காத்தருளீர்
ஓசையுடன் வாழ்ந்து உகந்திருப்பா ரம்மானை!

ஆறுமுகந் துணையாய் அவையடக்கம் பாடுகிறேன்
பூதலமு முள்ள புவனம் வெளியாக
வையகத்தோர் கேள்க்க வாழ்த்துகிறே னிக்கதையை

---

1. **தவளநிறம் - வெண்மை**

சற்ப்பினையள் தானினையாத் தருமரும் தம்பியரும்
அத்தி புரநகரம் ஆளுகிற நாளையிலே

பத்தியுள்ள பஞ்சவரும் பாரளந்த மாயவரும்
நீதி வழுவாமல் நெடுநாள் புவிபாண்டு
ஆதிமகா விஷ்ணுபாதம் ஐவரும் போற்றி செய்து
காவல்த் துவாபரம் போய் கலியுகமும் வாரதினால்

சாலவே கோபாலா சங்கையல்ல வென்று சொல்லி
உய்வதற்கு நல்ல உபாய மனதிலெண்ணி
ஐவருக்கும் புத்தி அடவாக வேஉரைத்து
சீருடனே வைகுண்டஞ் சேரவென்று சம்மதித்து

நாருநல்ல பூவுடனே நல்லமணஞ் சேர்ந்ததுபோல்
பஞ்சவர்க ளைவரையும் பச்சமுட னிப்போது
தஞ்சமுட னான தன்னிறம்போ லாக்கி வைக்க
சிந்தை தனிலெண்ணி திருமால் மனமகிழ்ந்து

விந்தைக் கதையென்று மேதினியோர் தான்துதிக்க
அம்மானை யென்று அரியவை குண்டகதை
இம்மா னிலத்தில் எழுதிப் படித்தவர்க்கு
வாக்கருளிச் செய்ய வடவ னுரைத்தகதை

பார்க்க விருத்தமொன்றும் பாடலா மிக்கதையைச்
சுருக்கமாய்ப் பாடினதை சொத்தமுட னேதெரிந்து
பெருக்க ளரிவுசெய்து பெருமாள் பதம்போற்றி
ஒன்றுபத்து நூறு ஒன்றுநூ றாயிரமாய்

யென்றுமுத்தி சித்தி இதுவே பொருளது வாய்
திருத்தமுட னிக்கதையை சீருடனே சிறப்பாக
விருத்தமுடன் கொச்சகமும் விபரமாய்த் தான்பாடி
பூலோக மெல்லாம் புதுமையாய்க் கொண்டாடி

மாயோ னுதவிசெய்வார் வைகுண்ட மென்பவர்க்கு
வைகுண்ட அம்மானை மகாபா ரதமுடிந்து
குருகுலத்தி லுள்ள கொற்றவரும் நூற்றொருபேர்
போர்க்களத்தில் மாண்டு போனதற்பின் பஞ்சவர்கள்
தருமத் துரையுந் தம்பியருந் தானிருந்து
வாழ்ந்த கதையு மற்றுமுள்ளோர் தன்கதையும்

காளமுகில் மேனியனார் கண்ண னருளாலே
வாள்விம மின்ற பரீசித்து வுக்கு
பட்டந் தரித்துப் பாராள வைத்ததுவும்

நடந்தகதை செங்கோல் நடக்குந் திறமறிந்து
தேசம்விட்டு வைகுண்டம் சேரவென்று சம்மதித்து
வாசமுள்ள பஞ்சவர்கள் வைகுண்டந் தானோக்கி
நடந்தகதை சொல்வதற்கு நாரணரே காப்பாக

**விருத்தம்**

ஓங்குரு வாழ்க வென்று உலகெலா மகல நீக்கி
பாங்குட னஞ்சு பேரும் பத்தினி துரோபதையு மாக
ஈங்குள்ள கரும மெல்லாம் எள்ளள வாசை யத்து
தீங்கிது செகமென் றெண்ணி திறவில நடந்த ஞாயம்
(கடைசி வரி இல்லை)

மண்ணுள்ளோர் வாழ்க வென்று மற்றுள்ள தேவர் மூவர்
விண்ணுள்ளோர் வாழ்க வென்று கலைபகர் தமிழால் யாரும்
எண்ணுள்ள கால மெல்லாம் யிருந்துநீடூழி வாழ்க வென்று

**நடை**

சொல்லுகிறேன் வீரைநகர் **சோமலிங்கர்** தாள் போற்றி
வெல்லுகிறோம் நாம் வெகுளியினால் வண்மையினால்
வைகை நதியான் வளர்வீர யாம்பதியான்
மெய்க்கமலம் பூத்த வீபூதிபஞ் சாட்சரத்தான்
யெளியார்க் கெளியான் யேழை யிவனெனவே
தெளிவார்க் கடிபணியு சீஷரில் சீஷனுமாய்

வணங்கி நமஸ்கரித்து வாழ்த்துகிறே னிக்கதையை
வணங்கினுட சீர்பாதம் மறவாம லிப்போது
கூறுந் தமிழுடைய கூறிமுத்தர்க் கூறியெனும்
பேருந் தவமும் பெருமையுமே உண்டாக
சொன்னதமிழ்ப் பேறாகச் சொன்னதுவே அம்மானை
அன்னமென்னும் மீனாட்சி அம்பாள் துணையெனவே

விரித்துரைத்துச் சொல்லுகிறேன் மேதினியோர் தான்கேட்க
சிரித்துப் பழியாமல் சித்தமெனத் தான்பொறுத்து
ஆள்ப்பே ரிலனெனவே அடியேன் மொழிந்ததமிழ்

கேள்ப்பீர்வை குண்டக்கதையை கிருபையுடன் தானிருந்து
முன்னாளில் பஞ்சவர்கள் முர்க்கமுடன் தானிருந்து
இன்னா ளளவும் இகத்தில் நடத்தபடி

வேத மயராமல் வேதியரு மீசுபாரும்
நாத மணிகீதம் நற்சங்கு தான்முழங்க
வேள்வியன் தன்னோடு மிகுந்தபுரா ணக்கதையும்

கேள்வி சிவகதையுங் கீர்த்தனங்கள் தான் முழங்க
நீதி நெறிஞாயம் நெறிமுறையுந் தப்பாமல்
ஆதிமகா விஷ்ணுபதம் அனுதினமும் போற்றி செய்து
மந்திரிமார் சூழ்ந்திருக்க மகுடமுடி மன்னருடன்

தந்திரிமார் வந்திருக்க தனவேந்தர் காத்திருக்க
அந்தணரும் வேதியரும் ஆனத போதனரும்
செந்தமிழ்சொல் வாணர்களும் தேவரிஷி மாதவரும்
அன்னதானம் சொர்ணதானம் மத்தானமே பெரிதாக

மன்னர்மன்னர் செங்கோல் வளரு மனுநீதி
வார்த்தையுறை தப்பாமல் மனுநீதி தன்முறையாய்
வழுவில்லாச் சொல்லும் வார்த்தையள் நாள்தோறும்
பூசையள் நடந்துவரப் புவிராசர் வாழ்ந்திருக்க
சாமி திருமால் சகாயமிக வுண்டாக

சேனைரத கீசதுரகஞ் சிறப்பாகச் சூழ்ந்திருக்க
ஆனையில் மேல்முரசும் அதிரப் பரிவாரம்
சங்கீத ராகஞ் சகலகலை தான் முழங்க
இங்கிதமாய் நாளும் இடைக்கூறு[1] வாராமல்
கோத்திரங்க ளெல்லாம் குபேரன்போல் வாழ்ந்திருக்க

பாத்திருந்த தன்மர் பஞ்சவர்கள் தன்னுடனே
மக்களுடன் சுற்றமுமாய் மகிழ்ந்து சிலகாலம்
திக்கெங்கும் போற்றுந் திசையெட்டுந் தானதிர
ஆளுகிறோம் அத்திபுரம் அசையா மணிதரித்து

1. இடையூறு

வாழுகின்ற நாளையிலே வாள்பீமன் தன்தேவி
சுந்தரியுங் கெர்ப்பிணியாய்த் தொத்தமுடன் தானிருந்து
மைந்தனையு மீன்றாள் மாணிக்கம் போலெனவே
குழந்தை பிறந்துதென்று கொத்தவர்கள் தான்மகிழ்ந்து
வளர்த்தார் மனமகிழ்ந்தார்கள் வாய்த்துதென்று ஐவருமே

திங்களொன்று மாகித் தேன்மாங் கனியதுபோல்
தங்கம்போல் போற்றித் தழுவியே முத்தமிட்டுப்
பூரித்து நாள்தோறும் பொன்போல வளர்க்கலுற்றார்

பாரித்துப் புத்திரனும் பருவமாய்த் தான்தேற
அன்னை முகம்பார்த்து அனவா யெனக்குளறி
மன்னையும் ஐந்துமாதம் பிள்ளையுமே தானதிர்ந்து
தத்தி விளையாடித் தாவித் தவிழ்ந்திடவே
வெத்தி விஜையன் மிகமகிழ்ந்து போனுக்கு

தண்டை சிலம்பு சதங்கைகள் தான்பூட்டி
வெண்டையமும் வச்சிரமணி விரசுகளுந் தான் பூட்டி
பூசணமும் பூட்டிப் பொன்னா லலங்கரித்து
வாசமுள்ள வாள்வீமன் மைந்தனுக்குத் தக்கதெல்லாம்
பூட்டி யலங்கரித்துப் பூரித்து மனமகிழ்ந்து
னாட்டிய சீரலில் இராசனுந் தானிருந்தான்

தும்பி யழுதிடுமோஞ் சொல்லும் பயின்றிடுமோம்
அம்புவியும் பாத்து ஆனை அசைந்தாடி
செங்கீரை யாடி சிறுதாலந் தானாடி
வங்கார முத்தமொடு மருவியதோர் சப்பாணி
சித்தில் விளையாடிச் சிறுதேருந் தானுருட்டி

முத்தி ஒருவயசு முழுதும் பருவமதாய்
தத்தடி யிட்டுத் தம்பியிவ னாமெனவே
பத்தடியுந் தாழ்ந்து பருவமும் ரெண்டாகி
தெரிசித்துப் பஞ்சவர்கள் சிந்தை மிகமகிழ்ந்து
பரீசித் தெனனாமம் பகர்ந்தார்கள் பேரனுக்கு

மூன்று வயதாகி முகமறிந்து வீதிசுத்தி
ஊர்ந்து சிறுதெருவும் உண்டைவில்லும் தான்பிடித்து
நாலு வயசாகி நடையுடையும் பாவினையும்

மாலுடைய பேரனுக்கு வயதுமொரு அஞ்சாகி
அஞ்சு வயதாகி ஆனைரத மீதேறி
கொஞ்சு பரியேறிக் கொத்தவனும் வித்தைகத்து
ஆறு வயதாகி ஆடையளும் பூஷணமும்

நீறு புனைந்து நெடியோனை நெஞ்சில்வைத்து
ஆசா னடிபணிந்து அரியசிலம்பந் தானறிந்து
ராசாதி ராசனென னாத்திசையுங் கொண்டாட
கல்வித் தமிழறியக் கரிமுகவன் வேணுமென்று

ஏழு வயதில் எழுத்தறிந்து ஓதுதற்கு
வாளால் பீமன் மகனும் படித்திடவே
ஆதி குருவிடத்தில் ஐவருமே தான்சொல்லி
ஓதுவிக்க வேணுமென்று ஒப்பித்தா ரம்மானை !

அரியோமென் றட்சரத்தை அரியோன்தன் பேரனுக்கு
தெரியப் படுத்திச் சித்தரியும் பெத்திரியும்
எழுத்தினுட அவசரமும் எல்லாம் படித்தெழுதி
ஆதி முதலான அன்பத்தோ ரட்சரமும்

படித்து விரைந்தெழுதி பலநூலுந் தான்படித்து
வடித்த தமிழாலே வகையாக வேதெரிந்து
ஆசு மதுரமுதல் அவையடக்க முள்ளதெல்லாம்
பேசு தமிழ்பலவும் பிரியமுடன் தான்படித்து

தெலுங்கு தமிழ்கிரந்தம் சீரியதோர் கன்னடியம்
துலங்குதமிழ் நாகரமுஞ் சோர்வறவே தான்படித்து
நால்வேத சாத்திரமும் நயனகுறி பாசையளும்

மால்பேரன் தான்படித்து வயசுமொரு எட்டாக
தனுசாஸ்தி ரம்படித்துத் தரணியெல்லாந் தானதிர
மனுநீதி தானும் மனுபுத்தி வித்தையளும்
பாசை பதினெட்டும் பரீசித்து தான்படித்து

ஓசைபெறத் தேசம் உலகெங்குந் தானாள
நல்லவித்தை கத்தறிந்தான் நாராயணர் தன்பேரன்
செல்வவித்தை கத்தறிந்தான் சிறுவ ருடன்கூடி
கானவேட்டை யாடிவரக் கையிலே வில்லெடுத்து
தானவேட்டை யாடவென்று தானடந்தா னம்மானை

வாலையளாய்க் கூடி வனம்புகுந்து நாலிடமும்
சோலையளுங் கானஞ் சுனைமலைய ளும்பலவும்
ஓடி விளையாடி உயர்மலையள் தானேகி
தேடிக் கரடிபுலி சிங்கங்க ளானைமுதல்

மான்மரைகள் குத்தி வராகந் தனைவதைத்து
மேன்மையுள்ள தேனும் வித்தார னற்கனியும்
தானே கனியுந் தனிமா தளங்கனியும்
மாங்கனியும் விளாங்கனியும் வளர்னா வல்கனியும்
சாங்கமறப் பெருகித் தனிக்காட்டி லேதிரிந்து

விளையாடிப் பாலன் வெகுளி மிகவாகி
இளையாமல் சத்தும் இன்னதென்று பாராமல்
காடு கலைத்துக் கடுகி மலையேறி
ஓடுகிற பாம்பை உயிரை வதைப்படுத்தி

ஆட்டி விளையாடி அலைக்கழித்து நாகமதை
கோட்டி மிகப்பண்ணிக் கொன்றார் உயிர்தனையே
நாகமது செத்ததையும் நரகமதி லேகிடத்தி
வேகமுட னோடி விளையாடி அவ்வனத்தில்

அங்கே சடைமுடியார் ஆனதவ மாமுனியாய்
எங்கே சிவன்பாதம் என்றைக்கிக் காண்பேனென்று
இருகையுந் தான்விரித்து இருந்தான் சிவயோகம்
அருகே சிறுவர் அவர்சியலைப்[1] பாராமல்
சுடரில்விழும் விட்டில்போல்த் துன்ப மிகநினைந்து

இடரு வருமென்று எண்ணமது தோன்றாமல்
நய்யாண்டி பண்ணி நகைத்து விளையாடி
அய்யாண்டி பாருமென்று அரவை எடுத்துவந்து
கேடு வருமென்று கெடுமதிகள் தோத்தாமல்
பாடு வருமென்று பரீசித்து அறியாமல்

---

1. செயலை.

ஏது வருமெனவே எண்ணியவன் பாராமல்
தீதுவினை வாரதனைச் சிந்தித் தறியாமல்
சர்ப்பத்தைத் தானெடுத்துச் சன்னாசி தன்கழுத்தில்
உற்பத்தி காணுமக்கு உடமையிது வென்றணிந்தார்

கண்டந்த மாமுனியும் கண்கள் பொறிபறக்க
விண்டந்தக் கோபம் வெளியில் கோரமதாய்
யேண்டாப் பயலே யென்மீதில் பாம்புதனை
வேண்டாதார் போலே விடவரவைப் போட்டாயே

தீண்டாதோ யென்னைச் சீறும் பொறியரவம்
ஆனா லுனக்கு அரவாலே மரணமென்று
ஞானா பரனான ஞானமுனி சாபமிட்டார்.

சொன்னமுனி சாபந் துடைக்க அறியாமல்
யென்னமோ வென்று யேகினன்கா ணம்மானை !

தன்னிக ரில்லாத தனஞ்செயனார் தன்பேரன்
சென்னி கவிழ்ந்து சிறுவருடன் தான்கூடி
அத்தி புரனோக்கி ஆரணியம் விட்டகன்றார்

வெத்தி மிகப்பேசி விளையாடிக் கொக்கரித்து
பட்டணமுந் தான்சேர்ந்து பரீசித்தும் வந்திருந்தான்

அஷ்ட திசைபுகழும் ஐவர் மிகமகிழ்ந்து
வில்லெடுத்துக் கானில் வேட்டைபோய் வந்ததுதுவும்
சொல்லெடுத்தான் பேரன் சுருக்கினில் லவனெனவே

ஆகங் குளிர்ந்து அன்பு மிகப்பெருகி
தாகந் தெளிந்தய்வர் தங்களச்ச மாறுமென்று
தருமருந் தம்பியருந் தங்களிலே சம்மதித்து
நன்மைசெய்த ஞாயம் நமக்கே பலித்ததென்று

சிந்தை குளிர்ந்து சிறுவன்மே லன்புவைத்து
தந்தையர்கள் தாமுந்தம் பாரிலுள்ள மன்னவரும்
கன்னி கலியாணம் காசினியோர் தாமறிய
சீராக ஐவர் சிறப்பாகப் பேரனுக்கு

நேராக நாள்முகூர்த்தம் நிச்சயதாம் பூலமிட்டு
வேதியரைத் தானழைத்து வென்று முகூர்த்தமிட்டு
ஆதிநா ராயணர்பால் ஐவரும்போய்ச் சென்றுகண்டு
சுந்தரிதன் மைந்தனுக்குச் சுபசோ பனமுடிக்க

தந்திர மின்னதென்று சாத்துவீ ரெம்பெருமாள்
அழகு திருமேனி அபிமன்யு புத்திரர்க்கு
களபமணி மேனியனே கலியாணந் தான்முடிக்க
வகையேது மென்றனக்கு மாயோனே சொல்லுமென்றார்

துகைவகையு மைவருக்குத் தோத்தமுட னேனினைந்து
நாலுவகை யும்பார்த்து நாரா யணர்சொல்லுவார்

இன்ன படியென்று இதமாகச் சம்மதித்து
சொன்னதொரு மாயோனைத் தொழுது மிகப்பணிந்து
சாத்தகி யாள்வார் தானீன்ற மைந்தனென்று
ஏத்த துளசி மகாராச னீன்றெடுத்த
செல்வியெனும் பூமடந்தை சிறியாளை மாலையிட

நல்ல விசேஷமென்று னாரணரைப் பெண்கேட்க
நாடி நடந்தார்கள் நல்லதொரு பஞ்சவர்கள்
தேடித் துவாரகா புரிதனிலே சென்றுபுக்கு
கண்டார்கள் மாயன் கமலமலர்ப் பாதமதை

தெண்டனிட்டு வாய்புதைத்துச் செப்பினார் தன்மருமே!
அந்த மொழிகேட்டு ஆமென்று கோபாலன்
சந்தோச மாமெனவே சாத்தகியைத் தானழைத்து
உன்னுடைய மைந்தன் உத்த துளசியவன்
தன்னுடைய பெண்ணைத் தனஞ்செயன்றன் பேரனுக்கு

பூமடந்தை யென்னும் பொற்கொடியை இப்போது
தர்ம னபிமன்னன் தன்னுடைய மைந்தனுக்கு
மாலையிட்டு நன்றாய் மணமிடு மென்றுசொல்லி
சேலை பரிசம் சிமத்துமென்றா ரைவரையும்

மாயோ னுரைக்க மன்னவர்கள் தாமெனவே
தூயதொரு முகூர்த்தஞ் சொல்லென்றார் வேதியரை

கேட்டு ஒருதினத்தில் கிருபையுள்ளா ரெல்லோரும்
தீட்டுபுக ழைவருமே திருமா லிடந்தனிலே
கொண்டுவந்து வைத்தார்கள் கூரையொடு பட்டுகளும்

கண்டு மகிழ்ந்து காயாம்பூ மேனியனார்
பாக்கியந் தானென்று பச்சைமால் கொண்டாட
வாக்கியமுந் தான்சொல்ல மகிழ்ந்துமே பஞ்சவர்கள்

நின்றவரைப் பார்த்து நெடியோன் மனமகிழ்ந்து
நன்றெனவே இப்போது நாட்டுமர சாணியென்றார்
செய்யுஞ் சடங்கு சிறப்பாகச் செய்யுமென்றார்
அய்யன் திருமால் அருளினர்கா ணம்மானை !

அந்த மொழிகேட்டு ஐவருந்தான் கோபாலன்
விந்த மலர்ப்பாதம் விழுந்து நமஸ்கரித்து
வந்தார்கள் அத்திபுரம் வர்ணமணி மண்டபத்தில்
சந்தோஷ மாயிருந்து சகலரையுந் தானழைத்து

அத்தி புரத்திலுள்ள அன்னசுத்தந் தானறிய
சித்தி விநாயகரைத் தெரிசித்து அடிபணிந்து
மூலப் பொருளே முதற்பொருளே மூர்த்திஅய்யா
ஞானப் பொருளே நமஸ்காரம் நாயடியார்

பாலனெங்கள் மைந்தன் பரீசித்துத் தனந்தனக்கு
காலமில மாயிருந்து கலியாணந் தான்முடிய
முன்னிக்க வேணுமய்யா முக்கண்ணனார் புத்திரரே
சென்னிக்குள் நின்று சிரோமணியே முன்னடவாய்

யென்றுறுதி பண்ணி இறையோனைத் தான்பணிந்து
சென்று நகரி சிறப்பித்தார் பட்டணத்தை
வாழை கமுகுநாட்டி வளைப்பரப்பில் பந்தலிட்டு
தேங்கிளநீர் மாங்கனிகள் தீங்கரும்பு தானிறைத்து

வாழைக் கனியுடனே வாழைமரந் தான்நாட்டி
தாழைமடல் மல்லிகைப்பூச் சரமாலை தானிறைத்து
பட்டால் அலங்கரித்துப் பட்டுடன்மேல் கட்டிகட்டி
வட்டா ரருஞ்சூழ் மாணிக்க மாலையிட்டு
மாடம் அலங்கரித்து மாளிகையும் மேடைகளும்
கூடம் அலங்கரித்துக் கோபுரமும் பாவினையும்

தெருவீதி யெல்லாஞ் சித்திரங்கள் தானெழுதி
மருவும் மருக்கொழுந்தும் மல்லிகையும் வாசினையும்
சாந்து புனுகு சவ்வாது கஸ்தூரியளும்
யேந்து பரிமளமும் எங்குங் கமகமென

வாசமுள்ள தெல்லாம் வகைவகையாய்த் தானிறைத்து
தேசம் புகழும் தெய்வலோகம் போலிருக்க
வைகுண்டம் போல வயிரவயி டூரியத்தால்
செய்கின்றா ரய்வர் திருமால் மனமகிழ்ந்து

நாளு முகூர்த்தமும் நல்லதொரு வேளையிலே
வாழுமர சாணியிது மாணிக்கத் தால்நாட்டி
அன்ன சுற்றமெல்லாம் அலங்கார மாய்க்கூடி
தென்னவர்கள் மன்னவர்கள் தெசதே சத்துமகுடர்
திக்கிலுள்ள கோத்திரமுஞ் சிறப்பாகத் தான்கூடி
முக்கியமாய்க் கலியாண முகிப்பிக்க வந்தார்கள்

வந்ததொரு மன்னர்களும் மகுடமுடி வேந்தர்களும்
பந்திபந்தி யாகப் பாவாணர் கீதமுடன்
ஆனை யொருகோடி அசுவ மொருகோடி
சேனை யிருகோடி தேரு மிருகோடி

சங்கீத மேளந் தவில்முரசு மல்லாரி
பேரிகை யெக்காளம் பெரியகற்னாத் தான்முழங்க
யெங்கு முழங்க யேத்துந் துபிமுழங்க
பெய்யு மழைமாரி பெரியசர மண்டலமும்
கிடுபிடி வாத்தியமுங் கிண்ணரியும் வீணைகளும்
அஷ்டாங்க வாத்தியமும் அடவாகத் தான்முழங்க

வாரி யொலிபோல வாணங்கற் சித்தாற்போல்
தித்தி நவுரி திருச்சின்னந் தாரைகளும்
சத்திக்கு மேகமென்ன தம்பூருவும் டக்கத்தாளமும்

மூவர் முதலாக முப்பத்து முக்கோடி
தேவர்களு மாதவருஞ் செயசோ பனங்கள்சொல்ல
மங்கல வாழ்த்தும் மறையோர் தான்துதிக்க
சிங்கா சனத்தில் திருமாலும் வந்திருக்க

மாப்பிள்ளைக் கோலம் மல்லிகைப்பூத் தான்தரித்து
மூப்பிமார் தாதியர்கள் மொய்குழலார் பட்டுடுத்தி
ஆடை யுடுத்தி ஆபரணந் தான்பூட்டி

வாடை பரிமணங்கள் வாசனையள் தான்திமிர்ந்து
கோலப் பணியுங் கொத்துமுத்து தாவடமும்
வேடிக்கை யாக விசையன்தன் பேரனுக்கு
சோடித்தார் வேண்டியது சொர்ண மயமாக

நாரா யணர்பேரன் ராசாதி ராசனுக்கு
வீராக நால்வகையுந் தெரிந்துநல்ல பூசணமும்
ஆதிசித்து மனமகிழ்ந்து அன்பான பேரனுக்கு
பரீசித்து வேந்தனுக்குப் பலபணிகள் தான்பூட்டி

துளசிமகா ராசனுட துய்யதொரு பெண்கொடிக்கு
வளைய லடுக்கி வாகாகப் பட்டுடுத்தி
பூமடந்தை தன்றனக்குப் பொன்னா லலங்கரித்து
தேன்மருவும் பிச்சிமுல்லை செண்பகப்பூ மாலையிட்டு

மாப்பிள்ளையும் பெண்ணும் மதனும் ரதியும்போலே
சீப்பிட்டு மையெழுதிச் சித்திரம்போல் கோலமிட்டு
வைத்து மகிழ்ந்து வந்துசொன்னார் மாயனுடன்
மாயோனும் ஐவருமாய் வந்திருந்தார் பந்தலின்கீழ்

தாயான குந்திமா தேவிதனை வரவழைத்து
உன்பேர னான உத்தஅபி மன்னனுட
தன்பேர னான பரீசித்துத் தன்தனக்கு
சுகசோ பனமுடித்துத் தோகையரே நீபார்க்க

வேணு மிருமென்று விளம்பினார் பஞ்சவர்கள்
பூரணமா யுள்மகிழ்ந்து பொற்கொடியும் வீற்றிருந்தார்
புகழ்பெரிய தாயார்தான் பொற்கோயில் சென்றுபுக்கி
திகழு மணவாக மெல்லியரே மாதாவே

கற்புடைய மாதாவே காந்தாரித் தாயேநீ
மைப்புயவேள் வாளபிமன் மைந்தன்பரீ சித்துவுக்கு

அகலா திருந்து அபிமனுட புத்திரர்க்கு
செகலோக மெய்க்கச் செய்யுங்கலி யாணமென்று

சொன்னவுடன் காந்தாரி தோகையரு மாமெனவே
அன்னமென வேநடந்து ஐவருடன் கூடிவந்து
நல்லதென்று பந்தலின்கீழ் நடுவாகத் தானிருந்தாள்

செல்லக் கலியாணந் திருமால்தன் பேரனுக்கு
மணமுடிக்க வேண்டி மாயோனும் எழுந்திருந்து
மணவறையில் சென்று மாப்பிள்ளையைக் கைப்பிடித்து
கெண்டிநீர் வார்த்துக் கிருவிதமாய்த் தான்கூட்டி

தண்டரள மார்பன் தாமோதரன் தான்மகிழ்ந்து
மணையைவல மாகவந்து மகிழ்ந்து மணையேத்தி
இணையாகப் பெண்தனையு மிப்படியே கூட்டிவந்து
நேராய் மணையேத்தி னெறுபாக முள்ளதெல்லாம்

செய்து முடித்துச் சிறப்பாகப் பந்தலின்கீழ்
பைங்கொடிக்கு மாப்பிள்ளைக்குப் பாங்கான நற்சடங்கு
சாத்திரத்தி லுள்ள சடங்கு முடிந்ததற்பின்
கோத்திரங்கள் சூழக் குலவை முழங்கிடவே

ஆனை ரதமேறி அலங்காரமாய் வீதிவந்து
சேனை தளத்துடனே தெருவீதி தானும்வந்து
மங்கிலியந் தான்தரிக்க வரவேணு மென்றுசொல்லி
இங்கிதமாய் மாப்பிள்ளையை யேத்தினர்காண் யானையின்மேல்

கன்னிகையுந் தேரேறிக் கணவனுடன் பின்துடர்ந்து
சகலகவி யும்முழங்கச் சாம்பிராணி வாசம்புகைக்க
பகலதுபோல் தீவட்டியும் பகவத்தியும் தான்பிடிக்க
இரவும் பகலாக இந்திரன்தன் பட்டணம்போல்
அரவுயர்த்தோன் பட்டணம் அடங்கலுமே சேசேயென

வாண மெறிந்தார்கள் மானத்தின் மீனெனவே
காணவந்து நிற்பாருங் கண்டு மகிழ்வாருங்
இந்திரனோ யென்பாரும் இறையவனோ யென்பாரும்
சந்திரனோ யென்பாரும் சரணமது யென்பாரும்

மன்மதனோ யென்பாரும் வாலசீவகன் என்பாரும்
தன்மர் குலத்துதித்த தார்வேந்த னென்பாரும்
பூவாண மெங்கும் பூப்போல வேசொரிந்து
பாவாணர் ராகம் படித்துவரச் சங்கீதம்

பட்டணத்தி லுள்ள பலர்சனங்கள் தான்பார்க்க
கட்டழகன் வார கட்டழகைப் பாருமென்பார்
வீதிசுற்றி வாரான்காண் வீமனுட தன்பேரன்
ஆதிவஸ்து வான அச்சுதனார் தன்பேரன்

கோட்டையும் பட்டணமும் குதிரைத் தளத்துடனே
நாட்டையுஞ் சுத்தி நகரி வலமாக
வந்துபந்தர் புக்கினர்காண் மாப்பிள்ளையும் பூங்கொடியும்
இந்து மதிபோலும் இருவர் மணைமீதில்
மாய னருளாலே வந்திருந்தார் அம்மானை !

ஆயனுடன் ஐவருமே அருகிருந்தார் வேதியரும்
ஓமம் வளர்க்கவென்று உத்தாரம் பண்ணினர்காண்
சாமமொன்றுக் குள்ளாகத் தாலி தரிக்கவென்று
கும்பமுடன் மாவிலையுங் குசதெற்பை நூலுடனே

அக்கினியும் நெய்யும் ஆர்ப்பரித்து மேற்புகையும்
முக்கியமாய் எங்கும் மூலமது தான்பொருளாய்
வைகுண்ட மூர்த்தி மலரடியைத் தான்போற்றி
கைக்கொண்டு வேதியனார் கமண்டலத்து நீர்வார்த்து

தேங்காயு டேயுடைத்து சித்தி வினாயகர்முன்
பாங்காக வைத்துப் பரீசித்துத் தனந்தனக்கு
கங்கணமுங் கட்டிக் கன்னிகைக்குக் காப்புமிட்டு
வங்கணமாய்ப் பெண்கழுத்தில் மங்கிலிய முந்தரித்து

அந்தணரு மங்கிலியம் அக்கினியே சாட்சியென்று
சந்தனமும் பூசித் தான்கொடுத்தார் அம்மானை !

தெய்வப் பிராமணருந் தேவர்களுஞ் சாட்சியதாய்
அய்வருந் தொட்டு அபிமன்னருட புத்திரர்க்கு
கண்ணர் திருக்கையால் கல்பித்தார் மங்கிலியம்
விண்ணவர்கள் வாழிசொல்ல விரையவே தான்வாங்கி

தரித்தார்காண் மங்கிலியம் தையல்நல்லார் தன்கழுத்தில்
பரித்தே ருடைய பரீசித்துத் தன்தனக்கு
வேத முழங்கி வெண்கவரி தான்வீசி
நாத முழங்க நகரி மிகமுழங்க

செயசெயா வென்று திசைகளெங்குக் தானதிர
ஆயனுடன் மாமுனியும் அட்சதையுந் தானெறிய
செங்களபப் பெண்கள் செயசோபனஞ் சொல்லவே
சோபனங்கள் சொல்லித் துடியிடையு மாப்பிள்ளையும்

தாபமுடன் கைகோர்த்துத் தங்க ளறைபுகவே
பண்ணினார் கோபாலர் பரீசித்துத் தன்தனக்கு
நண்ணினார் கோபாலர் நடவுமென்று கைபிடித்து
கணவனுடன் பெண்கொடியைக் கைகோர்த்துத் தான்கொடுத்து

மணவறையில் போமென்று மாயோ னுதவிசெய்ய
அந்தநாள் சென்று அலைகதிரோன் வந்துதித்தான்
நந்தகோ பாலர் நரசிங்க மகாமூர்த்தி
மத்தனாள் மூன்றாநாள் மஞ்சநீ ராடுமென்றமர்
அத்தனார் சொல்படிக்கு ஆடிமஞ்ச னீராட்டி
மாப்பிள்ளையும் பொண்ணும் வாழ்ந்திருந்தார் அம்மானை !

முப்பிலுள்ள வங்கிஷமும் முன்னோரும் பின்னோரும்
அல்லியுந் தாமரைபோல் அன்னசுத்த மெல்லாரும்
துல்லியமாய் வாழ்ந்து சுகமே இருந்தனர்காண் !
தருமருந் தம்பியரும் தாரணியை ஆண்டிருந்தார்

நன்மை வளர நாத்திசையுக் தான்வளர
தின்மை யகலத் தேசஞ் செழித்திருக்க
சுண்ம மகலக் காவேரி பொங்கிவர
சென்னெல் விளைந்து சிறுசம்பா றோடிவர

கன்னல் விளைந்து கணுக்கணுவில் முத்துதிர
கதலி பழுத்து கனிந்துடைத்து ஆறோட
மதுரம் பிலாப்பழுத்து வழிந்தொழுகித் தானோட
கமுகு குலைசிதறிக் கனிந்து பழமுதிர

தெங்குடனே தேன்மாவுஞ் சேர்ந்து கலந்துநிற்க
ஓங்கு புகழ்செல்வம் ஒருக்காலுங் குன்றாமல்
வாசமுட னைவர் மனுநீதி தப்பாமல்
தாரணியெல் லாமகிழத் தார்வேந்தன் போற்றிசெய்ய
காரணியாள் மீனாட்சி கயற்கண்ணி தன்னருளால்

**விருத்தம்**

ஐவரு மிருந்து பாரில் அநேகநாள் சீமை யாண்டு
செய்வது தர்ம ஞாயம் தராசுபோல் நிறையாய் நின்று
கைவருங் கரும மெல்லாங் கரியமா லறியப் பின்னும்
மெய்வரும் புதுமை கண்டு மேதினி ஆளும் நாளில்

சித்தசு ரூப னான தீரன்வாள் வீமன் மைந்தன்
பத்தகன் எவர்க்கும் நல்ல பரீசித்து வேந்தன் தேவி
எத்திசை மதிக்க வேதான் ஏந்திழை கர்ப்ப மாகி
வெத்திசை மாதம் பத்தும் விளங்கவே சுமந்தாள் மாது

**நடை**

பார்த்தனுட தன்பேரன் பரீசித்து வேந்தனுக்கு
நாத்திசையள் கொண்டாட நற்குமரி கெற்பமுற்றாள்
மாதமுந் திங்களுமே வந்ததிட்டந் தானறிந்து
நீதமுடன் சடங்குசெய்ய நேமித்தார் பெண்கொடிக்கு

எதுவான பூமடந்தை எல்லோரும் வந்திருந்து
முதுகுநீர் வார்க்க மொய்குழலாள் முன்மடந்தை
திங்களொரு த்தாகிச் சினமே சினன்பிறந்தான்
கங்கு லெதிர்க்கக் கதிரோனுதித் தாற்போலே

மாணிக்க முத்து வயிரமணிக் கோர்த்தாற்போல்
ஆணிக் கனகமுமாய் அழகான மேகனென்னும்
சீலமுள்ள பாலன் சினமேசன் வந்திடவே
கால துவாரகாயுக[1] முங்கடந்து கலியுகமும் வந்திடவே

1. துவாபரயுகம்

வருகுதென்று லோகமெல்லாம் வழங்குதுகா ணவ்வசனம்
பெருகும்புகழ் தர்மருக்குப் பேரன் பிறந்தமையால்
வாள்பீமன் தன்பேரன் வந்தானென வேயென்று
காளைமுகில் மேனியனார் கண்ண ரறியவென்று

எழுதிநல்ல வாசகமும் ஏவினார் சந்தோஷமதாய்
எழுதிவந்த ஓலைதனை எம்பெருமான் தான்பார்த்து
ராசிகளும் நல்ல நட்சேத் திரமும்பார்த்து
வாசியெனும் வேதியனை மாயர் வரவழைத்து

பாலன் பிறந்தான் பரீசித்து தன்தனக்கு
காலமிலன் ராசியென்ன கருத்துடனே பாருமென்றார்
மாயோ னிவைசொல்ல மறையோனும் ஏதுசொல்வார்
தூயவரே யிப்போது சொல்லுகிறேன் கேளுமினி

சினமே சினன்பிறந்தார் சீரும் பலாபலனும்[1]
கனமான நாளுங் காலதுவார காயுகமும்
நாளுஞ் சரியாகி ஞாயம் வரம்புதப்பி
கோபம் பெரிய கொடுமைக் கலியுகமும்

வருகுதய்யா வென்று மறையோனுந் தானுரைக்க
பருகு கனிவாயான் பச்சைமால் தானினைந்து
ஆன துவாரகாயுகமும் ஆச்சுதென்று இப்போது
கானகமும் செல்லக் கருதியே மேகவற்ணன
ஐவருக்குந் தூதன் அனுப்பினர்காண் அம்மானை!

**விருத்தம்**

காசினி அளந்த மாயன் கலியுகம் வருமுன் தாமும்
பேசியே கொள்வோ மென்று பிரபஞ்சப் பருவ மெல்லாம்
ராசிய மாகத் தூதர் நாழிகை தன்னில் சென்று
தேசிகர் ஐவர் தன்னைச் சீக்கிரம் கொடுவா வென்றார்

உத்தொரு வசனங் கேட்டு உயர்வரை வணங்கிக் கண்டு
கத்தனார் அருளிப் பாடல் கருதியே யுரைத்த போது
சித்தமே மகிழ்ந்து தன்மர் சீக்கிரம் பயண மென்றார்
(மூன்று வரிகளே உள்ளன)

---

1. பிலாபலனும் என்றுளது

தம்பியர் நால்வர் தாமும் தன்மரும் வருக வென்று
உம்பர்கோன் தம்பி ரானார் உலகினை அளந்த மாயன்
நம்பியே உண்மை யாக ரகசிய மருளிச் செய்து
யின்பமாய் வருக வென்றார் யேதெனத் தெரிய வேணும்.

ஆயனார் தூதன் வந்தான் அருளிய தெல்லாம் சொன்னான்
மாயனார் உண்மை கண்டு வணங்கிநாம் வார்த்தை சொல்லி
நேசமாய் வருவோம் நீங்கள் நிமிசத்தில் வாரு மென்று
தூயதோர் தர்ம ராசன் துரகத மீதி லானார்

வீமன் விசையன் நகுலனுமாய் வேத ராசன் சகாதேவன்
தாமோ தானார் தமைக்காண தன்ம ருடனே பின்சொல்லி[1]
ராமா ராமா அரிக்கிராமா ராகவா ராமா வென்று
சோம வாரத் தின்மீதில் துவாரகா புரியில் சென்றனரே!

நடை

வாசமுள்ள பஞ்சவரை மாயன்வரச் சொல்லியொரு
நேசமுள்ள தூதனைப்போய் நிமிசத்தில் வாவெனவே
நல்லதொரு தன்மரையுந் நமஸ்கரித் தான்வணங்கி
கண்ணர் திருமால் காயாம்பூ மேனியனார்

அய்யர் வரச்சொல்லி அருளினா ருங்களையும்
அந்த மொழிகேட்டு அடியேனுந் தேடிவந்தேன்
விந்தை பலவதனால் விரைந்தோடிவர வேணு மென்றார்
தூதர் உரைத்தமொழி தூயதன்மர் தான்கேட்டு

போத மனமகிழ்ந்து பூரித் திருபுறமும்
தம்பியருந் தாமும் தத்துபரி மீதேறி
கெம்பீர மாய்நடந்தார் கேசவனார் தன்னூரில்

வந்தோமென் றைவருமாய் மாயனுக்குத் தூதுவிட்டு
சந்தோச மாகத் தானிருக்கும் வேளையிலே
கஞ்ச மலர்மாயன் கரியமால் தான்கேட்டு
பஞ்சவரே வாவெனவே பவளமணி மண்டபத்தில்

---

1. பின்செல்வார் எனல்வேண்டும்

வந்திருந்தார் செங்கண்மால் ஆகியநா ராயணரும்
செந்திருவை யொத்ததொரு சிங்கா சனந்தனிலே
பத்தியுள்ள பஞ்சவரும் பச்சைமால் சொல்படிக்கு
சத்திய வாசந் தவறாத மன்னவர்கள்

மண்டபத்தில் வந்து மாயவன் தனைவணங்கி
தெண்டனிட்டுத் தன்மர் தெரிசித் தடிபணிந்து
வெண்ணெயுண்ட மாலே! மெய்யோனே எங்களைநீர்
வைகுண்ட மூர்த்தி வரவழைத்த காரியமென்

என்றுதர்மர் கேட்க எம்பெருமா ளேதுசொல்வார்
வென்று திசையெட்டும் விசயனும் வீமனுமாய்
மண்டலத்தை ஆண்டீரே மனுநீதி தப்பாமல்
விண்டலத்தோர் கொண்டாட மேதினியில் தானிருந்து

நீதி வழுவாமல் நெறிமுறையள் தப்பாமல்
சாதி வரம்புகள் தப்பாமல் சோராமல்
வாழ்ந்தீ ரிதுவரையும் மன்னவரே இப்போது
நாமந்தா னொருசேதி நடத்துகிறோங் கேளுமென்றார்

நல்லதென்று பஞ்சவர்கள் நாரணரே சொல்லுமென்றார்
வல்லதொரு மாயன் வாய்திறந்தங் கேது சொல்வார்
முன்னாக மும்நாளும் முடிவுஞ் சரியாச்சே
இன்னாள் கலியுகமும் இப்போ வருகுதுகாண்

சொல்லுந் துவாபரயுகமுந் துகையுஞ் சரியாச்சே
வெல்லுங் கலியுகந்தான் விபரீத மாய்வாரான்
ஆனதினா லிங்கிருக்க அடவல்ல வென்றுசொல்லி
மானமுட னுங்களுடன் வார்த்தைசொல்ல வேணுமென்று

இனிமே நமக்கு இவடம் சகியாது
கனிதே னிருக்குமந்த கானகமே வீடாக
போகவென்று நாம்நினைந்த பூருவமும் உங்களுக்கு
ஆகமுடன் தான்சொல்லி அருளினார் மாயவரும்

வேறு நினைவு விபரிதங்க ளொன்றுமில்லை
கூறுகிறோ மிவ்வசனங் கொத்தவரே உங்களுக்கு
சேதியென்ன வென்று திருமாலுந் தான்கேழ்க்க
நாதி யனாதியான நமோநா ராயணரும்

ஆண்டபெரு மாளேயெங்க ளாதியே காரணரே
புண்டரீக மார்பழகா பொன்னலங் கார நமோ
ஆதி வராகா அரிகேச வாசரணம்
சோதியே வேத கருதிக் கதிபதியே

அச்சுதா பஞ்சவர்கள் ஐவருக்கும் நாயகமே
சச்சுதா னந்தமென்று சாருப வாசமுள்ள
கற்பூர வாசவனே காயாம்பூ மேனியனே
பொற்பூவும் வாசமும்போல் பூலோக மீதில்வந்து

எங்கள் தனைக்காக்க இவ்வடிவு தானெடுத்த
தங்க ளுயிர்போல தற்காத்தீ ரிந்நாளும்
சீருஞ் சிறப்புஞ் செலுத்திவெகு செல்வமெல்லாம்
பேருஞ் செலுத்தி பிரபலமாய்த் தானிருக்க

வைத்தீ ரிதுவரையும் வாழ்ந்தோம் புவிமீதில்
மைத்துனர்போ லெங்களுக்கு வாரமாய்த் தானிருந்து
ஆகாதான் னெஞ்சன் அரவக் கொடியுடையோன்
மாபாவி யான வணங்கா முடிவேந்தன்

செய்த வினைகளெல்லாம் செயமாக நீரிருந்து
எய்தவனைக் கொன்று எமலோகந் தான்சேர்த்து
தந்திர புவியாள சாங்கமாய்த் தானிருந்து
நந்தகோ பாலா நரசிங்க மூர்த்தியென்று

தன்மருந் தம்பியருந் தான்போற்றி வாழ்த்திநின்று
மின்மருவுந் திண்புயனே வேதநா ராயணரே
நாலுமுகந் தான்தெரிந்து நடப்பார் இருப்பார்காண்
மேலு மிருப்பீர் மேதினியுந் தானளப்பீர்

ஆரு மறியாமல் ஆலிலைமேல் பள்ளிகொள்வீர்
பாருலகை யுண்டு படைப்பீ ருலகளப்பீர்
கோலமெல்லாம் நீரெடுத்த கோலமே அல்லாமல்
ஞாலமதி லும்மையல்லால் நடப்பதினி வேறுமுண்டோ

யேதொரு திருக்கூத்து யெத்தனையோ விஸ்த்தாரம்
சூதோ தெரியாதுன் சூத்திரத்தை யாரறிவார்

கண்ணுக்குள் பார்வையாய்க் கலந்திருந்த காரணரே
விண்ணுக்குள் மேகசலம் மேதினிக்குண் டாக்கிவைத்து
கர்த்தனே உம்முடைய காவலா லிங்கிருந்தோம்
நித்தனே உம்மைவிட்டு நிமிச மிருப்போமோ

என்னமொழி பேசினீர் என்பெருமா ளென்றுதன்மர்
பன்னகமே தானிருந்த பச்சைமுகில் மேனியனே
அஷ்டதிக்கெல் லாமறி அய்வர்தனை இப்போது
விட்டுப் பிரியாத மேகவர்ணர் தன்னைவிட்டு

மண்ணாசையி னாலே மறந்திருப்பா ரென்றுசொல்லி
விண்ணோரு மற்றுமுள்ள மேதினியுந் தானகைக்க
விருப்பமுட னாங்கள் மேதினியே உண்டெனவே
இருப்பதுவு மில்லையினி யெந்தவித மானாலும்

வருவோந் திருமாலே வார்த்தைரெண்டு பேசாமல்
திருவுந்தி பூத்தோனே செந்தா மரைப்பதத்தை
கண்டு வணங்கி கைகட்டி வாய்புதைத்து
தொண்டுபண்ணி நாங்கள் தொழுதுவை குண்டமதில்

காத்திருந் தேவல்செய்யக் கற்பிக்க வேணுமய்யா
வீத்திருப்போ மும்மிடத்தில் மேதினியே வேண்டாங்காண்
என்றுதன்மர் சொல்ல ஏத்தமுள்ள என்பாருமாள்
நன்றுநன்று தன்மரேநீர் நால்வகையுஞ் சீருபண்ணி

தேச மலையாமல் செங்கோல்தான் மாறாமல்
வாசமுள்ள சுத்த மனைவிமக்கள் வாடாமல்
மகுடமுடி வேந்தர்தான் மனுநீதி தப்பாமல்
விகட முறையாமல் வேறுகூறு வாராமல்

சட்டமுட னாள்தோறும் சாதகமாய் வார்த்தைசொல்லி
திட்டப் படுத்திச் செப்பனிட்டுக் கொண்டதற்பின்
ஏகாந்த மாய்வருவீர் எல்லோருந் தான்காண
பாகாய1 டந்தோ டும்மொழியார் பதையாம லேயிருத்தி

1. சீர் மிகுந்துளது

மார்க்கமாய்த் தான்வாரும் வைகுண்டஞ் சேரவென்றால்
தீர்க்கமிது பஞ்சவரே செப்பினோ மிவ்வார்த்தை
கலிபிறக்கு முன்னே கானகத்தில் நாம்போவோம்
கலிபிறந்த சேதி காதில் விழுந்தவுடன்

அரைநாழி கைநேரம் அவனிதனில் நில்லாமல்
விரைவே வாருமென்றார் வேறென்றுஞ் சொல்லாமல்
இந்த மொழிமாயன் எடுத்துரைக்கத் தன்மருமே
சிந்தை மகிழ்ந்து திருத்தாள் சரணமென்று

தம்பியருந் தாமும் சரணம் பணிந்தனராம்
நம்பினோம் மாலே நமஸ்காரம் போய்வாரோம்

**விருத்தம்**

எங்குமாய் நின்ற மூர்த்தி ஈரேழு லோக மெல்லாம்
அங்குமாய் எங்கு மாகி ஆருயிர்க் கெல்லாந் தானாய்
பொங்குபூ ரணமாய் நின்ற பொன்னலங் காரா போற்றி
தங்குவ தில்லை நாங்கள் தரணியி லும்மை விட்டு!

ஆவதோர் கால மெல்லாம் அச்சுதன் செயலி னாலே
போவதோர் காலம் வந்தால் புத்தியு மலைக்க லாமோ
சாவதோர் காலம் வந்தால் சத்திங்கே தரிக்கப் போமோ
நாவது ரெண்டுஞ் சொல்லோம் நாராயணா போற்றி போற்றி!

**நடை**

என்றுதன்மர் மாயவர்தன் ஸ்ரீருதாளைப் பூண்டுகொண்டு
இன்றுபோய் வாரமென்று யேகினர்காண் அம்மானை

அத்தி புரம்நோக்கி ஐவருந்தான் போனதற்பின்
வெத்தி புரிமாயன் விளங்குந்துவார காபுரியில்
வீத்திருந்து செங்கோல் விசாரிக்கு மன்னாளில்
சாத்திரங்கள் சொல்லுந் தவமுனிவ ரந்தணரும்

காலங் கலியுகமுங் கற்பனையுந் துற்புத்தியும்
கேரலங் குறுகி குணங்கள்தான் பேதகமாய்

---

1. கொலை

பொய்யுங் குலையும்[1] புலையாட்டுங் களவுமேதான்
செய்யும் பிரளிகளும் வெகுசினமும் உதாசினமும்
குண்டணியுங் கோளும் குடிகேடும் வஞ்சனையும்
தெண்டம் பெறும்படியும் தெண்டினையுங் கண்டினையும்

மான மழிந்து வரம்புதப்பிப் போவதுவும்
தான தவங்குலைந்து சத்தியமும் பொய்யாகி
மேகுலமே கீழ்குலமாய் கீழ்குலமே மேல்குலமாய்
காலும் மேலுங்கீழாய்க் கலியன் பிறக்கிறான்

நால்வேதஞ் சொல்ல நாரணருந் தான்கேட்க
பால்பொருந்தும் வாயார் படைத்தலைவர் மந்திரிமார்
சாத்தகி ஆழ்வார் சகலரையுந் தானழைத்து
யேத்த விசாரமினி யேது சொல்லுமென்றார்

தெய்வச் செயலாலே தீங்கறியோம் நாயடியார்
ஏவல்செய் யுந்தொண்டர் ஏதென்று ஏதுரைப்போம்
சொல்புத்தி கேட்குந் தொண்டருக்கு நீர்தாமும்
கற்பித் தருளியசொல் கர்த்தனே உண்டெனவே

கேழ்க்கு மடியார்க்கு கிறுவைஇன்ன தென்றுரைப்பீர்
தீர்க்கமுடன் ஊழியங்கள் செய்யுரோ மென்றுரைத்தார்
ஆதலால் மாலும் அவர்கள் தனை யாதரித்து
நீதமல்ல நாமும் நீணிலத்தி லேயிருக்க

சேதியள் சொல்லும் படியேனா மந்தானும்
வாதினைக்குள் ளாகாமல் வனத்தில் தவசிருக்க
நன்றாகத் தோணுதுபார் நம்முடைய யோசினைகள்
குன்றாமல் நீங்கள் குவலயத்தி லேயிருந்து

எப்போதும் போலே இருப்பீர் சுகமாக
அப்போ திருந்தவர்கள் ஆக மிகவுருகி
இருக்கும் தருவாயில் இன்னமொரு கற்பினைதான்
பெருகும் பெருமாள் குமரர்கள்தான் செய்தபிழை

---

1. கொலை

பச்சைமா லின்ற பதினாயி ரம்புதல்வர்
இச்சையுடன் கூடிமுன்னா ளிசைந்துவிளை யாடுகையில்
துர்வாச மாமுனிவன் சோதினைக்குப் பாலரிடம்
நிறுபாக மாக நீண்ட சடைமுடியான்

சன்னாசி வேசமுமாய் தன்வரவுங் கண்டவர்கள்
மின்னார்போல் வேச மிகுந்ததொரு கெற்பிணியாய்
கோலஞ் சமைத்து குழாங்களுடன் தான்கூடி
காலஞ் சிறுமையதாய்க் காரணங்க ளேமுடிய

வந்து தவசியிடம் வாலையளுஞ் சேட்டைபண்ணி
இந்தப்பெண் கர்ப்பிணிதான் என்னபிள்ளை தான்பெறுவாள்
அய்யரே சொல்லுமென்று அடிபணிந்து நின்றார்கள்
வெய்ய தவமுனிவன் விந்தையது வென்றுசொல்லி

செப்புகிறோம் தம்பியரே சேயிழையாள் தன்வயத்தில்
இப்புவியில் நல்ல இருப்புலக்கை யாய்ப்பிறக்கும்
உங்கள் குலமெல்லாம் உருவழிந்து போம்படியாய்
கங்கு லிருள்போலே கழுதுலக்கை யாய்ப்பிறக்கும்
என்றுமுனி சொல்லி எகினர்கா ணம்மானை !

அன்றுமுனி சொன்னதன்பின் அவள் வயத்தி லேயிருந்து
வந்து விழுந்ததுகாண் மண்மே லிருப்புலக்கை
அந்த உலக்கைதனை ஆயனுட பக்கலிலே

கொண்டுபோய் வைத்தார்கள் குழந்தைப ளெல்லோரும்
கண்டு திருமால் கருத்திலே கொண்டருளி
கொல்லர் தனையழைத்து கூரிய வாளரத்தால்
சல்லிப் பொடியாய் தவுடுபொடி யாக்குமென்றார்

அந்தப் படியால் அரத்தால்ப் பொடியாக்கி
சிந்திப் பொடியுஞ் சிறுமணல்போ லானபின்பு
அரந்தன்னால் ராவி அதுபிடிக்கு மெட்டாமல்
அந்தப் படியால் அரத்தால்ப் பொடியாக்கி

ஊரத்த சிறுக்கணுவாய் உச்சிதமாய் மிச்சமென்றார்
கணுவை எடுத்துக் காற்கடலில் போடுமென்றார்

அனுவாய் உதிர்ந்ததெல்லாம் ஆத்திலே தூரவுமென்றார்
ஆமென் றிருந்தார்கள் ஆயனார் சொல்படிக்கு
தாமுயன்ற கருமம் தனக்கே பலித்துதுகாண்
விரைத்த பொடியெல்லாம் மெல்லியவாள்க் கோரையதாய்

ஊரத்து முளைத்து உன்னிதமாய்த் தான்வளர்ந்து
நின்றதுகா ணங்கே நெடியோ னருளாலே
ஒன்றுமிச்ச மானது வுருண்ட கணுவதனை
மச்சம் விழுங்கி வளையில்வந்து சிக்கியதே

அச்சமில்லா வேடன் அந்தமச்சந் தனைவாங்கி
கீறிச் சமைக்கக் கிடந்தெடுத்தானிக்கணுவை
மீறிச் சாந்தனிலே விருப்பமுடன் தான்கோர்த்து
வைத்திருந்தான் வேடன் வகையாக அம்மானை

புத்திரர்கள் கூடிப் பூரித்துக் கொக்கரித்து
ஆத்திலே சென்று அணிவகுத்துக் கைவிரித்து
ஊத்திலே தான்முளைத்த உயர்கோரை யைப்பிடுங்கி
அடித்துவிளை யாடவென்று அனைவருஞ் சம்மதித்து

துடித்துச் சிறுவர் துயரறவே தான்பிடுங்கி
நெருக்கி யடித்து நிமிசத்தில் மாண்டார்காண்
வருங்காரி யமறியா மக்களு மாண்டார்கள்
விளையாட வந்திடத்தில் விதிவசங்கள் தான்சூழ

கிளையோ டிறந்து கிடக்கிறா ரென்றுசொல்லி
கண்டபே ரோடிக் கண்ண ரிடமுரைத்தார்
அண்டர் பிரானும் அல்ல லொழிந்து தென்று
செய்யுஞ் சடங்கு சீக்கிரமாய்த் தான்முடித்து
வைகுண்டஞ் சேர மனத்திறுத்தார் அம்மானை

**விருத்தம்**

தம்பிமார் மகுட மன்னர் சகலரும் வாரு மென்று
எம்பிரா னருளிச் செய்ய ஏவல்கேட் டேதோ வென்று
நம்பிகா ரணரே வந்தோம் நாதனே சரண மென்று
தம்பிரான் அடிகள் போற்றி சாத்தகி ஆள்வார் நின்றார்

நின்றதோர் தம்பி மத்தன் இருபாதம் முகத்தை நோக்கி
மன்றலர் நந்த கோபா மானிலம் விட்டுக் கானம்
பொன்றவும் வேணு மென்றார் புவிதனை யாண்டு நீங்கள்
தென்றலங் காமன் போல செகந்தனில் வாழு மென்றார்

கரியமா லருளிச் செல்த காரண மேதோ வென்று
தெரியவே விபரங் கேழ்க்க தேசிக ரறிந்து நன்றாய்
அரியதோர் கலியன் வாரான் அரியதோர் வனத்தில் போரோம்
பெரியதோர் புவன மெல்லாம் பேர்தனைச் செலுத்தி வாழும்

இப்படி இறையோன் சொல்ல ஏங்கியே முகங்கள் வாடி
அப்படிச் சொன்னீ ரானால் அடியாரும் வருவோ மென்று
செப்படி திருமால் தானும் தெரியவே உண்மை யாக
வைப்பினி லிருங்க ளென்று வசனம் புகன்றா ரய்யன்

நடை

வனத்தில் தவசிருக்க மாயவனார் தானினைத்து
சனத்துக் கிதவான தன்மைகளும் புத்திகளும்
சொல்லி உபசரித்து துயரமெல்லாந் தான்தீர்த்து
மெல்லியதோர் கானகமே விரும்பி மனதிலெண்ணி

சாத்தகி ஆள்வார்க்குத் தனிமகுடந் தான்தரித்து
நாத்திசைகள் போற்ற நம்மைப்போல் தானிரென்று
மும்மகுடந் தான்தரித்து முறைமையாய்த் தானிரென்று
நெடியமால் வாழ்த்தி நீணிலத்தோர் தானறிய

மன்ன ரமைச்சர்களே மகுடமுடி வேந்தர்களே
வின்னமில் லாதபடி மேதினியி லாளுதற்கு
சொன்ன படிகேட்டுத் தொழுது வணங்கிநிதம்
அன்னசுத்த மெல்லாம் அச்சமறத் தானிருங்கள்

காலங் கலியுகமாய் காரணமுந் தோன்றுகையால்
ஞாலங்கள் தாமறியும் நம்முடைய ரூபமெல்லாம்
பலியாத நற்பூப்[1] பொறுமையது பாரில்நன்று
பொறுமை பெரிதாகப் போரோ மிருங்களென்றார்

1. நட்பு

சிறுமைவரு மெங்களுக்குத் தேவரீர் போறதினால்
என்று மயங்கி யெழுந்துமன்னர் தாமழுது
நின்று தலைகவிழ்ந்து நெடியோனைப் பின்துடர்ந்து
துடர்ந்தழுத தம்பியையும் துரைமக்கள் தங்களையும்

அடர்ந்து வராதபடி அமத்தியே அச்சுதனார்
வானம் புவியளந்த மலர்ப்பாதந் தானோக்கி
கானக மேனோக்கிக் கடுக நடந்தனராம்
நாடுவிட்டுத் தேசம் நன்னகரி தானும்விட்டு

கூடுவிட்ட தேன்குளவி கொட்டாத வாறது போல்
காடுகரைகண்டார் கண்ணனார் கண்ணாலே
தேடுதல் மீதறிவு சிவயோக நாட்டமதாய்
பேரறிவு கண்டு பிறப்ட்டார் மாயவனார்

ஓரறிவாய் நின்ற உயர்மரங்க ளெல்லாமும்
பூத்துச் சொரியப் புனமு மிகத்தழைய
காத்து விசிறியதாய்க் காளாஞ்சி பூமியதாய்
மயில்கள் துயந்தாட வானரமுங் கூத்தாட

குயில்க ளிசைகூவக் கொஞ்சுகிளி பேசிவர
புலிய ளடிபணியப் பூதங்கள் வாய்புதைப்ப
கெலியள் விரண்டோடக் கீர்த்தனங்கள் வண்டார்ப்ப
அரிய ளடிபணிய அரியோனுந் தானடக்க

கஸ்தூரி வாசனென்று கஸ்தூரி வாசந்தொழ
வஸ்துவுக்கு வேண்டினதோர் வஸ்துவெல்லாம் வந்துதொழ
கற்பூர வாசனென்று கற்பூரஞ் சூழ்ந்துவர
அரவுயர்த்தோன் பாதம் அரவு பணிந்தாட

இரவுபக லாத்தி யெம்பெருமாள் வந்தஇடம்
மேகநிற மேனியர்க்கு மேகம் பணிமாற
ஆகங் குளிர்ந்து அநேக நெடுந்தூரம்
வந்து பெருமாள் வனமெல்லாம் ஆராய்ந்து

கொந்துலவு செண்பகஞ்சேர் கொள்ளும்வனச் சோலைகளும்
சந்தனமுங் கற்பகமுந் தருவும் பெருவனமும்

கந்த மலர்க்காவும் கடம்ப வனச்சிறப்பும்
ஆதவனூ டாடாத ஆரணிய மரனதிலே

மாதவனுஞ் சம்மதியாய் மனது மிகமகிழ்ந்து
நாலுதிக்கும் பார்க்க நடுவே ஒருவிருட்சம்
ஆலுதித்து நின்ற அடவு தனைப்பார்த்து
இந்த விருட்சம் யெங்குனாங் கண்டதில்லை

அந்த விருட்சம் அதுவே நமக்குநிலை
நிற்போந் தவசு நிறைவேற வேணுமென்று
கற்பூர வாசன் கலையாச னம்விரித்து
பொற்பூவும் வாசமும்போல் பொருந்திமனம் ஒன்றாகி
அஷ்டாச் சரத்தில் அமர்ந்திருந்தார் அம்மானை

நட்டாத்தி லேயிருந்து நடுக்கடலில் போட்டதொரு
இருப்புக் கணுபதித்த யெம்பு தானெடுத்து
செருப்பு மிகத்தொட்டு சீராவுந் தான்பூட்டி

சிலையெடுத்து வேடன் சித்தருவாள் கைப்பிடித்து
கலைமான் கலைத்தானக் கனவேடன் காடுசுத்தி
மான்மரைகள் தேடி வனத்தூடே செல்லுகையில்
தேன்மருவு வாயான் திருவேங் கிடப்பெருமாள்

ஆரணியந் தன்னில் ஆல மரத்தடியில்
தாரணியை விட்டுத் தவசிருந்த கோலமது
வேடனுட கண்ணுக்கு விரண்டுவந்த மான்போலே
ஆண்டவன் ரூபம் அவன்தனக்கு மான்போலே

கண்டான் பதறிக் கடுகிச் சிலைதொடுத்தான்
விண்டான் சரத்தை வேடன்வன மரனெனவே
மார்பிரள வாங்கி வல்வேட னெய்தவம்பு
சீர்மருவு மாயனுட சீர்பாதந் தன்னில்வந்து

பட்டுருவி அம்பு பறிந்து மறுபுறமும்
தட்டுருவித் தைக்கத் தண்டா மரைப்பதத்தில்
மண்ணையுண்ட மாயன் மயக்கம்வந்து பூமியிலே
வெண்ணையுண்ட மேனி விதனம் பொறுக்காமல்

மூர்ச்சித்து மேலு முகமும் வெளுப்பாக
பேச்சத்துக் கால்சாய்ந்து பிரக்கினையுந் தோன்றாமல்
தானே அசந்து தனியே கிடக்கயிலே
மானெய்தோ மென்று மகிழ்ந்து சிலைவேடன்

பதையாமல் வந்துதென்று பாங்குடனே ஓடிவந்து
வதைபட்டு வந்துதென்று மானைவந்து பார்ப்பளவில்
கொதையுமாப் பட்டுருவிக் கோபாலர் தான்கிடந்தார்
இதைவந்து பார்த்து இருமாந்து வல்வேடன்

கதையோ கதைப்பயனோ காலத்தின் வல்வினையோ
விதியோ விதிப்பயனோ விறுமாவின்[1] கல்பினையோ
மதியோ மதிமயக்கோ மகாதேவர் கற்பினையோ
எந்தன் விதிப்பயனோ எம்பெருமாள் தன்மீதில்

தீதுவரக் காரியமேன் செய்த தவக்குறையோ
மானனென்றோ யென்னை மயக்கி விதிவசமோ
தானனென் றுலகளந்த தம்பிரான் மானெனவே
பொன்மான் போலவந்த புதுமை அறியாமல்

மெய்மா னென்றெண்ணி விரும்பிநான் எய்துவிட்டேன்
என்செய்வே னென்செய்வேன் ஏதென் றறியேனே
முன்செய்ததீவினையோ முகுந்தர்மே லம்புபட
வஞ்சினைய ளல்ல மனதறிய வந்ததல்ல

கஞ்சனை முன்வென்ற காரணனே னற்றியென
பாவியு மானேனே பச்சைமால் நாரணர்க்கு
தீவினையள் செய்தேனே சென்னமென்ன சென்மமினி
என்று சிலைவேடன் யேங்கி விழுந்தலறி

குண்டு தகர்ந்து குல்லையதில் வீழ்ந்ததுபோல்
அலறி அபயமென்று அய்யோ சிவனேயென்று
தரையிலே தான்விழுந்து தானழுதான் வில்வேடன்
வில்வேடன் தானழுக மெய்மகிழ்ந்து கோபாலர் |

---

1. பிரம்மா

வில்வேடா நீயும் மலையாதே என்றுசொல்லி
அழுதவனைத் தேத்தி ஆதரித்து வாவெனவே
தொழுதவனும் வந்து தூரநின்று தெண்டனிட்டு
என்தம்பி ரானே எளியார்க் கெளியானே

உந்தன் மலர்ப்பாதம் ஊடுருவி அம்புதைக்க
எய்தேனே பாவி ஏழ்நரகில் வீழ்வேனே
மைதவழு மேனியிலே வடுவான காரியமென்
வம்புபடா மேனியிலே வடுவுவர எய்தேனே

அம்புதொட்ட கையை அறுத்துமுன் னேவைப்பேன்
வேட னிவைசொல்லி வெகுண்டழுக மாயவரும்
தோசமில்லை உன்மீதில் சும்மா மலையாதே
நமக்கு முடிவிதுகாண் நல்வேடா சொல்லுகிறோம்

சுக்குங் கலியுகத்தால் துன்பம் வருமெனவே
வைகுண்டஞ் சேரவென்று வந்தோம் வனத்திலேதாண்
கைகொண் டெறிந்தகணை காலிலே தய்த்ததுகான
முடிவுஞ் சரியாக முடிந்துதுகாண் விதிப்பயனால்

மடிய உயிரிறந்து வைகுண்டம் போய்ச்சேர
போவ தறியாமல் புலம்புவீரோ நீவேடா
வாறவிதி வந்தால் மாட்டமென்றால் போய்விடுமோ
வந்தவிதி வந்துதென்றால் எந்தவித மானாலென்

இந்த மயக்கத்தை இப்போதே விட்டுவிடு
உன்சேதி பார்க்கில் உன்மீதில் குற்றமில்லை
என்சேதி சொல்லுகிறேன் இதவாய் உதவிசெய்வாய்
நல்லதென்று வேடன் நாரணரைத் தான்பணிந்து

சொல்லுமென்று வாய்புதைத்துச் சோம்பி முகம்வாடி
வாட்டமுடன் நின்று வாய்புதைத்துத் தான்கேழ்க்க
நாட்டமுடன் தானும் நம்பெருமா ளேதுசொல்வார்
வாடாநீ வேடா மன்னுபுகழ் பஞ்சவர்கள்

தாராரு மத்திபுரம் தன்மருந்தான் தம்பியரும்
சீராக வாழுஞ் சிறந்தநகர் தன்னிலேதான்
நேராக நீபோய் நிமிழத்தி[1] லுண்மையதாய்
தன்மர் நகுலன் சகாதேவர் கேளாமல்

வற்மம் வெளியிலேதான் வாராமல் நீர்தானும்
வீமன் விசையனுடன் விளம்புவாய் நம்சேதி
தர்மண்வரச் சொன்னாரென்று சாற்று மெனவுரைத்தார்
வேறொன்று சொல்லாமல் விபத்துவந்து தென்றுசொல்லி

கூறென்று சொல்லிவிட்டார் கூர்வேந்தன் தன்னிடத்தில்
அவ்வசனஞ் கேட்டு அசந்து சிலைவேடன்
இவ்வசனஞ் சொல்லவென்று இராகவனைத் தெண்டனிட்டு
வழிகூடித் தானடந்தான் மனதிடைந்து தான்வேடன்

பழிபாவம் வந்துதென்று பயந்து திசைநோக்கி
காடு கடந்து கரியமலை தான்கடந்து
நாலு தெருவும் நடுத்தெருவும் தான்கடந்து
கொலுவும் அரண்மனையுங் கொத்தவருந் தானிருக்கும்

கோட்டை தனில்சென்று குருகுலத்தோர் தங்களிடம்
வீட்டையுங் கண்டு வீமன் விசயனிடம்
அச்சுதனார் சொன்ன ஆந்திரிய முள்ளதெல்லாம்
உச்சிதமாய் வேடன் உரைத்தான் மனம்பற்றி

அந்த மொழிதன்னை தன்மரறியாம லென்றுரைத்தான்
இந்த மொழிகேட்டு என்னசெய்வோ மென்றிவர்கள்
வேடனைத்தான் போமெனவே வீமன் விசயனுந்தான்
தாடவருந் தன்மரிரு தாளடியைத் தான்பணிந்து

விதியோ மதிமயக்கோ மேகவண்ண ரிப்போது
அதிசயமா யெங்களுக்கு ஆளனுப்பி விச்சகதை
ஏதோ தெரியாது இதுபுதுமை தான்கேட்டோம்
சூதோ அவருடைய சூட்சமோ கற்பனையோ

---

1. நிமிடத்தில்

தம்பி நகுலன் சகாதேவன் தன்னுடனும்
உம்பரையுந் தனக்கு உரையாம விச்சேதி
அண்ணருக்கும் யெந்தனுக்கும் அனுப்பி விச்ச கற்பினைதான்
எண்ணமென்ன சாமி இனிமேல் கூறுமென்ன

மன்னுபுகழ் தன்மர் மயங்கி மனமிடைந்து[1]
தம்பிரான் வரச்சொன்ன சகாயர்தா னிப்போது
எம்பிரான் கற்பினைக்கி என்னவென்று சொல்லுவேன்நான்
காரணமாய்க் காணுதுகாண் கார்வண்ணன் தன்சேதி

நாரணனார் சொல்கேட்டு நடந்தோ மிதுவரையும்
என்னபிழை வந்தாலும் ஏதுவகை யானாலும்
சொன்னமொழி தப்புவரோ சோதனைதான் தம்பியரே
எப்படியோ சித்தம் எம்பெருமாள் தன்னினைவு

அப்படி அல்லாது அன்றுமுத லின்றளவும்
சொல்படியே நாமுந் தொண்டுபண்ண வேகடவோம்
வில்பிடித்த சேவுகனே வீமனே உங்களைத்தான்
வலுவுடையா ராகையினால் வரச்சொன்னா ருங்களைத்தான்
மெலிவுடையா ராக வீரியத்தை வாங்கிவிட

வரச்சொன்னார் நீங்கள் வழிவசமாய்க் கேழ்பதற்கு
தரச்சொல்வார் கையைத் தானகல நின்றுவிடும்
அகலநின்று காரியங்கள் ஆசாரமாய்வணங்கி
சகல கலையறியுந் தாமோ தரனிடத்தில்

போய்வாரு மென்று பொருந்த விடைகொடுத்தார்
சேய்போ லிருவரையும் தெண்டனிட்டுத் தன்மரையும்
நடந்தார் வனந்தனிலே நாரணரைத் தான்தேடி
துடந்தார் வனங்களெல்லாம் சோதித்துத் தானோடி;

சந்தனச் சோலையிலே தழைத்தாலின் கீழேதான்
அய்வரு மங்கே அழுதுபரி தாபமதாய்
தோத்திதுகா ணென்றிருவர் துவள நடந்தோடி
கால்த்துரிதங் கொண்டு கடுக நடந்துசென்று

---

1. மனமுடைந்து

அந்த வனத்தனிலே அருச்சுனரும் வீமருமாய்
இந்தவன மாமென்று இசைந்துநடந் தோடிவந்து
அண்ணல் திருமா லென்றிசைந்து ஓடிவந்து

கண்ணருந்தான் மண்மீதில் காயத் துடன்கிடக்க
கண்டார் கவிழ்ந்தார் கத்தி அபயமிட்டார்
விண்டார் மனத்துயரால் விண்ணுமண்ணுந் தானதிர

**விருத்தம்**

அய்யகோ ராமா ராமா அய்வரைப் பிரிந்து கானில்
மெய்யது புழைத்த தாலே மேனியும் நிறமும் வேறாய்
நொய்யவே யினிமேல் பாரில் உண்ணவும் வேணு மோதான்
(வரிவிடுபட்டுளது)

காயமும் வருமோ யெங்கள் கண்ணனார் கண்ணனார்க்கு
ஞாயமு மிதுவோ ஐயா நாங்களுஞ் சகிக்க லாமோ
வாயமா யெய்த தாரோ மாயமென் றறிந்தி லாரோ
ஆயனே யெய்ததார் சொல்லும் அவனுயிர் கொல்லு வோமே!

பார்ப்பார் விழுவா ரெழுந்திருப்பார் விதியோ குலையோ
முடிந்துதென்பார்
கேழ்ப்பார் திருமால் முகம்பார்ப்பார் கெதியே விதியோ அறியேனென்பார்
ஏர்ப்பா ரிதுநாம் செய்தபிழை யெய்தாா படுவா ரிதுதுயரம்
கார்ப்பார் திருமால் தனைநாளுங் கயிலைக் கடவு ளிவர்தாமே

**நடை**

என்று புலம்பி இருபேருந் தானழுதார்
குன்று மலைபோலே குதித்து விழுந்தழுதார்
அழுது பிரண்டுருண்டு அய்யோ அபயமென்று
புழுதியின் மேல்விழுந்து புலம்பிப் பரிதவித்து

பூமி யதிரப் புவனமெல்லாந் தானதிர
சாமியுந் தன்மீதில் சரந்தொடுக்க வல்லவரார்
உலகளந்த பாதமதில் ஊடுருவி அம்புதைக்க
கலகஞ்செயி தாரவரைக் கண்டால் விடுவோமோ

எந்தனுட சுவாமிக்கு இடைகூறு[1] வந்ததென்று
அந்த னுடன்வீமன் அருச்சுனனுந் தான்கேழ்க்க
சுந்தரஞ்சேர் மாயன் சொலலுவார் நல்வசனம்
கேளீர் அருச்சுனரே ! கிலேசமது விட்டுவிட்டு

மீளீர் வலுவீமா வியாசனடகள் வேண்டாங்காண்
காலங்கள் தான்மூடி காப்பினையுந் தோணாமல்
ஞாலங் கடந்து நற்றவசு தானிருந்து
சீலமுட னுங்களுக்குத் தெரியவே சேதிசொல்ல

ஏலவந்து கானகத்தி லிருப்போந் தவசெனவே
நாமொன்று தானினைக்க நடுவிருந்தார் தன்செயல்தான்
தாமொன்றுந் தோத்தாமல் சாதகமாய்க் கூடநின்ற
இந்த உடலுயிரும் யெப்போதுந் தான்தனதாய்

சொந்தமெனப் பூவுலகில் சுமந்தலுந்து காலமெல்லாம்
மெய்யென் றிருந்தோம் மேதினியும் நம்மதென்று
பொய்யா யிருந்துதுகாண் மதியுள்ளோர் தான்கேளீர்
மோசம் வருவதற்கு முன்னறிய நம்செயலோ

பாசம் பிடித்திழுத்தால் பக்க விலக்குமுண்டோ
நாசம் வருங்காலம் நல்லறிவு போய்விடுங்காண்
நேசம் புலையாட்டாய் நினைவுதடு மாறிவிடும்
வல்லமையி னாலே வாழ்வதுண்டோ பூவுலகில்

நல்லவர்கள் நீங்கள் நமக்குதவி யாகவந்தீர்
பயிருமொரு வேலியுமாய்ப் பஞ்சவரும் நாம்முதலாய்
உயிரு முடல்போலே உறவாகித் தானிருந்தோம்
இப்போது வந்த இடையூறு தானகற்றி

செப்பமுடன் வேடன் சிலையெடுத்து மானறுத்து
ஒப்பமுடன் வந்திடத்தே ஓடிவந்த மானெனவே
என்னுருவம் மான்போ லிருந்த படியாலே
மின்னுருவ வேடன் வில்பிடித்தே எய்துவிட்டான்

---

1. இடையூறு

வந்து விழுந்தழுதான் மண்ணும்விண்ணும் தானதிர
வந்தழுத வேடனைத்தான் வாவென் றரவணைத்து
அங்கே அனுப்பிவைத்தோம் அந்தரங்கம் உங்களுக்கு
இங்கேதான் நீங்கள்வந்து என்துயரம் தீர்ந்துதிப்போ

அம்புபட்ட வேதினைகள் ஆத்த முடியுதில்லை
வம்புபடாத் தேகம் வடுப்பட் டிருக்கிறது
ஆணி நரம்பு அறுபட்டுத் தான்போச்சு
பேணி யெனைப்பார்த்துப் பிழைப்பிக்க வல்லீரோ

காயத்தைப் பார்த்துக் களைநரம்பைத் தான்பார்த்து
நேயத் துடனே நேயமாய்த் தானிணைந்து
சோதித்துப் பாருமென்று சொன்னார்காண் மாயவரும்
ஆதித்தன் சொல்ல அருச்சுனனும் வீமனுமாய்

உள்ள முருகி ஒருஉடம்பு புண்ணாகி
கள்ளமறுந் தன்மர்மொழி கடுந்துரைக்க மாட்டாமல்
கல்லாய் மரமுமாய்க் கருத்தசந்து நின்றார்கள்
எல்லாம் விதிவசமோ இப்படியோ நீங்களுந்தான்

நடந்தோம் நகரிமெய்க்க நாமிருந்த கோலமெல்லாம்
கிடந்தோந் தனியே கிட்டவர வேபயந்தீர்
போதாதோ இவ்வளவு புதுமை அதிசயந்தான்
காதால்க் கேட்டோமோ கண்ணாரக் கண்டோமோ

இனியார் சதநமக்கு எய்ப்பற்ற வேளையிலே
தனியே இனிநாள்ச் சங்கரனார் கற்பிணையோ
தகையாய் இருக்குதுகாண் தம்பியரே இங்கெனக்கு
வகையாய் இருக்குதுகாண் வந்திருவர் கைதாரும்

கைதாரு மிப்போ களைவந்து போகுதுகாண்
மெய்சோரு திங்கேதான் விழுமுன்னே கைதாரும்
இப்படியே சொல்ல உடழிந்து மெய்சோர்ந்து
அப்படியே நின்றார் அருச்சுனரும் வீமருமே

போகுதடா சீவன் புண்ணாய்க் குலையுதடா
ஆகுதடா சீவன் அருச்சுனரே வீமரேகேள்
அப்பு வையுமனம் வந்தடைந்து செருக்குதடா
தேயுவையும் வாயுவையும் சிக்கெனவே கட்டுதடா

வாயுவு மங்கே வழியாது நீக்குதடா
காயம் விழுமுன்னே கையாயு தத்தாலே
நேயமாய்த் தூக்கி நிலத்தில் வைக்க மாட்டீரோ
ஆபத்துக் காக்கிறது ஐவரென்று சொல்வார்கள்

தாகப் படுகையிலே தான்பார்த்து நிற்பீரோ
நிமிசம் பொறுக்க நிற்சீவ னாகுதடா
சமயமடா வீமரே தம்பி அருச்சுனரே
என்றுசொல்லி மாயன் இப்படியே சொல்லுகையில்

நின்றே அருச்சுனனும் நெடியதொரு வீமனுமாய்
தங்கள் தெண்டாயுதமுந் தனுவையுமே நீட்டலுற்றார்
அங்கே அதுவழியாய் அவர்பலத்தை வாங்கலுற்றார்
தெண்டுந் தனுவுந் தானெடுக்க மாட்டாமல்

விண்டு மனதுலைந்து விள்ளாம லுள்ளுடைந்து
ஒறுத்துப் பிலன்குறைந்து உள்ளசைந்து மெய்சோர்ந்து
மறுத்தொன்றும் பேசாமல் வலுவிழுந்து நிற்பளவில்
கறுத்த திருமேனி காயாம்பூ மேகவர்ணன்

வெறுத்துப் புவியை மெய்மறந்து தானசந்து
உடலும் வெளிறி உயிரு மிகப்பதறி
சடலந் தனைப்போட்டுத் தப்பினார் ஒப்புடனே

### விருத்தம்

நீலம் பரந்து விழிசொருகி நெருப்பு பரக்க நீர்மேலாய்
கோலம் பெரிய உடல்வேர்த்து கோழை யுடனே சிலேட்டுமமும்
ஆலம் பெரிய மிடறிறுகி ஆவி யொடுங்கி அறிவசைந்து
சீலம் பெருகும் வைகுண்டம் சேர்ந்தார் முகுந்தர் சிந்தைவிட்டு

விட்டுப் பிரிந்த திருமாலை வீமன் விசையன் தானெடுத்துத்
தொட்டுப் புவியில் உள்ளடக்கித் துயரத் துடனே விழுந்தழுது
கட்டுப் பிரிந்து தெனவேங்கி கானகன் றனையே விட்டகன்று
பட்டுப் பரந்து ஆயுதத்தைப் பதையா தெடுத்தார் தலைமீதில்

ஆயுதந் தலைமேல்வைத்து அருச்சுனன் வீமனுந்தான்
மாயனை இழந்தோமென்று மனமெல்லாம் இடைந்து புண்ணாய்
தூயதோர் தர்மர்கேழ்க்கச் சொல்லுவோம் வாருமென்ன
நேயமாய்க் கானம்விட்டு நிமிஷத்தில் போவதானார்

நடை

சீரான வைகுண்டந் திருமாலுஞ் சேர்ந்தபின்னே
பேரான பார்த்தன் பெரியவலு வீமனுந்தான்
மண்மேல் விழுந்தழுது மாயோனைக் காணாமல்
விண்மேல் முகம்நோக்கி மெய்சோர்ந்து நின்றழுதார்

கச்சுதோ பூமி கசந்துதோ நாங்களுந்தான்
அச்சுதரே யென்று அடிமேல் வீழுந்தழுதார்
மெய்ச்சுடரே ரூபம் வெளியோ வெளிமயக்கோ
நச்சரவில் பள்ளிகொள்ளும் நாரணரே இப்பொழுது

எங்கே இனிக்காண்போம் இப்பிறப்பி லும்மையென்றார்
அங்கே வருவோமோ ஐவருந்தா னும்மிடத்தில்
இப்படியாய் நின்று இவர்கள் புலம்புகையில்
தப்படியுஞ் சங்குஞ் சங்கீத சேகண்டியும்

தம்பூரு வீணைகளுஞ் சரமண்டலமு முழங்க
கிம்புரா கின்னரங்கள் கீதமும் நாதமுமாய்
பூந்தேருஞ் சங்கீதமும் பூவையர்க ளாடல் செய்ய
வாழும் பெருமாள்தான் வைகுண்ட லோகமெல்லாம்

ஆளும் பெருமாள் அச்சுதனார் வாராரென்று
முழங்குதுகாண் சத்தமென்று முனிவர்மிகக் கொண்டாடி
வணங்குதுகாண் கீதங்கள் வைகுண்ட லோகமெல்லாம்
என்று தவமுனி ரிஷிகள் தபோதனரும்

ஆரணியந் தன்னிலே அருந்தவத்தோன் சொல்லுமொழி
பூரணமாய் நெஞ்சில் பொருந்த இருவருக்கும்
காதாரக் கேட்டு கலக்க மிகத்தெளிந்து
பாதாரந் தன்னில் பனிமலர்கள் தான்தூவி

சேர்ந்தார் வைகுந்தஞ் செங்கண்மா லென்றுசொல்லி
புறப்பாசத் தேனொழுகும் பூத்தமலர்ச் சோலையிலே
நல்லடக்கம் பண்ணி நமஸ்கரித்து முக்காலும்
சொல்லடக்க மானதொரு சுந்தரனார் மந்திரமும்

செய்யுஞ் சடங்குஞ் செய்கரும முமுடித்து
கையுங் குவித்துக் கடுகி நடப்பதற்கு
வீமன் விசையன் வில்லுதண்டு தானெடுக்க
தான்பிலமு மில்லாமல் தலையிலே தான்சுமந்து

வருக வழிநோக்கி வருகிற வேளையிலே
அந்த வழிகடந்து அப்பாலும் போகையிலே
ஆடுகளுந் தான்மேய்த்து ஆயன்வனம் போகையிலே
வேடுவர்கள் மூன்று விரைந்தெடுத்தா ராடுகளை

அப்போ திடையர் அருச்சுனரே வீமரென்று
இப்போ தருச்சுனரே இருவர்களும் போகையிலே
ஆடுகொள்ளை போகுதுகாண் அபயம் அபயமென்று
நீடுபுகழ் மாயன் நெடுங்கான கம்முறைய

கொள்ளைகொண்டார் வேடர் கூகூ வெனஇடையர்
துள்ளிவந்து சொன்னான் துடிவீமன் பார்த்தனிடம்
இடைய னிவைசொல்ல இருவர் மனமிடைந்து
தடைசெய்த வேடரையே தான்பொருத வேணுமென்று

வீரியத் துடன்வீமன் விசயனு மேதிரும்பி
கோர்த்துடன் வந்து கொல்லவென்று வேடர்தமை
தெண்டெடுக்க வீமன் சிலத்தையொன்று மில்லாமல்
விண்டொடுக்கி வில்லெடுக்க விசயன்பில மில்லாமல்

சண்டை தொடுக்கவென்று தாண்டிக் குதித்தார்கள்
கண்டந்த வேடர் கடுகிக் குதித்தார்கள்
அண்டந் தகர அதிர்ந்திருவர் தான்பொருதார்
வீமன் விசயன் வேடனுடன் போர்பொருத

நேமமுட னாயுதங்கள் இல்லாமல் நின்றேதான்
வேட ரறிந்து வெகுண்டு சினந்தெழுந்து
சாடவே வீமனையுந் தம்பி விசயனையும்
ஓடி வெகுண்டுப் புறங்காட்டிப் போகலுற்றார்

ஊடழித்து வேடர் ஒருமித்து ஆடுகளை
ஈடழிந்து சேர்த்து இடையனையுந் தானடித்து
பாரித் துவாரகாபுரிப் பட்டணங் கொள்ளைகொள்ள
காரிப் புனல்வேடர் கருதியே வார்த்தைசொல்ல

சீரில் சிறந்த சிறைபிடிக்க வேணுமென்று
ஊரில் புகுந்தவர்க்கு உச்சாய மாய்ப்பேசி
போறார்கள் வேடரென்று போர்விசையன் வீமனுமாய்
கூறாம லொன்றுங் குறுகிமனம் புண்ணாகி

நீறாக வெந்து நினவு தடுமாறி
வீறான ஐவரென்று மேதினியில் நாமிருந்தோம்
எண்ணமெல்லாம் போச்சென்று இடைந்து மனமுருகி
கண்ணருட பட்டணமும் காவல் அழிந்ததுவும்

என்னவென்று சொல்வோம் எம்பிரான் கல்பினைக்கு
வின்னமொன்று வாராமல் வின்னமே வந்துதென்றால்
ஆதி பிரானான அச்சுதற்கு மோராது
பாதிப் பிறையணிந்த பரமனுக்கு மோராது

நமக்கு வலுக்குறைந்து நாணிநின்றோம் ஆமாகில்
சுமக்கும் பிழைபாவம் தோசமெல்லாம் உண்டாகும்
அண்ணருக்குஞ் சேதி அறிய உரைப்பமென்றார்
தண்ணலரும் வீமன் தம்பி அருச்சுனரும்

ஏங்கி முகம்வாடி இடைந்து வழிகூடி
தாங்கி நடந்திருவர் தன்மர் தனைநோக்கி
அத்தி புரஞ்சென்று அண்ணரையுங் கைதொழுது
சத்தியுள் வீமன் தனஞ்செயனு மேதுசொல்வார்

குருகுலத்தை நாளுங் கோபாலர் காத்தருளி
இருங்கருமஞ் சொல்லி வாரமாய்த் தானிருந்தார்
ஆதிநா ராயணர்க்கு ஆபத்து வந்துதென்று
சேதி சொல்லக்கேட்டுச் சேதிதனை யேயறிய

அய்யோ போவென்று அருள்செய்த புண்ணியரே
காவெங்குந் தேடிக் கானகமெல் லாந்திரிந்து
வனமும் வனாந்திரமும் மலையும் பலவுந்தேடி
புனமும் புகுந்துந்தி பூத்தோனைக் காணாமல்

தேடிச் திரிந்துமொரு செண்பகப்பூங் காவனத்தில்
நாடித் திருமாலை நாங்கள்கண்டோ மண்ணாவி
அம்புபட்டு லோகம் அளந்தொரு பாதமதில்
வம்புபட்டு மேனி வாடி மெலிந்துநொந்து

மெய்க்கூடு தான்வெளிறி மேனியெல்லாம் புண்ணாகி
புண்டரீக மேனியனார் போதகமாய்த் தானமத்தி
என்னை எடுத்து இருத்துமென்றார் கோபாலர்
பின்னும் நினவுகொண்டு பேசாமல் நாங்கள்நின்றோம்

நின்றவனைப் பார்த்து நெடியோனும் பூருவத்தில்
நன்றிசெய்த பேச்சும் நடத்துகின்ற சொல்முறையும்
உடம்புருகச் சொல்லுகின்ற உத்திரங்கள் தான்கேட்டு
குடங்கவிழ்ந்து நீர்பிரிந்த கும்பமது போலாகி

தேவரீர் சொன்னதொரு சேதிதனை மீறாமல்
நாவு வரந்துநின்றோம்[1] நாரணரை நம்பாமல்
கருத்தறிந்து மாயவனார் கைதாரச் சொன்னார்காண்
உருத்தறிந்து நாங்கள் ஒன்றும் உரையாமல்

---

1. வறண்டு நின்று

நின்றோம் பெருமாள் நினைவுதனை நம்பாமல்
குன்றாம லேமனது குன்றிமனம் புண்ணாகி
அந்த நினைவறிந்து ஆயுதத்தை நீட்டுமென்றார்
எந்தவித மென்றுஎண்ணி யெங்கள் ஆயுதத்தை

நீட்டி இருவோரும் நின்றோ மதுவழியாய்
வாட்டி வலுவை வாங்கிவிட்டார் மாயவனார்
பிலங்குறைந்து நாங்கள் பேசா திருக்கையிலே
கலங்கி விழிமருட்டி கண்ணருந்தான் மெய்சோர்ந்து

பாசங் கலங்கி பதறி உடல்வெளுத்து
வாசங்கள் மண்ணில்வைத்து வைகுண்டஞ் சேர்ந்தார்காண்
செங்கண்மால் தானுஞ் சீவன்விட்டுப் போகையிலே
தங்கள் மரவு[1] குலைகுலைந்து போகாமல்

காருங்கள் நீங்களென்று கல்பித்துப் போனார்காண்
வாருங்கள் ஐவரும்பின் வைகுண்டஞ் சேர்வதற்கு
என்றுசொல்லி மாயன் ஏகினார்காண் அம்மானை !

சென்று மலர்ப்பாதந் தீண்டியெடுத் தவ்வனத்தில்
அடக்கிச் சடங்கறுத்து அலங்கார மாகவேதான்
முடிக்கிச் சடங்கதுவு முடித்துவந்தோ மண்ணாவி
வந்தோம் வழிகூட வாடி மனதுடைந்து
அந்த வழியிலொரு ஆயனுந்தான் ஆடுவிட்டு

மேய்த்து வருகையிலே வேடர்புகுந் தாடெடுக்க
பார்த்துநீர் போரீரோ பார்த்தரோ வீமரேநீர்
அபயம் அபயமென்று ஆயனுந்தான் கூகூவென்றான்
உபய மெனச்சென்று ஒருப்பித்து வேடருடன்

தாண்டிப் பொருதோந் தாடாளர் வேடருந்தான்
மிண்டிப் பொருதி வேகித்து வந்தார்காண்
தரிபட்டு நிக்கத் தத்துவங்க ளில்லாமல்
அரியிட்ட சாபமென்று அலறி வலுக்குறைந்து

---

1. மரபு

முறிபட்டு வந்தோ முதுகும் புறங்காட்டி
தெறிபட் டுமக்குச் சேதிசொல்ல வந்தோங்காண்
என்றிருவர் சொல்ல ஏங்கியே தன்மருந்தான்
குன்றதிர்ந்து வீழ்ந்தாப்போல் குதித்து விழுந்தழுது

முகத்தி லறைந்துகொண்டு முடிகுலையத் தான்விழுந்தார்
வயத்திலறைந்து கொண்டு மண்மீதி லேவிழுந்தார்
என்தம்பி ரானே எங்களுக்கு நாயகமே
தன்தம்பி ரானே சருவ தயாபரனே

பூலோக நாயகனே புவனத்தை யளந்தோனே
சாலோக சாமீப சாரூப தேசிகனே
எள்ளுக்கு ளெண்ணையைப்போல் எவ்வுயிருக்குந் தானான
வள்ளலே உம்மை மறந்திருக்கக் கூடுமோதான்

அழகுதிரு மேனியனே ஆபத்துக் காத்தோனே
களபமணி மேனியனே கண்ணனே என்றழுதார்
துளசிமணி மார்பழகா சுகந்தமணி திண்புயனே
புளகமணித் தேசிகனே பூபாலா கோபாலா

தூதுசென்றாய் எங்களுக்காய் சகுனித னிடமாக
தீதுகொண்ட நெஞ்சன் திரியோ தனனையெய்ய
பாங்குடனே கொல்லப் பகைமுடித்து எங்களுடன்
சாங்கமாய் நின்று தினமும் புவனமெல்லாம்

கர்ணன் சகுனிமுதல் காவலர்கள் தூதுவரும்
எண்ணவர்க ளெல்லாம் இறந்த களந்தனிலே
மடிந்து விழுகமட்டும் வாரமாய் நின்றீரே
முடிந்துதோ காலம் முகில்வண்ணா உந்தனுக்கு

எங்கே இனிக்காண்போம் இவ்வுலகி லும்மையுந்தான்
அங்கேவை குண்டம்வந்து அங்கிருந்து காண்போமோ
ஆருக்கு மேற்குமோ ஐவரையும் விட்டகன்றால்
ஊருக்கு மேற்குமோதான் உலகிலய்வர் தன்னைவிட்டு

போவீரோ இந்தப் புலையாட் டொழிந்துதென்று
மாயமாம் வாழ்விதென்று வைகுண்டஞ் சேர்ந்தீரோ
ஆமாம் மெனவே அசந்து மறப்பர்களோ
வாரோங்கா ணங்கே வைகுண்டந் தானோக்கி

என்று சொல்லித் தன்மர் ஏங்கி முகம்வாடி
நின்று நகுலன் நெடுமாலைத் தானினைந்து
குத்தி விழுந்தழுதான் கோவென் றபயமிட்டு
பத்தி கலங்கிப் பதறி உடலசந்து

விழுந்து புரண்டழுது மெய்சோந்து கைசோந்து
தெளிந்து உபாயமாய் சினேகம் மறந்தோமோ
விந்தைமலர்ப் பாதந்தனை மேதினியில் காண்போமோ
அந்தமுள்ள மாலே அவனி யளந்தோனே

அரிகேச வாமுகுந்தா அய்யா உனைப்பிரிந்தால்
சிரியாரோ பூவுலகில் தேசத்தி லுள்ளவர்கள்
பரியாசம் பண்ணமட்டும் பஞ்சவர்கள் நாங்களிரோம்
தரியோந் தரணியிலே சற்றுமிரோம் உம்மைவிட்டு

வருவோம்வை குண்டமென்று வலுநகுலன் சொல்லியழ
தருவான நூல்வேதச் சகாதேவன் தான்சிரித்து
பொய்வாழ்வை மெய்யிதென்று போத மனமகிழ்ந்து
மெய்வாழ்வு போலே விரும்பினீர் மன்னவரே

தேகம் பொருளோ செகம் பொருளோ உங்களுக்கு
தாகம் பசிஇளைப்பு சஞ்சலங்கள் தான்பொருளோ
தேடுந் திரவியங்கள் செல்வமது தான்பொருளோ
நாடு நகருமிந்த நற்பணியள் தான்பொருளோ

தந்தையும் தாயும் தமருங் கிளைபொருளோ
மைந்தரும் வீடும் மனையாட்டி யும்பொருளோ
ஆனை குதிரைதளம் அலங்காரந் தான்பொருளோ
சேனைமிகு பட்டணமும் சிறப்புமது தான்பொருளோ

என்ன பொருளென்று இடையுறீ ரெல்லோரும்
தென்னவரே மாய்கைதனைத் திறமென்று நம்புவரோ
காயந் தரியாது கணப்பொழுது நில்லாது
நேயந் தவறாது நிலைநின்றோர் தங்களுக்கு

மேகந் தருநிழலை மெய்யென் றிருப்பார்களோ
காகுத்தன் தன்செயலைக் காணாமல் கண்டுகொண்டு
பதையா திருப்பீர்காண் பாசத்தை நம்பாமல்
சதையு நரம்புஞ் சதிரமுங் கோழையுமாய்

ஊத்தை திரண்டு உருவாய்த் திரிந்ததிது
காத்தைப் பிடித்துக் கயறில்லாப் பம்பரம் போல்
நடையு முடையு நாகரிகப் பாவினையும்
தடையுங் கிறுமிவேகுஞ் சலமிகு னாத்தமுள்ள

மாயக் குரம்பையிது வஞ்சமிட்ட பொய்க்கூடு
காயக்க மேமிகுந்த காமக் குரோதமிது
ஒட்டுச் சுவரிதுகாண் ஓயாக் கவலையிது
விட்டுப் பிரியுமந்த விழுசுவரை நம்புவரோ

காரணங்கள் தான்முடிக்கக் கரியமால் வந்துதித்து
நாரணனார் வந்து நடத்துகின்றார் பாரதத்தை
யுகத்துக் குகம்பிறந்து ஒடுங்காத பேரையெல்லாம்
செகத்தோ டிருந்து செயம்பண்ணி இப்படியாய்

எத்தனையோ கோலம் எடுத்த அவதாரம்
கர்த்தனார் செயலைக் காண்பரி தென்னவே
வேதங்கள் நான்கும் விளங்குங்காண் சாத்திரமும்
ஆதலால் மாயனுக்கு அளவற்ற காலமல்லால்

அழிவது மில்லை ஆதிமூ லந்தானும்
தெளிவதே சித்தமென்றான் தீரன் சகாதேவன்
அப்பால் துரோபதையும் அடித்து விழுந்தலறி
மைப்பாவு மேனியற்கு வந்தவிதி மோசமென்ன

கற்புக்குலை யாமல்எந்தன் கற்பு நிலைநிறுத்தி
துற்புத்தி செய்தோரைச் சொல்லரிய பாழ்நரகில்
வைப்பித்த புண்ணியர்தான் மாளவந்த காரியமேன்
மெய்ப்பித்த பஞ்சவரை மேதினியில் விட்டோனே

தப்பித் தனிவழியே தான்போன ஞாயமென்ன
தெய்வமே ஞாயமிதோ செங்கண் ணெடுமாலே
ஐவர் சகாயர் ஆயரே அச்சுதரே
நாயகமே பஞ்சவர்க்கு நாளுந்துணை யாயிருந்து

தாயகமாய் நாளுஞ் சாங்கமாய் நின்றோனே
கணக்கும் புகழறிவரய்க் காசினியோர் தானறிய
எனக்குக்குறை வாராமல் ஏழைபங்கில் நின்றோனே
குன்றை யெடுத்துக் கோவதையைக் காத்தோனே

அய்யோ துணையெனக்கு ஆரினித்தா னிப்புவியில்
மெய்யோ எனைமறந்து விண்ணகத்தில் போவீரோ
நானோ துணையிழந்தேன் நாரணரே உம்மைவிட்டு
வானோர்கள் போற்றவுந்தான் வைகுண்டஞ் சேர்ந்தீரோ

கிளிமொழியா ளிவ்வசனங் கிலேசமாய்ச் சொல்லியழ
மொழிகுன்றிக் குந்தியம்மாள் முகத்தி லறைந்துகொண்டு
என்மருகா என்கோவே எல்லார்க்கு நாயகமே
தன்மருக்குந் தம்பியர்க்குஞ் சாங்கமாய் என்னாளும்

இம்மைதனி லேயிருந்து எங்களையுங் காத்தோனே
நன்மை செய்தகர்மம் நடுக்கா னகந்தனிலே
மாண்டிறந்து போன மகிமையென்ன காரணரே
வேண்டி வினைசெய்த விதிவசமோ இப்படியாய்

அந்தரத்தே இன்னதென்று ஆரு மறிந்திலையே
தந்திர வேதம் வரம்புத்தப்பிப் போனதுவோ
அண்டாம லாருக்கும் அச்சு நிலைபேர்ந்து
கொண்டால் கருவழிந்து குறைகடலுந் தான்சுவறி

ஆகாசம் பூமி அடுக்குலைந்து போனாலும்
வாகான நற்றவங்கள் வாதசந்து போனாலும்
இப்போ திகைக்கு மெம்பெருமாள் என்றழுதாள்
பிறப்பதுவும் மெய்யும் பிறப்பிழந்து இருப்பதுவும்

ரெண்டுந் தொழிலாய் நடத்துகின்ற புண்ணியனே
விண்டும் பலவுரையென் விளம்பே னொருவசனம்
என்றுகுந்த மாதேவி இத்தனையும் தான்புலம்பி
சென்று புகுந்தாள் செய்யமணி மண்டபத்தே

தம்பியருந் தன்மருமே தானே மனமிடைந்து
வெம்பி முசும்வாடி வேதநா ராயணர்தம்
சொல்லரிய தேகங் துவராகா புரிநகரில்
வெல்லரிய வேடர்சென்று விபரீதங்கள் செய்யாமல்

இப்போது சென்று எம்பெருமாள் பட்டணத்தில்
மெய்ப்பாகக் காருமென்று விடைகொடுத்தார் தன்மருமே
வீமன் விசையன் மிகுந்த சகாதேவன்
தாம நகுலனுடன் குத்துபரி சேனைதளம்

சிறப்பாகச் சேனையுடன் சீக்கிரத்தி லன்னேரம்
புறப்பட்டார் பூமி போரண்டந் தானடுங்க
நடந்தார் துவராகாபுரி நன்னகரந் தானோக்கி
கண்டார் வெகுதூரம் கண்டார் பெருநகரம்

விரைந்துநகர் புக்குமுன் வேடாங்கே தான்முடுகி
நிறைந்தார் விளைந்தார் நெடுமால்தன் பட்டணத்தை
பச்சைமால் தேவியர்கள் பதினாறா யிரந்தனையும்
இச்சையுடன் வேட ரெல்லாமுந் தான்பிடிக்க

வளைந்தார் மனையை மாயனார் தேவியரை
நுளைந்தே பிடிக்கவென்று நோக்கிநின்ற வேளையிலே
கங்குல்வந்து மூடிக் கதிரோன் மறைந்திருந்தான்
விடிந்தே அரமணையில் மெல்லிநல்லா ரெல்லோரும்
இடிந்து கரைந்து எம்பெருமா ளென்றழுதார்

## விருத்தம்

தேவிய ரழுத போது செங்கண்மால் தனக்குத் தோத்தி
பாவியள் வேடர் தானும் பங்கமே செய்யா வண்ணம்
ஓவிய ரிழி[1] போ லாகி ஓங்கியே வளர்ந்து தானும்
மேவியந் தரணி யி லேதான் வேகமாய் வந்து நின்றார்

தப்புடன் சங்கு தாளம் தாதர்போல் வேஷங் கொண்டு
இப்புவி தன்னில் வேட ரேங்கியே மறைந்து நிற்க
ஒப்புடன் தாதர் நாமம் ஓங்கியே சடையு மாகும்
மெய்ப்புடன் வந்தார் கண்டார் வேடரு மலைத்து நின்றார்

## நடை

அழுததோர் தேவியர்கள் ஆயிழைமா ரெல்லோரும்
தொழுது அபயமிட்டுத் சொன்னார்கள் தோத்திரங்கள்
அந்த மொழிகேட்டு ஆயனா ருத்திரமாய்
முந்த விருந்த முனியள் தபோதனர்போல்

ஆமென்று சிந்தித்தார் ஆயிழைமா ரப்போது
ஓமென்று அவ்வுருவும் உருமாறி யேஇருந்து
சடைமுடி யுடனே தான்வந்தார் வீதியிலே
படைகூடி காத்திருந்த பார்வேட ரெல்லோரும்

வீதிபோ யசந்து மெய்மறந்து தானிருந்தார்
சதிருள்ள பட்டணத்தைத் தான்கொள்ளை யாடவென்று
நெருங்கி வரும்பொழுது நிமிடத்தில் சன்மர்படை
கருங்கடல் போல்ச்சூழ்ந்து கைகலந்து தான்பொருத

துரத்தி அடித்துவிட்டுத் துன்பமற வேதிரும்பி
அரத்தியே சாத்தகியென் றானவரை முன்னடத்தி
வெற்றியுடன் சேனைதளம் வேகமுடன் மந்திரிமார்
அத்தி புரந்தனிலே அழைத்துவந்தார் அம்மானை!

---

1. ரிஷி

## விருத்தம்

மாயவ னுலகை யாண்டு வனத்தினி லிறந்தா ரென்றும்
நேயமாய் வேடர் வந்து நிலைமைகைக் கொள்வா ரென்று
தூயதோர் தன்மர் தானுஞ் சொலலிய விரலை முக்கில்
ஞாயமோ சிவனே யென்று நயந்துடல் சோர்ந்தி ருந்தார்

இப்பிறம் சேதி யென்ன என்றுதான் தம்பி மாரை
ஒப்புடன் அழைத்து முன்னே உண்மையே தென்று கேழ்க்க
அப்பிறம் இனிமே லென்ன அண்ணரே இந்த ஞாயம்
மெய்ப்புட னிவடம் விட்டு விரையவை குண்டஞ் சேர்வோம்

இளையவ ரின்னம் நீங்கள் இருந்துதான் புவன மீதில்
கிளைவழி யுடனுங் கூடிக் கிள்ளையள் மகுட மன்னர்
பழையவர் தமருந் தாயும் பாக்கியம் அளேக மெல்லாம்
குறைவற நிறைந்து வாழ்ந்து கவலையற் றிருங்க ளென்றார

### நடை

தன்ம ரிவைசொல்லத் தனஞ்செயனும் வீமனுமே
கன்மமோ வென்று கண்ணீர் மிகச்சொரிய
நகுலன் சகாதேவன் நாட்டமது வாட்டமுமாய்
மிகுகவலை யாகி விள்ளஎம லுள்ளுடைந்து

எங்களையும் விட்டு இனம்பிரிந்த மான்போலே
தங்குவது மெங்கே தரிப்பதுவு மெவ்விடங்காண்
நாங்களோ உம்மைவிட்டு நானிலத்தி லேயிருப்போம்
தீங்கொன்று மேதோ திருவுளமே அல்லாது

இருந்துமென்ன கோட்டை எடுப்பதுவு மீங்கேதான்
வருந்துவோம் நாங்கள் வாடுவோம் உம்மைவிட்டு
என்னமொழி சொல்லி எடுத்துரைத்தீ ரண்ணாவி
இன்ன மிதுவரையும் இனமறிந்து நின்றோமே

மாய்கை இதுவாழ்வு மாமாலந் தன்னைநம்பி
சாய்கை இதுவென்று சதமென்று தானிருந்தோம்
இந்த உயிர்தனக்கு ஈடேத்த மெப்போதான்
கந்த உடல்நடுக்குங் கசுமாலப் பாண்டமிது

நாறும் புழுக்கூடு நன்றிகெட்ட காயமிது
சோற்றுத் துருத்தி சுவருடைந்த பிண்டமிது
காத்துப் பொறாமல் கண்டொடுங்கும் பாவையிது
இடிகரையில் வாழ்மரம்போல் எண்ணமற்ற காயமிது

நெடிய மரமிதுகாண் நினைவில்லாத் தாசைமரம்
வேரில்லாக் கொத்தானை விழுசுவரை நம்புவரோ
தூரில்லாப் பொந்துமரம் சுட்டொடுங்குஞ் சாம்பலிது
அலைகடலிற் சம்பரன் ஆசையத்த பொக்கிசத்தை

நிலையில்லாக் கப்பலிதை நிச்சயமாய் நம்புவரோ
ஓடுகின்ற மரக்கலத்தை ஒன்பதுவாய்ப் புழுக்கூட்டை
போடுகின்ற தெவ்விடமோ பொருந்துமுயி ரெவ்வாறோ
இந்த உடலெடுத்து இவ்வுலக மேசதமாய்

சொந்தமெனத் தானிருக்கச் சுவந்திரமோ அண்ணாவி
இதுகரும மல்ல இறையோனே உன்னுடைய
பதும மலர்ப்பாதம் பணிவதுவே அல்லாமல்
அதுகரும மெங்களுக்கு அடவுகா ணிப்போது

வாது மொழியும் வாசகரே அண்ணாவி
நடக்கும் வகைதெரிந்து தாதரே நீர்தாமும்
அடக்கும் உபாயம் அவனிதனி லுண்டுபண்ணி
வைக்கும் உபாயம் வழங்குமென்றார் தம்பியர்கள்

மிக்கபுகழ் தம்பியர்கள் விளம்பும் மொழிகேட்டு
தக்கபுகழ் தன்மர் தம்பியள்மே லன்புவைத்து
மக்கள் மனுஷர் மகுடமுடி வேந்தருடன்
கூடி ஆலோசினைகள் குழாங்களுட னப்போது

நாடியதோர் செம்பொன் நல்லபரி சித்துவைத்து
வாழ்வீமன் புத்திரனை வாகாய் முடிசூட்டி
நாளும் முகூர்த்தம் நல்முகூர்த்தம் தான்கேட்டு
பட்டமுங் கட்டுதற்குப் பட்டணமுங் கோட்டைகளும்
தீட்டமுடன் வேடிக்கையாய்ச் செப்பனிட்டா ரம்மானை

ஆனை குதிரை அரசரோடு காவலர்கள்
சேனை ரதமன்னர் சீமை அடங்கலுமாய்
கணக்கின் படியாய்க் கணக்கெடுத்துத் தான்பார்த்து

இணக்கமா யுள்ளதெல்லாம் எடுத்தெழுதுஞ் சேகரமாய்
துகையேடு வாங்கித் துரைமகனைத் தானழைத்து
வகையாய்ப் பீமன் மகனை முடிசூட்டி
சிங்கா சனத்தில்வைத்துச் சேனைமன்னர் போற்றிசெய்ய

மங்காத செல்வம் வாழ்ந்திருக்க வாழியென்று
தந்திரமாய் வைத்துச் சந்தோஷ மாய்மகிழ்ந்து
விந்தையாய்ப் பீமன்மகன் வீதிவர வேணுமென்று
ஆனைமே லேற்றி அவனியெல்லாந் தானறிய

சேனை தளத்துடனே சிங்கார மாய்க்கூடி
பட்டணமுஞ் சுற்றிவரப் பாவாணர் கொண்டாட
சிட்டபரி பாலனெனத் தேவேந்திரன் போலாகி
வட்டக் குடைநிகழ்த்த வந்தான் பவனிவலம்

சிட்டமாய்ச் செங்கோல் தரித்துதென்றார் மன்னவர்கள்
துங்கரபி ராமனெனச் சொல்லுக்கரிச் சந்திரனென
சிங்கார மாகவந்து சிங்கா சனத்திருந்தான்
இருந்து சிலகாலம் இப்படியாய்ச் செங்கோல்தான்

பொருந்த நடத்துகின்ற புதல்வனையே தான்மகிழ்ந்து
நாளுங் கணித்து நாடுகளுந் தான்வணங்கி
ஆளும் புவியரசன் ஆண்பிள்ளையா மென்றுசொல்ல
நேச முடன்வாழ்ந்து வீற்றிருக்கு மந்நாளில்

தேசமதில் வாழுமொரு தெய்வப் பிராமணரில்
முன்னாளில் வேதியன்தான் முழுதுங் குடியிருந்தான்
பின்னா ளொருபார்ப்பான் பிறதேசம் விட்டுவந்தான்
இந்தப் பிராமணனை இருக்கஇடம் தாருமென்றான்

அந்த மனையில் அவனுக்கொரு புறத்தில்
விட்டுக் கொடுத்தான் வேதியனும் நல்லதென்றான்
கட்டுடன் வீடெங்குங் கட்டிக் குடியிருக்க
பார்ப்பானுஞ் சம்மதித்துப் பதியில் குடியிருக்க

நேர்ப்பாக அவ்விடத்தில் நிலம்பிளந்து மண்ணெடுக்க
வெட்டினான் மண்ணெடுத்து விரும்பிச் சுவரேத்தி
கட்டினான் வீடு கனத்த புதையலொன்று
மண்ணி லிருந்தெடுத்தான் மறையோனு மந்நேரம்

கண்ணில் கண்டபொருள் கறப்பமென்றே தானினைந்து
நமக்குத் தரியாது நம்மிடத்தில் சிக்காது
சுமக்கப் பழிநமக்குத் துன்பம்வரு மென்றேதான்
மனைநமக்குத் தந்த மனையாளன் தன்னதென்று

வினையொழிய வென்று வேதியனுந் தானோடி
அய்யரே வேதியரே அதிசயங்கள் கேட்பீரோ
துய்ய மனைகட்டத் துவங்கினதோர் மண்கிடங்கில்
கண்டேன் திரவியமும் கனகமணிப் பெட்டகத்தில்

கொண்டேகி வந்தேன்பார் குடத்திலப் பணந்தனையும்
உந்தன் பொருளிதுகாண் உத்தார்கள் தான்புதைத்து
சொந்த முனக்கென்று தோணுதுகாண் என்மனதில்
உன்மனையில் கண்டபொருள் உனக்கல்லால் வேறுமுண்டோ

தன்மனையில் வந்தபாவந் தன்னைவிட்டுப் போகாதே
ஆதலினா லுன்பொருளை அய்யரே வாங்குமென்றார்
வேதியனார் சொல்ல வேதியரு மேது சொல்வார்
அன்றுமக்கு நாமும் அன்பாக வீடுதந்தோம்

இன்றுமக்குத் தந்த இல்லிடத்தில் கண்டபொருள்
கண்டவர்க்கோ சும்மா காணா திருந்தவர்க்கோ
உண்டவர்க்கோ இன்பம் உறங்கினபேர்க் கென்னாகும்
வேண்டாங்காண் வேதியரே வீட்டில் கொடுபோகீர்

தீண்டாப் பொருள்தனையும் தீண்டுவரோ நல்லவர்கள்
போங்காணுஞ் சும்மா பொருள்தனையுங் கொண்டேதான்
வாங்கே னொருநாளும் மதியேன் மனந்தனிலே
என்று மறையோன் இவ்வசனஞ் சொல்லுவதே

நின்று பிராமணனும் நீதியோ வென்றுசொல்லி
பொருந்தாத காரியத்தைப் பொருந்தமென்று பேசகிறீர்
வருந்தாதா ரென்றும் வருந்துவரோ மாநிலத்தில்
உந்தன் மனையெனக்கு உபகார மாய்க்கொடுத்தீர்

சொந்தமெனக் கெப்படியாம் சொல்லுங்காண் வேதியரே
அடைமழையில் காகந்தனக் கன்னமிடங் கொடுத்தாற்போல்
கிடைபொருளை நானெடுக்கக் கிட்டாது வேதியரே
எந்தன் விதிப்பயனோ இவனூரி லும்மிடத்தில்

வந்த மதிமயக்கோ வழக்காய் முடிந்ததுகாண்
உன்சமத்தும் என்சமத்தும் ஊரறிய வேணுமென்று
பின்சமத்தி யாகப் புறப்பட்டார் மன்றேற
நெறியுடைய தன்மரிடம் நீதி விளங்கவென்று

பூசலிட்டுக் கொண்டு புண்ணியனார் தன்னிடத்தில்
ஊசலிட்டுச் சென்றார் உறுபூசல் தன்னுடனே
அந்தணர்கள் தன்மரிடம் அவரவர்கள் சொல்லுமென்றார்
மந்திரிமார் தன்னை வாவென் றருகழைத்து
தந்திரிமா ரெல்லாருஞ் சதிராகத் தான்கேட்டு

ஞாயம் நடுக்கேட்டு நமக்குரையு மென்றுரைத்தார்
தூய தன்மர்சொல்ல துரந்தரீக ரெல்லோரும்
அடுக்க இருந்து அவர்வழக்குக் கேழ்க்கலுற்றார்
தொடுக்கு மறையோர் தொடுத்தவரே சொல்லுமென்றார்

முடியி லிடைப்பட்டு வெகுதூரந் தானிருந்து
இவரிடத்தில் வந்து இருக்க இடங்கேட்டேன்
ஆமென்று கேட்டு அவரும் இடங்கொடுத்தார்
அவ்விடத்தில் மண்ணெடுத்து அளவாய்ச் சுவரேத்தி

இவ்விடத்தில் வீடு இதமாய் முடித்திருந்தேன்
மண்ணெடுத்த கேணியிலே மறைபொருளாய்த் தானிருந்து
கண்ணிடத்தி லேதெரிந்து கரகத்தில் பொன்னெடுத்தேன்
எடுத்தே னிவ்விடத்தில் எடுத்தவுடன் கொண்டேகி

கொடுத்தேன் பொருள்கையிலே கொள்ளே னெனவுரைத்தார்
அகுதி பரதேசியள்தான் அடுத்து குடியிருந்தால்
பகுதி பெறும்பிடியாய்ப் பண்ணுறா ரென்றுரைத்தார்
அந்த மொழிகேட்டு அவரைநீர் சொல்லுமென்றார்

யெந்தன் மனையில் இருக்க இடங்கொடுத்தேன்
இவ்விடத்தில் பொருள்தா னிருந்தெடுத்தா ராமாகில்
மதியில்லை[1] யோயிவர்க்கு வைத்திருந்து மக்களுட னுண்ணாமல்
கொண்டுவந்தால் வாங்குவனோ குற்றமென்ன சொல்லுமென்றார்

பண்டுமுன்னாள் வைத்திருந்த பழையமுத லானாலும்
தன்னிடத்தில் கண்டபொருள் தனக்கோ பிறர்தனக்கோ
என்னிடத்தில் கொண்டுவந்தால் எப்படிநான் வாங்குவது
என்றிருவர் சொல்ல என்றமொழி தான்கேட்டு

நன்றிவர்கள் சொல்லுமொழி நான்தெளிவ தெப்படியாம்
சொல்லுமறை யோர்வழக்குத் தோத்தாமல் மந்திரிமார்
செல்லும் வழக்கிவர்க்குத் தேறவுந்தான் மாட்டாமல்
நல்லதென்று தன்மரிடம் நவின்றார்கள் மந்திரிமார்

வல்லதொரு தன்மர் மறையோ ரிருவருக்கும்
துஞ்சாத ஞாயம் துலங்க துலங்கி உரைப்பதற்கு
அஞ்சாநாள் வாருமென்று அருளினார் அம்மானை

அடுத்தநாள் மூணாநாள் அதுகழிந்த நாலாநாள்
உடுத்த கரித்துணியும் உதாசீன வார்த்தைகளும்
அழுக்குச் சிறையும் அகந்தை இடும்புகளும்
ஒழுக்கமற்ற பேச்சுக்கும் ஊருட்டும் பிரட்டுடனே
மானம்வரம் பில்லாமல் வரம்பழிந்து நாணமற்று

---

1. ஒருசீர் மிகுதியாக உளது

தானதவ மில்லாமல் சண்டாள ஜென்மமுமாய்
ஈனம் இரக்கமின்றி இரவலர்க்கு மீயாமல்
ஊனுமில்லாப் பாவம் உறைந்த சடமாக
கால்மேலுந் தலைகீழாய்க் கலியன்வந்து தோன்றினனே

மேல்சாதி கீழும் கீழ்சாதி மேலாக
தாய்தலையி லேசிமையும் தகப்பன் குடைபிடிக்க
பாய்பரியின் மேலே பைங்கொடியைத் தானேத்தி
வந்தான் கலியனென்று வையகமெல் லாமுரைக்க

அந்தநாள்ச் சென்று அலைகதிரோன் வந்துதித்தான்
மத்தாநாள் அப்போது மறையோ ரிருபேரும்
சித்தமுட னேவழக்குத் தேறவென்று தன்மரிடம்
சொன்னபடி அஞ்சானாள் தோத்தமுடன் வந்துநின்றே

என்னகாண் வேதியரே இருவருட ஞாயம்
என்றுதன்மர் கேழ்க்க இருவருந் தர்க்கதமாய்
நின்று நடுத்தாயம் நீதியுடன் சொல்லுமென்றார்
எந்தன் மனையில் இவருக் கிடங்கொடுத்தேன்

எந்தன் புதையல் எடுத்தவன்தான் கொள்ளைகொண்டு
கொடுக்க மனஞ்சற்றும் குறியாமல் வார்த்தைசொல்லி
பிடிக்கிறான் சண்டையிவன் பேசவுந்தான் ஞாயமுண்டோ
உன்சேதி என்னவென்று உகந்துதன்மர் தான்கேட்க்க

என்சேதி என்னசொல்வேன் எடுத்த புதையலைத்தான்
எடுப்பார் கொடுப்பதுண்டோ எத்தனைதான் சொன்னாலும்
குடியிருந்தே னானால் குவலத்தி லேயிவர்க்கு
குடியிருப்பில் கண்டபொருள் கூடுந் துகையளெல்லாம்

குடுத்து குடியிருக்க வந்தேனோ கொத்தவரே
அடுத்துக் குடியிருக்க வந்தேனோ அய்யனிடம்
நெட்டூரம் பண்ணுகிறான் நீதியில்லை யோயிவடம்
எட்டு ஏறிய இழுக்கிறான் சந்தியிலே

வேதியன்தான் இவ்வசனம் விளம்புவதைத் தான்கேட்டு
இனியென் ஞாயம் எடுத்துரைக்க லாவதென்ன
அநியாய மிப்போ அந்தணர்கள் தன்வழக்கு
கண்டோம் அதிசயந்தான் கலிய னுடகீர்த்தி
விண்டோம் புவனமினி என்றுசொல்லித் தன்மருமே

## விருத்தம்

அந்தணர் வழக்கும் கண்டோம் அடிக்கடி பிரட்டுங் கண்டோம்
இந்தமா நிலத்தில் நாமும் இருப்பதில் கரும மல்ல
அந்தநா ளாச்சுக் காலம் ஆண்டுதான் முடித்து முற்றும்
வந்தநாள் வந்து தானால் வழக்கென்ன வழக்கு ஞாயம்

பஞ்சமா பாதகங்கள் கொண்டு பாரினில் கலியன் வந்தான்
என்செய்வோம் தம்பி மாரே இப்படி உலகு தன்னில்
முன்செய்த ஞாயம் போலே முத்துமோ இனிமேல் நம்மால்
பஞ்சவ ரென்று சொன்னால் பாவினை முடியா தென்றே

ஆண்டவர் நடந்தா ரிந்த அதிசயம் வருமென் றெண்ணி
கீண்டவ ரொழிந்து பொன்றிச் செயமதி சயமுங் கண்டோம்
பாண்டவர் புதல்வர் தாமும் பாரினி லிருந்தோ மானால்
மூண்டதோர் கலிவி டாது முடிந்தது நமக்கே காலம்

வாழ்ந்துவா பரயு கத்தில் மனுநெறி முற்றும் நீதி
தாழ்ந்தது கலியு கத்தில் தன்மரும் பேரும் பொய்யாம்
சூழ்ந்ததோர் புவியை விட்டு அகலுவோம் அகலு வோமே !

நாரணர் நம்மை விட்டு நடந்துவை குண்டஞ் சேர்ந்தார்
காரணம் முடிந்த கோலம் கலியுகம் வருமென் றெண்ணி
ஆரணந் தன்னை யீன்ற அச்சுதன் பச்சை மால்தான்
பூரணம் கண்ட மார்க்கம் போவது கருமந் தானே !

வானவ ரிமையோர் மற்றும் மாதவர் முனிவர் தேவர்
கானவர் ரிஷியள் வேத தபோதனர்க் குத்தார் செய்ய
ஞானமு மினிய கீர்த்தி ராகமு மிசைகள் கூவ
மேனகை பணிகள் மாற வெகுசுக மவடந் தானே

வீமனே விசையர் தம்பி மேதினி தன்னி லுங்கள்
நேமமும் பிலமும் வாங்கி நெடியமால் போனா ரென்றே
சாமமாய் வேடர் முன்போய் சமரினில் புறமும் காட்டி
தாமினி உலகில் வாழ்க நமக்கினி சகியா தென்றே

நடை

தம்பிமார்கள் நால்வருடன் தன்மரு மிவ்வசனம்
வெம்பிக் கலியன் மேதினியில் மேன்மையதாம்
தெரிவுடன் போக நினைத்தநின வுள்ளதெல்லாம்
குறியுடனே சொல்லிக் கோபாலர் சந்நதிக்கு

பயணம் நாமென்று பரிமளித்து நால்வருக்கும்
சுயசன மான சுத்தத் தமர்தனக்கும்
மன்னர் மகுடமுடி வர்த்தனர்க ளுள்ளோர்க்கும்
தென்னம் பயணமென்று சீமையெங்குஞ் சொல்லுமென்றார்

சீட்டெழுதி விட்டார்கள் திசையிலுள்ள மன்னவர்க்கு
எட்டெழுத்தை வாசித்து எல்லோரும் தான்கூடி
என்ன விதிவசமோ என்றுமன்ன ரெல்லோரும்
ஆண்டவ னேதோ அழைத்த பணிவிடைதான்

நீண்ட புகழ்பெற்ற நிமலனே சொல்லுமென்றார்
அப்போது தன்மர் அரசர் கனைநோக்கி
இப்போ கொடுங்கலியன் இயல்புக் குறைந்துவிட்டான்
இனிமேல் கலியுகத்தில் இருக்கத்தான் முத்தாது

தனியே வனவாசம் சஞ்சரிக்க மெத்தநன்று
ஆனதினா லுங்களைநாம் அருகே வரவழைத்தோம்
மானமுடன் நீங்கள் மரபுதப்பிப் போகாமல்
கால மறிந்து காசினிக்குள் நீங்களுந்தான்

காலத்துக் கேற்ற கணக்குப் படியாக
தெரிந்து நடந்துகொள்ளும் நீடுசெங்கோல் தவறாமல்
பிரிந்தொருத்தர் போகாமல் பிள்ளைசிறு பாலருடன்
கலந்து செகமுழுதும் கட்டாக நீங்களுந்தான்

தூங்கப் பரீசித்துவுக்குத் துரைத்தனமும் தான்தரித்து
வைக்கிறோம் நாங்கள் மகுட முடிதரித்து
நீக்கிறோ மென்று திண்ணமாய்ச் சொல்லுமென்றார்
நீக்கிறோ மும்மை நிகழ்ந்தும்பரீ சித்துவைத்தான்

வைக்கிறோம் பாரில் வணங்குகிறோ முள்ளபடி
நீங்க ளிருந்து நெடுங்கான கம்புகுந்தால்
நாங்க ளிருந்து நடப்பதென்ன காரணந்தான்
எல்லோரும் வாரோம் இந்திரபதி சென்றாலும்

பல்பேரும் வந்து பணிவோமே அல்லாமல்
அரைநாழி கைவிட்டு அரசனே நாங்களிரோம்
துரையே துரையரசே துரந்தரீக மன்னவரே
என்று மன்னர் சொல்லி இரைந்தலறி ஓலமிட

அன்றுதன்ம ராசன் அவர்களைத் தானமத்தி
ஒன்றுக்கும் அஞ்சாமல் உலகளந்தான் தன்னருளால்
கன்றுக் கிரங்குகின்ற கத்தாப் பசுப்போலே
நம்மை யனுதினமும் நாள்தோறுங் காத்தாப்போல்

செம்மையுடன் செங்கோல் செலுத்தும்பரீ சித்துவுக்கு
ஆதரவாய்த் தானிருந்து அரசு நிலைநிறுத்தி
வெய்யோனும் மண்ணும் விண்ணுமுள்ள காலமெல்லாம்
துய்யோர் மறையோர் துதித்துப் புகழ்ந்தேத்தி

இருமென்று தன்மர் எல்லோரும் வாருமென்று
குருமுன் னிலையாகக் கொத்தவரு மன்னேரம்
முடிசூட்டி வைத்தார்கள் முடிமகுடம் போற்றிசெய்ய
படியேழும் போற்றப் பார்மன்னர் கொண்டாட

தானிந்தச் செங்கோல் தரித்தார் முடிமகுடம்
கோனிவனந் தானெனவே கொலுவி லலங்கரித்து
தானிவன் தானென்று சாத்தி மகுடமதை
வைத்து முடிசூட்டி மன்னருந்தான் காத்திருக்க

கொற்றக் குடைநெருங்கக் கோலேந்திரன் சூழ்ந்திருக்க
சத்தக் கடல்போலே தளங்கள் நெருங்கிநிற்க
கட்டும் பரியுடைய காவலர்கள் தானிருக்க
வெட்டும் பரிவீரர் வீரவாள் கைபிடித்து

தத்து பரியேறித் தாந்திரிகர் வந்துநிற்க
சுத்து ரதமேறித் துரந்தரிகர் வந்துநிற்க
தூறுமத வாரணமேல் துரைமக்கள் வந்துநிற்க
கூறுந் தமிழ்வாணர் கொண்டாடி வந்துநிற்க

தம்பூரு வீணை சரமண் டலமுழங்க
கிம்புருதான் கின்னரந்தான் கீதங்கள் பாடிவர
சங்கீத ராகமிசை தாளமொடு மத்தளமும்
சங்கீத ராகசின்னம் எக்காளம் பூரிகையும்

நவுரியுடன் சேகண்டி நகரிசங்கந் தான்முழங்க
பவுரியமாய்ப் பேரிகையும் பலதிக்குந்தான் முழங்க
சேனை தளமுஞ் சிறப்பாகச் சூழ்ந்துவர
ஆனை பரிதளமும் அணியணியாய்ச் சூழ்ந்துவர

சிங்கா சனச்சிறப்பும் சேனைமன்னர் தன்சிறப்பும்
துங்கன்பரி சித்துடைய துரைபோ வதுசிறப்பும்
கணங்கள் களிகூர்ந்து கண்டார்தன்மர் தம்பியரும்
எங்கள் புவிகாக்கும் இவனோ புவிராசன்

ஆனா லினிமேல் சஞ்சலங்கள் ஒன்றுமில்லை
போனாலும் நம்முடைய புவியிவனே ஆள்வனென்று
செலுத்துவான் செங்கோல் திருமா லருளாலே
அலுத்தயர்ந்து தானிருந்து ஆலோ சினையளெல்லாம்

இன்றைக்குத் தீர்ந்தோம் இனிமேல் கிலேசமில்லை
குன்றைக் குடைகவிழ்த்த கோபாலர் தன்னிடத்தில்
போகலா மென்று பூரித்துப் பஞ்சவர்கள்
போகலாம் நன்றாய் இனிமேல் மயங்காமல்

என்றுபரீ சித்துவையும் இங்கோவா என்றழைத்து
ஒன்று முறையாமல் உலகாள்வாய் என்னரசை
நாங்கள் வைகுண்டமதில் நடக்க வழிகாட்டி
போங்களென்று சொல்லும் புண்ணியரே நீர்தாமும்

மனது உடையாமல் வாழ்த்தி மிகமகிழ்ந்து
எனது மனங்குளிர இன்பமுடன் சொல்லுமென்றார்
விம்மல் மிகுந்து வெகுண்டுபரீ சித்துவும்தான்
செம்மல் மலர்விழியால் திரண்டுதெண்ணீர் தானோட

அய்யரே என்னைவிட்டு ஐவருந்தான் போனாக்கால்
உய்யவோ நானும் உடைந்திடைந்து வாடுவேனோ
விட்டுப் பிரிந்தீரால் விளம்புவனோ யான்பாவி
மட்டுப் படாச்செல்வம் வாழ்வு தனையிழந்து

என்னைத் தனியேவைத்து ஏகினீ ராமாகில்
முன்னைப் பயனோ முடிந்த விதிப்பயனோ
தந்தையரைப் பெற்றவர்கள் தாரணியை யாண்டிருந்து
விந்தையாய் இந்த மேதினியை விட்டகன்று

நடந்து செடத்தோடே நாம்போரோ மென்றுசொன்னீர்
துடந்து வருவேன்நான் தூரநீர் போனாலும்
கண்டிருக்க நானும் காவலரே போறோமென்றால்
விண்டிருக்கப் போமோ வித்தகரே என்னாலே

சடத்தையிங்கே போட்டுத் தப்பிஉயிர் போனாலும்
சடத்துக் குள்ளதெல்லாம் தான்கருமம் தான்முடித்து
மறந்திருப்பேன் கண்டீர் மானிலத்தோர் புத்திசொல்ல
இவடத்தில் செடமொழிந்தால் எனக்குக் கிலேசமில்லை

உயிரோடே நாம்போறோம் உலகாளு மென்றுசொன்னீர்
தயிரோ நீர்பிரிந்த தன்மைபோ வாவேனே
ஊரிருக்க நானிருக்க உத்தசனம் தன்னிலுள்ள
நேரிருக்க நீர்போற பேச்சறியே னய்யாவே

எந்தவித மென்று எனக்குவகை சொல்லுமிப்போ
அந்த விஷயம் அரியதன்மர் தான்கேட்டு
மைந்தன் மகன்தன்னை மலையாமல் வார்த்தைசொல்லி
கந்த மலர்க்கையினால் கட்டி உறவணைத்து

முகந்து மடியில்வைத்து முதுகு தனைத்தடவி
சுகந்த மணிந்து சோபமிகத் தான்தீர்த்து
மகன்தன் குழந்தை மனதுவர வார்த்தைசொல்லி
அமத்தி இருமென்று அரவணைத்துக் கொண்டாடி

சமத்தன்பரீ சித்துவுந்தான் சாந்தமாய் நல்லதென்று
சொல்லுமென்று நல்வசனம் செப்பினார் அம்மானை
மத்துமுள்ள மன்னருக்கும் மகுடமுடி வேந்தருக்கும்
புத்தி யுடன்சொல்லிப் புகுந்தார் மனையி(லேதான்)

தாயா ரிருக்குமந்த தனிமாளி கைநோக்கி
ஆயாளிருக்குமந்த ஆசனத்தின் முன்னேகி
விழுந்து நமஸ்கரித்து வேதியரும் தம்பியரும்
சூழவே மைந்தர்தமைந் துய்ய திருக்கையால்

தானே மொழிபேசித் தன்மருந் தம்பியரும்
தாயே சரணம் சலிப்பொன்று மில்லாமல்
ஆயேநீ ரெங்களுக்கு அன்புடனே இன்பமதாய்
மாயோ னிடந்தனிலேற வைகுண்டஞ் சேர்ந்திருக்க

நீரேகு மென்று நெத்தியிலே நீறணிந்து
சந்தோஷ மாகத் தானனுப்ப வேணுமென்று
என்தாயே வேறெயொன்று எண்ணாம லன்புடனே
அனுப்பும்நீ ரென்றுசொல்லி ஐவருந் தான்கேழ்க்க

சனுப்பெரிய தாயாரும் சம்பி முகம்வாடி
எனைப்பிரிந்து மக்காள் என்னைத்தா னிங்குவிட்டு
நடப்பதுக்கோ வந்து நன்றா யுபசரித்தீர்
நரைபத்தி நானும் நரைத்து உடல்தளர்ந்து
கூனி விழிமயங்கிக் கோலூன்றி யேதிரியில்

வானீ ரொழுகி வயசுஞ் சரியாகி
உடலுந் தளர்ந்துமொரு உள்ளுயிருந் தான்குறைந்து
படரு மிருமல்வெகு பாசத் திளைப்புடனே
முகமுஞ் சிறுத்து மெந்தன் முழந்தாள் பிடிப்பாகி

சுகமுஞ் சுவையுமறந்து தோற்றமது வேறாகி
உள்ளுடைந்து மேனி உடலும் பசையிழந்து
வெண்ணுடலு மாகி மெய்யு மிகத்தளர்ந்து
ஆக்கை குலைந்துமிப்போ அவதி வரும்நாளில்

தீய்க்கடனும் நீர்க்கடனும் செய்து முடியாமல்
போறமென்றீர் புண்ணியரே-நீங்கள் புத்திரரோ மித்திரரோ
வாறமென்று மக்களுடன் மண்ணில் விழுந்தழுதாள்
சிந்தை மயங்காமல் சிறியோர்பெரி யோராகி

ஆகமட்டும் தான்வளர்த்த அன்னையல்லோ யேந்திழையும்
சாகவிட்டுப் போகச் சம்மதியோ உங்களுக்கு
அந்தநா ளெந்தன் அன்னை பிதாவிடத்தில்
குந்தமா தேவியென்று குழந்தையாய் நானிருந்தேன்

சொல்லரிய வேதத் துருவாச மாமுனிவன்
வெல்லரிய குந்திபுரம் மீதிலே வந்தளவில்
எங்களய்யா கண்டு இருமென்று ஆதரித்தார்
அங்கே அவர்தங்கி அமர்ந்திருக்கும் நாளையிலே

அஞ்சு வயதான ஆரணங்கு கையாலே
மிஞ்சு மொருசமையல் விதமாகத் தான்முடித்து
அன்னம் படைத்தால் அமுதுகொள்வோம் கையாலே
என்னவே சொன்னளவில் எங்களப்பா யெந்தனையும்

அவர்க்குப் பணிவிடைசெய் அம்மா வெனவுரைத்தார்
இவர்க்கு மனதுவர யானு மிளையாமல்
அன்புடனே நான்சமைத்து அமுது படைத்துவைத்தேன்
இன்பமுடனே பசியாறி ஏகியதோர் நாளையிலே

சந்தோசம் வந்துமுனி தனித்து எனையழைத்து
மந்திர முரைத்து மகிழ்ந்துரைத்தா ரெந்தனுக்கு
வேத முனிசொன்ன வித்தைதனை வைத்திருந்தேன்
நீதமுள்ள பாண்டவர்தான் நிச்சயதாம் பூலமிட்டு

கண்ணாலஞ் செய்தார் கருத்துடனே உண்மைசொன்னார்
மண்ணாள நீங்கள் வருவதற்கு மார்க்கமதாய்
உங்களய்யா தம்மிடத்தில் உண்மைசொல்லி நான்கேழ்க்க
அங்கவர்தான் சொன்னதொரு அன்பான மந்திரந்தான்

வேண்டத் தவமிருந்து மேதினியில் புத்திரரை
ஆண்டியுட சொல்படிக்கு அன்பாக உங்களையும்
ஈன்று முலைகொடுத்து எப்போதும் வாழுமென்றார்
தோன்றுமொரு மந்திரமும் சொல்லு முறைமுறையாய்

அப்படியே தப்பாமல் அவர்சொல்லை மீறாமல்
இப்படியே உங்களைநான் ஈன்றெடுத்துக் காப்பாற்றி
தாயாதிக் காரர் சதிகேடர் சத்தியத்தில்
மாயாதே உங்களையும் வளர்த்தேனிதுவரையும்

என்னைவிட்டுப் போக எழுந்துதோ உங்கள்மனம்
பிள்ளையில் லாத பெருமலடி போலானேன்
கிள்ளையில்லார் போலக் கிலேசமுற்று வாடுவனோ
குந்திமைந்தர் ஐவரென்று குவலயமெல் லாமறிய

முந்தித் தவங்கிடந்து முன்னூறு நாள்சுமந்து
பெற்றெடுத்த தாய்வயற்றில் பெருந்தணலைத் தான்மூட்டி
வைத்தடித்துப் போறமென்று வாய்வீணும் பேசுவரோ
ஈன்றெடுத்த என்வயது யெரியவேர என்னிடத்தில்

தோன்ற வெனக்குத் துயர்வருத்த வந்தீரோ
மக்களல்ல வோயெனக்கு மாத்தான்போல் வந்தீரோ
பக்கமுள்ள பேருதவி பண்ணுவரோ யெந்தனுக்கு
தன்மரே விமா சகாதேவா தம்பியரே

நன்மை யிதுதானோ நகுலா அருச்சுனரே
இன்மைதனில் பாவம் என்னளவு வந்ததுவோ
சென்ன மெடுத்தேன் சிரிப்பார்க்கு உள்ளானேன்
இந்த விதிவசந்தான் என்தலையி லேஅயன்தான்

மைந்த ரில்லையென்று வகுத்தெழுதி விட்டானோ
அருமையுடன் பெற்றெடுத்த ஐவரே தம்பியரே
பெருமையோ உங்களுக்குப் பேசவந்த காரியந்தான்
இத்தனையுஞ் சொல்லி இரைந்தழுதாள் குந்தியம்மாள்

கர்த்தனையே நினைந்தழுதாள் கண்ணீர்க ளாறோட
கண்ணீர் துடைத்துஅவர் காலிலே தான்விழுந்து
தண்ணீர் தனைவாங்கி தாய்முகத்தை யேதுடைத்து
எந்தனுட மாதாவே எங்களையு மீடேற

வந்த கலிதன்னில் மாயாம லெங்களையும்
சத்திய வாண்மை தவறாமல் நீ காத்து
நித்திய மிங்கே நிணிலத்தில் தானிருந்தால்
புத்தி கலங்கிப் பொறிகலங்கி மெய்யாகி

பத்தி கலங்கிப் பஞ்சவர்கள் கொஞ்சமதாய்
மெய்வார்த்தை சொல்லி விரதம் பிடித்தவர்கள்
பொய்வார்த்தை சொல்லிப் புலையராய் மாநிலத்தில்
சிரீக்க உடம்பெடுத்துத் திரியாம லெங்களுக்கு

விரிக்கும் பரலோகம் மெய்யுடனே தான்சேர
துதிக்கும் படியாய்த் துயாமுற்று நீர்தாமும்
விதிக்கும் படியாய் விளம்புவீர் மாதாவே
உனக்குப் பரீசித்து உகந்தபிள்ளை எங்களைப்போல்

தனக்குத்தான் வேணுமென்று சவுபாக்கி யத்துடனே
அன்னசுத்த மெல்லாம் அருகிருந்து போற்றாமல்
சொன்னபடி கேழ்க்கத் துரைமக்கள் தானிருக்க
ஆனா லுனக்கு அச்சுதனார் தன்பாதம்

வாணா காமுடிந்து வரும்போது தாரணரும்
நாங்களும் கூட நடந்தெரே வந்தணைந்து
பாங்குடனே வைகுண்ட பதியிலே நீரிருக்க
முன்போய் நாங்கள் முத்துத்தன தாயிருந்து

அன்னே யிருப்போம் அழவெண்டாந் தாயேநீர்
தாயே தவங்குலைந்து தவங்கெட்டுப் போகாமல்
நீயே துணையாக நேசமுடன் புத்திசொல்லி
கர்மம் கலியுகத்தைக் கடந்து கரையேறி

தன்மம் தவறாமல் தாயே சலியாமல்
அக்காலம் சென்று அழைக்கவந்த காலனிடம்
சிக்காமல் நீரும் சிந்தை மகிழ்ந்தருள்வீர்
இறப்பதுவும் மெய்யாகும் இருப்பதுவும் பொய்யாகும்

சிறப்பிதுகாண் மாதாவே செல்வர் தனையனுப்பும்
ஆகாசம் பூமி அந்தர முள்ளளவும்
போகாது தர்மம் புகழும் பெரிதாகும்
எனக்கும் என்தம்பியர்க்கும் இவடமு மென்மேலும்

உனக்கு மிருக்கும் உதவியோ நாங்களுந்தான்
இடம்பிடித்து அங்கே இல்லிடமும் தான்சமைத்து
உடம்படிக்கை பண்ணி உலகளந்தான் தன்னிடத்தில்
வீத்திருக்க வேண்டி விரும்பி யனுப்பிவிடும்

நேத்திருந்தா ரின்றிருக்க நிச்சயமில் லாதவுடல்
சதமல்ல வாழ்வு சதமே அவடமுமாய்
நிதமுஞ் சிவபூசை நேரறிவு தப்பாமல்
அவடஞ் சதமென்று ஆத்துமத்தை சுத்திபண்ணி

இவடஞ் சதமல்ல எங்களையும் தானனுப்பும்
மாதாவே தாயே மனங்கள் சலியாமல்
நீர்தா னனுப்புமென்று நீதியுடன் பாதமதில்
விழுந்தார் சரணமென்று மெய்மகிழ்ந்து தாயாரும்

நீறு தரித்து நெடியோன் தனைநினைந்து
வேறுவினை வாராமல் வேதநா ராயணரே
காருமென்று வாழ்த்தி கைநீறு தானணிந்து
சேருமுந்தன் பாதம் திருமாலே ஐவரையும்

என்றுகுந்தி மாதேவி இன்பமுடன் தானனுப்பி
மன்றுபுகழ் காந்தாரி மனைநோக்கி யேநடந்தார்
புகுந்தா ரிவர்கள் புதியமணி மண்டபத்தில்
கண்டா ரடிபணிந்தார் காந்தாரி யம்மனையும்

கண்டமைந்தர் ஐவரையும் கட்டி யுறவணைத்து
மைந்தருக்கு நல்ல வார்த்தைஉப சாரமுடன்
அய்ந்தரும்பொறா ளிருந்து ஐவரையுங் கொண்டாடி
சிந்தை மகிழ்ந்துருகி தேன்மொழியாள் தானிருக்க

அந்த மொழிதெரிந்து ஐவருந்தான் மார்க்கமதாய்
என்தாயே மாதாவே இப்போது எங்களையும்
சந்தோஷ மாகத் தானனுப்ப வேணுமிதோ
கலியன் பிறந்தான் காரணமா யிங்குவந்தான்

சலியாம லெங்களையும் தானே அனுப்பிவிடும்
வைகுண்டம் சேர்வதற்கு வாழ்த்தி விடைதாரும்
கைகொண்டா றத்துவும் கலியினால் இல்லாமல்
என்றுதன்மர் கேழ்க்க ஏங்கியே காந்தாரி

ஒன்று முரையாமல் ஊசலிட்டுப் பேசாமல்
என்னிடத்தில் நீங்கள் ஏதுக்கு வந்தீர்காண்
உன்னிடத்தே நம்பி உகந்ததுணை யென்றிருந்தேன்
மாபாவி கிட்ட மைந்தரே வந்தீர்காண்

பூபாலர் ஐவர் போதுமென்று நானிருந்தேன்
நூத்தொருவர் மாண்டு நொந்திடைந்து மண்மீதில்
காத்திருந்து நானும் காலம் முடியுமட்டும்
நீங்கள் துணையென்று நீணிலத்தில் நானிருக்க

நாங்களும் போறமென்று நன்றாய்ப் பயணஞ்சொன்னீர்
முன்செய்த தீவினையோ மூவர்கள் செய்ததுவோ
பின்செய்த தீவினையோ பெருமாள்தன் கற்பினையோ
அந்தமைந்தர் நூற்றொருவர் அரசழிந்து போனார்கள்

ஆமென்று நம்பி ஐவரையும் உண்டெனவே
நாமொன்று தானினைக்க நடுநின்றான் பேதமதாய்
தாமே முடிந்தால் தம்பியரே யேதுசோல்வோம்
நானேது செய்வேன் நாயகரே தம்பியரே
நாளும் சரியாச்சே நடையுடையும் வேறாச்சே

வாழும் புவிவிட்டு வருவதுவும் அங்காச்சே
போங்கால மோஎனக்குப் புத்திரரு மில்லாமல்
ஏகினீ ரானா லெந்தனக்கு வேறுதுணை
ஆகிலுந்தான் காணேன் ஐவரே யென்றழுதாள்

பெத்தும் பெறாமல் பெறவழியே போனேனான்
சத்து மிரங்காமல் தன்மரே போறமென்றீர்
மாளக் கொடுத்த மனச்சரிப்பு நீர்தீர்த்தீர்
ஆடிக் குழிதனிலே அழுந்தவிட்டுப் போவீரோ !

பக்கத் துணையுமில்ல பரிந்தழுசப் பிள்ளையில்லை
துக்கத் துடனிருக்கச் சொல்லிவிட்டுப் போவீரோ
ஆரா ரிருந்தாலும் ஆனைகட்டி வாழ்ந்தாலும்
தாராரும் ஐவரைப்போல் சகாயமெனக் குண்டாமோ

செய்யச் சடங்குந்தீர ஈக்கடலுந் நீர்க்கடனும்
கையும் கடனும் கணக்கும் கழியாமல்
போக வழிகேட்டீர் புத்திரரே எந்தனுக்கு
யோசினையள் சொல்லெனக்கு உத்த விசனமதாய்

வாசனைசெய் தன்மரேநீர் வசனம் உரையும் என்றாள்
அந்த மொழிகேட்டு அன்புடனே தன்மருந்தான்
வந்தவழி சொல்லுகிறேன் மாதாவே நீர்கேளீர்
என்னுடைய பிறவி எத்தநொரு நூற்றுவரும்

நன்னரி லச்சாரீ மகுடமன்ன ரெல்லோரும்
உத்ததொரு மைத்துனனும் உடன்பிறந்தார் சுற்றமுதல்
பற்றறவே கொண்டு பாராண்ட நான்பாவி
அன்று முகிந்துதுகாண் அவர்களுடன் நான்போக

வென்று மீதுகாலம் விதியும் விதிவசமாய்
காலஞ் சரியாகிக் கலியனும் வந்துதித்தான்
கோலஞ் சமைந்திருந்து கூத்துஞ் சரியாச்சே
இனிமேல் கலியுகத்தில் இருந்தேனே யாமாகில்

அநியாய மேலாகும் அகந்தைமிக உண்டாகும்
இடும்பு கொலைகளவு ஏராள மாகிவிடும்
நீடும் புவியிலுள்ள நீதி நடவாது
அந்தத் துவாபரத்தில் அநேகந் தயவுதன்மை

இந்தக் கலியுகத்தில் ஏறாது தானதவம்
நன்றி செய்வோமென்றால் நமக்கறிவு வாராது
குன்றிவிடும் புத்தி கூறுங் கலிகாலம்
ஆனதினால் தாயே அடியேன் பயந்துவந்தேன்

தான தவமிழந்து தன்மரென்ற பேர்போகும்
பேருந் தவமும் பெருமையுந்தான் போகாமல்
காருமென்று தாயே கற்புநிலை பொய்யாமல்
உன்தனக்கு நல்ல உதவிசெய்த பாலகன்தான்

மைந்த னபிமன்மகன் பரீசித்து தன்னுடனே
சேந்த துரைமக்கள் சேனை தனத்துடனே
இருக்கிறா ருந்தனக்கு ஏவல்செய்ய வேண்டியபேர்
உருக்கமாய் எங்களைநீ ஒன்றும் மறையாமல்

வாக்குத் தளம்பாமல் மனதுதடு மாறாமல்
நோக்குமெங்கள் பேரில் நோகாமல் நல்வசனம்
சொல்லி யனுப்புந் துரோபதையே எங்களையும்
மெல்லியரே தாயே விடைதாரு மென்றுரைத்தார்

ஐவருந் தான்கேழ்க்க ஆனதொரு காந்தாரி
விடைவாங்கி ஐவருந்தான் விழுந்து நமஸ்கரித்து
அடைவோங்காண் வைகுண்டம் அச்சுதனார் தம்மிடத்தே
வென்று கலியுகத்தை விட்டு வெளியில்வந்தோம்

இன்று பிழைத்தோம் இனிமேல் கிலேசமில்லை
நமக்குக் கிலேசமில்லை நடப்போமென் றுதுணிந்து
சுமக்குஞ் சுமைவிட்டுத் துன்பமெல்லாந் தான்கழித்து
கேட்ட வரந்தருவாய் கிருஷ்ணா உனக்கபயம்

நாட்டமுடன் நாங்கள் நல்ல வழியறிந்து
வாட்டமுடன் வாரத்துக்கு மாயவனே நீர்துணையாய்
தேட்டமுடன் வாரதுக்குத் திருவுளமே காப்பாகும்
வழித்துணையாய் நில்லும் மாலே சரணமென்று

களித்து மனங்கிளர்ந்து கண்ணர் தனைநோக்கி
நாதத்திசை யும்பார்த்து நமஸ்கரித்து நன்றாக
தோத்திரங்கள் சொல்லி துணிந்தே நடக்கலுற்றார்

**விருத்தம்**

மாத்திரைப் போதா னாலும் மாயனை மறந்து பாரில்
கோத்திரத் துடனே கூடி குலாவுதல் நினையோம் நாங்கள்
பாத்திர மறிந்து வேத பரகதி சொல்ல வாறோம்
சூத்திரத் துடனே வந்து துணைசெய்வாய் கரிய மாலே

நாடி நடந்து வாரோம் நகரும் பதிவிட் டேகி
கூடி நடந்து வழியேதான் குறித்து திசையைத் தானோக்கி
வாடி யிடைந்து மறுகாமல் மனமே தானாய் உளமகிழ்ந்து
தேடி திகைத்துத் திரியாமல் செலவே நடத்தும் திருமாலே !

சித்தன் போக்கு சிவன்போக்கு (சீவன் போக்கின்) போலாகி
மத்தன் போக்கும் மதம்போக்கும் வானத் திருந்த மழைபோக்கும்
கத்தன் போக்குங் கானகங்கள் கண்டார் விண்டார் கொண்டாரே
சத்தம் போக்கும் இனிப்பேசோம் சமய மிதுவா கோபாலா !

சரணம் சரணம் கோபாலா சாமி சரணம் தருவாயே
காரணம் பொறியின் புலன்குணங்கள் காமக் குரோத மணுகாமல்
திரண மதுவே செடமாக திரவி யதுவே பெரிய?
மரண மறியா துடலாகி வந்தாட் கொள்ள வருவாயே!

வழியில் பயங்கள் தடையளற வந்து முனதோ விக்கினங்கள்
தெரியப் படுத்தி அடியார்கள் திகைத்து மலைத்து நில்லாமல்
பணியள் வினைபள் அணுகாமல் பால்போ லுடம்பு பூரணமாய்
வெளியி லறிவு வெளியாகி வெளியாய் வருவாய் பெருமாளே!

கருத்தைப் பொருளைத் திறப்படுத்திக் கனகச் சடையை
அறுத்தெறிந்து
திருத்தி யறிவை நிலைநிறுத்தி திருத்தாப் புலனை வேரறுத்து
குருந்தைக் கொழுந்தை முனைகூட்டி கொழுங்கொம் பேற
வகைப்படுத்தி
யிருத்தி நடக்கும் வழிகூட்டி யிய்க்கும் பெரிய பெருமாளே!

நானோ வசன மல்லாது ரெண்டு மிகவே சொல்லறியேன்
தானோ தானே தானாகத் தனக்குத் தானே நிலவாகி
ஏனோ என்னை ஆட்கொண்டாய் இகத்தி லெவர்க்குந் தெரிந்தறிய
வானோ றறிய வழிகூட்டி வருவாய் பெரிய பெருமாளே!

தேச மிழந்து செகமிழந்து சேனை தளங்கள் தானிழந்து
வாச மிழந்து மனையிழந்து மைந்தர் பெண்டிர் தானிழந்து
பாச மொழித்துப் பகையொழிந்துன் பாத மலரே கெதியாகி
நேச மிழந்த நினவதிலே நின்றே வளர்ந்த பெருமாளே!

ஐவருந் துணிந்து வாரோம் அவிடமே கெதியென் றெண்ணி
தெய்வமே பெருமாளென் றெண்ணி தெரிசினை காணக் கண்கள்
மெய்வளர் திருமால் பாதம் வேண்டிவை குண்டஞ் சேர
கைதரு மாலே போற்றி கருணையங் கடவு ளானே!

ராகவா முத்தா போற்றி ராசகோ பாலா போற்றி
ஏகமாய் நின்றாய் போற்றி எம்பெரு மாளே போற்றி
லோகநா யகனே போற்றி நூல்முறை தெரிந்தாய் போற்றி
நாகமேல் துயின்றாய் போற்றி ராமனே போற்றி போற்றி!

மந்திரப் பொருளே போற்றி வாழ்த்திநான் துதித்துப் போற்றி
தந்திரத் துடனே யெந்தன் தம்பிமார் நாலு பேரும்
ஐந்தவிர் குழலி னாளும் ஐவரோ டாறு பேரும்
சந்திர வகைய தாகும் வைகுண்டம் தனையே நோக்கிவரோம்

அரிகரி ராம ராமா அச்சுதா நந்த கோபா
கரியமா லுந்தி பூத்த கார்முகில் மேக வர்ணா
பெரியவ னந்த சேஷா பிரமனைப் பெற்ற மாயா
உரியவர் பந்து சனற்கு உகந்தவா வரரோம் வாரோம்

நடை

பஞ்சவர்க ளைவருமே பத்தியுள்ள துரோபதையும்
கஞ்சமலர் வைகுண்டம் காணவென்று தானடைந்தார்
கடந்ததொரு பஞ்சவரை நல்லபரீ சித்துவுந்தான்
துடந்து வழிவிட்டு தொழுது நமஸ்கரித்து

சேனை படைத்தலைவர் செகவேந்த ருள்ளோரும்
ஆனை பரிரதத் தோர் ஐவரையுந் தான்தொழுது
வந்தார்க ளத்திபுரம் மகுடமுடி மன்னரெல்லாம்
நொந்தா ரிடைந்தார் நோக்கிவலம் போனவர்மேல்

காசினிய ரெல்லாம் கலங்கிமனம் வேறாகி
கோவென் றபயமிட்டுக் கொற்றவனைக் காணாமல்
பாவமோ வென்று பரிதவித்து நிற்பாரும்
அய்யோ சிவனேயென்று ஐவரையும் நானிழந்து

மெய்யோ புவியை விரும்பி யிருப்போமோ
மன்னர்மன்ன ரெல்லாம் மனைகளிலே தானிருந்து
தென்னவனைக் காணாமல் தேடி நினைப்போரும்
ஆரா ரிருந்தாலென்ன ஆனைகட்டி வாழ்ந்தாலென்ன

காராரும் ஐவரைப்போல் காசினியில் கிட்டாதே
போன வழிபார்த்துப் புலம்பித் தவிப்போரும்
தானவனே யென்று தலைவிரித்து நிற்போரும்
வஞ்சினைகள் செய்தோமோ மாபாவி யானோமோ

உங்களையும் விட்டு உலகி லிருப்போமோ
எங்களையும் விட்டு எழுந்தருளிப் போவீரோ
ஊரிருக்கச் சேனை உலகுகளுந் தானிருக்க
சீரிருக்க நீங்கள் தேச மிழந்தீரோ

பாரிருக்கச் செல்வம் பரிகரிகள் தானிருக்க
தேரிருக்க வாழ்வும் தேசம்விட்டுப் போவீரோ
தாரிருக்கு மார்பா தனஞ்செயனே யிங்கிலுள்ள
பேரிருக்க நீரும் பிறதேசம் போனீரோ

மாட மிருக்க மனையிழந்து போவீரோ
தாழ்வில்லாச் செல்வம் சகலபொருள் தானிருக்க
வாழ்வில்லா வாழ்விழந்து வனவாசம் போவீரோ
தன்மரே வீமரே தனஞ்செயரே தம்பியரே

நன்மைசெய்ய நீங்கள் நாடிழந்து போவீரோ
துடியிடைவாள்சோரத் துரைமக்கள் தான்சோர
அடியெடுத்து வைத்து அவனிவிட்டுப் போவீரோ
குந்தியம்மாள் தானிருந்து குமாரர்களைத் தானிழந்து

அந்திசந்தி தேடி அழுதகுரல் கேழ்க்கலையோ
வேதா விதித்த விதியின் படியெனவே
மாதா அழுதகுரல் வைகுண்டங் கேழ்க்கலையோ
சாந்தத் தமருந் தன்கிளையும் சுற்றமுடன்

காந்தாரி கூவென்று கதரினது கேழ்க்கலையோ
காலங் கலியுகத்தைக் கடந்து வழிகூடி
கோலங்கள் கொண்டு கூட்டோடே போவியளோ
கூடுகொண்டு போன குருகுலத்து மன்னரென்று

நாடுள்ள மட்டுமிது நடக்குமென்று போவீரோ
மெய்கொண்ட ஐவரென்று மேதினியோர் கொண்டாட
வைகுண்டஞ் சேர மனந்துணிந்து போனீரோ
ஆனா லினிமேல் ஐவர்செய லுண்டெனவே

மானாவி மானமுடன் வாழ்வோம் புவிதனிலே
என்றுமன்னர் கூடி யிருந்தமன்னர் மந்திரிமார்
கென்று பரீசித்து மனந்தேறி உபசரித்து
பூலோகந் தாங்கும் புரந்தரனை இப்போது

ஆலோ சினையள்பண்ணி அழவேண்டா மென்றமந்தி
வளிவசமாய் நாளும் மனதை மிகத்தேத்தி
களிகூர்ந் திருமென்று காவலருங் காத்திருந்தார்
காத்திருந்த மன்னரையும் காவலர்கள் தங்களையும்

பாத்திருந்து சொல்வான் பரீசித்து வேந்தனுந்தான்
குந்தியம்மாள் பாட்டியவள் கூவென் றழுதசத்தம்
புத்தி கலங்கிப் பொறிகலங்கிப் போகுதய்யோ
அந்த மனக்கிலேசம் அனைவரும்போய் ஆற்றுதற்கு

எந்தனுடன் கூட எழுந்தருளு மென்றுரைத்தார்
அந்த மொழிகேட்டு அரசமன்னர் தான்கூடி
வந்துகுந்த மாதேவி மனச்சலிப்புத் தான்தீர்த்து
காந்தாரி மாளிகையில் கட்டுடனே தான்நடந்து

பூந்தார்கள் மாளிகையில் பொற்கொடியாள் தன்சலிப்பு
வேண்டா மெனத்தீத்து வீற்றிருந்தார் அம்மானை

காண்டா வனமெரித்த கண்ணுதலான் தன்புதல்வன்
பார்வேந்தர் போற்றப் பரீசித்து மன்னனுந்தான்

தார்வேந்தர் கொண்டாடத் தாணியை ஆண்டிருந்தான்
தேசக் குறிப்பும் தெரிப்பும் எடுத்தெழுதி
வாசக் குடிதழைக்கும் மனுநீதி தப்பாமல்
அரச ருடசீமை அடங்க லெடுத்தெழுதி

விரசும் படிக்கு மிகுதியாய்த் தானீந்து
மன்ன ரமைச்சர் மந்திரிமார் தங்களுக்கு
அன்னசோறு மாடை ஆபரணந் தானீய்ந்து
ஆனை பரியுள்ள அடங்கலுக்கும் இப்படியாய்

சேனை தளங்களுக்கும் செல்லும் படியெழுதி
வாசல் வழியள் மனைமாட்சி உள்ளதெல்லாம்
ரோசும் படிச்சிலவு ரொக்கமாய்த் தானடத்தி
வேதியர்கள் அந்தணர்கள் வீரசைவர் பூசகர்க்கு

ஓதிய தபோதனர்க்கும் உள்ளபடி தான்கொடுத்து
நீதி வழுவாமல் நெறிமுறமை தப்பாமல்
சாதி முறமையள் தலைகுலைந்து போகாமல்
அகுதிபர தேசிகளும் அபயமென்று சொல்லாமல்

பகுதியுமோ ஆறிலொன்று படியேடு தப்பாமல்
தெய்வ தலங்கள் சிறப்புடைய பூசையளும்
அய்வ ரிருந்தாப்போல் அவனியெல்லாம் கொண்டாட
கொலுவி லிருந்தான் குவலயங்கள் போற்றிசெய்ய

வலுவா லபிமன் மகனுடைய சிங்காரம்
மன்மதனா மென்று வாழ்த்துஞ் சிவபோகம்
தன்மரா மென்று சாத்துஞ் சிலபேர்கள்
வில்லியுட பேரன் விசயன்கா ணென்பாரும்
சொல்லி யபிமன் துரந்தரீக னென்பாரும்

நல்ல சகாதேவன் ராசனிவ னென்பாரும்
வல்ல புகழ்நகுலன் மன்னன்கா ணென்பாரும்
சைவ சமயந் தழைக்கவந்தா னென்பாரும்
குருகுலத்தில் வந்துதித்த குலக்கொழுந்தோ வென்பாரும்
பெருகு தமிழ்வளரும் பிரபலன்கா ணென்பாரும்

கனக நிதிகொடுக்கும் காரணன்கா ணென்பாரும்
தனக்குப்பொன் னாகவந்த தனபதிகா ணென்பாரும்
ராசாதி ராசன் ராசசிங்க மென்பாரும்
போச னிவனென்று பூரித்து நிற்பாரும்

பாராள வந்த பரராச னென்பாரும்
சீரான நால்வகைக்கும் சீராள னென்பாரும்
மீதான செல்வம் விளங்கவந்தா னென்பாரும்
ஆதார மாய்ப்புவியை ஆளவந்தா னென்பாரும்

வங்கிஷங் கெட்டு வரம்பழிந்து போகாமல்
அங்கிஷங் காக்கவந்த ஆண்பிள்ளைதா னென்பாரும்
எல்லோரும் வாழ்த்தி எண்ணமில்லை யென்று சொல்லி
பல்பேரும் வாழ்த்தி பார்த்திபன்போல் வீற்றிருந்தான்

தேசமெங்குங் கொண்டாட சிங்கா சனத்திருந்தான்
ராசனின் லோகம் நடத்தும் படிகேளீர்
நந்த வனந்தோப்பு நாலுதிக்கு நின்றிலங்க
சந்தனச் சோலைகளும் செங்கழுநீ ரோடைகளும்

பண்பான செங்கழுநீர் பலதிக்குஞ் சூழ்ந்திருக்க
பூமரங்க ளெல்லாம் பூத்து மிகச் சொரிய
மாமரங்க ளெல்லாம் வளமாய்ப் பழஞ்சொரிய
கோங்கு கமுகுபுன்னை குவிந்துஎங்குஞ் சூழ்ந்திருக்க

ஓங்கு பலாமரங்கள் உலகெங்கும் உண்டாக
கன்னல் கதலி கமுதலைகள் நீண்டிருக்க
சென்னெல் வயலும் செந்தா மரைமலரும்
செல்வமுடன் தேசம் சிறப்பும் அரசிருப்பும்

வில்வ வனஞ்சூழ வீற்றிருக்க லெட்சுமியும்
பூங்கா வனமும் புதியவனச் சோலைகளும்
பாங்கான வாவிகளும் பதியும் பதிச்சிறப்பும்
கோபாலன் தன்பேரன் கொற்றவன் போலிருந்தான்

பூபால னாயிருந்து பூலோக மாளுகையில்
மந்திரிமார் வந்து வாய்புதைத்து வார்த்தை சொல்லி
தந்திரிமா ரெல்லோரும் சரணமென்று வந்துசெய்ய
மன்ன ரருகிருக்க மண்டலத்தோர் காத்திருக்க

தென்னவர்கள் வந்து திறைவிட்டுக் காத்திருக்க
அரசரொடு சேனை ஆனை பரிரதமும்
முரசொலிய ளார்ப்ப முடிமன்னர் சூழ்ந்திருக்க
கிருபிடிய ளார்ப்பக் கெடிமன்னர் காத்திருக்க

துடியதிரப் போர்மன்னர் துரைமக்கள் வீற்றிருக்க
தாளமொடு கைத்தாளம் தப்பு மிகமுழங்க
கைத்தாள மேளம் கடல்போல வேமுழங்க
மத்தளம் பம்பை மணிகள் மிகமுழங்க

சேகண்டி டெக்கையொடு தித்தியள் தான்முழங்க
அகண்ட வனம்போலே அரசன் கொலுவிருக்க
ஆலத்திப் பெண்கள் அலங்கார மாகநிற்க
தாலத் திருவிளக்குச் சமுகத்தைச் சூழ்ந்திருக்க

மெல்லிநல்லாள் கையால் விசிறிய ளாத்திநிற்க
வல்லி மங்கிடையாள் மதுரகவி பாடிநிற்க
மின்னைப் பெண்கொடியார் வெண்கவரி தான்வீச
பொன்னனிசேர் மாதரெல்லாம் பூமலர்கள் தான்தூவ

பாவாடை வீசப் பாவாணர் கொண்டாட
நாவாணர் கீத மார்க்கங்கள் பாடிவர
கொற்றக் குடைநிழற்ற குப்பக் குழலுடனே
மத்தகச மீதேறி மன்னன் பவனிவர

ஆலவட்டஞ் சூழ்ந்துவர அதிவீரர் முன்னடக்க
பீலிவட்டஞ் சூழ்ந்துவர பேரணிகள் பின்னடக்க
சந்திர காவிடால் தளத்துடனே சூழ்ந்துவர
இந்திர விமானமது இணையாய் நெருங்கிவர

சாந்து சவாதுடனே சாம்பிராணி தான்வீச
ஏந்து முலைமாதர் இருபுறமு மாடிவர
கட்டியங்கள் கூறக் கனவிருது தான்கூற
கெட்டி யிவனெனவே கெம்பீர மாகவெகு

பட்டணஞ் சுத்தி பவனிவல மாகவந்து
கட்டழக னென்று காசினியோர் கொண்டாட
பார்த்து மனமகிழ்ந்து பரீசித்து வேந்தனுந்தான்
மாத்தவர்கள் போற்றிசெய்ய மன்னன் பவனிவந்தான்

வந்து கொலுவில் மகாராசன் போலிருந்தான்
சந்துபயில் சாத்திரங்கள் தான்கேழ்க்க வேணுமென்று
வேதியரைத் தானழைத்து வினாயவர் வேணுமென்று
ஓதினான் தூதுவன்பால் ஒருநொடியில் வாவெனவே

அந்தணர்கள் தன்தெருவில் ஆராய்ந்து தூதுவனும்
கொந்தலரும் வேதியனார் குடியி லிருந்தவனை
கண்டு நமஸ்கரித்து காவலரே வேதியரே
அண்டர் பெருமான் அழைத்துவரச் சொன்னார்காண்

என்றுசொல்ல வேதியரும் ஏதென் றெழுந்திருந்து
நின்று மடவாரே நிமுஷத்தில் வாவெனவே
புத்தகத்தைத் தானெடுத்துப் பூவையரே நீர்கொடுவா
வித்தகப்பெண் புத்தகத்தை விரையவே கொண்டுவந்தாள்

வந்ததொரு புத்தகத்தை மறையோனுந்தான் வாங்கி
அந்தமுள்ள கோட்டை அத்திபுரந் தன்னில்வந்து
பரீசித்து வேந்தனையும் பாங்குடனே வந்துகண்டு
தெரிசித்து அட்சதையும் சிவம்பண்ணி 1 தான்குடுத்தார்

அரசர்க் கரசே அரசர் பெருமானே
முரசுக் கொடியுடைய முடிபொறுத்த மன்னவரே
என்னைவரச் சொன்னது ஏது வெனக்கேட்டார்
முன்னைப் பயிந்து முடிந்த ரகசியமும்

நாளும் பலனும் ராசிபல லெக்கினமும்
கோளும் பகையும் குவலையமுங் காசினியும்
ஆளும் புவியும் அரசருக்கே செங்கோலும்
வாழும் புவியும் மனைப்பொருத்த முள்ளதெல்லாம்

பார்த்துரையு மென்று பரிசித்து வேந்தனுந்தான்
வார்த்தைசொல்லக் கேட்டு மாமறைநூ லாராய்ந்து
ஆராய்ந்து பார்த்து அளவிட்டுச் சாத்திரத்தை
நேராய் மனைகீறி நீங்கா தரைகீறி

---

1. ஜெபம்பண்ணி

ஓரையள் பார்த்து உச்சநிலை தான்பார்த்து
ராசி பிரித்து நட்சேத்திரந் தான்பிரித்து
அசிபலன் தாரகைகள் அடவுடனே தான்பார்த்து
பலவறையள்[1] வைத்துப் பலசாத்தி ரம்பிரித்து

அலகு நிலைநிறுத்தி அஷ்டதிக்குந் தானிறைத்து
திசையள் பதினாலும் தெளிந்து வகைபிரித்து
இசையாக் கணங்கள் லக்கணங்கள் தான்பார்த்து
சொல்லுகிறேன் வேதியனும் துரைமகனுந் தான்கேட்டு

செல்லுமொரு காலமதில் தீவினைக ளுண்டாச்சு
கேளுங்காண் மன்னவனே கிருபையுடன் சாத்திரத்தை
வாழும் குருகுலத்தில் மன்னவனே உன்னுடைய
ராசி பொருத்தம் நவக்கிரகம் தான்பார்க்க

தேசக் குதிரையொடு சேனைதளம் பூமியல்ல
உடமை கடமைபணி உற்பத்தி தானுமல்ல
திடமுடைய செம்பொன்முதல் தேடும் புதையலல்ல
மாடமொரு கூடம் மனையாட்டி தானுமல்ல

ஆண்டவரே உம்முடைய ஆத்துமததி லோர்வினையள்
சென்மச் சனியும் தேகத்தில் வல்வினையும்
கன்மச் சிறுவினையும் காலபலன் பொல்லாது
செவ்வாயின் தோஷம் தென்னவனே பொல்லாது

கல்லா வியாழம் கருதும்பனி ரெண்டில்வந்து
மாத மொருநாளில் வருகுதுகா ணித்தோசம்
போதா துனக்குப் புண்ணியனே போதாது
தத்து வருகுதுகாண் தந்திரமாய் நீரிருந்து

எத்துடனே தானிருந்து இதவாகத் தானொளித்து
தப்பி யிருக்கச் சமத்துண்டோ ஆமாகில்
ஒப்புடனே சொல்லுகிறேன் உண்மைதனை நீர்கேளீர்
விஷஅரவந் தீண்ட வேகமுடன் கோரமதாய்

---

1. சோழி

அடவுடனே ஓர்நாளும் மாசமதுக் குள்ளாக
சர்ப்பத்தி னாலே சாவுனக்குத் தப்பாது
உற்பத்தி யாக உரைத்தேனான் சாத்திரமும்
என்றுரைத்து வேதியனும் எழுந்திருந்து தான்போனான்

ஒன்றுமன விள்ளாமல் உள்ளுடைந்து புண்ணாகி
என்செய்வோ மென்று இதுக்குவகை ஏதெனவே
முன்செய்த தீவினைதான் முடிந்துதோ நம்மளவில்
பெரியவர்கள் சாபம் பின்னே தொடந்துதையோ

தெரியாமல் நாம்செய்த தீவினையால் வந்தகுற்றம்
போக நினைவு பொருத்தமுடன் பார்க்கவென்று
வாகான மந்திரிமார் மன்னவரைத் தான்பார்த்து
நமக்கு வருங்கருமம் நாட்டமுடன் போராது

உனக்குத் தெரிய உரைக்கிறேன் மன்னவரே
சனிபகவான் போராது சர்ப்பமுந் தீண்டுமுன்னே
இனிமே லுபாயம் இருக்க வகைகேளீர்
கருங்கடலுக் குள்ளே கம்பமது தானூன்றி

நீர்மேல் சவுக்கை நிறுத்தியே காலூன்றி
சுத்திவரக் காவல் சூழ்ந்து நிரைநிரையாய்
உபாயத்தா லேயிருந்து வகையாகத் தப்பிவிச்சு
வரலாம் அடிநொடியில் மாளிகைஉண் டாக்குமென்றார்

பரம ரகசியமாய்ப் பாரிலுள்ளோர் காணாமல்
அந்தப்படியே அலைகடல்மேல் மாளிகையும்
மந்திரிமார் தான்முடித்து வந்துசொன்னார் அம்மானை

நாடு நகர்தேடி நன்னகரி தான்தேடி
காடுங் கரைதேடிக் காவலனும் எங்கேயென்று
உலாவித் திரிந்து ஊரெங்குந் தான்தேடி
கலாபத்துக் காகக் கடல்மே லிருப்பதென்று
ஊரில் குடியிருக்கும் உள்ள சனங்களெல்லாம்

பாரில் பலர்கூடிப் பய்ய ரகசியமாய்
பட்டணத்தி லுள்ள பலசனங்க ளெல்லோரும்
திட்டமுட னிவ்வசனம் செப்புகின்றா ரெல்லோரும்
உரைக்கும் வசனம் உலகத்தில் கேட்டறிந்து

திரைகடலை நோக்கி சீராவுந் தானடந்து
வருகுதுகாண் நாகம் வலுவேகந் தன்னுடனே
பெருகு கடலருகே பெருநாகம் தான்வந்து
நீடிய தூரம் நிலையாச் சமுத்திரத்தில்

ஓடி ஒளிந்திருக்கும் உத்தமனைத் தீண்டுதற்கு
உபாயமென்ன செய்வோம் ஒருவழியுங் காணோமே
குபாயமிட்ட கப்பலுக்குக் கொள்வோமோ காற்கடலில்
தோணி படகு சுருப்புடனே தன்கோலம்

வாணியங்கள் செய்யும் வளம்போ லெடுப்போமோ
சமான சுருபம் சாதித் தெடுப்போமோ
கம்பாய் மிதந்து கார்க்கடலில் செல்வோமோ
பட்சியாய்ச் சென்று பறந்து விழுவோமோ

கச்சிக் கரிய காகமாய்ச் செல்வோமோ
பாம்பாய் மிதந்து பழுதையாய் செல்வோமோ
நாம்போக வேறினைவு நால்வகையுங் கரணோமே
பாத்துமுன்று நாகம் பரீசித்தைக் கொல்லுதற்கு

வேத்துருவங் கொள்ள விசாரமொன்றுங் காணாமல்
என்ன வடிவெடுத்து இணக்கமாய்க் காணுதில்லை
மன்னனைக் கொல்ல வாய்த்ததொன்றுங் காணாமல்
தானதுபால் நாகம் சர்ப்பிணையள் செய்வதற்கு

மனது பிரியமுடன் வாரி எடுத்தணைக்க
முகந்து மணங்கொண்டு முகத்தோ டுறவணைக்க
மிகுந்த கனியொன்று விசாரித்துப் பார்ப்பளவில்
தின்றால் பிழிந்திருக்கும் தின்னவென்றால் பல்கருகும்

கண்டால் களிகூறும் கண்மலரி தானணையும்
திவ்விய மானதொரு தெய்வக் கனியென்பாரும்
துல்லிய மாமென்று தோத்தி நினவுகொண்டு
எலும்பிச்சங் கனிதான் இன்பமுடன் தோன்றுகையில்

வலுமிச்ச மான வலுவெடுத்தான் காற்கோடன்
கனிருபம் கொண்டு கடலில் குதித்திறங்கி
தனியே மிதந்து தடையறவே போகலுற்றான்
கப்பலிட்டுச் சுத்திக் காத்திருந்த காவலர்கள்

தெப்பமென வோர்கனிதான் தெரியிதுபா ரென்பாரும்
அந்தா வருகுதுகாண் அதிசயங்கா ணென்பாரும்
வந்தா லெனக்கென்று வழிகட்டி நிற்பாரும்
எனக்கென்று சொல்லி இச்சித்து நிற்பாரும்

உனக்குக் கிடையாதென்று உபாயமிட்டு நிற்பாரும்
தான்கண்டே னென்று தாண்டி விழுவாரும்
நான்கண்டே னென்று நகைத்துச் சிரிப்பாரும்
ஆர்கண்டா லென்ன அமையா தொருவருக்கும்
பார்கொண்ட ராசன் பரீசித்து வேந்தனுக்கு

தக்குமே அல்லாது தக்கமிட்டு நின்றாலும்
சிக்குமோ உங்களுக்குத் தெய்வகனி யென்பாரும்
இப்படியாய்ச் சொல்லி இகலி வெகுசனங்கள்
நிற்பளவில் சற்பம் நிலையாச் சமுத்திரத்தில்

அலையி லகப்பட்டு அசைந்தசைந்து தான்குதித்து
கொலைசெய்ய வாரதொரு குறுமாத ளங்கனிகாண்
ஒதுங்கி வழிவிலகி ஒருவிடமும் போதாமல்
பிதுங்கி நிகழாமல் பிடித்தார் பழந்தனையும்

எடுத்த கனிதன்னை இன்பமுற்றே எல்லோரும்
அடுத்துக்கனிதன்னை அனைவோருந் தான்பார்த்து
யோசினையள் பண்ணி ஒருமித்தே எல்லோரும்
ராசனுக்கு ஆமென்று நடந்தார் சமுகமதில்
மன்னன் பரீசித்து மகாராசன் தன்கொலுவில்

தென்வைன் காரியப்பேர் சென்று தொழுதேத்தி
ஆண்டனே எங்கள் அரசர் பெருமானே
நீண்டவனே நாங்கள் நீணிலத்தில் கண்டதில்லை
கண்டறியாக் காட்சியெங்கள் கையில்வந்து சிக்கியதே

புண்டரிக மார்பர் புவிராசா உன்யோகம்
அதிசயமாய்க் கண்டெடுத்தோம் அய்யா புதுமையிது
விதிசேரும் யேகனே வெகுயோக மாமுனக்கு
வந்துதுகா ணென்று வாழ்த்தியே யெல்லோரும்

சந்து பயில்மன்னன் தார்வேந்தன் தன்னிடத்தில்
கொண்டாடிக் கையில் கொடுத்தார் கனிதனையும்
கண்டான் துரைராசன் கணம்பிரிய மாய்மகிழ்ந்து
நல்ல கனியென்று நகைத்து முகமலர்ந்து

செல்ல மகன்வாங்கிச் செந்தா மரைமுகத்தில்
ஒத்தினான் கண்ணில் ஊடுருவி நாகமது
கொத்தினான் சீறிக் குதித்தான் கடல்தனிலே
மதியுடனே வந்தொழித்த மன்னவனும் பட்டுருண்டான்

**விருத்தம்**

விதியின் பயனை விலக்கவென்று விரும்பி யொருத்தன் முன்னாளில்
அதியத் தலையைத் தான்சிறைத்து அகன்று பிழைத்து வருவமென்று
சதியே வருவ தறியாமல் தால[1] நிழலில் போயிருக்க
விதிதான் மொட்டைத் தலைதனிலே விழுமாம் பனையின் கனிதானே

தலையில் விதித்த விதிதனைக்குத் தலையைச் சிறைத்தோன்
பட்டது போல்
அலையி லொளித்த பரீசித்து அமந்தான் அரவின் விஷத்தாலே
குலையன் செய்த பழிபாவம் குலையால் முடிந்து தெனவேங்கி
மலையா திருந்த மன்னரெல்லாம் மலைந்தே குலைந்தே குலைந்தாரே!

---

1. பனை

ஏங்கிநீர்[1] முகங்கள் வாடி என்செய்வோ மென்று சொல்லி
தாங்கினார் பரீசித் தென்று தளமெல்லா மபய மென்ன
தூங்கினார் தலைக விழ்ந்தார் உத்திர மெழுது மென்றார்
(ஒருவரி விடுபட்டுளது)

நடை

பட்டுக் கிடக்கின்ற பரிசித்து வேந்தனையும்
கட்டுக்குள் வைத்துக் காவலிட்டுத் தான்போத்தி
சாந்து புனுகுநல்ல சவ்வாதுசந் தனந்தரித்து
பூந்துகிலும் பூமணமும் பூமலரும் வாசினையும்

கம்மென் றிருக்கின்ற களபமெல்லாந் தாணித்து
போமெனவே நல்ல பெட்டகத்தி லேயிருத்தி
முன்னெழுதி விட்டார் முடிபொறுத்த மன்னருக்கு
பின்னே பயணமென்று பெருங்கடலை விட்டகன்றார்

ஓலை தனைக்கொண்டு ஒருநொடியில் தூதுவனும்
சேலை தலைகுலைப்பச் செனமேச ராசன்முன்னே
தெண்டனிட்டுத் தூதன் சென்னிகவிழ்ந் தேயுரைத்தான்
தொண்டனுக்கு வாய்தான் துணியுமோ வென்கோவே

என்றோலை தன்னை எடுத்துமுன்னே வைக்கலுற்றான்
நின்றோலை வாசித்து நிலத்தில் விழுந்தழுது
மண்ணதிர விண்ணதிர வயிற்றி லறைந்தழுதான்
கண்ணீர்க ளாறோடக் கதறி அழுகலுற்றான்

வந்ததொரு தூதுவனை வகையே தெனக்கேட்டான்
அந்த விபரமெல்லாம் அவன்வகையாய்ச் சொல்லியபின்
கேட்டுச் சினமேசன் கிலேசமிக வுண்டாகி
சந்தான மான சனங்கள் விழுந்தலற

மனைவிமக்கள் சுற்றமெல்லாம் வந்து விழுந்தலறி
கொல்லென்ற சத்தம் கூக்குரலைத் தானமத்தி
நில்லென் றமத்தி நினையாதெல் லாம்நினைந்து
அழுது புலம்பியதனா லாவதொன்று மில்லையென்று

---

1. ஏங்கினார்

பழுதுசெய்து போனதொரு பாம்பு தனைவதைத்து
எந்தன் பிதாவை எழுப்புவே னல்லாமல்
அந்த விஷத்துக்குள்ள ஆனதெல்லாஞ் சேகரித்து
எழுப்பினால் பிள்ளைதான் இல்லாட்டா லென்னபிள்ளை

மருப்பினா லேஅழுதால் வருமோ உயிர்தானும்
தந்தையரை வைத்துச் சமத்தாகத் தானிருந்து
விந்தையுடன் வேள்வி விதமாய் வளர்க்கலுற்றார்
சாத்திரத்தி லுள்ள தளவாட மத்தனையும்

சூத்திரமாய்ச் சேகரித்து சூழ்ந்து திரைவளைத்து
வேதியரைத் தானழைத்து வேணதெல்லாந் தான்கொடுத்து
ஓதிய வேதமதில் ஒன்றுங் குறையாமல்
சொல்லு முயிர்திரும்பச் சூட்டுமென்றார் வேதாந்தம்

கல்லு முருகிவிழக் கூதித்ததொரு மந்திரத்தால்
உற்பத்தி யாகஒரு ஓமஅனல் தான்மூட்டி
சற்பத்தை வெந்துவிழத் தாக்குமென்றார் மந்திரத்தை
ஆமென்று வேதியரும் அந்தணருந் தான்கூடி

ஓமென்று வேள்விசெய்ய ஓமத்தீ மூட்டினார்காண்
யாகத்தீ மூண்டுதுகாண் அண்ட கிடாகமட்டும்
சாகத்தான் சற்பந் தவுடு பொடியாகி
நீறாகி வெந்து நெருப்பு தணலாகி

வேறாகிச் சற்பம் வெந்துநீ றாவதற்கு
எங்கே எனத்தேடி எழுந்துதுகா ணக்கினியும்
அங்கே அரவமது அக்கினிக்கு ஆத்தாமல்
ஈரேழு லோகமட்டும் எங்கெங்குந் தானோடி

பாரேழுந் தானலைந்து படரரவ மாத்தாமல்
மேலசந்த நாகம் வெருவிப் பயந்தெழுந்து
காலசந்து தானோடி கனலில்வளைப் பட்டிடைந்து
பார்த்த விடமெல்லாம் படந்தெழுந்த அக்கினியும்

ஆத்த முடியாமல் அயிரா பதந்தன்னிடம்
ஓடிச்சிங் காசனத்தி லூடே முனைந்துகொண்டு
நாடிச் சீர்பாதம் நமஸ்கரித்து தெண்டனிட்டு
அபய முனக்கபயம் அடைக்கலங்கா ணென்றுசொல்லி

உபய மெனைக்காரும் உத்தமனே என்றலறி
தேவேந் திரன்சபையில் சென்று புகுந்தமையால்
ஐவருட பேரன் ஆனபரீ சித்துவைத்தான்
முற்பழிசெய் தானெனவே முயன்றவனை நான்தேடி

பிற்பழிநான் கேட்டு பிராணனையே நான்கேட்டு
அந்தப் பழிகேழ்க்க அடியேனை யேதுடர்ந்து
இந்தச் சினமேசன் என்பேரி லக்கினியை
ஏவிவிட்டான் தாங்க என்னால் முடியாமல்

தாவியே வந்தடைந்தேன் சரண மெனைக்காரும்
என்றவனுஞ் சொல்ல இந்திரனு மப்போது
மன்றலருந் திண்புயத்தான் மன்னன்சின மேசனுக்கு
இந்திரனுஞ் சீட்டெழுதி ஏவினார் தூதுவனை

அந்தரத்தே தூதுவனும் அரைநொடியி லோடிவந்து
சீட்டைக் கொடுத்துச் சேதிசென்னான் தூதுவனும்
சீட்டதனைப் பார்த்து செனமேசன் தான்பயந்து
நம்மிடத்தில் வந்தவனை நாமே வதைசெய்தால்

தம்மிடத்தில் வந்தவரைத் தான்கொல்வ ரோபுவியில்
முன்னாள் தவசிருந்த முனிவன்மேல் நாகமதை
மன்னாகொன்றுன் தாதை மாமுனிமேல் தான்போட்டான்
கோபம் பொறாமல்ரிஷி கூறினான் சாபத்தால்

பூபனே சாவுனக்குப் போட்டதொரு பாம்பதனால்
அந்தமுனி சாபமது அருகே குடியிருந்து
வந்த விதிவசந்தான் வருமென்ன பார்த்திருந்து
எழுத்து முடிவிதுதான் இம்மட்டே யல்லாமல்

கொழுந்து மறலிவந்து கூடுகின்ற காலமது
சமய மிருவென்று சற்பமுந்தான் தீண்டினது
அமையுமோ உன்னா லமையா தமையாது
யாகத்தைத் தானமத்தி ஆத்துமென்றார் கோபமதை

வாகொத்த யாகம் வளர்த்தாயே யாமாகில்
ஏகமாய்ப் பற்றி எரியும் புவனமெல்லாம்
நாகத்து மட்டும் நடவாது இச்சேதி
அண்ட மடங்கும் அண்டமுதல் அட்டதிக்கு

விண்டலமும் வெந்து வெளியாய் முடிந்துவிடும்
உனக்கு நிலையில்லை உத்ததொரு பேருமில்லை
செத்தால் பிழைப்பதுண்டோ தேசத்தி லுள்ளோர்கள்
மத்தாருஞ் சொல்லாமல் மயக்கத்தை விட்டுவிடு

தந்தை தனையடக்கிச் சாத்திரங்கள் தான்முடித்து
விந்தையாய் நீயிருந்து மேதினியில் ஆளுமென்று
வாசவன் கைச்சீட்டு வாசத்தை மீறாமல்
ராசன் செனமேசன் நல்லதென்று சம்மதித்து

ஆறி யமந்து அனைவோருந் தான்கூடி
தேறித் தெரிந்து தெய்வமே என்றுசொல்லி
மந்திரி மாரும் மகுடமுடி வேந்தருடன்
தந்திரமாய்த் தான்கூடி சடங்கு தனைமுடித்து

மாதான பூமி வஸ்த்திரதான முங்கொடுத்து
கோதான மீய்ந்தான் கொற்றவன்தன் கையாலே
சடங்கு முடித்தான்காண் சாத்திரத்தி லுள்ளபடி
அடங்காக் கிலேசமெல்லாம் ஆறித் தெளிந்தபின்பு

மன்ன ரமைச்சர் மகுடமுடி வேந்தருடன்
தென்னவர்க ளெல்லாஞ் செனமேச ராசனுக்கு
பட்டந் தரித்துப் பாராளு மென்றுசொல்லி
திட்டப் படுத்திச் செகவேந்தர் காத்திருக்க

இருக்குந் தறுவாயில் ஏலவே சாபமிட்ட
வருக்கமுள்ள மாமுனிவன் மன்னன்பரீ சித்துவை
நாகமது தீண்டுகையால் ராசன் மடிந்திடுவான்
சாகுமுன்னே சென்று சர்ப்பத்தின் கனவிஷத்தை

திருப்பி விஷத்தைத் தென்னவனே நாமெழுப்பி
விப முடன்வைப்பேன் மேதினியை ஆளுமென்று
தன்சாபந் தீர்க்கத் தவசி வருகையிலே
வன்பான சர்ப்பம் வழியெதிரே போனதுவே

எதிராக வந்ததொரு ஏற்ற தவசிதனை
நாகமது கேழ்க்க நல்தவசி என்சொல்லுவான்
லோக முழுதாளும் ரூபமதன் தன்னையொப்பாய்
இருக்கும் பரீசித்துவுக்கு என்னுடைய சாபமதால்

பெருக்க விஷந்தீண்டிப் பிடிக்க வருகுதென்று
இத்திசை நோக்கி ஏகிவந்தோங் கண்டீரே
என்றுமுனி சொல்ல இடைந்துழன்று கார்க்கோடன்
நின்று மயங்கி நெடுமுச்சுக் கொண்டேகி

பாடரவந் தீண்டி பரிசித்து ராசனுந்தான்
செடமொழிந்து பாரில்த் தீக்கொளுத்திச் சுட்டுவிட்டான்
சாம்பல் குவித்து சடங்குமுதல் செய்தொழிந்தார்
ஏன்போரீ ரென்றுஅரவம் எதிராகச் சொல்லியபின்

மெய்யோ என்சாபம் வினையாய் முடிந்ததுவோ
அய்யோ அரசிழக்க லாமோ புவிமீதில்
நம்மா லரசனுக்கு நரகம்வந்த தாகையினால்
சும்மா விடலாமோ தோஷம் நமக்குவரும்

அஸ்த்த மடக்கி அதுசாம்ப லானாலும்
சுத்தமாய் நாமெழுப்பித் துரைமகனை உண்டுபண்ணி
திக்கெல்லாம் போற்றத் தேசத்தை ஆளுமென்று
வைக்கலா மென்றுமனந் துணிந்து வந்தேன்காண்

இல்லா தெனக்கு ஈடேற்றம் வாராது
பொல்லாத சாபம் பொருந்த உரைத்துவிட்டேன்
வாக்கினால் கண்ணால் கையாலே தீரவேணும்
தீராது போனால் திருவுளத்துக் கேராது

வாராத சீவனையும் வரழைத்துச் சாம்பலையும்
உருவாய் வருத்து உயிரை உடல்பொருத்தி
குருவினுட மந்திரத்தால் கொள்ளலாங் காரியமும்
என்று முனிசொல்ல எத்ததொரு நாகமது

ஒன்று மறியாமல் உரைத்தாயே மாமுனியே
நாமொன்று சொல்லுகிறோம் நமக்கிசைய நீர்தாமும்
ஆமென்று செய்தால் அதிசயமா மென்றிடுவோம்
மாமரமும் பூத்து மலருடனே காய்கனியும்

பூமரந் தளிர்க்கிறதைப் புகைந்தெரியத் தீண்டுகிறோம்
பற்பமாய்ப் போகும் பசுமர மானதுவும்
உற்பத்தி யாக உயர்மரம்போ லாக்குவித்தால்
செத்தவ னுந்தான் செகத்திலுள்ளோர் கொண்டாட

வித்தகரே மாமுனியே மெய்யொன்றுந் தானறியேன்
சற்ப மிவைசொல்லச் சன்னாகி போமெனவே
கற்பக மாமரத்தைக் கடிவையு மென்றுரைத்தார்
உரைத்த மொழிகேட்டு ஒருமித்து நாகமது
இரைந்தாவஞ் சீறி ஈருடைய தந்தமதால்

வாய்பிளந்து கவ்வி மாமரத்தைத் தீண்டியதே
காய்கனிய ளுள்ள கப்புக் கவர்களெல்லாம்
வெந்துநீ றான விருச்சமெனும் மாமரத்தை
சந்துபயில் மாமரமும் தழைமரம்போ லாக்கிவிட்டார்

அப்போது மாமுனியை அரவமது கொண்டாடி
இப்போது நம்பழிக்கு ஈடாகப் பண்ணிவச்சோம்
அஷ்டமா நாகமதில் யானொருவன் தானாகும்
இஷ்டமுடன் நீரும் எழுப்புவீர்காண் மாமுனியே

எங்க ளதிகாரம் எண்ணமெல்லாம் போய்விடுங்காண்
திங்களொளி ரெத்தினமணி சிரந்தி லிருந்தெடுத்து
பெரியவரா மென்று பேரரவந் தான்கொடுக்க
அரிய மணிவாங்கி அருந்தவசி ஏகிவிட்டான்
நாகம் மகிழ்ந்து நடந்துதுகாண் அம்மானை !

நிற்கக் கயிலாசமதில் ஈஸ்பரனார் சந்நிதியில்
சென்றரவம் போனதற்பின் செனமேசன் தானிருந்து
அன்றலரும் தாமரைபோல் ஆதித்தன் தன்வடிவாய்
இருந்து சிலகாலம் இந்திரனைப் போலாகி

திருந்து புகழ்கொண்ட செயவிசயன் தன்பேரன்
தேச மொருக்குடைக்கிழ் செங்கோல் மனுநீதி
வாசமிகு பூவுலகில் மன்னர்கள் போற்றிசெய்ய
ஏகசிங் காசனத்தில் இருந்தார்காண் அம்மானை !

**விருத்தம்**

பஞ்சவர் பேர னென்றும் பரீசித்து விஷங்கள் தீண்டி
துஞ்சின தாதை யாலே சுதன்சின மேசன் தன்னை
மிஞ்சுசிங் காச னத்தில் வேந்தரும் அமைச்சர் தாமும்
அஞ்சலென் றடிகள் போற்றி அவனியி லிருந்தா ரென்றே

இப்படி அநேக காலம் இருந்தா சியற்கை செய்து
சொற்படி தவறா வாய்மை சோர்வற நடத்தல் செய்து
முற்படி ஞாயம் போல முனிவர னாகு மென்ன
அப்படி இருந்து தானும் அவனியை ஆளும் நாளில்

ஆத்தும்[1] வேத ஞானம் அறிந்தபின் கவிதை நூல்கள்
பாகமா முணர்ந்து கேட்டுப் பத்தியாய்ப் பெரியோர் தன்பால்
போகவும் வரவும் தொண்மை புகழது மதுர மோங்கி
ஏகசிங் காச னத்தில் இருந்துடன் வாழும் நாளில்

---

1. ஆகம எனல் பொருந்தும்

**நடை**

பார்த்தன மகன் வாள்வீமன் பாலன்பரீ சித்துவுடன்
ஒத்ததொரு பாலன் ராசன்சின மேசனனும்
சிந்தமுடன் பாரில் செங்கோ லதிகாரம்
தொத்தமுள்ள நீதி துலங்கும் ரவிமத்போல்

கத்தும் கடல்சூழக் காசினியெல் லாமுழங்க
முத்து நவமணிபோல் முளைத்தெழுந்த ரெத்தினம்போல்
வந்த மகராசன் மன்னன் சினமேசன்
விந்தை மலர்போல விக்கிதமாய்ச் சிங்காரம்

தவசிருக்கு[1] மந்த தவள மணிமார்பன்
பொங்கிய பூரணமாய் பூலோக நாயகமாய்
இறைமுறைமை ஆறிலொன்று எள்ளளவு மீறாமல்
புறையுடைய தன்மரென பூலோக மாளுகிறார்

அத்தி புரமுத்தும் அரசாளும் நாளையிலே
சத்திய வாய்மை தவறாக வேதமுனி
நாற்றிசையுங் கொண்டாடும் நன்னகரி தன்னில்வந்தார்
வாழ்த்தி யடிபணிந்தார் மகுடமுடி மன்னரெல்லாம்

இருக்குந் தருவாயில் இளவரசு தான்விளங்க
உருக்கமுடன் கண்டு ஒழுக்கமாய்த் தெண்டனிட்டார்
போற்றிச் சினமேசன் பூரித் தகமகிழ்ந்து
ஏத்திச்சிங் காசனத்தில் இருத்தியே தான்வணங்கி

கனிவகைகள் சர்க்கரைதேன் கற்கண்டு சீனிமுதல்
இனிய பலாக்கனியும் இன்பமுள்ள மாங்கனியும்
வாழைக் கனியும் மாதளையின் தன்கனியும்
தாழைக் கனியுஞ் சகலகனி யுள்ளதெல்லாம்

கொண்டுவந்து வைத்துக் குருவே சரணமென்று
தொண்டுபண்ணி நின்றான் தொழுது மிகவணங்கி
நல்லதொரு வேதமுனி ராசனையுங் கொண்டாடி
வல்லதொரு மாங்கனிதேன் வாரி யமுதுசெய்து

---

1. தவசிருக்கு

தாகமது தீர்ந்து தபோதனரும் வீற்றிருந்தார்
நாகரீக மானதொரு ராசன் செனமேசன்
தாகமுடன் வேதமுனி தன்னிடத்தில் வந்துநின்று

**விருத்தம்**

பாரத முடியு முன்னாள் பயின்றதோர் வேத மெல்லாம்
ஏரதி லாதி யாக விநாயகன் கோடு கொண்டு
சீரது சிறக்கக் கீறி செகந்தனில் வேந்தர் தானும்
போரது முடிய வென்று புகன்றவர் தேவர் தாமே!

குருகுலத் தோர்க ளெல்லாம் குருவென்று வந்து தோன்றி
கருவுல கத்திற் காட்டிக் காசினி ஆளு மென்று
அருகுதா னிரித்துப் புத்தி அறிவுடன் தெளிவு சொல்லி
பெருகுசீர் புவனந் தன்னால் பெரும்பகை முடித்தாய் போற்றி

பஞ்சவர் நூற்று வர்க்கும் பகையது வருவ துண்டோ
அஞ்சலென் றமர்த்தி யேநீர் தீவினால் விரைஞ் சொல்லி
மிஞ்சவும் பகைசெய் வாரோ வேதமா முனியே உந்தன்
வஞ்சக மல்லாமல் மற்றொன்று வருவது முடியு மோதான்

**நடை**

எத்திசையும் கொண்டாடும் எங்கள் குலத்தரசே
சத்திய வாய்மை தவறாத மாமுனியே
சீரான ஐவருடன் சிறந்ததிரி யோதனனும்
பாராளும் நாளில் பகையளொன்றும் வாராமல்

தாராள மாகத் தன்மையிடம் சேகரமாய்
பேரான பூதலத்தில் பேதமொன்றும் வாராமல்
மார்க்கப் படுத்திவிக்க வாராதோ உன்தனக்கு
தீர்க்கமுடன் முன்னாள் திரிகாலத் துள்ளபலன்

இன்னபடி என்று ஈஸ்பரர்முன் தானுரைத்தீர்
சொன்னமொழி தப்பாமல் தோன்றினது மேருவினில்
எழுதும் விநாயகனே என்றிறையோன் முன்கூட
தொழுது விநாயகனே சொன்னதொன்றுந் தப்பாமல்

ஒருகோம் பொடித்தெழுதி யூணிவித்தா ரும்முடசொல்
பெருகு புகழ்வேத வியாசரென்று பேருமிட்டு
நிகரில்லா வேதாந்தம் நிலைகண்டு நின்றோனே
புசருமொழி கேளாத பேருமுண்டோ பாருலகில்

குருகுலத்தோர்க் கெல்லாங் குலக்கொழுந்தாய் நீரிருந்து
அருகிருந்து புத்திசொல்லும் அரசனு[1] மாயிருந்து
விண்ணவரே நட்டி வேதியரே சொன்னீராய்
மன்னவரும் வாழாமல் மாளுவரோ பூவுலகில்

எந்தவித மோகிருபை ஏதென் றறியேனே
உந்தன் விநோதம் ஒருத்தருக்குந் தோத்தாது
வஞ்சனைகள் செய்தீரே மாமுனியே இப்படித்தான்
உன்செய லல்லாது உலகத்தில் வேறுமுண்டோ

தோராத் துரோணர்மிகுஞ் சொல்லுங் கிருபாசாரி
தாரா திரியோதனனும் தம்பியரும் நூத்தொருவர்
மற்றுமுள்ள மன்னர் மகுடமுடி வர்த்தனரும்
சுத்தமொரு ராச துரைமக்க ளுள்ளோரும்

எண்ணவொண்ணாச் சேனைதளம் எடக்குரோணி சேனையும்
மண்ணாசை யத்து மாண்டிருந்து போனதெல்லாம்
உம்மாலே யல்லோல் ஒருவர்மேல் குற்றமில்லை
அந்நாளில் ஐவருக்கும் ஆமென்ற காரியந்தான்

தெரிய வகைசொல்லி செப்பினீ ராமாகில்
பிரியா திருந்து பேதமற்று வாழாரோ
இருந்தாரே நூற்றொருவர் இருந்தாரே பஞ்சவர்கள்
சிறந்திருந்து பஞ்சவர்கள் திடத்தோடே இப்போது

விந்தைகிரி வைகுண்டம் விரும்பியவர் சேர்ந்ததென்ன
அந்த வகையெனக்கு அறியவே சொல்லுமய்யா
சொல்லுமென்று கேட்டுத் துரைசென மேசனுந்தான்
சொல்லுகிறேன் கேளும்தோத்தமுட னுள்ளதெல்லாம்

---

1. ஆசானும் எனல் வேண்டும்

மூன்றுலகி லூள்ளோர் முன்னாளி லுள்வினையை
மீண்டொருவ ராலும் விலக்கவல்லோ ருண்டோதான்
ஆகையி னாலே யவர்கள் செய்த தீவினையால்
மாய்கையாய் வந்து விளைந்ததுகாண் கர்மவினை

நின்று சினமேசன் நினைவாகத் தான்கேட்டு
நினையாதெல் லாம்நினைந்து நெடுமூச்சுத் தாமெறிந்து
தினையைப் பனையாக்கித் திரணமதை மேருவாக்கி
கைகொடுக்க இல்லாமல் கால்வேறு தலைவேறாய்

மெய்க்கரும மில்லாத விகடமதைத் தான்மூட்டி
ஆட்டிய பாவைதனை ஆட்டிவிட்டுப் பார்த்திருந்து
மூட்டி வினைசெய்த முனியே இனிக்கேளும்
தன்மரென்று பேரெடுத்துத் தாரணியில் இல்லாமல்

கர்மமெனச் செய்தவரைக் காசினியில் தன்மரென்று
என்னவென்று சொல்லி எடுத்துரைப்ப னய்யாவே
தன்னையு மற்ற சனமும் இனமுமற்று
இன்மைதனில் தான்வாழ்ந்து எல்லோரு மாண்டிறக்க

வன்மம் பிடித்து வதைசெய்த மாயாவி
வந்தார் வைகுண்டம் வானேறிப் போனதென்ன
சொல்லுமய்யா எந்தனக்கு தேற்றமெல்லாம் நீயாக
வெல்லும் விதியும் விதிப்பயனும் தானாக

எத்துமொரு விபர மினியொன்றுங் காணேன்காண்
தோத்துதுகர ணெனந்தனக்குத் தோசமெல்லாம் நீயெனவே
புரையுடைய தன்மரென்றும் பொய்சொல்லா மெய்யரென்றும்
நிறையுடையா ரானால் நீருரைத்த புத்திதனை

கேளாரோ சற்றுங் கிரியையொன்றும் பாராரோ
வாழாரோ பாரில் மைந்தரொடுஞ் செல்வமுமாய்
தீன்மை[1] செய்தார் மாண்டு தேசமதை இழந்தாலும்
நன்மைசெய்தார் பாராண்டு நாளு மிருக்காமல்

---

1. தீமை

ஏன்தான்காண் பாரிழந்து ஏகினர்காண் வைகுண்டம்
நான்தான் புவியாள ஞாயமோ என்தனக்கு
பாரதப்போ ருண்டு பகைமுடிக்க முன்னாளில்
மேருதனில் தானெழுதி விதித்தவரும் நீரல்லவோ

நினைந்த படிமுடிக்க நீர்துணிந்த தல்லாது
மனந்தனையே புண்ணாக்கி வருத்துரைக்க னாமேது
புத்திதனைச் சொல்லிப் பொருந்த நினையாமல்
சத்துரு வாய்முனியே சற்பினையள் செய்தீரோ

தாராரும் வேந்தர் சமரில் மடிந்ததெல்லாம்
பாராய் முனியே பாவமெல்லா முந்தனக்கு
சாராமல் சார்ந்துதுகாண் தப்பாமல் சொன்னேனே
தீராத பாவமினிச் செய்தீர்காண் மாமுனியே

என்று சினமேசன் விவரத்தைத் தானுரைக்க
நன்றுகா ணென்று நகைத்துமுனி யேதுசொல்வார்
தம்பியரே இப்படிநீ சமத்தாகப் பேசினதால்
எம்பி யெனைக்கேளும் இதமாகச் சொல்லுகிறேன்

வெம்பி யெனையுரைத்தாய் விட்டகுறை பாராமல்
நம்பி உயிர்கொல்லும் தன்மைதனை நோகாமல்
தலையி லெழுதிவைத்த சதுர்முகனைச் சொல்லாமல்
கொலைசெய்யும் ருத்திரனைக் கூர்ந்துநீர் சொல்லாமல்

மாய்கை பலசெய்யும் மாயனையுஞ் சொல்லாமல்
தாயகமாய் நன்மை சலித்துநீர் சொன்னீரே
உள்ள விதியெனவே ஒருமித்துச் சொல்லாமல்
காளி பலிகொண்ட சூதையுற்றுப் பாராமல்

பத்தியாய் நம்மிடமேல் பருஞ்சுமையைத் தானேத்தி
முழுதுஞ் சுமைதலையாய் மொழிந்தீர் வகைகேளும்
சுற்றும் வினைவந்து சூழ்ந்ததைச் சொல்லுகிறேன்
கொற்றவனே கேளுமென்று கூறலுற்றார் மாமுனியும்

மன்னாகேள் நூற்றுவர்க்கும் வந்ததொரு பஞ்சவர்க்கும்
முன்னாளில் புத்தி மொழிந்திலையே யென்றுரைத்தாய்
துயர்ந்தவர்க்குப் புத்தியது சொன்னேனே சொல்லலையே
நயந்தவருங் கேளாமல் நம்மையவர் தான்மீறி

சூதுங் களவுந் துற்புத்தி வஞ்சினையும்
வாது மயிர்பிடியும் மல்கட்டுங் கற்பினையும்
தாயாதி பாராட்டிச் சற்பினைய ளேவிளைத்து
வாயாத ஞாயம் வாய்க்க உபாயமிட்டு

உள்வஞ் சினைகள் உபாய மினநினைந்து
கள்வரோடு நூத்துவரும் காரிட மேபெரிதாய்
உபகாரஞ் செய்வதுபோ லுடந்தையாய்த் தானிருந்து
அநியாயஞ் செய்யும் அநியாய நெட்டூரம்

வஞ்சனையே முற்றும் மாபாவி தானினைக்க
பஞ்சவர்கள் சற்றும் பதையா தொதுங்கிநிற்க
அஞ்சின பேர்வாழ்ந்தார் அகந்தைசெய்தார் தான்மாய்ந்தார்
நமக்குப்புத்தி யுள்ளதெல்லாம் தாமவர்க்குச் சொல்லலையோ

அடக்க மவர்க்கில்லை வெகுஅகந்தை யேயல்லாது
சொன்னபடி கேள்ப்பார்கள் தூயதொரு பஞ்சவர்கள்
என்னசொன் னாலுமிவன் கேளான் மாபாவி
வாதுசொல்லிப் பஞ்சவரை வகையாய் வரவழைத்து

சூது பொருதவென்று துரத்திவிட்டான் கானகத்தில்
கானந் திரிந்துஇவன் கண்ணுக்குங் காணாமல்
தான தவமேலாய்த் தன்மம் பெரிதாகி
ஞான சிவகதையள் நற்கேள்வி நல்வசனம்

மானஅபி மானமுடன் வனவாச மேயிருந்து
அங்குஞ் சிலதுன்ப அனியாய மேநினைந்து
எங்குந் திருமால் இவர்வச மாயிருந்து
காத்தார் வினைதீர்த்தார் காயாம்பூ மேனியனார்

ரத்தார் முழுவதும் ஈடேறப் பஞ்சவர்கள்
காட்டி லிருந்து கஞ்சனுக்கு வேளைவரில்
தாட்டிக மாய்வில்லி தற்காத்து இவன்தனையும்
மீட்டிவனைக் கொண்டு வெளியேறி விட்டாலும்

நாட்டில் வராதேயென்று நடுங்க மொழிந்திடுவான்
தீதுசெய்தான் பாவி திரியோ தனன்றானும்
ஏது மறியாம லிருப்பார்கள் பஞ்சவர்கள்
பொறுத்தா ரரசாண்டர் பொங்கினார் காடுறைந்தார்

ஒறுத்தார்கள் பஞ்சவர்கள் உறைந்தார்கள் நூத்துவர்கள்
அகந்தை அழிந்துதுகாண் ஐவரால் குற்றமில்லை
முகந்தனிலே சூதுபண்ணி இகந்தனிலே மாண்டார்கள்
இப்படியாய் வந்ததுக்கு என்னைநீபஞ் சொன்னாயே

சொல்படி கேட்டறிந்து துர்ப்புத்தி விட்டாரோ
தம்பிசினமே செயனே தார்வேந்தர் நீர்தானு
வெம்பி மனம் வெகுண்டு விடவிடவும் சொன்னாயே
கேட்டீரோ ஞாயம் கேடுகெட்டார் தன்வசனம்

போட்டீரோ புத்தி புலையாட்டோ பேசுகிறீர்
இவ்வசன மாமுனிதான் எடுத்துரைத்த ஞாயமதை
அவ்வசனங் கேட்டு அரசன் சினமேசன்
வாரீர் மாமமுனியேஉன் மந்திர தந்திரமும்

பாரீர் புவிதனிலே பஞ்சவர்க்கும் நூத்துவர்க்கும்
வின்னமது பாராமல் விற்பனமாய் உள்புகுந்து
தன்மையே பாராட்டித் தாக்கியே சொன்னீராய்
இத்தனைக்கு மிந்திரங்கள் ஏதொன்றும் வாராமல்

கர்த்தனே தோத்தாமல் கண்காட்சி பார்த்துவிட்டீர்
சுத்தமுந்தன் தோத்திரத்தைத் துன்பம்வந்து சூழாமல்
சித்த மதில்சகிக்கத் திரணமுமக் கில்லாமல்
இருந்தவசி யானாலே இன்பதுன்ப மில்லையோதான்

அருந்தவசி யாயிருந்து அறவே தயவுமிலை
அவர்களுக்குக் காலபிலன் அடவுநீர் சொல்லாமல்
இருந்ததனால் மாண்டார்கள் ஏதொன்றுந் தோத்தாமல்
வருந்தினா லேதும் வாராத கருமமுண்டோ

வேந்த னிவைசொல்ல வேதமுனி யேதுசொல்வார்
பூந்தே ருடைய போர்வேந்தே இப்போது
யாகம் வளர்க்கவென்று அரசே நினைந்தாயே
பாகமுடன் யாகமது பரியாது உந்தனக்கு

ஏத்த பிரமகத்தி இயலாய்ப் பிடிக்குதுகாண்
மாற்ற உனக்கு வகையுண்டோ ஆமாகில்
என்னைச் சலித்தும் என்னளவுங் குத்தமில்லை
பின்னை யுனக்குத் தெரியும் பெருமையினால்

உள்ளபடி சொன்னோர் உற்பனமா யுந்தனுக்கு
வள்ள லறிய வாழ்த்துகிறோ மிவ்வசனம்
போறோம் புவிவேந்தே பொன்னுலகந் தான்சேர
வாரோ மினிமேலும் மன்னாஉன் தன்னிடத்தில்
என்றுசொல்லி மாமுனியும் ஏகினார் அம்மானை

அன்றுசின மேசனனும் அவரை நமஸ்கரித்து
அனுப்பிச் சிலகாலம் ஆண்டிருந்தான் பூலோகம்
தனுப்பிடித்த கையான் தாரார்சென மேசயனும்

யாகம் வளர்க்கவென்று அவனியெல்லாந் தானறிய
சேகரமா யுள்ள செல்லுந் தளவாடமும்
வரவேணு மென்று மந்திரிமார் தன்னுடனே
துரைவேந்தன் தானும் சொல்லலுற்றார் அம்மானை

திறமுடைய மந்திரிமார் தேசத்தி லுள்ளோர்கள்
பாவ சனமாகப் பார்வேந்தர் சொல்படிக்கு
அந்தப் படியே அவனிதனி லேஇருந்து
வந்த தளவாடம் மற்றுமுள்ள எல்லாந்தான்

சிராகச் சேகரித்துத் தெய்வப் பிராமணரை
நேராக ஆயிரம்பேர் நிருவாக முள்ளோராய்
வாக்குடனே தானழைத்து வளர்ப்பதற்கு யாகமதை
ஆகுதியள் செய்ய ஆவினுட நெய்யாக

நூறு குடநெய்யும் நெடிக்குமுன்னே தானழைத்து
வீறுடனே யாகம் வேதியரே செய்யுமென்றார்
சாலை யதுமுடித்துச் சதுரமெனப் பந்தலிட்டு
ஆலையமாய்ச் சூதானம் அந்தணருந் தானிருக்க

விலாச மாயுண்டு பண்ணுவித்தா ரொருநொடியில்
பலாசு மரம்பிளந்து பலகைவகை சோடினையாய்
அரசுபலா மாவிலுப்பை ஆல்விறகு தெர்ப்பையுடன்
புரசு முதலுள்ள புங்குசங்கு வேணதெல்லாம்

சேகரித்து வைத்து செனமேசன் தான்முழுகி
யரகத் தடியில்வந்து அந்தணரைத் தெண்டன்பண்ணி
வேதியர்க்கெல் லாமிசைய வேணுமென்று வஸ்திரமும்
நீதியுடன் தான்கொடுத்து நிருவாகம் பண்ணுமென்றார்

அக்கினியை யுண்டுபண்ணி ஆகுதியைத் தான்கொடுத்து
மெய்க்கனியு மந்திரங்கள் வேதியருந் தான்துதிக்க
சூழவே தானிருந்து சொல்வார்கள் வேதமந்திரம்
வாழ்பீமன் பேரனையும் வாருமென்று தானழைத்து

பலகை தனைப்பரப்பிப் பரிசித்து மைந்தனுக்கு
இலங்குமணி ரெத்தி னாசனமே லிருத்திவைத்து
பூசையசியம் பண்ணுமென்று புகழ்ந்தார்கள் வேதியர்கள்
நேச முடனிருந்து நேமமுட னெல்லோரும்
வாசனையாய்ச் செய்யுமென்று வகுத்துரைத்தா ரம்மானை.

ஆசனத்தின் மேலிருந்து அட்சதையுந் தான்வாங்கி
யாகத்தை நோக்கி அன்புற்றுத் தானிருந்து
வரகொத்த தெர்ப்பை வாங்கி இருக்கலுற்றார்
அழகு மதியாகம் அக்கினியுந் தானெழுந்து

புளகமதாய்த் தான்வளரும் பூவான யெச்கியமும்
ஏக்கியத்துத் கேத்த இதவான நெய்க்குடமும்
முக்கிய மாக முடிந்துவர யாகமது

### விருத்தம்

முன்னாள் முனிவன் சொல்படிக்கு முடிக்கும் யாகந் தனிலேதான்
இன்னாள் மயக்கம் வருவதற்குள ஏதோ மறையோன் போலிருந்து
சொன்னான் வேதம் யாகமதில் தூக்க மிகவே துயனசந்து
தன்னால் மயங்கி விழாமல் சன்னை சொல்வான் தார்வேந்தன்

அய்யோ மறையோன் வேதியன்தான் அசந்து விழுவான் என்றெண்ணி
கையால் தர்ப்பை தனைக்கொண்டு கழுத்துப் பிடரி யில்துடவே
மெய்யம் புலிதான் பாய்ந்துதென்று வெருவிப் பயந்து மறையோனும்
நெய்யி லெரியுஞ் சுடர்தனிலே நேராய் விழுந்து நிமிர்ந்தானே ?

### நடை

அருகிருந்து சாத்திரங்கள் அனுப்பட்டிக்கு வேதியர்கள்
ஒருவ னடுவிழுந்து ஓமத்தீ முன்னிலையாய்
அசதிவந்து பார்ப்பான் அசந்துகண்ணைத் தான்மூடி
நித்திரை கொண்டு நிலத்தில்விழு வானைப்போல்

மித்திரமாய் பார்ப்பான் மெய்ம்மறந்து கொண்டசந்து
உறங்கித் தலைகவிழ்ந்து ஓணான் அசந்தாப்போல்
திசங்களு மத்தலைந்து தேகம் விழுவதுபோல்
அந்த உறக்கமதி லானதொரு சொற்பனமும்

வந்த வழிதன்னில் வலியகடு வாய்ப்புலியும்
எதிரி மரித்து இவனைவதை செய்வதுபோல்
அதுக்கி விழித்து அதட்டிப் பயமுறுத்தி
பிடிக்கிறாப் போலே பிராமணனுந் தான்பயந்து

நடுக்கி உடல்பதறி நஞ்சுண்ட மீன்போலே
இருக்குந் திறமதனை இளவரசு தானறிந்து
வற்கமுள்ள யாகம் வளர்க்கவென்று வந்திருந்தோம்
அதுக்கு விகாதம் தன்னாலே இப்போது

ஏதுக்க விருந்து இசைகேடு தான்முடிய
பாத்திருக்கப் போகாது பாவம்வரு மென்றுசொல்லி
ஏத்திருக்குந் தெர்ப்பையினால் நினவுவரு மென்றுசொல்லி
காட்டுப்புலி பாய்ந்துதென்று கலங்கி உடல்பதறி

மாட்டினான் தீயில் மடிந்தான் பிராமணனும்
ஆட்டிக் குதித்து அந்தணனுந் தீயில்விழ
கண்டு சினமேசன் கலங்கி முகம்வாடி
பண்டு வியாசர் பகர்ந்த மொழிப்படிக்கு

வந்ததுதுகாண் பாவம் மதியை விதிவிலக்கித்
தந்துதுகாண் யாகபலன் சனியன் பிடிக்கவென்று

வெந்து மனமிடைந்து விறுமையது தான்பிடிக்க
இந்து வில்லாத இருளதுபோல் தான்மூழ்கி
மாய்கை பிடித்து மனுநீதி யைமறந்து
பேயன் பிடித்து விறுமைகொண்டான் அம்மானை.

மன்னன் சினமேசன் மாய்கை பிடித்திருந்து
தென்னவர்க ளெல்லாந் தீவினை யென்றுசொல்லி
அழுது துயரம் அருந்துயரம் வந்துநொந்து
நீறாகி வெந்து நெஞ்சமெல்லாம் புண்ணாகி

என்செய்வோ மென்று ஏங்கிப் பரதவித்து
முன்செய்த தீவினையே முனிவர்தன் சொல்படிக்கு
எந்த விதமோதான் இடையூறு தான்முடிந்து
வந்த விதமறியோம் மகாதேவா வென்றயர்ந்து

செய்யு மருந்துகள்தான் தேசத்தி லுள்ளதெல்லாம்
வையுமென்று பண்டிதர்கள் வைத்த மருந்தாலும்
சற்றுங்குண மில்லாமல் தலைசுத்தி யாடுகையால்
பித்தங் கலங்கிப் பிதற்றுகிறா னென்றுசொல்ல

கலிக்கம் உரைத்துக் கண்ணிலிட்டும் ஒன்றுமில்லை
பலிக்க நசியமிட்டுப் பார்த்தாலும் ஒன்றுமில்லை

தலையில்க் குடோரித் தயிலம் தனைத்தேய்த்து
மருள்பிடித்து தென்று மந்திரங்கள் சொல்வாரும்
இருள்பிடித்து தென்று இந்திரங்கள்[1] கட்டுவாரும்
செய்யா விநோதமெல்லாம் செய்யலுற்றா ரெல்லோரும்

அய்யோ சிவனேயென்று அபயமிட்டுச் சொல்வாரும்
மயேசுர பூசை மறையோர்க்குப் போசனமும்
வெய்யோனுக் குள்ள விளங்கும் பொங்கலுமேதான்
அகுதிபர தேசியர்க்கு அன்னமிகத் தான்கொடுத்து

நீதியுடன் தானதவம் நேசமுடன் கோவில்குளம்
சத்திர மடங்கள் சாலையளும் தானும்வைத்து
நால்வேத சாத்திரமும் நாளும் விளங்கிவர
சித்திரமாய்ப் பூசைபலன் செய்வா ரனுதினமும்

வாகாய் மறையோர்க்கும் மாறாமல் நித்தியமும்
பால்தயிர்கள் நெய்யன பருப்புமுதல் அரிசிகளும்
பாகாய் முறைப்படியே படியளந்து வேதியர்க்கு
தானதவஞ் செய்வார் தவிப்பார் பரதவிப்பார்

ஞான சிவபூசை நடத்துவார் தாட்சியர்கள்
தேசத்தி லுள்ள சனமுஞ்சின மேசனுக்கு
வேசத் திருந்து மெய்மறந்து கைசோர்ந்து
பாருலகந் தாங்கும் பரீசித்து மைந்தனுக்கு

தாருலரு மேனியரே கர்னரே இப்போது
தீதுவரக் காரியமேன் செய்த தவக்குறையோ
வந்துசெய்த[2] மாமுனியும் வாராரோ இப்போது
ஏதுசெய்வோ மென்று இருக்குந் தருவாயில்

பராசர மாமுனிவன் பயின்றதோர் புத்திரனும்
சராசர வேத சகலகலை வல்லவனாய்
வேத வியாசமுனி மேதினியி லேநடந்து
போதமா யத்தி புரந்தனிலே வந்தார்காண்

1. யந்திரம் (தகடு) 2. வந்து சென்ற

வந்தமுனி பாதம் மன்னரெல்லாந் தான்வணங்கி
இந்த விகாத மிவனுக்குவந்த கர்மவினை
தீர்த்தருள வேணுமெனச் சினமேச ராசனுக்கு
காத்தருள வேணுமய்யா கடவுளே காரணரே

சிறியான் அறியாது செய்தபிழை யேபொறுத்து
வெறிபோகப் பாருமய்யா வேத வியாசரரே
என்றுமன்னர் சொல்ல இறையோனுந் தானுரைப்பார்
ஒன்று மறியாமல் உரைத்தீரே மன்னவரே

நாமேது செய்வோம் நாட்(டு)ம் விதிதனக்கு
போமேது செய்தாலும் போமோ விறுமையது
அல்லவே சொல்லுகிறோம் அந்தப்படி அவன்தானும்
சொல்லவே கேட்டானானால் துயர்விறுமை தீர்ந்துவிடும்

முன்னாளில் பஞ்சவர்கள் மூண்டு சமர்பொருதி
பின்னாளில் பாரதப்போர் வென்று முடிந்தகதை
சொல்லெனவே கேட்டால் சுருதி யதுவிறுமை
தீருமென்று மாமுனியுஞ் செப்பினார் அம்மானை

நல்லதென்று சொல்லி நடத்தினார் பாரதகதை
மல்லென்று போர்வீமன் வாகாய்ச் சமர்தனிலே
மதகெசங்கள் தன்னை வாரி யெடுத்தணைத்து
சத்தமுகில் தான்கடந்து சரவேக மாவெளியில்

போயச் சுழலு தென்று பூரித்தான் பாரதத்தில்
வாயுச் சுழியில் வளைபட்ட மத்தகெசம்
வாராம லங்கே மறித்துதென்றா னந்தரத்தில்
சீரார் சினமேசன் செவியுறவே தான்கேட்டு

பொய்யென்று சொன்னான் புத்திசத்து மில்லாமல்
பொய்யென்று சொன்னளவில் வெளுப்பாக மேனியெங்கும
மெய்யெங்குந் தூவி வெண்பரிதாய்க் கண்டதின்னம்
இதுவகையள் தானேது எண்ணமென்று கேட்டளவில்

---

1. பிரமை - பிரம்மஹத்தி

அதுக்கு வகைதானும் அறிந்தோ ரெடுத்துரைகக
புத்தியென்று கேள்க்கப் பொருந்தி மதியுடனே
பத்தியாய்ப் பாரதத்தைப் படிப்படியாய் இன்றொருக்கால்
கேட்டீரே ஆனால் சிலேசமெல்லாந் தீர்ந்துவிடும்

நாட்டி மனதையதில் நடுவே நிதானமதாய்
என்றுரைக்க வேபெரியோர் இன்பமதாய் வந்திருந்து
அன்று சினமேசன் ஆமென்று பாரதத்தை
அடியைப் பிடியடா பாரதப்பட் டாவெனவே

முடியுமட்டுந் தான்கேட்டு முற்றிலுமே ஆராய்ந்து
வெள்ளையுந் தீரலையே வேந்த னிவன்தனக்கு
கொள்ளை விறுமையது குறையறவே போறதுக்கு
ஐவர் அரசாண்டு அவனிவிட்டுத் தானேகி

செய்யும்புகழ் வைகுண்டஞ் சேர்ந்தகதை தான்கேழ்க்க
பாரும் புதுமை பலிக்குஞ் சலிப்பறவே
கரும்பட்டுப் போர்த்துக் கருத்துடனே தான்கேட்டால்
அரும்பட்டு வெண்பட்டாய் ஆகுமது தப்பாது

அப்போ விறுமை அகன்றிடுந்தான் கண்டீரே
இப்போது கேளும் இன்பமுற்றுத் தானிருந்து
என்றுமுனி சொல்லி பகினர்காண் அம்மானை

நன்றுகா ணென்று நமஸ்கரித்தா ரெல்லோரும்
ஆமென்று சம்மதித்து அறியோ[1] மெனவேதான்
ஓமென்று சொல்லி உத்தசின மேசனனும்
**வைகுண்ட அம்மானை** வாகுடனே தான்கேழ்க்க

செய்கின்ற சாஸ்திரங்கள் சிறப்பாகத் தான்முடித்து
அம்மானை யாடிவித்து அந்தக் கதைதனையும்
செம்மாம் தரித்த சிவனருளே உண்டெனவே
கதைமுகமுங் கேழ்க்கக் கருத்திலுற்றான் மன்னவனும்

---

1. அரி ஓம்

நெஞ்ச மசையாமல் நினவுதடு மாறாமல்
அஞ்சுபஞ்ச பூதமும் அடக்கிப் பொறுப்பவனை
வெறுத்த காம வெகுளிதனை விட்டேகி
கருட மனசான கசடுதனை ஊடறுத்து

ஏக மனதாய் இருதயத்தைச் செப்பனிட்டு
ஆகமுடன் கேள்க்க அரசன் கொலுவிருந்தான்

**விருத்தம்**

வேத வியாசர் முன்னாளில் விளம்பும் வசன முள்ளபடி
சேத முழுதுஞ் சிறப்புளதுந் தெளிந்து பார்க்கச் சமனிதமாய்
பூத மைந்தும் தைரியமாய் புவன மிருந்தும் (மெய்ப்போலே)
நீத மிருந்தும் நெறியிருந்தும் நிலையா வண்ணம் எளிதாச்சே

விதித்த விதியைப் பாராமல் வேத வியாசர் தனைநோக்கி
எடுத்துச் சேதி கேட்டபலன் இப்போ நமக்குப் பலித்துதென்று
மதித்து நினவில் சினமேசன் மனது கலங்கித் தெளிந்தறிவாய்த்
துதித்துப் புகழ்ந்து முனிதனையும் சொன்னான் மனது
மகிழ்ந்துசொன்னான்

சொல்லிய கதையைக் கேழ்க்க சுத்தமாய் மனதைத் தேத்தி
பல்லிய வசன மெல்லாம் பரிவுடன் தெரிய நன்றாய்த்
துல்லிய மாகக் கேட்டுத் துயரத்த விறுமை போக
மெல்லிய பட்டுப் போத்தி வீத்திருந் தரசன் கேழ்க்க

கருநிறப் பட்டு போர்த்திக் கதைதனை யுத்துக் கேட்டால்
கருநிறம் வாங்கி வெள்ளை கதித்த வெண் பட்டா மாகில்
வருமொரு விறுமை நீங்கி மனத்துயர் தீரு மென்று
குருமுனி யுரைத்த நேசங் குணமெனக் கொண்டான் மன்னன்

**நடை**

வாகுடைய பஞ்சவர்கள் வைகுண்டஞ் சேர்ந்தகதை
பாகுடைய சொல்லான் பரீசித்து ராசன்மகன்
சீரான் சினமேசன் சித்தமகிழ்ந் தன்பாக
நேராகக் கேழ்க்க நீலவண்ணர் காப்பாமே

ஓதுபுகழ் இக்கதையை உரைக்கவே தான்கேளீர்
மாது சரசோதி வாழ்த்துகுறே னிக்கதையை
மேரில் விநாயகனார் விரித்தெழுதும் வேதாந்தம்
பாரிலுள்ளோர் கேழ்க்கப் படிக்கிறே னம்மானை.

ஐவர் சகாயன் அரிகேச வன்முகுந்தன்
சய்வர்[1] சகாயன் தாமோ தரனிருக்கும்
அரிய வைகுண்டம் அடைவோ மெனவேதான்
உரியதொரு ஐவர் ஒருவித்து ஓர்மனதாய்

வடக்கு முகமாக வடமேற் கொருபுறமாய்
தன்மருடன் தம்பியரும் தாராள் துரோபதையும்
தர்மத்தை விட்டகன்று கங்கைக் கரையில்வந்தார்
கெங்கை யதுகண்டு கையில் புனலேந்தி

மங்கை துரோபதையும் வாகான ஐவருமே
தலையில் புனல்தெளித்துத் தாயே சரணமென்று
அலையில் தலை முழுகி அனுஷ்டானந் தான்முடித்து
ஆதித்தனைப் பூசைபண்ணி ஐவ ருகிருந்து

சாத்திரத்தால் வேத்துருவுஞ் சன்னாசி வேசமுமாய்
சாந்த மாவுரியுஞ் சடையுந் தானாகி
பாந்தமாய் வேடம் பருவமுடன் தான்முடித்து
பாராசை தானுமற்றுப் பைங்கொடியாள் தன்னைவிட்டு

மாதாவி னாசையத்தும் மந்திரிமா ராசைவிட்டு
மீதான கானகத்தே விரையவே சென்றார்காண்
அப்போது மாயன் அவர்மனதைத் தேத்துதற்கு
இப்போ தெதிரே இவர்காண வேகலியன்

தன்னுடைய மாதா தலைமேல் சுமையேத்தி
மன்னு மனைவிதன்னை வார்புயத்தின் மேலேத்தி
வந்தவனைக் கண்டு மன்னுதர்மர் வாய்புதைத்து
இந்தவகை தம்பி ஏதோ சகாதேவா

---

1. சைவர்

கண்டோம் புதுமைஅய்யா கலியுகமே யாகையினால்
அண்டிப் பெருஞ்சுமையை அன்னைதலை மீதேந்தி
பெண்டுதனைத் தோளேத்திப் பெருமையாய் வந்தான்பார்
பண்டு மொழிதவறிப் பழுதுவரு மோநமக்கு

மாநகரை விட்டு வந்தவகை யாய்ப் பிழைத்தோம்
ஆனதம்பி மாரே அரிகேச வன்பதத்தை
நன்றாக உச்சரித்து நம்பியே என்பிறகே
குன்றாத மனதுடனே கோபால ருண்டெனவே
தார்மேவுந் தம்பியர்க்குத் தைரியமாய் வார்த்தைசொல்லி
சீர்மேவுங் கானகத்தில் சென்றுபுக்கார் அம்மானை.

கல்லு முருகிவிடும் கடுவிடமும் கவிழ்ந்துவிடும்
புல்லும்புகைப் பாலைவனம் போய்ப்புகுந்தார் அம்மானை.

மேலவர்கள் தன்பதமும் மின்னனையாள் தன்பதமும்
பூவிலுமே லாவி பொறுக்காம லேயுரைப்பார்

**விருத்தம்**

தேச மிழந்தும் பாராமல் செடத்தை மிகவே தான்சுமந்து
ஆக மிழந்து வருவோர்தம் அடிகள் சுடுமோ கோபாலா
தாக மிழந்து தவிப்பிழப்பு சாரா துடலில் தயவுசெய்து
மேகஞ் சிறந்த மேனியனே விடைதான் நந்த கோபாலா !

ஒன்று மறியோம் பொருளறியோம் உன்னை யல்லா
லுணர்வறியோம்
நன்று மறியோம் தீதறியோம் நந்தா முகுந்தா நரசிங்கா
அன்று சகாய மிருந்திருந்து அடியார் தங்க ளிடர்தீர்த்தாய்
குன்று மனங்கள் குன்றாமல் குடிகார் நந்த கோபாலா !

அடியார்க் கிடறு வாராமல் அருகே வருவாய் பிரியாமல்
வடிவேல் கந்தன் மாமனெனும் மாயா நேய முடனேதான்
கடிவாய் மிருகம் அகன்றோட கடிய சுரங்க ளணுகாமல்
நெடியோ னெனவே வந்தருள்செய் நீயே நந்த கோபாலா !

உருவாய் உருவி லுயிரோறி உடலில் புகுந்து தனதாகி
வெருவாய் குன்றி உரையாமல் வேறே வசனம் நினையாமல்
கருவாய் மயில்கள் பிடியாமல் காத்தாய் காத்த சிறையெதிர்முன்
வருவாய் அடியார் வைகுண்டம் வரவே நந்த கோபாலா !

மனது விறுமை பொல்லாது மாயக் குரங்கும் பொறிபுவனை
தனது தனது வெண்ணாமல் தானே தானாய்த் தனித்துமனம்
உனது பதியே கெதியாக உதவும் நந்த கோபாலா !
(மூன்று வரிகளே உள்ளன)

## நடை

கலக்கமில்லா தெங்களையும் கண்ணுதலே காத்தருளீர்
மைக்கண் மனம்விலகி வழிகூட்டி எங்களையும்
நடத்தும் பெருமாளே நாங்களொன்றுந் தானறியோம்
சடத்துக்குள் வாழ்ந்து தத்துவமே போற்றியென்று

நடந்தார் வனந்தனிலே நாராய ணாவெனவே
மடந்தையுடன் ஐவருமாய் மலர்ப்பாதந் தானோக
சோலைநிழ லில்லாத சுடுவனங்கள் தானுமொரு
பாலை வனங்கடந்து பஞ்சவர்க ளப்பாலும்

அருள்முனிவர் வாழும் ஆச்சிரமந் தான்பார்த்து
இருளிருண்டு வாரதினால் இரவியுமே போய்மறைந்தான்
கார்மேவும் வல்லிருளில் காவலர்க ளய்வருமே
பார்மீதி லேபளிங்குப் பாறை வழிநடந்தார்

கொள்ளிக்கு விள்ளாத கூரிருளி லேமலைத்து
தள்ளி வழிநடக்கச் சற்றுந் தெரியாமல்
மனதிடைந்து புண்ணாகி மாயோனைத் தானினைந்து
கனலில் மெழுகதுபோல் கானகத்தில் தானுழன்று

தம்பிமார் தன்துயரம் தானறிந்து தன்மருமே
எம்பிமார் தன்மனது யினியறிவோ மென்றுதன்மர்
அரண்டு மிகப்பயந்து ஆரணியம் போய்ப்புகுந்தார்
என்றுலகஞ் சொல்லி ஏசாம லிப்போது

மண்ணுலகந் தன்னில் வாழ்வீமன் மைந்தனுக்கு
சென்றுதவி யாகத் திரும்பியும் நால்வருந்தான்
சேந்து கலங்கிஇது சென்றுதவி யாயிருந்து
ஏந்துபரீ சித்துவுக்கு எதுத்தொருவர் வாதுசெய்து

கலியனும் வந்து கைகலந்து தானெருக்கி
வலியச் சருவி வளைத்துப்போர் செய்தாக்கால்
சிறுவன் வினையறியான் செருக்களத்தில் சென்றறியான்
ஒருபூசை செய்தறியான் உத்ததொரு பேருமில்லை

தானே தனியே தயங்கி மலையாமல்
தேனேஎன் தம்பியரே சேர்ந்து கலந்துகொண்டு
உத்தபரி சித்துமகன் உத்தசின மேசனுக்கு
வெத்தி¹செய்து நீங்கள் விரட்டிவினை யூடறுத்து

செங்கோல் தழைத்தோங்கிச் சினமேசன் தான்வாழ
அங்கே இருந்து அவனிதனை ஆளுமென்று
சீராருந் தன்மர் தெரிந்துரைத்தார் அம்மானை !

நேரா யிருந்த நேரிழையார் நால்வருந்தான்
மன்னாநீ ரெங்களையே மாநகரிலே போயிரென்று
அண்ணாவே நாங்கள் அபசாரஞ் செய்ததுண்டோ
கர்த்தனுட சித்தங் கலங்கின தெந்தவிதம்

பெற்ற பிதாவறியோம் பின்னையொன்றுந் தானறியோம்
இந்தமட்டும் எங்களைநீர் இடுக்கியே கொண்டிருந்து
வந்த வினைகளெல்லாம் மறுப்பட்டா தெங்களையும்
வளர்த்த மகிமைஇதோ வனந்தனிலே வந்திருந்து

ஆளுமுட னெங்களைநீர் அகலப்போ மென்றுசொன்னீர்
அய்யா குருகுலமே அண்ணலே என்றழுதார்
மெய்யாக நீரும் விட்டுப் பிரிகுவீரோ
எங்களையும் விட்டு இருப்பீரோ தான்தனியே

---

1. வெற்றி

தீங்கள் முகவதனா செப்புகின்ற வாறேது
சித்தத்துக் கோரத் தீவினைகள் செய்தோமோ
செங்கோல் செலுத்துமென்று தேவருட வாக்காலே
யெங்கள்மனம் பார்த்துரைக்க எழுந்துதோ சித்தமது

சணப்பொழுது உம்மைவிட்டுக் காலுந் தரிப்போமோ
கணப்பொழுதுங் காணாமல் தரிக்குமோ யெங்களுயிர்
அண்ணரே எங்களைத்தான் அவனிதனில் போவெனவே
எண்ணி மனந்துணிந்து இப்போ துரைத்தீரே

தம்பியரு மீதுரைக்கத் தன்மருந்தா னேதுசொல்வார்
அன்புடைய தம்பியரே ஆளுகின்ற தேசம்விட்டு
என்பிறகே வந்தால் இளவாசுக் காருமில்லை
சம்பி முகம்வாடித் தானிருப்பான் சிமேசன்

அரசு நிலைநிறுத்தி அவனிதனில் தானிருந்து
விரசுபைய அத்திபுர மேதினியைத் தானாண்டு
குருகுலத்தில் மன்னருடன் கோத்திரத்தில் தான்கூடி
மருவி யிருந்து வாழுமென்று தானுரைத்தோம்

அந்த மொழிகேட்டு ஆனதம்பி நால்வருந்தான்
இந்த மொழியுரைத்தீர் என்கோவே அண்ணாவி
மண்ணாசை பொன்னாசை மற்றுமுள்ள பெண்ணாசை
கன்றான மைந்தரொடு காசினியில் பேராசை

எல்லாமும் விட்டு இப்போது உம்முடனே
எல்லாரும் வைகுண்டம் சேரவென்று தானினைந்து
வந்தோ மவடம்விட்டு வைகுண்டஞ் சேரவென்று
சந்தோஷ மாய்வரவே சஞ்சலங்கள் சொன்னதேன்

ஆண்டவனே இப்போது அடியேங்கள் செய்தபிழை
நீண்ட பொறையுடைய நேர்சேரு மண்ணாவி
சரணஞ் சரணமென்று தாளிணையைப் பூண்டுகொண்டு
சரணமென்ற தம்பியரைத் தன்ம ரெடுத்தணைத்து

அடிகள் மிகச்சுடவும் ஆவி தளறிடவும்
கடிய மலைசுடவும் காலோய்ந்து நின்றிடவும்
மாய்கை இருளில் வழிதிகைத்து நின்றிடவும்
சாய்கைவிட்டு நின்று தட்டழிந்து நின்றிடவும்

பதியிழந்து கானில்ப் பரதேசி யாய்வரவும்
அதிசயப் பவுசிழந்து அரும்பசிகொண் டேவரவும்
நீங்கள்படும் பாடுகண்டு நெஞ்சம் பொறுக்காமல்
தாங்க முடியாமல் தானுரைத்தேன் தம்பியரே

இன்பமுடன் நீங்கள் என்பிறகே வந்தவரே
துன்ப மதுநினைந்து சொல்லுவனோ நான்பாவி
நாளுந் திருமால் நமக்குத் துணையாக
ஆளுங் குருசாமி அரியோன் பதஞ்சேர

நினைந்துவந்த நேசம் நிலைதவழு தோர்மனதாய்
மனந்துணிந்து வந்தியளே வைகுண்டஞ் சேர்வென்று
என்று சொல்லித்தன்ம ரேத்த துரோபதையும்
நின்று மனமுருகி நெஞ்சமது புண்ணாகி

கால்க ளடிசுடவும் கண்கள் பொறியளவும்
மேல்காது நொந்து மெய்சோர்ந்து கைசோர்ந்து
அருமை தலைகுலைய ஐவருடன் பின்னேதான்
பெருமை சிறுமையதாய்ப் பெண்ணரசே இப்போது

உரிமையுடன் வருவது உத்தமமோ எங்களுக்கு
தருமமது[1] பேரேது தயவுசற்று மில்லாட்டால்
ஆனதினால் பெண்கொடியே அன்னைதா னுன்மாமி
தான்வாழும் மாளிகையில் தான்தனியே இருப்பார்கேள்

மானனையீர் நீர்போய் மாமியுடன் சேர்ந்திருந்து
ஞான சிவபூசை நடத்தி யனுதினமும்
குந்தியம்மாள் தன்னிடத்தில் கோதையரே சேர்ந்திரென்றார்
அந்த மொழிகேட்டு அருந்ததியு மேதுசொல்வாள்

---

1. தருமராது

மெய்யரே எந்தனையும் வித்தகரே இப்போது
பொய்யுரையா வேந்தர் பூபாலர் சொன்னதென்ன
நான்பாவி யானேனோ நாயகரே என்றழுதான்
வாகாக என்னை வரவேண்டா மென்றுசொல்லி

ஆகாப் புலைச்சி அணிபுலைச்சி யானேனே
சர்ப்பிணைக ளான சதிகேடு செய்தேனே
கற்பழிந்து வேறு கண்டாசை கொண்டேனோ
அய்வர் துணையென்று அன்றுமுத லின்றளவும்

சித்தம் வரநடந்து சேவடியைப் பூண்டிருந்தேன்
கர்த்தனுக்கு என்ன கசகுண்டே என்கோவே
இனிமே லடியேற்கு ஈடேறப் புத்தியென்ன
பனியான பொய்யுடலைப் பாரமென்று கோள்வேனோ

வையகத்தோர் சொல்லி மழுப்பி நகையாரோ
மெய்யகத்தில் சேர்ந்து மேலும் பிரியாமல்
காத்தருள வேணுங் கண்ணர் திருவருளால்
யேத்தசிறை தன்னையே ஈடேற்ற முற்றிலுமே

சீர்பாதந் தன்னைத் தினமும் பணிந்தேத்த
ஒருமனதாய் இங்கிரென்று உத்தாரம் பண்ணுமென்றார்
தன்மர் மனமகிழ்ந்து தையலையுங் கொண்டாடி
கற்மமெல்லாம் விட்டுக் கரையேறி னோமென்றால்

சற்றுங் களங்கமில்லைத் தையல்மேல் தம்பியர்மேல்
முற்றுந் தெளிந்து மோகவலை விட்டேகி
வந்தே மினிமேல் மலவுகள்தான்[1] சற்றுமில்லை
சந்தோச மாச்சுதென்று தன்மர் மனமகிழ்ந்து

அல்லிருளுந் தானீங்கி ஆதித்தன் வந்துதித்தான்
வல்லிருளும் போனதற்பின் வாய்த்தனமா யவருந்தான்
எழுந்திருந்து பஞ்சவர்கள் இன்பமுடன் சூரியனை
விழுந்து நமஸ்கரித்து மென்மலர்கள் தானெடுத்து

---

1. மலைப்புகள்

ஆனமுடன் சந்திபண்ணி தர்ப்பணமுந் தான்முடித்து
ஞான மது[1] சிவமும் நறுமலருந் தான்தூவி
வெய்யோனைத் தெண்டனிட்டு மிக்கான ஐவருந்தான்
மையிருண்ட கான வனத்தில் வழிகூடி

புலிகரடி யாளிசிங்கம் பொல்லாத யானைபன்றி
நரிவுகண்டு தோள்தட்டி நடந்தார் வனங்கடந்தார்
பார்த்திபருங் காடுவிட்டுப் பண்பாய் வெளியில் வந்து
ஆற்றோரம் சான்வந்து ஆத்துமத்தை சுத்திபண்ணி
சீரான காட்டிலுள்ள தீர்த்தமெல்லாந் தானாடி

தாராரு மாமுனிவர் தன்னை யடிபணிந்து
மாமுனியே நாங்கள் வைகுண்டஞ் சேர்வதற்கு
போமெனவும் மேனியரே பொருந்தவிடை தாருமென்று
ஆமென்று மாமுனியும் அருளினார் நல்வசனம்

நல்லதொரு பகலைவழி நடந்தார்கள் பஞ்சவர்கள்
வல்லதொரு கானல் வழிந்தோடும் நீர்போல
காடு தனிலோடுங் கானல்நீ ரென்றுசொல்லி
ஓடுவா ரள்ளியுண்ண பெண்டுகளும் ஐவருமாய்

பாலை வனக்கொடுமை பார்பிளந்து நீறாக
காலையெனும் மூங்கில்வனம் தானெரிந்து தூளாகி
விண்ணளவும் தீவளர்ந்து மேகனீர் வற்றிடுமாய்
கன்று விழிக்கெதிராய் கனலுள்ள கோரமதாய்

கண்டு பயந்து கடவுளே தஞ்சமென்று
அடைந்து மருதவனம் அடுத்துமெள்ள வேநடந்து
இருந்து தவிப்பாகி எழுந்திருந்தார் அம்மானை

வருந்தி நடந்தயர்வார் வனமுங் கடந்தேகி
ஓடிப் பதினேழு யோசினையுந் தான்நடந்து
நாடித் திசைநோக்கி நடந்து வழிகூடி
பத்தியாய்த் தெங்கு பரிந்து குழலாடும்

---

1. ஜெபம்

வெற்றியுள்ள வெள்ளை வெளியாகத் தான்தோன்றும்
அடித்தொகை காட்டுகின்ற அளவற்ற சோதியது
தொடுத்து வெகுதூரம் சொர்க்கவெளி யானதொரு
பளிங்குப் பிறமலைபோய்ப் பாங்குடனே தானேறி

பொழிந்து பனிமழைபோல்ப் புனல்பெயக் கண்டனராம்
கண்புதுமை தன்னைக் கண்ணுடைய தம்பியர்க்கு
ஒண்டொடிக்குங் காட்டி உயர்கான கங்கடந்து
மேனி மிகக்குழைய மெல்லடிகள் கொப்பளிக்க

சோனை மழைபெய்யுங் தொல்கான கங்கடந்து
வெகுதூரந் தானடந்து விசாரமெல்லாந் தான்தீர்ந்து
ரெகுராமா ராமாவென்று நடந்தார்கா ணம்மானை.

அங்கே நெடுந்தூரம் ஆறும் அருவிகளும்
தாங்காம லேநடந்து தாண்டிக் கரையேறி
ஓட நதிகடந்து உப்பாறு தான்கடந்து
காடு கரைகடந்து தகைமாறி நின்றளவில்

நெடுங்கான கந்தனிலே நெருப்பாறு தான்வரவும்
கடுங்கனல்தான் வாரதொரு கடுங்கொடுமை கண்டுவோ
கலங்கி மனமிடைந்து காவலர்க ளன்னேரம்
மயங்கியே தன்மர் மாயோனைத் தானினைந்து

**விருத்தம்**

ஆயனே நந்த கோபா அச்சுதா பட்ச[1] மாலே
மாயனே சமய மிப்போ வந்துநீர் காக்க வேணும்
தூயனே நெருப்பு வெள்ளம் சுழியெறிந் தோடக் கண்டேன்
நேயனே ஆறு தாண்ட நெடியவர் துணைசெய் வாயே!

நெருப்பா றுடைய வலுவேகம் நீயே யறிவாய் நானறியேன்
(கருப்பா) யெனக்கு யாறெனவே காலை தனைக் கையாலளந்து
திருப்பாற் கடலைப் புனலாக்கி செலவே நீயே திறந்து நல்ல
கருப்போ லுதவுங் கோபாலா சரணஞ் சரணஞ் சரணுனக்கே!

---

1. பச்சை

அனலே[1] யெழுந்து வருந்தீயை அடியேன் கண்டு பயந்துநொந்து
புனலே கண்ணி லிருந்தொழுகும் புண்ணாய் வெந்து புலம்புகிறேன்
கனலே புனலாய்க் கொண்டருளி காற்றித் தருள்வாய் கண்ணுதலே
இனிவா யிரங்கி யடியார்முன் இனிவா நந்த கோபாலா

நடை

மாயன் தனைநினைந்து மனதில் தியானமதாய்
நேய முடனல்லார் நின்றுதொழு மவ்வசனம்
அரிகரி ராமா ஆபத்துக் காத்தராமா
விரிதுரை துயின்றமார்பா வித்தக ராமராமா

வடமலை நந்தகோபா வந்துநீர் காருமென்று
கடல்தனை அடைத்தமாயா காவலுனக் காவலய்யா
மதகரி தன்னைக்காத்த மாயவா வேங்கடேசா
இதுநல்ல சமயமய்யா எங்களைநீர் காக்கவேணும்

பச்சைமர லென்றுசொல்லப் பாவங்க ளகன்றுபோகும்
அச்சுதா நந்தகோபா ஆயனே என்றுசொன்னால்
விக்கனங்க ளன்றி விலகுவோ மென்றுசொல்லி
அக்கினியும் அந்நேரம் அறிவுடனே தான்விலகி

மத்தமந்த அக்கினிதான் வழிவிலகி அப்பாலே
உத்தமரு மகன்றனக்கு ஒதுங்கிநின்ற மாமியைப் போல்
விலகி வழிவிடவும் விரைந்துஅவர் தானடந்தார்
இங்குபுகழ் அக்கினிதான்விட் டேகியதே அம்மானை.

அவ்வனத்தை விட்டு அநேக நெடுந்தூரம்
எவ்வனமு மாயுதமு மிக்கோல மாய்நடந்தால்
பாவ மகலாது பார்த்தவர்க்கு மேராது
செவ்வை யற்று நாம்நடந்தால் திருமா லுதவிசெய்வார்

வரும்நமக்கு ஞானம் வழியே புதுமையென
தன்மருந் தானினைந்து தம்பியரைத் தானோக்கி
தாரார் புயவீமா தம்பி யருச்சுனரே
சீராக நாமொருசொல் செப்புகிறோங் கேளுமென்றார்

---

1. அனலே எனல் பொருந்தும்

தம்பியரென் றெண்ணாது தமயனுமென் றெண்ணாது
நம்பியதோ ரன்னைசுற்றம் நால்வகையு மெண்ணாது
பெற்றபிள்ளை ஈதெனவே பிரியமது மெண்ணாது
சுற்றமென்றுஞ் சற்றே துணையிதுவென் றெண்ணாது

மன்னர் மகுடமுடி வர்த்தனரென் றெண்ணாது
தென்னர்குரு வாசாரி தேவரையு மெண்ணாது
தானவனா மென்று தவசியுமென் றெண்ணாது
ஞான சிவயோகி நாதரையு மெண்ணாது

வாது சமர்பொருதே வந்துவிடு மிந்தமதம்
தீதுவரு மல்லாது தெளிவுவர மாட்டாது
மூர்க்கமே உண்டாகும் முனைய வெகுவாதம்
தீர்க்கமுட னாண்மையிது செய்யுந்தொழி லுண்டாகும்

ஆசாரந் தோன்றாது அன்புசற்றும் வாராது
ராசாதி ராசனென்னும் லாகிரியே உண்டாகும்
வித்தைமதம் புத்திமதம் வேகமே உண்டாகும்
இத்தையெல் லாங்கொண்டு எழுவதே ஞாயமல்ல

ஆயுதமு மாகாது அருத்தவசில் வந்தவர்க்கு
வேயுதவுந் தம்பியரே வில்லு மெடுப்பார்களோ
வல்லதொரு நின்சிலையை வாருதியில் போடுமென
அல்லலற வேநாமும் அவனே துணையெனவே

போவதுவே ஞாயமப்பா புத்தியல்ல வேநமக்கு
தேவரீர் சொன்னமொழி சிறியோர்கள் கேழ்க்கிறோம்
அண்ணரே யெங்கள்சிலை ஆழ்கடலி லேயெறிந்து
எண்ணம்பு வாரோம் என்கோவே என்றுசொல்லி

தன்ம ருரைத்தமொழி தம்பியருந் தப்மாபல்
பொருந்தச் சிலைகொடுபோய் போட்டார் நீர்க்கடலில்
நடந்தார் நிராயுதராய் நல்லதன்மர் தம்பியரும்
கடந்தார் வெகுதூரங் காதமிரு காதவழி

வந்து களைப்பாறி வாணுதலும் ஐவருந்தான்
சிந்துலவுங் கண்ணுறங்காத் தேவியரை நாகமது
தாங்காமல் வந்து சங்கரியைத் தான்தொழுது
பூங்கா வனம்புகுந்து போனார்க ளய்வருமாய்

அந்த வயாந்தனிலே அணுகா வனமாகி
நொந்துவழி காணாமல் நொந்திடைந்து ஐவருமாய்
மருகித் திகைத்து மாயோனைத் தஞ்சமென்று
முறையிட்டவே அந்தரத்தில் போல்இருந்த தம்மானை

வேழமுக[1]த் தானுடைய விக்கினங்கா ணென்றுசொல்லி
காளைமுதல் மேனியனார் கற்பித்தா ரந்தரத்தில்
அவ்வசனங் கேட்டு ஆனதன்ம ருள்மகிழ்ந்து
இவ்வசனஞ் சொல்லி எறுவ னென்றுதன்மர்

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனே தஞ்சமென்று
கைக்கிமை மாங்கனிதேன் கடலை பயறுடனே
மென்பொரியும் நெல்பொரியும் இயலான சர்க்கரையும்
செப்பமுட னெப்பொழுதுந் தெகுட்டா ரமுதுசெய்ய

வைப்பேன் பலாச்சுளையும் வாழும்[2] பழந்திருத்தி
அப்பமுடன் தேங்காய் ஆலங்காய் எள்ளுருண்டை
கனிய அதிரசமும் சிறந்தஅவல் பச்சரிசி
நானீவேன் தப்பாது நாதா துணைசெய்குவாய்

## விருத்தம்

மூலப் பொருளே முதற்பொருளே முத்தே வித்தாய் முளைத்தெழுந்த
ஞானப் பொருளே எவ்வுயிர்க்கும் நடுவாய் இருந்த நாயகமே
காலத் துடனே உள்ளிருந்து குருவாய் மூலக் கிழங்காகி
சாலத் திருத்தி யெனையாளும் தம்பி இதுகாண் இதுசமயம்.

---

1. வேழுகத்தானுடைய என்றுளது 2. வாழைப்பழம்

வல்லபை தனக்கு நேசம்வைத்த முன்சித்தம் போல
நில்லய்யா வென்று நேசம் நினவுடன் கலந்து பாரில்
மெல்லவே மயக்கிவிட்ட விறுமையை அகற்றி யப்பால்
சொல்லவே நடத்து மய்யா திருவடி சரணந் தானே !

ஐந்து கரமு மொருமருப்பும் அகண்ட செவியுஞ் சிறுகண்ணுந்
தொந்தி வயறும்1 புளைக்மும்சர நூல வுலவு மிருபதமும்
தந்தி வடிவு மிருமணியும் சத்த மொலிப்ப மத்தாரை
சிந்தி யொழுக யாஅடிர்முன் தெரிய வருவாய் கணபதியே!

நடை

என்றுதன்மர் தோத்திரமும் இதவாகத் தான்தொழவும்
நன்றாகச் சொல்லி நாடித் திசைநோக்கி
நெஞ்சு தனில்வைத்து நேசத்தை யுள்நிறுத்தி
பஞ்ச மலம்நீக்கிப் பாசத்தை யுள்ளமுத்தி

அடுக்காரும் பார்த்து அகண்ட வெளிபார்த்து
நேசத்துக் கும்பகத்தில் நினைவான சாகத்தை
நாசித் துவாரம் நடுவணையைத் தான்திறந்து
சித்தம் மகிழத் தெரிந்து வகையறிந்து

சத்து மசத்துந் தடுத்து விடையமற
ஆராய்ந்து தேடி ஐம்புலனை ஒன்றாக்கி
சீராய்ந்து பூத்து திருக்கை முறுக்கெடுத்து
காலாய்க் கனலெழுப்பிக் கணபதியைப் பார்ப்பளவில்

மூலக் கிழங்காகி முத்திக்கு வித்தாகி
மும்மண் டலமு முடியடியுந் தானாகி
யெம்மண் டலந்தனக்கு மேகமுத லாகாசம்
அம்மண் டலந்தனக்கு ஆனியுமா யாதியுமாய்

---

1. துதிக்கை

அம்மென்று நாதமணி கலகலெனத் தான்முழங்க
அந்தர மரம்பிடிங்கி மலைகளத் தைத்தெரிந்து
சூதாடி யேழலையை பாய்ந்து பிளந்தெறிந்து
கண்கள் சிவந்து கனலாய்ப் பொறிபறக்க
விண்க ளதிர விநாயகனார் வந்துதித்தார்

**விருத்தம்**

கடதட விகடித நடனாசரணம் கரிமுகில் திருமருகா சரணம்
(வடவரை யதிர வந்தாய்) மதகளி றென்றுருக் கொண்டாய் சரணம்
அடவியில் வழிதடு மாறியடியே னன்பில் மனதி லுனைநினைய
நடமிடு சிவசுதனென வந்தாய் நாதா கணபதி சரணம் சரணம்

இடைந்தே மனமும் புண்ணாகி எங்கே எவ்விட மென்றசந்து
குடைந்தே நினைவு குடல்கும்பி குடையால் வழுவு ளதுகடைந்தே
துடர்ந்து பின்சென்ற கந்தனென்று கணபதியே அடைந்தேன்
சற்றும்
வைகுண்ட மறியும் படிக்குவகை காட்டும் (ஐயா கணபதியே)

**நடை**

தன்மர் துதித்து சரணமென்று போற்றிசெய்ய
முன்மத வெள்ளானை முகனும் மனமகிழ்ந்து
என்பிள்ளாய் தம்பியரே இத்தூரம் நீங்களுந்தான்
தான்பிறந்த மண்ணுந் தலமும் நிலமும்விட்டு

கானகத்தில் வந்தமய்யா கஸ்த்திநுடிக் குண்டெனவே
வானகத்தோர் தாமறிய மனது மிகப்பதறி
தடுத்தேனா முங்களையும் தன்மரே யென்றுசொன்னார்
அடுத்து மிகத்தருமர் ஐங்கரனைத் தெண்டனிட்டு

நடந்த விபரீதமும் நாராயணனார் கற்பனையும்
முடிந்த ரகசியமு முற்றிலும் மெடுத்துரைத்தார்
துடர்ந்தகலி வரமுன்னாள் தொல்லுலகை விட்டெழுந்து
அடந்து வனத்தோடே அடியார் வருகையிலே

வழிமயக்கித் தேவர் வாட்டப் படுத்தினதால்
தெளிய வழி காட்டுமெனத் தேவரீர் தனைநினைந்தோம்
என்றுதன்மர் சொல்ல ஏற்ற விநாயகரும்
நன்றுகாண் தன்மரேநீர் நாரணனார் தம்மிடத்தில்

சென்றுவை குண்டஞ் சேர்வதற்கு நாம்தானும்
இன்று வழிகாட்ட யெழுந்தருளு மென்றுசொல்லி
கானகத்தி னூடே கணபதியுந் தானடந்தார்
வானகத்துக் கேற்க வழிதா னிதுவெனவே

நல்ல வழிகாட்டி நடந்தார் விநாயகனார்
வெல்லரிய தன்மர் விநாயக னைத்தொழுது
தம்பியருந் தன்மர் தான்நடந்தார் அம்மானை.

நம்பி வெகுதூரம் நடுக்காடு தான்கடந்து
கறடு மலைசெடியள் கல்லடந்த பூமியுமாய்
இடறுகிற கல்க்கறடாய் இக்கட்டாய்க் காதவழி
அலுத்து நடந்து அப்பாலும் போகயிலே

வலுத்துவெகு உன்னிதமாய் மலைதெரியக் கண்டார்கள்
கொண்ட சிவகுழலாள் கோதை துரோபதையும்
அசந்தாள் நடைதளர்ந்து அய்யோ வெனவேதான்
ஓசந்த மலையருகே ஒண்டொடியீர் நாமிருப்போம்
தங்கி இருந்து தவிப்பாறிப் போவமென்று
மலையைத் திசைநோக்கி வந்தனர்காண் அம்மானை.

நிலையைத் தொடுத்து நீண்டு தவழ்ந்தமலை
மேகம் படியும் விசாலமுள்ள தந்தமலை
மான முகட்டளவும் வளர்ந்தமலை தன்னருகில்
கந்தருவ னென்றொருவன் கண்ணருகில் வந்துநின்றான்

உளந்துவரு மானிடரே உயிர்வெறுத்து வந்ததென்ன
மேகநாத னென்பேர் விடுவதில்லை உங்களையும்
தாகமுடன் பேருருஞ் சாற்றுமென்றார் அம்மானை.

அப்போது தன்மர் அவனை முகம்நோக்கி
இப்போது நாங்க ஏத்த குருகுலத்தில்
சந்தன[1] மாராயர் தன்னுடைய வங்கிஷத்தில்
எந்தன்பேர் தன்மர் எனக்கிளைய நால்வரிவர்

வந்தோங் கலியதனால் வைகுண்டஞ் செல்வதற்கு
இந்த வழியாக ஏகிவந்தோ மென்றுரைத்தார்
அந்த மொழிகேட்டு அவனேது சொல்லலுற்றான்
விந்தையுட னெங்குலத்தில் வேந்தரையி முள்ளாகி

வந்தியளே தன்மரே நீர்வாய்த்த பெவிதனையும்
தந்துவிட்டுப் போமெனவே தாமுரைத்தா ரம்மானை.

முன்னாளில் வானவர்க்காய் மூர்க்கமுள்ள வருச்சுனனும்
அன்னாளில் வந்தான் கதிர்த்தோர் தங்களையும்
மன்னா பொறுத்துவிட்டேன் வலியவந்தீ ரப்போது
இன்னாளி லென்பழிக்கு எதிராக வந்துவிட்டீர்

கொன்று சினந்தீர்ப்பேன் கொற்றவரே உங்களையும்
என்றுபோர் வாருமென்று எதிர்த்தான் வனந்தனிலே
கலியைவிட்டுத் தப்பிக் காசினியுந் தானிழந்து
வலிய வனந்தனிலே வைகுண்டந் தானோக்கி

போகையிலே நீமறித்துப் போர்வாடா வென்றுசொல்லி
ஆகையினா லுன்னுடனே அடந்துபோர் செய்வதில்லை
என்றுதன்மர் சொல்ல ஏத்ததொரு காந்துருவன்
நன்றுகாண் தன்மரே நீர்நம்மோ டெதிர்க்காட்டால்

ஆனால்த் திரும்பியுங்கள் அத்திபுரஞ் சேருமென்றார்
தேனாகுந் தன்மர் சிரித்தவனைத் தானோக்கி
ஏனோ கெடுவாய் இவ்வசனந் தானுரைத்தாய்
பேய்கொண்ட காந்துருவா பேசா திருபோடா

---

1. சத்தனு

மன்னாநீர் போர்புரிய மாட்டாயே ஆமாகில்
என்னாணை யுந்தனக்கு உனக்கிளையோர் என்மேலே
கடுகி அனுப்புமென்று கந்துருவர் தானுரைக்க
முடுகிப் பொருவனென்று முடனவன் சொல்லுகையால்

தன்மர் கிளர்ந்தெழுந்து தம்பியரைத் தானோக்கி
பொரும லுடன்மனது பொறுமை மிகவாகி
வார்த்தைசொல்லி தம்பியர்கள் வணங்கிப் பதறாமல்
கீர்த்தியல்ல சாமி கேடுகெட்டான் சொல்வதுதான்

என்றுசெல்லி யப்பால் இருக்கின்ற நால்வரையும்
பாத்து மிகத்தானும் படைபொருத வாருமென்றான்
சாத்துபுகழ் பார்த்தனையும் சகாதேவன் வீமனையும்
எந்த பரிநகுலன் இவர்களையும் வாருமென்று

போருக் கழைத்தான் புத்திசற்று மில்லாதான்
பாருக்குள் வாளால் பதைக்க உடல்பதறி
இக்கணமே உங்களையும் மேலோகம் ஏத்திவிட்டு
தக்கமுடன் வாருமென்று தவ்விக் குதிபோட்டான்

இப்போது நாங்களுன்மேல் எதிர்ப்பதில்லை யானாலும்
தப்பாது சொல்லுடையார் தன்வார்த்தை கேளாமல்
உன்மேல் யுத்தம் ஒருநாளுஞ் செய்வதில்லை
தன்மர்மொழி தப்பாத தர்மமோ யெங்களுக்கு

என்றா ரிளையோர்கள் என்சொல்வான் கந்தருவன்
நன்றாகக் கேட்டிலையே நமன்சேதி விண்ணுலகில்
முன்னாளி லிந்திரன்மேல் முடிகிச் சமர்பொருதேன்
மன்னா அவன்போரில் மாட்டாமல் போம்பொழுது

சொன்னார்கா ணய்வர் தோத்தமுட னிவ்வசனம்
இன்னார் வருவார் எதுத்துப்பொரு தென்றுசொன்னார்
அப்படியே நீங்கள் அவர்சொல்லை மாறாமல்
சொல்படியே வந்தீர் துன்புற வாருமென்றார்

வாண்டாமடா கந்தருவா வைகுண்டம் போரவரை
ஏண்டா தடைபண்ணி ஈடழிந்து போகாதே
சொல்லக்கேள் வம்பா துடுக்குதனை விட்டுவிடு
அல்லக்காண் நீங்கள் அடர்ந்துபொர மாட்டாமல்

பேதத் தரிதென்று புத்திகெட்ட காந்தருவன்
தாவித் துரோபதையைத் தானெடுத்துத் தோளில்வைத்து
கொண்டுசெல்ல மங்கையுந்தான் கோவிந்தா என்றழுது
ஆகாசம் பூமி அதிரவே சத்தமிட

போகாதே என்று புறப்பட்டான் போர்வீமன்
காந்துருவன் தன்னைக் கட்டி மிகப்பிடித்து
சேந்து பொருது சிறந்துரெண்டும் ஆர்ப்பரித்து
காத்தும் மழையும் கலந்துபொரு தானாப்போல்

எதுத்த மலைரெண்டும் எதுத்துப் பொருதாப்போல்
சிங்கமுடன் சிங்கம் சினந்து பொருதாப்போல்
பொங்கு கடலேழும் புயல்காத் தலைவதுபோல்
வாலியுடன் சுக்ரீவன் மண்டிப் பொருதாப்போல்

கோலியே முன்னாளில் கோபாலன் சிங்கமதாய்
இரணியனைக் கொன்றதுபோல் இடரா வலுவீமன்
தரணி தனிலவனைச் சங்கரிக்க வேனினைந்து
தர்மருந் தானறிந்து தம்முடமே னாணையிட்டார்

மின்மருவு வீமா விட்டுவிடு தம்பியென்றார்
அண்ணர் மொழிகேட்டு அவன்மயிரைத் தானறுத்து
மண்ணதிர விண்ணதிர வாரி யெடுத்தெறிந்து
குத்தினான் வீமன் வென்றான் காந்துருவனை

புத்திவந்து காந்துருவன் போர்வீம னைத்தொழுது
தெண்டனிட்டு ஓடலுற்றான் திரும்பியே பாராமல்
சண்டைசெய்த கந்துருவன் தப்பிப்பிழைத் தானெனவே
மின்னாள் துரோபதைதான் வேந்தரவர் தங்களுடன்

சொன்னாள் மனத்துயரம் துன்பமெல்லாம் நீங்களுந்தான்
பாடுபட்ட தெல்லாம் பாவியேன் தன்னாலே
கேடுகெட்டேன் யானும் கிலேசமெல்லாம் விட்டுவிடும்
என்றுசொல்லித் தன்மர் ஏந்திழைக்குப் புத்திசொல்லி

நன்றுநன் றென்று நடந்தார் வெடம்விட்டு
மலைகள் பருப்பதங்கள் வனமும் டலகடந்து
கொலைசெய்யும் யாளிசிங்கம் கொடியபுலி குஞ்சரமும்
வன்மிருகம் வாழும் மலையும் வனாந்திரமும்

பலமிருகந் தானும் பஞ்சவர்க ளென்றறிந்து
விலகு மிருகமதை விந்தையென்று பார்த்திருந்து
கலகமிடு மிருகமதைக் கண்டொதுங்கிப் போகுதென்று
தங்களிலே தான்பேசி சந்தோஷ மாய்நடந்து

பொங்குநதி யாறுகளும் பூபாலர் தான்கேட்டு
செங்கழுநீர் தாமரையும் செந்தளி ராம்பலுடன்
பொய்கை யதுகண்டு புனத்தில் அங்கிருந்து
செய்யும்புகழ் ராசரிஷி செய்யும் தபங்கள்தன்னை

வெய்யதொரு தன்மர் விசேஷமது வென்றறிந்து
கண்டு பணிந்தவர் களிகூர்ந்து தெண்டனிட்டு
தொண்டுபண்ணி நின்றார்காண் துரைராச ஸ்ரீமுனியும்
பார்த்திபர்கள் மாமுனியைப் பணிந்து கேழ்க்கலுற்றார்

போர்ததுபுலித் தோலுடையாய் பொய்கைதா னேதெனவே
நாடுபுகழ் வேந்தரே நாக மடந்தையர்தள்
ஆடுகின்ற தீர்த்தமது ஐவரே யென்றுசொன்னார்
அப்போது மாமுனியை ஐவருமே தானோக்கி
செப்பார் முலைமடவார் தீர்த்தமிக வாடுதற்கு
எப்போ வருவா ரெனக்கேட்டார் அம்மானை

தப்பாத மாமுனியும் தானும்உமக் கேதுசொன்னார்
ஓதுகின்ற நீர்பருதி உதயமென்னும் வேளையிலே
காதலா லங்கவளைக் காணலா மென்றுரைத்தார்
கோல மடந்தையுடன் கொத்தவரு மங்கிருந்து

வால உதயமதில் வந்தார் மடந்தையர்கள்
மீதான பொய்கைதனில் மெல்லிநல்லாள் தான்முழுகி
கோதான மாதரெல்லாம் குழலாத்தித் தான்முடிக்க
வந்தவரைக் கண்டு மங்கையர்க ளெல்லோரும்

இந்த வனத்தி லிவரா ரெனவேதான்
துங்கமுடி மன்னவரை துடியிடையாள் தன்னுடனே
இங்குவந்தீர் நீங்கள் எவ்வூ ரெவடமென்றார்
பாரார் புகழுகின்ற பாண்டுமன்னர் தன்புதல்வர்

தாராருந் தன்மரென்பார் தம்பிமார் நால்வருந்தான்
வாய்ந்த கலியுகமும் மண்ணுலகில் வந்ததினால்
ஆய்ந்தபுகழ் வைகுண்டம் அடையவென்று வந்தோங்காண்
தன்மருடன் தம்பியரும் சார்ந்த துரோபதையும்

அருமையுட னிப்போது ஐவரையுங் கண்டோமே
எங்களுக்கு நற்காலம் இப்போது நீங்களுந்தான்
உங்களுக்கு நாங்கள் உகந்தடிமை தானாகும்
புரந்தரனார் தம்மிடத்தில் போவோ மெனமகிழ்ந்து

வரந்தருவா ராங்கே மகுடமுடி சூட்டிவைப்பார்
நாளை முடிசூட்டி நாகலோக மானதெல்லாம்
ஆளும் படிக்கு அரசாள வைத்திடுவார்
நன்றாக உங்களுக்கு நாங்களெல்லா மிப்போது

மன்றோர் சபையறிய மனையாட்டி யாக்கிடுவோம்
செல்வோ மவரவர்முன் செல்வியுடன் ஐவருமாய்
வாருமய்யா வென்று மடந்தையர்கள் தானுரைக்க
பாசமுள்ள பெண்கள்நாம் பார்மீதி லாசைவிட்டு

நேசமுடன் நாங்கள் நெடுமால் தனைநினைந்து
தாகமுடன் சொல்லத் தகுமோதா னுங்களுக்கு
என்றுதன்மர் சொல்ல ஏந்திழைமார் தான்கேட்டு
ஒன்றுமில்லை நாமிவர்க்கு உள்ளாசை கொண்டதெல்லாம்

---

1. வருவீர்முன் எனல் பொருந்தும்

சத்தாசை யல்லாமல் தானுரைத்தார் பஞ்சவர்கள்
சித்தாசை கொண்டபெண்கள் திரும்புமென்று தானுரைத்தார்
மன்னவரை விட்டு மடந்தையர்கள் போனபின்பு
தென்னவர்க ளய்வருமாய்ச் சேர்ந்த துரோபதையும்

மாமுனியைத் தான்வணங்கி வாழ்த்திவிடை தாருமென்று
பூமுனிவன் வாக்கருளிப் போமென்று சொல்லுகையால்
தன்மரே நீங்கள் தாவும் வெளிதனிலே
தென்மலைப்போல் பாம்பு சீறியது தான்முழுங்கும்

எப்படித்தான் போவீ ரென்றுரைத்தார் மாசரிஷி
மெய்ப்புடைய தன்மர் விரைந்தேது செப்பலுற்றார்
விதிவசத்தை யாரொருத்தர் வெல்லவொண்ணா தென்றுசொல்லி
சதிரான மாமுனியைத் தானனுப்பி யேநடந்தார்

மின்கொடியுந் தன்மருமாய் வீமனுடன் தம்பியரும்
அந்த மலைச்சார்பில் அருகே ஒருபுறமாய்
சந்துசிறு தாரைவழி தானடந்து போகையிலே
சித்தடியும் பாதையும் சிறிய மலையதுபோல்

புத்தரவ மானதுவும் போர்வரையள் போலேதான்
ஓங்கி வளர்ந்து உயர்மலைய[1] ளென்றுசொல்லி
தாங்கி நடவாமல் தாராள மாய்நடந்தார்
வந்தவர்க ளய்வரையும் வனிதை துரோபதையும்
சந்தோச மாய்நாகந் தான்முழுங்கித்து அம்மானை.

அப்போது வீமன் அரையிற்சிறு வாளதுவும்
தப்பாத நாகமதைத் தான்பிளந்து கீறியதாம்
மெய்ப்பான தன்மருந்தான் விதிவசமோ தானெனவே
இப்பால் வெளியில்வந்து எச்சில்பட்டோ மென்றவரும்

மாதீர்த்த மாடி மடுக்கரையில் நிக்கயிலே
கோதி விழுங்குகின்ற கொடியரவம் பார்ப்பானாய்
வந்து பணிந்தான் மன்னவர்க ளய்வரையும்
இந்த மகிமையிது ஏதென்று தன்மருந்தான்

---

1. ஓயர்மலையன் என்றுளது

கேழ்க்கும் பொழுது கிருபையுள்ள பார்ப்பானும்
தாக்குமுதல் முன்னாள் சபித்தார்கள் மாமுனியும்
தாக்கு முனிரிஷியன் தனக்கு மலரெடுக்க
பூங்கா வனந்தேடிப் போனேன் அவ்விடத்தில்

மாங்குயில்போல் ரம்பையர்கள் வந்தார் மயங்கிவிட்டேன்
பூசை செபந்தனக்குப் புஷ்பமல ரில்லையென்று
ராசரிசி கோபமதாய் நாட்டமுட னெந்தனையும்
பாம்பாக வேசபித்தார் பாரமுனி கோபமதாய்

அப்போது சாப மகல்வதெப்போ வென்றுரைத்தேன்
ஐவர் வைகுண்டம் அடையவென்று தான்வருவார்
மெய்வாய் பிளந்து விழுங்கிடுவாய் ஐவரையும்
வீமனுட சித்துடைவாள் மெய்யுடலை யேபிளக்க

அப்போது சாப மகன்றிடுமென் றேயுரைத்தார்
இப்போது நானும் ஈடேற இங்குவந்தேன்
தன்மரையும் நால்வரையும் தான்கண்ட போதெனக்கு
சென்மம் விமோசனமாய் தேவர்சபை சேர்வதற்கு
போறே னெனப்பார்ப்பான் போயினான்காண் அம்மானை

நீறே தரித்தருளும் நிமலர் தனைநோக்கி
மார்க்கமுட னந்த மலைகடந்து அப்பாலும்
தீர்க்க முடனய்வர் திருமால் தனைநினைந்து
வார வழியில் மலைகளோ ராயிரமும்

ஏறி இறங்கியப்பால் எண்காத மேநடந்து
நடந்து வரும்வழியில் நல்லதொரு அத்திகிரியில்
அடந்துமொரு ஆகாசம் அந்தமட்டும் தான்வளர்ந்து
நின்ற மலைகண்டு நின்வசனந் தன்மருமே

ஆண்டவனே இந்த அதிசயந் தானெனவே
தெண்டா யுதமெடுத்துத் திறல்வீர னப்போது
அண்டமதிர அடித்தான் மலைதகா
தகந்தமலை வேதியனாய்த் தான்நின்றான் அம்மானை.

பகர்ந்துதன்ம ரேதெனவே பார்ப்பான் தனைநோக்கி
இந்த விசேஷ மேதெனவே தான்கேட்டு
சிந்தை மகிழ்ந்து செப்பலுற்றான் வேதியனும்
முன்னா ளரசருடன் மூர்க்கமுடன் நான்பொருதேன்

என்னோ டவர்கள் எதுத்துப்பொர மாட்டாமல்
உதைபட்ட தூருந்தான் உயிர்குறைந்து மண்மீதில்
வதைபட்டு மாளுகிறோம் வைகுண்டந் தாருமென்றார்
வகைதெரி யாமலும்நான் வைகுண்டந் தந்தமென்றேன்

பகைவருவ தறியாமல் பாவியே னானாகில்
சொல்லிவிட்டேன் வாய்விணாச் சொன்னதை மாலறிந்து
கனலா[1] யெனச்சபித்தான் கற்னருந்தா னப்போது
பண்டை உருமாறிப் பாரமலை தானாகி

விண்ணுயரந் தான்வளர்ந்து மேதினியில் தானிரென்றான்
ஆயரே அச்சுதரே அடியார்க்கு விமோசனந்தான்
தூயரே எப்போது துலையு மெனக்கேட்டேன்
நேயமுட னவர்நினைந்து நம்மைத் தானோக்கி

மாயரே தஞ்சமென்று வைகுண்டஞ் சேர்வதற்கு
வருவா ரிதுவழியாய் மானனையார் தன்னுடனே
தன்மருடன் தம்பியென்று தார்வீமன் தண்டாலே
உருமாற உன்மை உடைபடவே தானடிப்பார்

பருவரைந் தூளாய் பழைய வடிவாகி
வருவாய்போ வென்று மாயன் சபித்துவிட்டான்
ஆனதினா லென்சாபம் ஐவரே நீர்தீர்த்தீர்
நானதினால் பிழைத்தேன் நல்லவரே உங்கள்தன்மம்

நான்போறேன் நீங்கள் நாரணனார் தம்மிடத்தில்
தான்போங்க ளென்று சதுர்மறையோன் தான்நடந்தான்
ஆமாமென் றைவர் அநேக நெடுந்தூரம்
தன்மருந் தம்பியருந் தாராள் துரோபதையும்

---

1. கல்லா எனல் வேண்டும்

நன்மைதனி லெல்லா மிங்கே களித்தோமென்று
ஆதித்த னூடாடாத அருங்கான கம்புகுந்து
பேதித்த வனமிருகம் பெரும்பூத னாதகெணம்
ஊரும் பலசாதி உயர்பறவை வல்விலங்கு

சாம்பல் விருட்சம் தழைத்துமிகச் சோலைகளும்
மன்னுயிருந் தன்னுயிர்போல் வாழுகின்ற தன்மருமே
மன்னுயிரெல் லாம்வணங்கும் பஞ்சவர்கள் தங்களையே
எண்பத்து நான்குபிரும் இவர்களுட னேபேச

பண்போடு பஞ்சவர்கள் பலசலிப்பு மில்லாமல்
நாற்றிசையுங் கானகமும் நல்லசுய சனம்போலே
வேற்றுமை யென்றறுத்து விலாசமா யவ்வனத்தில்
வாரார்கா ணய்வருடன் வனிதையா ளென்னுமது

பெறுகக் கண்டெதிரே பெண்கொடியா ளென்றொருத்தி
அசுவ முகமாக ஐவர்முன் வந்துநின்றாள்
விசுவ ருபமுடன் மேலவரை மேவவென்று
தன்ம ருடதம்பி தார்வீம னுக்கிளைய

வில்விசயன் தன்புயத்தில் வந்து தழுவுகின்றாள்
புரவிமுக மானதுவும் புண்டரிக மாமலர்போல்
இரவி மதிபோலே எந்திழையாள் நிற்பளவில்
காதவருந் தன்மர் தானே அதிசயமாய்

காதலியே இந்தக் காரணமே தென்றுரைத்தார்
கானில் முனிதேவி காளியென்பேர் முன்னாளில்
வானி லொருமுனிவன் வந்தென்னைச் சேருகையில்
அறிந்தார்தன் பர்த்தாவும் அசுவமுக மாவையென்றார்

பிரிந்தேன் முனியைவிட்டுப் பேச்சொன்று மில்லாமல்
அய்யாஇச் சாபம் அகலும்வகை எப்போதான்
மெய்யாக நீயும் விசயனுட தன்தோளை
சென்று தழுவச் சேருஞ் சுவாதிமுகம்

என்றுமுனி சொன்னபடி இப்போது தீர்ந்துதென்று
பூவுலகில் வாழும் போர்வேந்த ரய்வருந்தான்
தேவுலகில் வைகுண்டஞ் சேர்வீ ரெனமொழிந்து
போனாள்தன் சாபம் போச்சுதென்று தான்மகிழ்ந்து

மின்னாளும் போனதற்பின் மன்னவர்க ளய்வருந்தான்
போனார் வனம்நோக்கிக் கடுகி நடக்கலுற்றார்
சேனா பதிவேந்தர் திருவுளமே உண்டெனவே
நடந்தார் வெகுதூரம் நாலாறு காதவழி

கடந்து நடந்துவந்து கண்டவர் விமலமலை
சந்தன வனச்சோலை தடாகமது தான்கடந்து
ஆலிலை மேல்துயின்ற அச்சுதனைத் தானினைந்து
மாவியா ரென்னும் மாநதியும் வந்துகண்டார்

ஆறு தனைக்கண்டு ஐவருந்தா னக்கரைக்கு
ஏறவொண் ணாதென்று இயல்தன்ம ரேதுரைக்க
வீரிட்டு வீமன் விசயனுந் தன்மரையும்
சார்ந்து இரண்டு புயமீதில் வைத்துமிக
ஒருகையில் சகாதேவன் ஒருகையில் நகுலனையும்

மருவிமலன் முதுகில் மங்கையரைத் தானேத்தி
பிறவிப் பெருங்கடலைப் பெரியோர்கள் நீஞ்சுகைபோல்
தீர்க்கர்க் கரிய திறல்முனிவர் போலாகி
ஆறு தனைநீஞ்சு அந்தவை குண்டமதில்
ஏறுவது போல்கரையில் ஏறினார்கா ணம்மானை.

அந்தமுள்ள பேராறு ஆரணங்கு போலாகி
வந்தவளும் நிற்க மன்னர்புகழ் தன்மருந்தான்
ஏதுகாண் பெண்கொடியே இவ்வேச முந்தனக்கு
ஓதுவா யென்றுதன்மர் உண்மையாய்த் தான்கேழ்க்க

நீதமுனி தேவிநான் நீத்தகன்னி என்பேரு
சாதகமாய் நித்திரையில் தானனந்தல் செய்துவிட்டேன்
ஆகையா லென்னை ஆறாவா யென்றுரைத்தார்
மாய்கை யிதுசாபம் வாங்குவதெக் காலமென்றேன்

அரியபுகழ் தன்மருடன் ஐவர் துரோபதையும்
பெரியவர்க ளிந்தவழி பெண்ணே வருவார்கள்
ஆறென்று சொல்லி அவர்கள் மயங்கிநிற்பார்
ஏதென்று வீமன் இவர்கள் தனைஇடுக்கி

நிஞ்சி வருகையிலே நீங்குமுந்தன் சாபமென்றார்
சாபமும் நீங்கிற்று தன்மரே உங்கள்தன்மம்
பாவ மகன்றதுகாண் பதிதனக்கு னான்போறேன்
தேவரீர் நீங்கள் சேருமென்றாள் வைகுண்டம்

அந்த மொழி கேட்டு அதிசயமே உள்மகிழ்ந்து
வந்தார் வெகுதூரம் வனமு மலைகடந்து
வரும்வழியி லேநிமித்தம் மதிமயக்க மாயுரைக்க
தன்ம ரதுகேட்டுத் தானே விசாரமிட்டார்

கன்னி துரோபதைக்குக் காலம்பொல் லாதெனவே
இன்னிமித்தஞ் சொல்லுதென்று இடைந்து மனமுழன்று
வருகையிலே நல்ல வாய்த்த துரோபதையும்
இருகை விரித்தலறி எடுத்தடியும் வையாமல்

மெய்சோர்ந்து கைசோர்ந்து மேல்முச்சும் வேர்வையுமாய்
கைகா லசந்து களைதாக்கி நின்றளவில்
ஐவர் திரும்பி ஆரணங்கை வந்தழைத்து
கைதாங்கி மெள்ளக் கருத்தென்ன தான்கேழ்க்க
தனக்கு வருமயக்கம் தானுரைத்தார் அம்மானை.

உன்னால் வருமயக்க முள்ளபடி யானதென்று
சொல்லென்று கேழ்க்க துரோபதையும் வாய்பெருகி
நில்லென்று தானும் நெடுநாடி உள்ளசந்து
தத்துவங்க ளற்றுத் தன்நினைவு தான்மாறி

பித்தங் கலங்கிப் பேரறிவு சிற்றறிவாய்
கண்டத்தில் சேத்துமமாய்க் காலனென மாபாவி
அண்டத்தில் நின்று ஆறடுக்குந் தானசந்து
பிண்டத் தடுக்குலைந்து பிராணனெனும் வாய்க்குலைத்தாள்

விண்டலத்தை நோக்கி விட மிகப்பார்த்து
பொறிகலங்கி யந்தப் புவன மதிமயங்கி
நெறிகலங்கி யந்த நினைவு தடுமாறி
வாத மொடுங்கி வன்பித்த மேகுளிர்ந்து

சீதம் பரந்து சேஷ்ட்டுமமும் மேலாகி
மண்ணுந்தண் ணீரிதிலே வந்து மிகவொடுங்கி
தண்ணீருந் தீயில்த் தானொடுங்கி மேலாகி
வாயளவே தீயும் வந்தெட்டிப் பார்க்குதிப்போ

காய்த்த உடம்பு கடுப்புடனே ஆக்கைவிட்டு
அசதி குடுக்குதுகாண் அய்யரே என்றுரைத்தாள்
அசதியென்ற சத்தம் ஐவருமே தான்கேட்டு
வீமன் நகுலன் விசையன் சகாதேவன்

தாமும் மயங்கித் தியங்கயிலே தன்மருமே
நால்வருக்கும் நேசம் நடுங்காமல் புத்திசொல்லி
வேல்விழியாள் துரோபதைக்கு மெய்யே பதறாமல்
சொல்லுகிறார் தன்மர் துரோபதைக்கு சோகமுடன்

மின்னே துரோபதையே விட்டுப் பிரியாமல்
பொன்னே நவமணியே புத்திசொல்லக் கேளுஎன்று
நெடியோனே தஞ்சமதாய் நெஞ்சில் தியானம்வைத்து
பிடியே நினைவாகப் பிடியென்று தன்மர்சொல்ல

துடியிடையாள் நல்ல துரோபதையுந் தான்மகிழ்ந்து
படியளந்த மாலே பச்சைவண்ணா தஞ்சமென்று
மகிழ்ந்து துரோபதையும் வாழ்த்துகின்ற தோத்திரந் தான்
புகழ்ந்து புவியுள்ளோர் புத்தியென்று கேட்டருளீர்

**விருத்தம்**

பஞ்சவர்கள் தனக்கு நானும் பாஞ்சாலி வந்து தோன்றி
பஞ்சவ ரய்ந்து பேர்க்கும் பாரியா யிருந்து பாரில்
துஞ்சவே தூது சென்று துச்சாதனன் துயிலைக் கொய்ய
அஞ்சலென் றருளிச் செய்த அரிகரா நம்பி னேனே !

ஐவர்க்குந் தேவி யாகி அழியாத கன்னி தானாய்
ஐவரைப் பிரியா திருந்து அவனியி லிருந்து நானும்
அருந்தவஞ் சேர வந்தோம் அரியவை குண்டந் தாரும்!
(மூன்று வரிகளே உள்ளன)

வந்த வனத்தி லிடைவழியே மரண[1] மெனக்குச் சரியெனவே
இந்த வனத்தி லுள்விழுந்து எளியேன் உந்தன் பதஞ்சேர
விந்த கிரிக்கு வழிகூட்டி வேறே துன்ப மணுகாமல்
நந்தா முகுந்தா வைகுந்தா நாதா மலர்த்தாள் தருவாயே!

என்னை எமனு மணுகாமல் எதிரே யுன்பதந் தாமகிழ
உன்னை மனதில் மறவாமல் உறைவோர் வரவும் வைகுண்டம்
பின்னை மனது பதறாமல் பிடித்த பிடியுந் தவறாமல்
முன்னே வருவாய் கோபாலா முகுந்தா சரணம் சரணுமக்கே

நடை

என்று துரோபதை இறையோனைப் போற்றி செய்ய
ஒன்றுமறி யேன்சிவனே உன்பாத மேயெனக்கு
தந்தருள வேணும்நீ தாருமெனப் போற்றிசெய்து
நந்தா முகுந்தா நடுக்காம லெனதுயிரை

இந்தப் பிறித்துயிர் எங்கே உம்மிடத்தில்
வந்த இடைவெளியில் மறுகாம லுன்னுடைய
வைகுண்டந் தந்துதவும் மாயோனே போதீயென்று
மெய்கொண்டு போத்தி விமானத்தில் தானேற்றி

வைகுண்டந் தான்சேர மாது துரோபதையும்
தோத்திரங்கள் பண்ணித் துதித்து மறவாமல்
மாத்திரை[2] ப்போ தானாலும் மனதுயர மாறாமல்
தில்லை நகர்காசி தீகழ்அருணை அவினாசி

தொல்லையகலச் சிந்திநதி தோத்துமுள்ள முத்துநதி
செய்யதிருக் காவேரி திருக்குடந்தை பொன்னரங்கம்
அய்யம் செகனாதம் அனந்தசய னந்தமுதல்
திருப்பதி சிதம்பரமும் சீர்காழி மகாதலமும்

1. மான என்றுளது 2. நொடிப்பொழுது

சிந்தை தனில்வைத்து தியானித் திருப்பளவில்
அந்தரத்தி லுள்ள அரம்பையர்க ளெல்லோரும்
துய்ய மலர்சொரிந்து துந்துமியள் நின்றார்ப்ப
வெய்ய மணிபதித்த விமான மதிலேதான்
ஆயாள் துரோபதைதாள் அரம்பையர்கள் தான்சூழ
நேயான வைகுண்டம் நிரந்திருந்தாள்[1] அம்மானை.

மைக்கண் துரோபதைதான் வைகுண்டஞ் சேர்ந்தபின்பு
மிக்கதொரு பஞ்சவர்கள் மெய்கலங்கி உள்ளசந்து
வாடி மனதிடைந்து மழைகாணாப் பயிர்போல
கூடிப் பிரியாத கொம்பிழந்த வானரம்போல்

சோடி பிரிந்தலறுந் துயருடைய அன்றிலைப்போல்
காடுதனில் நின்று கவலை பெரிதாகி
தெய்வமே உண்டெனவே தேறிய ஐவருந்தான்[2]
ஐவருங் கூடி அடக்கினார்காண் உத்தமியை

செய்யுஞ் சடங்கு திருத்தமுடன் தான்முடித்து
நடந்தார் திசைநோக்கி நல்லபுகழ் ஐவருமாய்
கடந்தார் வெகுதூரங் கானகமு மாறுகளும்
அப்பாலும் போகையிலே ஆனதொரு வீமனுந்தான்

தப்பாத சொல்லுடைய தார்வேந்தே அண்ணாவி
கற்புடைய மாது கானகத்தி லேமடிந்து
உற்பனமே தென்று உயர்வீமன் தான்கேழ்க்க
வாசமுள்ள தன்மர் மகிழ்ந்தெது சொல்லலுற்றார்

ஈசர் பதம்வாழும் இமையோர் மடந்தையவள்
மகாபார தம்முடிய வந்திருந்தா ளய்வரிடம்
தீபாவி யான திரியோ தனன்மடிந்து
பாரதப் போரும் பகையறவே தான்முடிந்து

பாரதனை யேஆண்டு பரலோகஞ் சேரவென்று
கலியுகத்தைத் தான்வேண்டி கானகத்தில் நாம்வரவே
சலியாமல் தம்பியர்க்கே தானந்தா னித்தூரம்
தேவ சபையறியப் போகாத சேதியினால்

---

1. ருந்தாள் 2. எழுவருந்தான் என்றுளது

பாவ சரீரமதைப் பார்மீதி லேகிடத்தி
முன்னே நடந்துவிட்டாள் முகுந்தருட தன்பதியில்
பின்னே நடந்து பிறகே வழிகூடி
நாமும் நடக்கவென்று நடந்தே வெகுதூரம்

தாமும்பின் நம்பியரும் தையலையும் தான்பிரிந்து
கானகத் தூடே கடுக வருகையிலே
வானகத்தில் சிங்கம் மலைமுழைஞ்சுக் குள்ளிருந்து
வந்து பதுங்கி வருவாரைத் தான்பார்த்து

சிந்திப் பசிதீர தின்னலா மைவரையும்
என்று மனமகிழ்ந்து எதிரேதா னார்ப்பரித்து
கொன்று பசிதீரக் கூர்ந்தநக வகைகளுமாய்
கண்ணு முகமுங் கனல்போ லெரியளவே

விண்ணுருவப் பாய்ந்து விழுங்கவென்று ஐவரையும்
சேந்து பிடிக்கவென்று சிங்கமது தான்சீறி
பாய்ந்து பிடித்துதுகாண் பரிவீமன் மன்னனையும்
சிங்கத்து வாயலகை திறல்வீமன் தான்பிடித்து

பங்கப் படுத்தி பகிர்ந்துரண்டு கூறாக
உதைத்தா னடிவயத்தில் உருண்டோடிச் சிங்கமது
பதைத்துத் திகைத்துப் பதறி உடல்நடுங்கி
வேதியர் போல்வந்து மெய்யுடைய தன்மர்முன்னே

நீதி மறையோனும் நிற்பளவில் தன்மருந்தான்
ஏதுகாண் வேதியரே இப்படித்தான் வந்ததென்ன
சாது விசுவமுனி தன்பூசைக் கேமலர்கள்
நானெடுக்கப் போனேன் நடுக்கான கந்தனிலே

தேனிருக்குஞ் சோலையிலே சினந்துரண்டு சிங்கமது
ஆரப் பரித்துரண்டும் அவர்கள் பொரும்போனை
தார்ப்பிரியமாய்ப் பார்த்துத் தாமிசமாய் நின்றுவிட்டேன்
வேதித்து மாமுனியும் வேகமாய் ஓடிவந்து

---

1. தான்மறித்து என்றுளது

தாகித்துச் சிங்கமதாய்ச் சபித்துவிட்டார் மாமுனியும்
ஏத்திய சாபமெனக் கெப்போது தீருமென்றேன்
போத்தியே நான்துதிக்கப் புகழ்முனியு மப்போது
மைமருவுங் கானகத்தே மால்பாதந் தானோக்கி

ஐவருந் தான்வருவார் அவர்களா லிச்சாபம்
தீரு மெனச்சொன்னார் தீர்ந்துதுகா ணிச்சபாம்
போமென்று தான்மகிழ்ந்து போனான் மறையோனும்
மறையோனும் போனதற்பின் மன்னவர்க ளய்வருமாய்
இறையோனே தஞ்சமென்று ஏகினர்கா ணம்மானை

மலையள் பலகடந்து மாயோனைத் தானினைந்து
கலையள் மலைகள் கரடிபுலி யாளிசிங்கம்
பெரியமத வாரணங்கள் பேராறு தான்கடந்து
அரியவனக் காரணமும் அதிசயந் தான்பார்த்து

மிஞ்சுபுகழ் பஞ்சவர்கள் விரைந்து வருகையிலே
தானதவம் பூசைசெபம் தன்னுடனே அம்மலையில்
என்ன முனிவ னிருந்தா ரவர்தனையும்
கண்டு வணங்கிக் கையால் மலர்சொரிந்து

தெண்டம்பண்ணி நிற்கயிலே தேத்தமுள்ள மாமுனியும்
மன்னவரே யெங்கிருந்து வாரீ ரெனக்கேழ்க்க
தென்னவர்கள் போற்றுஞ் சீரான தன்மருத்தான்
பாண்டுமைந்தர் நாங்களுமே பாராசை விட்டொழிந்து

தோண்டுங் கலிவந்து தொழுமுன்னே நின்றோனை
தேடிவந்தோம் வைகுண்டம் சேரவென்று நாங்களுந்தான்
நாடிவந்தோ மும்முடைய நற்பாதந் தெண்டனிட்டோம்
என்றுதன்மர் சொல்ல இயல்முனிவ னேதுரைத்தான்

நன்றுகாண் பஞ்சவரே நான்சொல்ல நீர்கேளும்
வேகமுட னித்தூரம் விரைந்தோடி வந்ததினால்
தாகம் பசிகளைப்புத் தமையாற வேணுமென்று
ஐவரையுந் தாளிருத்தி அன்புடனே ஆதரித்து

மெய்வருக்க மூல பதாதியள்தான் வேணுமென்றார்
போசனமுப் பால்கறியும் போதஉண் டாக்குமென்றார்
வாசமுடன் முனிவன் மகிழ்ந்துரைத்து ஐவரையும்
பார்த்திபரே என்முகத்தைப் பாருமென்று தானுரைக்க

போற்றிசெய்து மாமுனியைப் பூரணமாய்த் தான்பார்த்தார்
தேனும் கனியும் தெவிட்டாத பாலமுதும்
அந்தக்கனி தேன்பழமும் அருந்துமென்றே மாமுனியும்
இந்தக்கனி பால்பழமும் போத னைத்தவிர்த்து

அதிசியமே யென்று ஐவருமெய் தானிருத்தி
நதியில் புனலருந்தி நமஸ்கரித்தார் மாமுனியை
இருந்துதகை யாறுமென்று இன்பமுடன் தானுரைத்தான்
விருந்துண் டிளைப்பாறி வீற்றிருந்தா ரய்வருந்தான்

கதிரோனும் போய்மறைந்தான் கங்குல்வந்து மூடியதே
சதிரான மாமுனியும் தன்மர்கதை தான்கேட்டு
வேதவிதி சாத்திரமும் விளக்கமா யைவருக்கு
போதகமாய்ச் சொல்லிப் போதித்தார் மாமுனியும்

கங்கு லகன்று கதிரோனும் வந்துதித்தான்
பொங்குபுக ளய்வருந்தான் பூரித் தெழுந்திருந்து
கதித்த பருதியுடன் காலைக் கடன்கழித்து
மதித்துமகிழ்ந் தைவரும் மாமுனிவர் தம்மிடத்தில்

வந்து வணங்கி வைகுண்டஞ் சேருதற்கு
சந்து பயில்வனத்தில் தான்வழியுஞ் சொல்லுமென்றார்
மூவர் முதல்வர் முப்பத்து முக்கோடி
தேவர்களு மச்சுதனைத் தேடியின்னங் காணாமல்

நீங்கள்போய் காண்கிறது நிச்சயங்கா ணிப்போது
ஓங்குபுகழ் முனிவருக் கேதுரைக்கப் பஞ்சவர்கள்
பன்னாக மேல்துயிலும் பச்சைமால் நாரணரை
என்னாளு மெங்க ளிதயத்தில் வாழ்வோனை

அடியார்க் கெளியானை ஐவருக்கும் நாயகனை
படியளந் தானைப் பராபரமாய் நின்றானை
தஞ்சமென்று பஞ்சவர்க்குச் சாங்கமாய் நின்றோனை
அஞ்சலென்று வந்துதவும் ஆதி முதலோனை

கார்ப்பார் நினைத்தோர்க்குக் கண்ணெதிரே நின்றோனை
இப்பாரி லெங்களிடர் தீர்க்கவே வந்தோனை
தப்பாத சொல்லுடைய சருவ தயாபரனை
ஒப்பாரு மில்லாத உயர்ந்த பராபரனை

காண வாருமய்யா கருத்தி லுனுதினமும்
பூணுஞ் சீர்பாதம் போற்றலாம் கண்ணாலே
ஏதுவினை வந்தாலும் எங்கள்மேல் சாராமல்
தீது வினைதீர்த்த திருமால்காண் மாமுனியே
ஆதலால் காண அச்சுதனார் தனபதியை
காதலால் காணவழி காட்டுமென்றார் அம்மானை.

அந்த மொழிகேட்டு அருள்முனியு மேதுரைத்தார்
எந்த வகையாலும் இப்போதே நீர்காண்பீர்
கேசவனைக் காணக் கிட்டாதென் றேயுரைத்தார்
பேசுநெறி யால்மனது பேதியா தேயிருந்தீர்

நேசமது கண்டேன் நிச்சயமாய் நீர்காண்பீர்
வாசமுள்ள பாதை வடதிசையில் நீர்நடவும்
காடு மலையும் கடிய வனாந்திரமும்
நீடும் வழிகடந்து நெடியதொரு **கேதாரம்**

நாடி நடந்தார் நாரணனார் தாமிருக்கும்
கோடி மதியொளிரும் குளுமையுள்ள வைகுண்டம்
காணலா மென்று கட்டுரைத்தார் மாமுனியும்
தோணவே மாமுனியைத் தொழுது மிகவணங்கி

நடந்தார்க ளய்வர் நாரணரே தஞ்சமென்று
கடந்தார் வெகுதூரம் கடிய வனாந்திரமும்
திரண்ட மலையுஞ் சிறுவரையுங் காடுகளும்
இருண்ட வனங்கடந்து இப்பால் வருகையிலே

கரிய முகில்நிறத்தாள் கடலருந்தும் நீள்வாயாள்
பெரிய பிறையெயிற்றாள் பிரிந்தநெற்றிக் கண்ணுடையாள்
விரிந்த கடைவாயாள் விண்ணுமண்ணு மொன்றாக
பரிந்துமிப் பாரில் படுத்திருந்தாள் வல்லிடும்பி

பாத்து மனமிடைந்து பாதையொன்றுங் காணமால்
மாத்தி வழிபார்க்க வல்லிடும்பி வாய்வழியே
தோத்துதுகா ணிங்கே சுத்திவரப் பாதையில்லை
கூற்றுவன் போலிருத்தாள் கொடும்பாவி நெட்டூரி

வேறே வழிகாணோம் விடைவுசற்று மில்லையிங்கே
மாறுபட நாமும் வாய்வழியே தானுழைந்து
பிடரி வழியாகப் புறப்பட்டு நாம்போவாம்
இடரிவள்தான்செய்ய எடுத்தநின வேதெனவே

அறிவோ மெனநடந்து அரக்கியுட வாய்புகுந்து
பிறிவோ மெனவே பிடரிவழி யேநடந்தார்
வாகுடனே ஐவர் வந்துவழி யேகினபின்
வேக முடனரக்கி வேத்துருவ மாயெழுந்தாள்
சாதுவெனும் லெட்சுமிபோல் தான்வடிவு மாகியந்த
மாது துரோபதைபோல் வந்துநின்றாள் அம்மானை.

இந்த வனந்தனிலே எங்களைநீ விட்டகன்று
அந்த வைகுண்டம் அடைந்தேனே என்றுசொல்லி
தேக மெடுத்தடக்கி செய்கருமந் தான்முடித்து
வேகத் துடன்நாங்கள் விள்ளாம லித்தூரம்

வாரது கண்டு வழியிலெதி ராகவந்தால்
கூற்று ரூபங் குறையாமல் தானவள்போல்
நின்று மலைவுபண்ணி நெடுந்தவங்கள் தான்குலைக்க
குண்டுமலை போல்க்கிடந்த கொடும்பாவி நெட்டூரி

சொல்லுநீ யெந்தன் துரோபதையாய் வந்தகதை
நில்லுமய்யா சொல்லுகிறேன் நிலவரமாய் இப்போது
யோகிமுனி என்தகப்பன் உத்தசில கன்னியென்பேர்
வாகனைய ரூப மடவா ருடன்கூடி

கற்பகச் சோலையிலே கணந்துயின்ற பெண்களுடன்
உற்பனமாய் யானும் உறங்கி விழித்தெழுந்து
நிற்பளவில் கொடுமுனிவன் நின்றபூங் காவனத்தில்
பற்ப மலர்வேள்வி பரிவாய்ச் சிறப்புடனே

வேதக் கடலொலிபோல் வேதாந்த வாக்கியமும்
நாற்றிக்கும் வேள்வியதில் நான்சென்று தான்பார்த்தேன்
கோவித்துக் கோமுனியும் கொடுஞ்சாபந் தான்கூற
தாவிச் சபித்தான்காண் தானாக்கி யானேனே

இச்சாப மெந்தனுக்கு எப்போ தணியுமென்றேன்
அச்சாபந் தீர்வதற்கு அய்வர்தா னிந்தவழி
வருவார்க ளய்வர்தனை வாகுடனே நீகாணில்
மருவார் குழலணங்கே மாறுமென்றா ரிச்சாபம்

சாபமுந் தீர்ந்திதுகாண் தன்மரே உங்கள் தன்மம்
பூபரே நான்போரேன் போமென் றவள்போனாள்
நல்லதென்று பஞ்சவர்கள் நாட்டமுட னேநடந்தார்
வல்லதொரு நாடும் வனமு மலைகடந்து

தப்பாத சொல்லுடையான் தன்மருந் தம்பியரும்
அப்பால் வெகுதூரம் அறுபதுயோ சினைதூரம்
வேக முடனடந்து வீள்ளாம லுள்புகுந்து
வாகுடைய துருவாச மாமுனிவர் தன்நகரில்

வந்துநின்று பார்த்து வழியே தெனக்கேழ்க்க
ஐந்து காத்தொந்தி அவனகாவல் வாசலென்றார்
அப்போது தன்மர் ஐங்கரனை நெஞ்சில்வைத்து
எப்போது மெங்கள் இருதயத்தில் வாழ்வோனே

அடியார்க் கெளியனே ஐவருக்கும் நாயகமே
படியளந் தேயெவர்க்கும் பராபரமாய் நின்றோனே
தஞ்சமென்று பஞ்சவர்க்கு சகாயமா யிப்போது
குஞ்சரமே நின்றுதவும் குருவே கணபதியே

## விருத்தம்

வருந்து மடியார் தவக்கொழுந்தே மத்த கெசமே அடியார்க
ளிருந்த பதியும் இடமும்விட்டு இங்கு வந்தோம் வைகுண்டம்
பொருந்தும் படியாய் வழிகாட்டிப் போவென் றருளும் புகர்முகனே
திருந்து முனிவர் தனைக்காணத் திறவுங் கதவு சிவசுதனே!

வாசமுனிவர் துர்வாசர் மலர்த்தாள் பணிந்து வரங்கேட்க
நேச முடனே வழிதிறவும் நெடியோன் மருகா அடியார்கள்
தாச ருனது சரணடைந்து தயங்கா நினைவு தானருளும்
ஈசர் மகனே கணபதியே எளியார்க் குனது கதவுதிற

கற்பகக் களிறே உந்தன் காவலாம் வாசல் தன்னில்
நிற்பதோ ரடியா ரிங்கே நேசமா யிவடந் தன்னில்
உற்பான மாக வந்து உயர்முனி பாதங் காண
விற்பன வாசல் மூடல் வெளிதிறந் தழையு மய்யா!

அய்யா கதவு திறந்தருளி அடியார் தன்னை வாவென்று
மெய்யா சரண முதவிசெய்யும் வேழ முகனே கணபதியே
செய்யா வினோதஞ் செய்தருளும் சித்தே வித்தேசிவக்கொழுந்தே
கையால் கதவு திறந்தருளும் கண்டே முனியைத் தெண்டனிட்டேன்

அத்தனார் சுதனே தொந்தி ஐங்கரத் தம்பி ரானே
சுத்தனே சுவாமி நாதா சுத்தரா இந்த வேளை
கத்ததோர் துணையாய் வந்து உதவிசெய் தருள வேணும்
கத்தனே என்னை யாளுங் கணபதி நமசி வாயம்

ஆனை முகமு மிருதோளும் அகண்ட மார்பு மிருமருப்பும்
பானை போலும் வயறழகும் பருத்த வுடலுந் துதிக்கையும்
சேனைத் தளங்கள் முறிந்தோட சிரங்க ளசையச் சினந்தெழுந்து
தானே பதாதி வடிவழகா சமய மிதுகாண் வருவாயே!

## நடை

முக்கண்ணா மைந்தா மூசீக வாகனரே
விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனே உம்முடைய
வாசல்தனில் வந்து மருகியே ஐவருந்தான்
நேசமுடன் மேல்வாசல் நின்றுமனமும் புண்ணாகி

குஞ்சரனே எங்கள் குருபரனே இப்போது
அஞ்சலென்று வந்துகவும் ஆனை முகத்தோனே
வள்ளலே பார்ப்பதியாள் மைந்தனே எங்களைத்தான்
தள்ளுவது ஞாயமல்ல சரணஞ் சரணமய்யா

வேழ முகத்தோனே விக்கினங்கள் தீர்த்தோனே
காள முகில் மேனியனார் கண்ணன் மருகோனே
கதவு திறவுமய்யா கணபதியே சரணமென்று
இதவுடனே தர்மர் இருதாள் சரணமென்று

மத்த கெசமுகனும் வாசல் வழிதிறந்தார்
வித்த விநாயகனே விழுந்து நமஸ்கரித்து
வட்ட மதிக்குடையோன் மாநகரை வந்துபுக்கி
பட்டணங்க ளெல்லாம பளிங்கு நிறம்போல

எங்குஞ் சிவாலயமாய் எம்பெருமா னாலயமே
பொங்குந் தவமுடையார் பூரண பூசைபண்ணி
தவமுஞ் சிவமுரு சன்னாசி வேடமுமாய்
அவமும் பவமும் அருள்ஞான முடமற

தெளியும் பெரியோர் தெருவும் பவுரிகளும்
வழியும் வழிவசமும் மன்னவர்கள் தான்பார்த்து
மகிழ்ந்து களிகூர்ந்து வந்துதா னைவருமாய்
புகழ்ந்து முனிபாதம் போற்றி யடிபணிந்து

அப்பனே எங்க ளாதி குருபரனே
செப்பமுட னெங்கள் தெய்வச் சிகாமணியே
என்றுதன்மர் தெண்டனிட்டு இன்பமுட னேபணிய
நன்றுநன்று பஞ்சவர்கள் நாடிழந்து வந்தகதை

பாண்டுவுட மைந்தர் பதியிழந்து இத்தூரம்
வேண்டியே இங்குவந்த விசாரமே தென்றுரைத்தார்
அய்யா முனியே அடியேன்சொல் விண்ணப்பம்கேள்
பொய்யான தோர்கலியன் பூமிதனில் வந்ததினால்

வந்தோம் புவியிழந்து வைகுண்டஞ் சேரவென்று
சந்தோச மாயனுப்புந் தாணுவே யென்றுரைத்தார்
தன்ம ரிவைசொல்லத் தான்கேட்டு மாமுனியும்
இம்மைதனில் வைகுண்டம் எவர்சேர்ந்தா ரிப்புவியில்

வேதனுட மாமுனியும் விண்ணோருங் காணாமல்
சீதான்மால் விந்தபதந் தேடிநீர் காண்பீரோ
ஆனாலு மாயோன் ஐவருக்கும் அன்புடையோன்
தானான கோபாலன் தன்னிடத்தில் நீங்களுந்தான்

போனாலு முங்கள் புத்திதனைச் சொல்லுகிறேன்
வேகம் வெகுளி வெகுண்ட தொருகோபம்
தாகம் பசியிளைப்பு சஞ்சலங்க ளில்லாமல்
இடும்பு புலைகளவு ஏதொன்றுஞ் சொல்லாமல்

கடுங்கோப நேசங் கருத்திறுத்துப் பாராமல்
ஐம்புலனை யுள்ளடக்கி ஆத்துமத்தைச் சுத்திபண்ணி
எம்பெருமாள் தன்னை இருதயத்தி லேநினைந்து
மன்னுயிருந் தன்னுயிர்போல் மனதுபரி பூரணமாய்

பன்னுமறை காணாத பராபரத்தைத் தானோக்கி
நடந்தால் தெரியும்அப்பா நந்தகோ பாலருட
இடந்தான் தெரியும்அப்பா என்னருளால் தப்பாது
தாரார் துளசிமணி தாளணியு மூர்த்திதனை

ஆராய்ந்து தேடி அருள்பெறுவீர் கண்டீரே,
செல்லும் வழிதனிலே தீதொன்றும் வாராமல்
சொல்லுகிறேன் கேளும் துன்பமத்த பாதையது
தீதான பேர்கள்வந்து செவ்வாய் வழிகேளீர்

கேதாரம் போய்ப்புகுந்தால் கிட்டவது தூரமில்லை
பக்க விலக்கில்லை பலபாதை தானுமில்லை
சொர்க்கமது போய்ச்சேர சொல்லுகிறேன் நீர்கேளும்
கதித்ததோர் வாசல்வழி காவல்பத்திர காளிவழி

துதித்தவளைப் போற்றித் துன்பமற வேநடவும்
என்றுதுரு வாசரிஷி இவ்வசனந் தான்கூற
நன்றென்று பஞ்சவர்கள் நமஸ்கரித்து மாமுனியை
நடந்தார் திசைநோக்கி நல்லதொரு பஞ்சவர்கள்

அடைந்து வழிகூடி அம்மையுட வாசல்சென்று
பணிந்தார்க ளய்வர் பத்திர காளிதன்னை
துணிந்தார்கள் நல்ல தோத்திரமுஞ் சொல்லலுற்றார்

### விருத்தம்

வக்கிர தந்த முகக்கமல வடிவு மிலகுஞ் சடைமுடியும்
உக்கிர கோர வழிமருட்டும் உபைய கரமும் ஐவர்
சக்கிர விஞ்சை திரினால் விசாலி நீலி குமாரி
துர்க்கை கௌரி சாமுண்டி துதித்தே னுனையே துணைசெய்வாய்

காளி பகவதி கங்காளி கரிய மேக லங்கரியே
ஏழை தனக்கே இரங்கி இடையூ றின்றி வழிகாட்ட
வேளை இதுகாண் மாதாவே விடைதா வென்று வந்தேனே
ஆளே யெந்தன் ஆயாளே அம்மாள் வந்து துணைசெய்வாய்

துந்துமி பிடாரி செல்வி தோதகி மசான சுந்தரி
இந்து சேர்பிறை பித்து இடாகினி மகிடா தாரி
சிந்துரத் திலத வட்ட வட்ட மாகத் திரிசூலம்
ஏந்தி வந்து முன்தோன்ற வேணு மம்மா சுந்தரவடிவினாளே.

தாது மலர்ந்த குழலணங்கே சமய மிதுகாண் வழிகாட்ட
மாது தனது கேதாரம் மட்டுஞ் சேர மலைவனத்தில்
ஏது வினைகள் வந்தாலும் எளியா ரிடமே நீயிருந்து
தீது பகைய ணுகாமல் செவ்வே நடத்தும் பராபரையே!

நடந்து துயர மறிந்தனது நாட்ட மதினால் கண்டிரங்கி
அடக்க முடையார் பொருளறிய அம்மா ளுனது செயலாலே
கடக்க வேணும் வழிதுலையக் காண வேணும் வைகுண்டம்
வடக்குவாசல் மடக்கொடியே வருவாய் வருவாய் வந்து
துணைசெய்வாய்

துணையாய் எனக்கு முன்னின்று துன்ப வினைக ளணுகாமல்
அணைவாய் மலைவுக் காதரவாய் அய்ந்து புகல்வாய் திகையாமல்
பிணையத் தனது பிள்ளையள்முன் பேசா தோடி வந்தருகே
இணையாய் வருக அம்மா இப்போ சமயந் தாயாரே !

வருவாய் கால மாதுமையே மார்க்க வழியே தீர்க்கமுடன்
குருவாய் தினமும் முன்நின்று குற்றங் குறையள் வாராமல்
திருவாய் மொழிந்தென் பதமறவே சிந்தை கிளர்ந்து செயல்பெருகத்
தருவாய் பெரிய வைகுண்டந் தாயே சரணம் சரணுமக்கே

வைகுண்டபதி வாசரே துணை.

நடை

மாது கவுரி மகமாயி ராசகன்னி
சாதுவே மாகாளி தாயே பராபரியே
சக்கிர திரிசூலி சாமுண்டி சங்கரியே
துர்க்கை பிடாரி யம்மா துரியசாதாரி

பஞ்சாட் சரத்தி னுட்பதியே பராபரியே
அஞ்சலென்று காக்கு மடைக்கலமே யுன்மீதி
மாதாவே தாயே வழிகூட்ட வந்தருளும்
ஆதார மில்லையம்மா அடியேற்கு வந்துதவு

என்றுதன்மர் சொல்ல இரங்கிவந்து மாகாளி
நன்றுதன்ம ரேயுனக்கு நல்லவழி தானெனவே
வழிகாட்டிக் காளி மறைந்தாள்கா ணம்மானை.

தெளிவாகப் பஞ்சவர்கள் சென்று களிகூற
காரண மாய்நடந்தார் சத்திபத்திர காளிதன்னை
நேரா இருதயத்தில் நெஞ்சிந்டு வேயிருத்தி
எண்பத்து நாற்காதம் ஏற்பவே தானடந்து

நண்புற்ற கானகத்தில் நடக்கும் வழிதனிலே
அப்பாலும் ஓர்மலைதான் அளவற்ற உன்னதமாய்
ஒப்பாரு மில்லாத உயர்மலையின் மீதேறி
அந்த வனப்பெருமை ஐவருந்தான் பார்த்தளவில்

கந்த முடனரக்கன் கயிலாய னென்றொருவன்
ஆகாசம் பூமி அளவாக வாய்பிளந்து
வாகான தன்னுடைய வயறுதனை யெக்கிநின்று
தீயெரிந்த கண்ணுஞ் சிவந்தவிழி நாசியுமாய்

பேயிருந்த வீடதுபோல் பெருவுடலும் நீள்வயறும்
காட்டாளி சிங்கங் கரடிபுலி யானைபன்றி
நாட்டமுடன் காதவழி நடந்து திரிவதுபோல்
நாசிவழி சென்று நடமாடப் பட்டதெல்லாம்

யோசினை காதவழி உழந்துருண்டு தான்திரும்பி
சேட்டுமெத்தி லீயதுபோல் சிக்கி யலைந்திடவும்
வாட்டும் பெருங்காற்றாய் வல்லரக்கன் தன்மூச்சு
எல்லையில் லாததூரம் எந்தமட்டோ நாமறியோம்

தொல்லை யுடல்கிடக்கும் தூரம் வெகுதூரம்
கடக்க முடியாது கார்மேகம் போலிவன்தான்
கிடக்கிற ராட்சதனைக் கிட்டியே சென்றாலும்
அடக்க முடியாது ஆர்தனக்கு மெட்டாது

நடக்க வழிகாணோம் ராட்சதனைத் தப்பியப்பால்
போக வழிசத்தும் புவனொன்றும் காணாமே
வேகமுடன் சென்றவன்மேல் வீரியங்கள் செய்தாலும்
எதுத்துப் பொருவான் காண் ஈடல்ல நாம்தானும்

மதித்தவனும் தின்னவென்றால் வாய்தனக்குப் பத்தோமே
கைகாலி லாவிலங்கும் காதமிரு காதவழி
நால்வருந்தான் பார்த்து அவ்வயத்துக் கேதுஇரை
என்று மயங்கி இரங்கிவழி பார்ப்பளவில்

நின்று மலைத்தவர்கள் நெடுமூச்சுத் தானெறிந்து
காவலர்கள் போகவழி காணாமே வேதிகைத்து
தாவியெங்குஞ் சுத்தித் தவித்து வழிதிகைத்து
உத்ததொரு ராட்சதனை உசுப்பியே கிட்டவந்து

ஈன்னமோ வென்று எவ்வளவுந் தோத்தாமல்
வின்னமறச் சும்மா மெய்யசந்து கண்ணுறங்கி
ஏதுசெய்வோ மென்று எண்ணிமனம் புண்ணாகி
தீதுவினை தானிவனும் திருவுள முண்டெனவே

சுற்றும்போ யாராய்ந்து சூழவழி காணாமல்
மற்றுமினிப் போக வழியொன்று மில்லையென்று
நின்று திகைப்பளவில் நெடியதொரு வல்லரக்கன்
குண்டுமேலை போலவனுங் கொட்டாவி கொண்டெழுந்து

ஐவரையும் கண்டரக்கன் அளாவிப் பிடிப்பளவில்
தெய்வமே என்று சினந்தெழுந்தான் வீமனுமே
மண்ணுவிண்ணுந் தானதிர மலைகள் கிடுகிடென
நண்ணும் புயவீமன் நாடி மிகச்சினந்து

ஆர்ப்பரித்து வீமன்குத்த அரக்கனும் தான்சினந்து
ஏர்ப்பரித்து வீமன் எதுத்துப் பொருதலுற்றான்
அலைகடலில் காத்து அலரிவெகு சத்தமிட
காடு செடிநொறுங்கி கல்க்கரடு தூளாக

மதியமொரு சாமம் வல்லரக்கன் தான்பொருதான்
அதிய பிலமும் ஆங்கார முள்ளொடுங்கி
ஈடுசெய்ய மாட்டாமல் எடுபட்டான் வல்லரக்கன்
தாக்கினான் வீமன் தலைய ஞுருண்டோட

நோக்கிவந்த ராட்சதனும் நொறுங்கியே பட்டுருண்டு
பட்ட வரக்கன் பாரில் பிழைத்தெழுந்து
துட்டனவன் தேடிநம்மைத் துரத்திப் பிடிப்பனென்று
தாராளுந் தன்மர் தம்பியரை வாருமென்று

சீராகத் தானடந்தான் தெய்வமே என்றுசொல்லி
வருத்த முடன்நோக்கி வளர்ந்த வனக்காடும்
திருத முடனடந்து சென்றார் வழிகூடி
நடந்தார் வெகுதூரம் நாற்பதிங் காதவழி

கடந்தார் மலைபலவுங் கானகமுந் தான்கடந்து
வருமளவு வீமன் வார்த்தையொன்று தானுரைக்க
தன்ம ரடிபணிந்து தயவுட னேதுசொல்வார்
நடக்கும் வழிதுலைய நாதனே எங்களுக்கு
அடக்கமுடன் முற்கதையள் அருளுமென்றார் அம்மானை.

அருளுமென்ற தம்பியர்க்கு ஆதரவா யுளமகிழ்ந்து
பொருளு முரையும் போதமுடன் முற்கதைதான்
சாற்றுகிறோம் தம்பியரே தானேநீர் கேளுமென்றார்
போற்று முலகம் புவனம் பதினாலும்

வேதாவும் மாலு மிக்கதொரு ருத்திரனும்
மீதான மூவர் விதித்தவகை பாராமல்
நான்படைத்தோ மென்று நான்முகனுந் தான்கூற
மான்படைத்த ருத்திரனும் அவன்பலவுந் தானெனவும்

துய்யதொரு மாயவனார் தோத்தமெல்லாந் தாமென வும்
நேயமுடன் மூவர்களில் நீபெரியோன் நான்பெரியோன்
என்று பகையாகி எதுத்து வழக்குரைத்து
படைப்பிக்க வேதன் படியளக்க மாயோனும்

முடிப்பிக்க ருத்திரனார் மூவருமே அல்லாமல்
ஒன்றையொன்று மில்லாமல் உள்ளபடி ஞாயமிது
மன்றை வணங்கி வழக்குரைக்கு மூவருக்கும்
பார்க்கில் சரியெனவே பரம ரகசியத்தில்

ஏர்க்கெனவே முன்னாள் எழுதிவித்தார் மேருவதில்
ஆர்க்கும் பெரியவனே அவனல்லால் வேறுளதோ
தீர்க்கமாய் மூவர்க்கு செய்தொழில் மிச்சமில்லை
அவனை மறந்துரைத்த அபசாரந் தீரவென்று

சிவனு மயனுந் திருமாலுந் தான்கூடி
ஒருவர்க் கொருவர் உய்தீசொல்வ தல்லவென்று
மருவித் தழுவி மகிழ்ந்திருந்தார் மூவர்களும்
அண்டம் புவனம் அகண்டமெல்லாந் தான்படைத்து

அண்டங் கடந்துநின்றான் ஆடுந் திருக்கூத்தைக்
கண்டறிய மாட்டாதார்கருதி யுரைத்ததெல்லாம்
கொண்ட வினைப்பயனால் கூறினா ரிவ்வார்த்தை
அவன்பெரி யோனை அங்குமிங்கு மொன்றாக்கி

எவனோ அவனவன்காண் எல்லையில்லாப் பேரொளியை
மறந்துரைத்த குற்றம் மாறாம லேஇருக்க
இறவாது மனதில் மறந்திருந்தா ரம்மானை

ஈதல்லால் தம்பியரே இன்ன மொருகதைதான்
ஆதலால் சொல்லுகிறேன் அன்புடனே நீர்கேளும்
மாதவரு மிந்திரரும் வானோரும் வேதியரும்
நாதர் முனிவர்களும் நால்வகையி லுள்ளோரும்

அந்நாளில் தேவர் அமிர்தங் கடையவென்று
பொன்னாரு மேருப் பொருப்பேதான் தூணாக்கி
நாக மதுகயிறாய் நாட்டியதோர் தூண்தன்னால்
வாசனையு மாதியு மத்தாகத் தான்சேர்த்து

வானவர்க ளோர்புறமும் வாலி யொருபுறமும்
ஆனவர்கள் பார்க்க அமுர்தங் கடைய முன்னாள்
மலைதான் சுழன்றிடவே வாசுகியு மப்போது
நிலைதாங்க மாட்டாமல் நீள்விடங்கள் தான்கனன்று

பிறியதோ ராலம்விஷம் விம்மிக்கொண்டு தானெழுந்து
சீறி யுலகெங்குந் சென்றுபரந் தப்பாலும்
அண்ட மடுக்கும் அகண்டமுதல் தான்பரந்து
விண்டல முடுருவி விரிஞ்சனுட லோகமெல்லாம்

பொங்கி விடம்பெருகி புகையெழுந்த கோரமுடன்
தங்கிய மூவுலகும் தானுண்டு மீள்வதுபோல்
வார விஷந்தன்னை வானவருங் கண்டேங்கி
போற வழியெங்கும் போகவழி காணாமல்

கண்டு விஷந்தன்னைக் கலங்கியே வானவர்கள்
அண்டஇட மில்லாமல் ஆகையிலை சென்றுபுக்கி
தெண்டனிட்டுக் கண்டு சிவனை அடிபணிந்து
தொண்டருக்கு வந்ததொரு தோஷங்கள் தீர்த்தருளும்

பரனே பாரபரனே பனிமதியும் வெள்ளெருக்கும்
அரவணியுஞ் செஞ்சடையார் அண்ணலே நீர்கேளும்
கடைந்தமுர்தந் தன்னில் காலவிஷந் தான்பிறந்து
அடைந்துதிரி லோகமெல்லாம் அந்தகார மாமெனவே

துடர்ந்துவரு நஞ்சுதனைத் துடைக்கவகை காணாமல்
நடந்துபயந் தோடிவந்தோம் கயிலைமலை காவலென்று
எண்டிசையுந் தான்படைத்த இறையோனே காருமென்று
தெண்டிரைசூழ் வையமெல்லாம் சிவனே இனிக்காரும்

என்றமரர் கூற வென்றிமையோர்க் கபயமென்று
நின்றமரர் கூற நீள்சடையோன் அஞ்சலென்று
சென்று பரந்து வந்த தீதான நஞ்சுதனை
குன்றிபோல்த்[1] தானுந் திரட்டிஉட் கொண்டார்காணும்

அஞ்சு விரல்தன்னால் அழுத்தினாள் கண்டமதில்
எவ்வுயிருங் காக்கவென்று ஈஸ்பரனார் நஞ்சருந்தி
அவ்வுயிரெல் லாம்பிழைக்கும் அரன்மடிந்து போவரென்று
கொடியவிஷம் பாயாமல் குறுக்கே மிடற்றடியில்[2]

தாலி பிழைக்கவென்று தடுத்தாள் காத்தாலே
கண்டத்தில் நின்று கறுத்து கறைவிடமால்
அண்டத்துக் கப்பால் ஆலவிஷந் தானடங்கி
நின்றுதுகா ணந்த நெத்திமே லுச்சிதனில்

அன்று பிழைத்தார்காண் அமரர் முனிவரெல்லாம்
துறவி[3] முனிவரிஷி தேவரையும் மூவரொடு
இறவாம லீசுபரனார் லெட்சித்தார் அம்மானை.

---

1. குன்றி (குண்டுமணி) போல் என வேண்டும்
2. கழுத்தடியில் 3. திறவி என்றுளது

ஈதல்லால் வேறுகதை இன்னமொன்று சொல்லுகிறோம்
ஆதலால் முன்னா ளசுரரெனு முப்புரத்தார்
இவ்வுலகி லுள்ள என்பத்து நான்குயிரும்
அவ்வுலகு மிவ்வுலகும் அடங்கலுமாய்க் கொள்ளைகொண்டு

இடுக்கங்கள் பண்ணி இருந்தார் நிசாசரரும்
துடுக்கு முபத்திர(வ)மும் துன்பமதுக் காத்தாமல்
தேவர்களு மிந்திரனும் திசைநான் முகத்தோனும்
மூவர்களு மொன்றாய் மூர்த்தியெனு மீசுபரனை

சென்று வணங்கிச் சிவனே அபயமென்று
இன்றுமுதல் முப்புரத்தார் இடுக்கத்துக் காத்தாமல்
வந்தோம் பராபரனை வஸ்த்துவே காருமென்று
அந்த மொழிகேட்டு அரனாரு மேதுசொல்வார்

செங்க ணசுரரெல்லாம் சிவபத்த ராயிருப்பார்
அங்கவரை நம்மால் அழிக்கவே போகாது
சிறந்தவர்கள் செய்யும் சிவபூசை தன்னைஇப்போ
மறந்துவிடப் பண்ணி வாகாய்ப் பணித்திடலாம்

என்றுசிவன் சொல்ல எம்பெருமாள் தன்பதியில்
சென்றுதிசை நான்முகனும் தேவர்களும் போயயர்ந்து
கண்ணா முகுந்தா கரியமுகில் மேனியனே
அண்ணா துளசிமணி ஆயனே அச்சுதனே

முப்புரத்தோர் நாளும் மூவுலகுங் கொள்ளைகொண்டு
இப்போ தழிந்துதுகாண் என்செய்வோ மீசுரரே
வண்ணரே ஈசுபரர்பால் வாகாகப் போயுரைத்தோம்
அவர்கள் சிவபூசை அகத்தினா லிப்போது

சிவகுருவு முப்புரத்தைச் செயிக்குறோ மென்றுசொன்னார்
ஆகையா லும்மை அடியேங்கள் தேடிவந்தோம்
மாய்கை பலசெய்து வல்லோர் கிரியகத்தை
மறந்திருக்கப் பண்ணுமய்யா மாயாவி முப்புரத்தோர்

இறந்து விடவே எம்பெருமாள் பண்ணுமிப்போ
வானவருந் தேவர்களும் மயங்கிநின்று வார்த்தைசொல்லி
ஆயன் பெருமாளும் அவர்களுக்கே தானிரங்கி
விண்ணவரே உங்கள் பயம்வேண்டா மெனத்தீர்க்க

தன்மரு முப்புரத்தோர் தங்களுட னேகலந்து
என்மைமா நாமும் இருந்தவர்கள் வாய்தனிலே
மண்ணை யடிப்பதற்கு மார்க்கமாய்த் தானிருந்து
சருவி யவர்தனையும் சர்ப்பினையாய் செய்ததற்கு

வழுவறவே தான்பிறக்க வருகுறோம் போங்களென்றார்
அகமகிழ்ந்து வானவர்கள் அமரர் பதிசேர்ந்தார்
செகநாதர் வந்து திரிபுரத்தைத் தீயெரிக்க
வந்தார்காண் முப்புரத்தில் மாயோனு மாயமதாய்

விந்தையாய்ப் பூசை விள்த்தாட்ட வேணுமென்று
புத்தர் சமையமெனும் புத்தர் வடிவுகொண்டு
வித்தகனார் முப்புரத்தில் வீறாகப் போயிருந்தார்
போயிருந்த புத்தர்தனைப் பொல்லாத முப்புரத்தார்

தீவினை தானினைந்து சென்றார்கள் புத்தரிடம்
சிறந்த சிவபூசை செய்யுந் தலந்தனிலே
மறுத்துமொரு புத்தன் வருவானோ வென்றுசொல்லி
புத்த னுடனெதிர்த்துப் புறத்திலுள்ளோ ரெல்லோரும்
தத்துவங்கள் பேசியவர் தர்க்கித்தார் அம்மானை.

தற்கித்த தத்துவத்தால் சமயமொரு பன்னிரண்டும்
நிற்க நிறுத்தி நிலைநிற்க வாதுசெய்து
சமயமெனும் வேத சாத்திரத்தி லுள்ளபடி
அமையும் படிக்கு அறிவுரைத்தார் புத்தரென்று

வாதாடி முப்புரத்தார் மலைத்திருந்து தான்தேறி
புத்தரே நீரிருக்கும் பூமரத்தை நாங்களுமே
அத்தெறிந்து நீறாய் அதுசாம்ப லாகவேதான்
பார்க்குறோம் நாங்கள் பசுமரம்போ லாக்குவிரோ

வேதமெல்லா மும்முடைய வேதமே நாட்டித்து
பாதம் பணிந்து பலகாலம் பூசைபண்ணி
ஈசுபரனா மென்று ஏத்துவோ மென்றுரைத்தார்
வாசமுடன் முப்புரத்தார் வந்துரைத்த செய்தியினால்

புத்தர் சினந்து பூமரத்தைப் பாருமென்றார்
பத்தரவே முப்புரத்தார் பார்த்தார் மாந்தனையும்
பூமரமே வெந்து பொடியாகி நீறாகி
பூமரத்தைப் புத்தருந்தான் பூமரம்போ லாக்கிவைத்தார்

கண்டுதான் முப்புரத்தார் காட்சியிது வென்றுசொல்லி
தெண்டனிட்டுப் போற்றிச் சிறந்திருந்தார் அம்மானை

மாயனுட மாய்கை அறியாமல் முப்புரத்தார்
நேயமுடன் தங்கள் நினைவு மிகவுழிந்து
ஒருத்த ரன்றித்தங்கள் உபதேச மும்மறந்து
வருத்தமன்றி ஈசருட வாசனையுந் தான்மறந்து

பெற்றவர் மறந்தார் பெரியதவந் தான்மறந்தார்
எதுத்துவந்த புத்தனையும் ஈசனென்று தான்பணிந்து
பூமரத்தில் முப்புரத்தார் புத்தனையே தெய்வமென்று
நேமமத்து வீற்றிருந்தார் நெடுமாலு மப்போது

சோதனை நினைந்து இப்போது முப்புரத்தார்
பூசை தவங்குலைந்தார் போர்பொருத மாட்டாமல்
வேளையிது வாருமென்று மேகவர்ணனைத் தானினைந்து
காளை தனிலேறுங் கடவுளருந் தாமறிந்து

முந்தி மனதில் முஷ்க்கரனைத் தானினைந்து
செந்தி மகமேருவைக் சிலையாகத் தான்வளைத்து
வாசுகி யேனாணாக மால்தானும் அம்பாக
நேசமுள்ள வேதம் நெடும்பரிதேர் தானாக

சதுமுகன் சாரதியாய்ச் சங்கரனார் தானடந்தார்
முதுபகழி தானெடுத்து முரிச் சிலையேற்றி
வருமளவில் மாயனுட மாய்கை தனைநினைந்து
திருவுருவு முப்புரத்தில் சென்றுநின்று தான்சிவனும்

காயாம்பூ மேனிக கண்ணருட சூட்சுமத்தை
வாயாரச் சொல்லி வழுத்தமுடி யாதெனவே
சித்தத்தில் கொண்டருளிச் சினந்தச்சிலை தானெடுத்து
சத்தவொலி நாணசைத்தார் தராதலங்கள் தானடுங்க

கர்த்தனார் முப்புரத்தைக் கண்டுநகை செய்தருளி
மத்தறவே முப்புரம் பற்பமாய்த் தானெரித்த
மாபாவி முப்புரத்தார் மாண்டார்காண் அம்மானை

பூபால னான புண்ணியனார் தன்மருத்தான்
இக்கதையை நன்றாய் இளையோருக்குத் தானுரைக்க
அக்கதையைக் கேட்டு அடவிகளும் மாமலையும்
கடந்து மொருநூறு காத வழிதூரம்

நடந்து கதைகேட்டு நல்லதென்று போகையிலே
வென்றியுள் வீமன் விரையவுந்தா னிப்போது
அன்றியு மோர்கதைதான் அருளுமென்று தானுரைக்க
மன்னவர் தம்பியரே மத்து மொருகதைதான்

இன்னமொன்று சொல்லுகிறேன் இப்போது நீர்கேளும்
ஆடக னென்றொருவன் அவனிதனில் தோன்றி
நாடுதனி லத்தன்பேர் நயமாய் விளக்கிடவே
முரணிய தேவன் மூவர்கள் தன்னாலும்
மானமன்றி வாழ்ந்திருக்கும் வல்லசுர னம்மானை

தேவர்களு மிந்திரனுந் திசைநான் முகத்தோனும்
ஏவல்செய்து நாளும் இரணியனைப் போற்றிசெய்து
ஆத்தாம லேஅவர்கள் அச்சுதனார் தம்மிடத்தில்
கூத்தான மாபாவி கொடுமையெல்லாந் தானுரைத்தார்

கேசவனுந் தன்னுடைய கிருபையினா லிரணியற்கு
வாசமுடன் பிரகலாதர் தானுமே வந்துதித்தார்
வந்து பிறந்ததற்பின் மகிழ்ந்த இரணியனும்
இந்து மதிபோல வளர்த்து எடுத்துமுத்தம்

தந்தையருந் தானும் மகனைப் பிரியமதாய்
மேலுக்குப் பாராட்டி விதவிதமாய்ப் பணிபூண்டு
அஞ்சு வயதளவும் அருமையிட்டுத் தான்போற்றி
மஞ்சனுட வார்த்தை மதளைமொழி தான்கேட்டு

வாகாய் வயதேழும் வந்ததற்பின் இரணியனும்
முந்துமறை வேதியரே முகிழ்த்தமிட வேஅழைத்து
மைந்தனுக்கு வித்தை வழுத்துமென்று தானுரைத்தார்
அந்த மொழிகேட்டு அந்தணனுஞ் சம்மதித்து

இந்த வசன மிதுவே பிரியமென்று
தம்பியற்கு நல்ல சாஸ்த்திரங்க ளோதுவிக்க
தும்பிமத வாரணமே துணைசெய்வா னென்றுசொல்லி
ஏடு பிடித்து இரணியநமா வென்று

பேசாம லேஇருந்து பிரகலா தேவனுந்தான்
ஆசானைப் பார்த்து அய்யரே! வேதியரே!
உள்ள அரிவளப்பம் உரையாம லிப்போது
தலைகீழாய்ச் சொன்னால் சம்மதியோம் ஆர்தனக்கும்

வளப்பது செய்தனென மறையோனுந் தானுரைக்க
அளப்பொன்று மிட்டு அரிநமோ வென்றுசொன்னால்
வேத மழிந்தாலும் விண்ணோ ரழிந்தாலும்
ஆதவனு மம்புலியும் அண்ட மழிந்தாலும்

ஒருநாளு மழியாத உண்மைப்பொரு ளாகுமிது
திருமாலு நான்முகனுஞ் செப்புமொழி வேதாந்தம்
ஓம்நமோ நாராயணா வென்று உபதேசம்
என்று சிறியோன் எடுத்துரைக்க வேமறையோன்

ஒன்று முறையாமல் ஓவியம்போல் தானிருந்தான்
மன்ன னிரணியன்முன் வந்திருந்து வேதியனும்
தென்னவனே உன்மதனை செப்புகின்ற வார்த்தைகளை
கேட்டிலையோ வென்று கிருபையுடன் சொல்லலுற்றான்

தாட்டிகா யென்மொழியைத் தம்பியவன் சொன்னதுகாண்
இரணிய நமாவென்று இன்பமுடன் சொல்லுமென்றேன்
அரிநமோ வென்றசத்தம் அகண்டமெல்லாங் கொண்டிருக்க
சரியா இரணியனைத் தானெதிராச் சொல்லுவரோ

என்னென்றா னுன்மைந்தன் இரணியரே என்றுரைத்தார்
நன்றாச் செனவே நாழிகையில் மைந்தனையும்
கூட்டிவரச் சொல்லி குழந்தைதனைத் தான்பார்த்து
பூட்டிவித்த சொல்லைப் பொருந்தாம லிப்போது

யேறுமா றாயுரைத்தாய் என்பிள்ளாய் நீயோதான்
கூறுமிரணிய நமாவென்று கூறுமென்றா னிரணியனும்
அரிநமோ வென்று அருளினான் பாலகனும்
எரியளவே கோப மிரணியனுந் தான் சினந்து

சொன்னபடி சொல்லென்று சுடரை மிகக்கொளுத்தி
முன்னாளில் சொன்னதொரு அல்லாது வேறுமுண்டோ
என்னவகை செய்தாலும் எடுத்துரையே னந்தமொழி
மன்னவனே எட்டெழுத்தை மறப்பதுவு ஞாயமதோ

ஆகாத சொல்லதனை ஆமென்று சொல்லுவரோ
சாகா வரந்தனக்குத் தந்ததினா லிந்தமதம்
வந்தவகை தானென்று மன்ன னிவையுரைக்க
சென்னி யசைத்துச் சினமா யிரணியனும்

என்னிலுந் தான்பெரியோன் இன்ன மொருவருண்டோ
சொல்லடா வென்று சுதனளப் பிடித்தடிக்க
நில்லடா சொல்லுகிறேன் நிரந்தரமாய் வஸ்துமவன்
இருக்கிறான் கண்டாயே எள்ளுக்கு ளெண்ணெயைப்போல்

உருக்கமுடன் காட்டென் றுரைத்தான் மதலைதனை
திரும்பி மதலையது திருமால் தனைநினைந்து
துரும்பி லிருப்பான்காண் தூணிலுமே தானிருப்பான்
என்று பிரகால தேவ னிவைஉரைக்க

மன்னு புகழ்ரெத்தின மணிவயிரத் தூண்தனிலே
இருப்பானோ வென்று இரணியனுங் கோபமதாய்
கோபம் எழுந்து நிலவரமே யென்றுரைக்க
அப்போது பாலகன்தான் அச்சுதனை உள்நினைந்து

இப்போது தூணி லிருக்கிறா னென்றுரைத்தான்
இன்னமொன்று இஞ்சை என்சேதி தானறிந்து
வன்ன மணித்தூணில் வந்திருப்பாய் என்றுசொன்னாய்
யெங்கேய டாவென்று யெழுந்தறைந்தான் தூண்தனையும்

நங்கைபங்கன் தூணில் நரசிங்க மாயெழுந்தார்
கண்டவுடன்மைந்தன் கடவுளிவர் தாமெனவே
தெண்டனிட வேணுமென்று செப்பினான் தந்தையிடம்
அந்த மொழிகேட்டு ஆகா திரணியனும்

வந்தநர சிங்கமுடன் வாகாய்ப் பொருதலுற்றான்
வாய்த்துதென்று சொல்லி மாயன் மிகநினைந்து
சாய்த்தவனைக் சுத்தித் தன்மடியி லேகிடத்தி
வாசல்ப் படிதனிலே வந்துநின்று கூர்நகத்தால்

பாசல் குடல்மார்பும் பகுந்துரண்டு கூறாக்கி
குடல்பிடுங்கி மாலையிடக் குடித்துதிரம் வீழாமல்
அடல்கதிரோன் பாதி அஸ்தமிக்கும் வேளையிலே
கொன்றா னிரணியனைக் கோபாலர் கையாலே
போனா னிரணியனும் புழுநரகில் அம்மானை !

மாயோனை வந்து வானவர்கள் போற்றிசெய்ய
நாராயணன் கிளைகாக்க நரசிங்க மாயெழுந்து
இடுக்கண் தவிழ்க்கவந்த எம்பெருமாள் போற்றியென்று
நடுக்கந் தவிர்த்தருளும் நாரணரே தஞ்சமென்று

போனார்கள் வானவர்கள் பொன்னகரந் தானோக்கி
ஆனாலும் பஞ்சவர்கள் அநேக நெடுந்தூரம்
பாதை துலையவென்று பழங்கதையள் தான்பேசி
வாதைய ளன்றி மனத்துயரந் தான்தீர

கதையாய் வழிதுலையக் காரணமே சொல்லுமென்றார்
பதையாமல் வீமன் பணிந்துதன்மர் சேவடியை
பூண்டுகொண்டு சொல்லுமென புகழான தன்மருந்தான்
மீண்டு மொருகதைதான் விள்ளுகிறோங் கேளுமென்றார்

கூறு மொருசிவனார் கோவில் திருவிளக்கு
ஆறுஞ் சுடரொளிபோல அமருகின்ற வேளையிலே
நின்ற விளக்கதனில் நெய்பருக வேநினைந்து
முண்டோ ரொளிவிளக்கை முஞ்சியினால் தூண்டிடவே

அவியாம லேவிளக்கு அழகாக நின்றெரிய
உலியாமல்த் தூண்டுகின்ற உத்த எலியதனை
பரம சிவனும் பார்ப்பதியுந் தான்மகிழ்ந்து
வரமருள வென்று வாவென்றா ரெலிதனையும்

அண்ணலார் தாமும் அரசாகி ஆளுமென்று
மண்ணுலகை ஆளுமென்று வரங்கொடுத்தா ரம்மானை!

மூவுலகி லேபிறந்து புரந்தரன்போல் வையமெல்லாம்
தேவ ரடிபணியத் தேசமெல்லாம் ஒருகுடைக்கீழ்
ஆளுகின்றான் லோகம் அமிரா பதக்கனைப்போல்
வாழுகின்றான் மாபெலியும் வையகமுந் தான்தழைக்க

ஆயிரம் லிங்கம் அடவுடனே பூசைபண்ணி
கோவில் குளமுங் குடிபடையுந் தான்செழிக்க
தான தவமும் தன்மபரி பாலனமாய்
வானவர்க்கு மெட்டாத மாபூசை குருபூசை

ஞானசிவ யோகியென்றே நற்குணமும் விற்பனமும்
ஈன மிரக்கம் இரப்போர் கலிதீர்த்து
இரப்போர்க்கு நாளு மில்லையென்று சொல்லாமல்
ஆல்போல் தழைத்து அருகுபோல் சுத்தமெல்லாம்

பசியமா லுள்ள பாக்கியமுந் தானருள
ரிஷியள் தபோதனர்போல் நெறிமுறை தப்பாமல்
பாராளும் நாளில் பச்சைமால் சோதினைக்கு
சீரார் புவியில் திருமால் அறிவமென்று

வந்தார் புவியில் மாவெலியின் சேதிகண்டு
சந்தோச மாயிருக்குந் தாரதலத்தின் பெருமைகண்டு
ஒருவிளக்குத் தான்தூண்டி உலகமெல்லாம் தானாண்டான்
திருவிளக்கு லோகமெல்லாஞ் சிறப்பாக இருக்குதென்று

இவ ருடைய தன்மம் ஈரேழு லோகமெல்லாம்
சிவனுடைய ரூபந் தீபச் சுடரொளிபோல்
எங்கும் விளக்கொளியாய் இருக்குதுகாண் தானதவம்
பொங்குதுகாண் பூலோகம் பொய்யாமல் யாவருக்கும்

இவன்செய்யுந் தானதவம் எள்ளளவுங் குற்றமில்லை
அவன்செய லழிக்கவென்றால் ஆகா தொருவருக்கும்
வள்ளல் கொடுத்தவரம் வளருதுகாண் மாபெலிக்கு
உள்ளக் கருத்தில் உபாயமென்ன சொல்லவென்று

கள்ளத் திருடன் காயாம்பூ மேகவர்ணன்
மெள்ள மனதில் வேறே நினவுகொண்டு
மாயோனுந் தானிருக்க மாபெலியு மப்போது
நீயென் றுருந்ததவம் நீணிலத்தில் செய்வதற்கு

உகந்து நதிமுழுகி உத்த நதிக்கரையில்
புகழ்ந்து சிவபூசை பூரணமாய்த் தான்முடித்து
பாதாளம் பூமி வஸ்திரதான முதலாய்
கோதானமும் நீதியுங் கொடுத்தருள வேபலவும்

கன்னிகா தானங் காவலனுந் தான்கொடுத்து
தன்னி மனதி லொருமித் திருக்கையிலும்
கொடுக்கிறா னென்று கோபாலர் தான்கேட்டு
அடுக்கவே சென்று அந்தணன்போல் தானிருந்து

நரைதிரையு மூப்பு நடுக்குமுடல் வாதமுமாய்
புரைஇரும லாகிப் புகைந்திருண்ட கண்களுடன்
நாசி யொழுகி யுடல்நாடி தன்றிடவும்
பாசிபத்திப் பல்லு பழுவா யெழுக்லுமாய்

போத்தும் பிடவையது[1] பொள்ளலர்ய்க் காத்தாட
பீத்தப் பிடவையுடன் பிராமணனுந் தானிருந்து
ஆசனத்திரு மாபெலியே அட்சதையிந் தாவென்வே
மனத்தவனே உன்னிடத்தில் வந்தே னென்வேதான்

அட்சதையுந் தான்கொடுத்து அந்தணனுந் தேகியென்றே
பட்சமுடன் தேகியென்ற பாப்பானை வாருமென்று
ஏதுனக்கு வேணுமென்று இன்பமுடன் மாபெலியும்
சரசமுடன் தான்கேட்கத் தள்ளாமல் மாமறையோன்

இடறி விழுவார்போல் ஏப்பு மிளைப்புடனே
வடதேச மேயிருந்து வந்தென்து மோகிதமாய்
உன்னிடந்தில் வந்தேன் உத்தமனே என்தனக்கு
நன்னிலத்தில் நானிருக்க நாட்டமுட னிப்போது

இருக்க இடந்தாரு மென்னுடைய காலாலே
சுருக்கமாய் மூன்றடிமண் சொல்லியே தெத்தம் பண்ணும்
போரு மெனக்குப் புண்ணியமே செய்யுமென்றார்
வாருமய்யா நிர்தான் மற்றொன்றுங் கேளாமல்

இவ்வளவு கேட்டதென்ன இப்போதே தாரேனென்றான்
குவ்விய மாபெலியுங் கொடுக்க ஒருமனதாய்
கெண்டி தனையெடுத்துக் கெங்கா சலங்கோர்த்து
தெண்டிரையில் வேதியாக்குத் தெத்தம்பண்ணும் வேளையிலே

தக்கதொரு சுக்கிரன்தான் தன்னுடைய சீஷனென்று
மிக்கதொரு வண்டெனவே விழுந்துகெண்டி தாரையிலே
சிக்கெனவே தானடைத்தான் தெரிந்தந்த மாமறையோன்
தெர்ப்பையால் குத்திட்டே திட்டியொன்றுங் கெட்டுவிட்டான்

---

1. புடவை

நிற்பளவி லெல்லோரும் நிந்தித்தார் சுக்கிரனை
ஈவோர் தனைவிலக்க இப்படியாய்க் குற்றம்வரும்
தீவினையாய்த் தான்முடியும் செய்வோரைத் தான்விலக்க
என்று சபைசொல்லி இருந்தான் தலைகுனிந்து

தாரையில் தண்ணீர் தாராளமாய் வீழ்க
பூரையென்ன மாபெலிதான் புகழ்ந்துதெத்தம் பண்ணினனே !
தெத்தமது வாங்கித் திருமாலும் பூவுலகில்
வைத்தா ரொருபாதம் விண்ணுலகி லோர்பாதம்

மற்றுமொரு பாதத்துக்கு வகையே தெனக்கேட்டார்
ஓரடிமண் ணுந்தனக்கு உன்மெல் நிலுவையென்று
மாபெலியை வன்சிறையில் வைத்தார்காண் வானத்தில்
தெய்வலோ கஞ்சேர்ந்து சிறையிருந்தான் மாபெலியும்

வானவர்கள் தேவர்களும் மாயோனை யேவணங்கி
தானவரும் வேதியருஞ் சதுர்வேத நான்முகனும்
மாயவனை வாழ்த்தி மகிழ்ந்திருந்தா ரம்மானை !

தூயதொரு பஞ்சவர்கள் துலைதூரந் தானடந்து
ஆயனுட சந்நிதிக்கு ஆசையுட னாவலுமாய்
வேக முடனடந்து விந்தமது காணவென்று
தாகமுடன் வீமன் தர்மர் தனைத்தொழுது

வைகுண்டஞ் சேர வழியனுப்ப வேணுமென்று
மெய்கண்ட மூர்த்தி இன்னம் விளம்பு மொருகதைதான்
நடக்க முடியுதில்லை நல்லகதை சொல்லுமென்றார்
அடக்கமுள்ள தம்பியரை அடக்கமுள்ள ராட்சதரை

சொல்லுகிறேன் முன்னாள் சுருதிமுதல் முற்கதையை
புவியும் புவியும் புவிமுக்கு மாகாசம்
கல்லுங் கறடும் கடலுந் திசைகளெட்டும்
அல்லும் பகலும் அஷ்டதிக்கு மெண்டிசையும்

இல்லாத காலம் இறையோ னொருவனுமாய்
அல்லவா யெங்கும் அகண்டமெல்லாந் தானாக
வெளியாகி எங்கும் விளங்கும் ஒளியாகி
அழியாத வித்தொருவன் ஆதியாய் நின்றமுதல்

ஏக வெளியாகி எல்லாம் நிரந்தரமாய்
ஆத்ம வேதமன்றி அசைவுபல நாதமுமாய்
வானாய் நிலனாய் மலையள் சராசரமாய்
பாராய்ப் பதியாய்ப் பலவகையள் தோற்றமுமாய்

அண்ட மடுக்காய் அண்டபகி ரண்டமதாய்
பிண்டமுத லண்டமுமாய் பிரமாண்ட கோளகையாய்
தட்டுநிலை தாபரமாய் தராதலமும் ஊர்வனுமாய்
எட்டுத் திசையும் எழுவான் படுவானும்

ஆகட்டு மென்று அருளி நினைவுகொண்டு
வாதிட்ட ரூபியென்றார் வந்துமுன்னே நிக்கலுந்தான்
எல்லாமுண் டாகுமென்று இறையோள் பறையிடத்தில்
சொல்ல முடிந்ததுகாண் தோற்ற மொடுக்கமெல்லாம்

தற்பரமாய்த் தோன்றி தற்பரத்தி லேஇருந்து
சிற்பரமுந் தோன்றி சிற்பரத்தி லேஇருந்து
பரந்தோன்றி நின்று பரத்தில் சிவன்தோன்றி
உரந்தோன்ற வேசிவத்தி லுற்றசத்தி தான்தோன்றி

சத்திதனில் பூதபலன் தத்துவத்தில் நாதமுமாய்
முத்தி னொளிபோல மூலவிந்து தான்தோன்றி
விந்துதனில் நால்வேதம் வியந்தானுஞ் சாத்திரமாய்
பந்துமுறு சாத்திரத்தில் பதினெண் புராணமதாய்

தத்துவங்கள் தொண்ணூத் தாறுடனே தான்சமைத்து
ஆதோர் முதலான அன்பத்தோ ரட்சரமும்
வீறாஞ் சதகோடி வேதமுதல் மந்திரமும்
மந்திரத்தில் விந்துவுமாய் வந்த சதாசிவமும்

அந்தச் சதாசிவத்தில் அரிய மயேச்சுரனும்
இந்த மயேசுபரத்தில் ஏன்றதொரு ருத்திரனும்
வந்ததொரு ருத்திரனில் வாசமுள்ள விஷ்ணுவும்
விஷ்ணுவி லேயிருந்து விதிப்பிக்க வேதாவும்

சட்டமிகு வேதாவில் தரித்திருந்த ஆத்துமாவும்
ஆத்துமாவி லேயிருந்து ஆகாசந் தான்தோன்றி
தேய்விலே அப்புவுந்தான் சிறப்பாகத் தான்தோன்றி
சிறப்பான அப்புவிலே சேர்ந்ததொரு மனந்தோன்றி

அறப்பெரிய மண்ணில் அருபவிந்தா யுண்டாகி
ஒன்றுபத்து நூறாய் உளக்கோ ராயிரமாய்
அன்று விதிக்கையால் அனந்தம் நூறாயிரமாய்
வானும் புவியும் வகைபலவுந் தானாகி

ஊனு முயிரும் ஊர்வனவும் பட்சிகளும்
திக்குத் திசையுந் திசைசூழ்ந்த வையகமும்
திக்குமொரு அட்டகிரி நேரான அஷ்ட்டகெசம்
ஈரேழு லோகமுமாய் எண்பத்தும் நான்குயிராய்

பாரேழுந் தாங்கப் பணாமுடிக ளாயிரமாம்
யோனி பலவாகி உருவமது வெவ்வேறாய்
மானிலமே புல்பூடாய் மரங்கள் விருட்சமதாய்
நால்வகையில் சாதியுமாய் நால்வேத சாத்திரமாய்

நூல்வகைய ளாகமுமாய் நோம்பு விரதமுமாய்
ஆண்பெண் ணிருவகையாய் ஆகாய முமுதலாய்
காண்பதுகாண் காமம் கலைக்கியா னம்பெரிதாய்
ஆசையெல் லாங்கூடி அடைத்துவைக்கப் பொக்கிஷமாய்

ஓசையள் பஞ்ச உருவஞ்சுவை நாதமுமாய்
வாசலொரு ஒன்பது மாய்மல மாண்டவீடாய்
பாசமெனு மைம்புலனும் பரும்பூதம் ஐம்பொறியும்
தத்துவங்கள் தோன்றுந் தாறுடைய சஞ்சலமாய்

மத்து சராசரங்கள் மண்டலங்கள் மூன்றுடனே
சுத்தண்ட கூடச் சுவரு மடங்கலுமாய்
சந்திராள் சூரியரும் தாரகைநட் சேத்திரமும்
இந்திரரும் வானவரும் இமையோர் முனிவர்களும்

தந்திரமாய் நான்வகுத்துச் சகலமெல்லா முண்டாக்கி
அந்தரத்தில் பேச்சும் ஆர்பெரியோ ரென்றறியில்
நாமிப் புவியில் நால்வகையுந் தான்படைத்து
தாமே நமக்குச் சரியில்லை யென்றிருக்க

மாலவன் தானெல்லாம் வகுப்பித்தோ மென்றுசொல்லி
ஆல மரத்தேறி அவன்துயின்றா னாமாகில்
ஆரறியப் போரார் அரியோ னயநினவும்
சென்றவனை நாமும் சிலுகிட்டுப் பார்பிடித்து

வென்றவனை நாமும் மிகுபெரியோ னெனவேதான்
நினைந்து மனதிலெண்ணி நெருப்பிருகண் தீயெரிய
மனைந்ததெல்லாம் பொய்யோ வகுத்ததுவும் வீண்தானோ
நன்றாச் செனவே நடந்தார்வை குண்டமதில்

அன்றிடைச்சி கையி லடியுண்ட மாலிடத்தில்
சென்றா னிருந்தான் சீராட்டு வார்த்தையதாய்
கன்றால் கனியெறியுங் காயாம்பூ மேனியனே
உன்பேச்சும் யென்பேச்சும் உலகறிய வேணுமிப்போ

தன்பேச்சு தானே தானெண்ணி யேயிருந்தால்
என்பேச்சுங் கீழா இருப்பதுவும் ஞாயமல்ல
முன்பேச்சு மூவருடன் முப்பத்து முக்கோடி
தேவர்களு மந்த சீவப்பல ராசியளும்

மூவர்களும் தாமறிய முழுதும் படைத்திருக்க
என்படைப்புக் குள்ளாக இருந்து பிழையாமல்
வம்பிழந்து நீதான் வாய்வீண்கள் பேசினதேன்
ஈரேழு லோக மிகபரமுந் தானறிய

பாரேழும் நான்படைத்தேன் பச்சைமா லினியேது
இப்பாலென் கையா லீரேழு லோகமெல்லாம்
மெய்ப்பான சுத்த மேழுமுட னேகடலும்
அஷ்ட்டகுல பர்வதமும் அஷ்ட்ட மா நாகமுதல்

மரீஷி முதல்சத்தரிஷி மைந்தரா யென்னுடைய
அரியமைந்தனீன்ற அன்புடைய மைந்தர்கள்தாம்
குருக்களொடு தேவர் குலசந்தி ராதித்தரும்
அஷ்ட்ட வசுக்க ளசுரரொடு ராட்சதரும்

கிட்டமுரு காந்துருவர் சித்தியவித் யாதரரும்
கிம்புருடர் கின்னரர்தாம் கின்னரர் தன்னுடனே
தும்புரு நாரதரும் தோற்றமெல்லா மென்னிடத்தில்
இந்திரனு மக்கினியும் இயம னுடனிருதீ

வந்ததொரு வாயுவு குபேரன்மா ஈசானியன்
இஷ்டமுட னஷ்டதிக்குப் பாலகரு மென்னாலே
திட்டமுடன் சகல சீவன்முத லென்னாலே
உண்டான தென்று உன்மனதி லெண்ணாமல்

விண்டோ மீவனையென்று மேதினியி லுன்னுடைய
உந்திக் கமல முதித்தா னவனெனவும்
சிந்தித் திருந்ததெல்லாம் தீர்க்கமுடன் விட்டுவிடும்
ஏதினா லென்றால் என்னுடைய கைநினவாய்

வாரதி லெவ்வுயிரும் வகுத்து விடாதிருந்தால்
ஆரைநீ லெட்சிப்பாய்ச் சொரூப மில்லாட்டால்
பேரை மதியாத பேச்சேதும் பேசுவரோ
சுவரில்லாச் சித்திரமும் தொட்டெழுத வல்லாயோ

எவரை மயக்குகிறாய் இத்தொழிலை விட்டுவிட்டு
நால்வகையு நீர்தான் லெட்சிப்போ மென்றதெல்லாம்
உன்னைவிட்டு வேறே உன்போ லொருவருண்டோ
பின்னையுண் டாக்கிப் பிரியமுடன் லெட்சியென்பான்

ஆர்க்கமுடன் பாற்கடலில் அங்கேநீ பள்ளிகொண்டாய்
தீர்க்க முடனசுரர் சென்றுவந்து கொல்வார்கள்
பாற்கடலை விட்டுப் பக்கமே சென்றுபுக்கி
எற்கவே ஓடி இப்போ ஒளித்திருப்பீர்

என்னுடைய பேரணியி லிருக்கு மகாரிஷியும்
உன்னுடைய செய்வினையால் உன்னையே தான்சபித்தான்
முற்றுமந்தச் சாபம் முழுதும் படைத்தவர்கள்
விட்ட தரியாயோ விதித்தெழுத மென்கையினால்

இட்ட யெழுதும்படி இருக்குமே அல்லாமல்
எல்லா வுயிருக்கும் இன்னபடி என்றெழுதி
கல்லாயென் கையும் கறுத்ததுவுங் காணீரோ
உன்னுடைய நாசியிலே உதித்துவைத்தே னென்றுசொல்லி

என்னுடைய பேரை இகழ்ச்சியாய்ச் சொன்னாயே
முந்த ஒருதூணில் முளைத்தொரு நரசிங்கமாய்
வந்து இரணியனை மார்பைப் பிளந்துவிட்டாய்
அந்தத்தூ ணுந்தனக்கு அன்னையோ தந்தையோதான்

தந்தையே தானானால் தகப்பனும்நீ யெந்தனுக்கு
அக்கினிதான் மூங்கிலுக்குள் அவதரித்து வந்துபின்னும்
முக்கிய மூங்கிலெல்லாம் முழுவதும்வெந்து நீறாகி
போட்டதுபோல் நானும் உந்திதனில் வந்துதித்து

வாட்டமில்லா வுந்தனுக்கு மாத்தானாய் வந்துதித்தேன்
நின்று மனதில் நினையாததெல் லாம்நினைந்து
வேத னிவைசொல்ல வெந்தணலில் நாராசம்
காதில் வெகுதுன்பம் கையால் சொருகினர்போல்

அகோரம் பிறந்து அனலாய்ப் புகையெழும்பி
விகாத முடன்சைந்து வேந்தனுக்கு மிந்தமதம்
வந்ததென்ன வென்று மனதிலெண்ணி மாயோறும்
இந்த மகிமை இனியறிவோ மென்றுசொல்லி

வேதாவைப் பார்த்து விஷ்ணுவும் கோபமதாய்
மாதா வுனக்கு வயிரியென் றறியாமல்
நீதா யுரைத்தாய் சிறுபிள்ளை யாகையினால்
மீதாய்ச் சிறுபிள்ளை வெகுவாகத் தானுரைத்தால்

தந்தைய து குற்றமென்று தான்சினக்க லாகாது
எந்தவிதம் நம்மை இகழ்ச்சியாய்த் தானுரைத்தாய்
இப்படிநீர் சொல்ல யேவர்பொறுப் பார்கண்டீரோ
அப்படிக் கொத்தபிள்ளை அகந்தையது செய்திடவே

உன்னைப்போ லெந்தனுக்கு உத்தபிள்ளை தானிருவர்
மன்னன் புயபலமும் பராக்கிம முள்ளவர்கள்
மதுவுடனே கயிடவனும் வாகா யிருவோரும்
எதுவுடனே முன்னாள் என்வயத்தி லேபிறந்து

தந்தையென்று பாராமல் தாட்டாண்மை தன்னுடனே
வந்தெதிர்த்தார் நம்முடனே மறைபெருது தானவரும்
கொல்ல முடியாமல் குலைந்துவெகு நாள்பொருது
வெல்ல வுபாயம் வேறே நினைவுகொண்டு

சற்பினையாய்க் கொன்றவரைத் தாரணியில் போட்டுவிட்டேன்
அப்படியே உந்தனுக்கு அறிவுவரப் பண்ணாட்டால்
உற்பனமென் றெண்ணாது உள்ளகந்தை நில்லாது
காப்புடைய தேகமதில் நல்வினை ளாலெழுந்து

புண்ந்தனையும் கீறி புரையறவே தானாத்தி
பண்புடனே தானிருந்தால் பகையாதே ஆறிவிடும்
அத்தன்மை போலே அகந்தைசெய்து பிள்ளைகள்
பெத்தபிள்ளை யென்று பிரியமுடன் பாரார்கள்

உந்தன் சிரத்தில் ஓர்சிரசை ஈஸ்பரனார்
முந்தவே கிள்ளுகையில் முளைத்துதோ உன்சிரசு
அந்தமட்டும் உந்தனுக்கு ஆண்மையொன்று மில்லாதால்
எந்தமட்டும் உன்செயல்தான் அய்வர்தனக்கு நீபுதல்வன்

அனந்தன் பணாமுடிக ளாயிரந் தன்னிலொரு
கனந்தான் புவனங் கருத்தசிர சோன்தனக்கு
பத்தாத லோகம் படைத்தோ மெனும்பெருமை
கத்தவாய்ப் பேசுவது காரியமோ உந்தனுக்கு

சொல்லுமுந்தன் வேதமெல்லாம் சோமுக சூரனுந்தான்
நில்லுமென வேபரித்து நெடுகவே கொண்டேகில்
குன்வடிவு[1] தானெடுத்து வேதமதைத் தான்பறித்து
நான்மிகவும் தந்த நன்றி மறந்தாயே

நச்சுமர மானாலும் நட்டமரந் தன்னையிப்போ
அச்சமற நாமும் அழிப்பதுவும் போகாதே
என்பதினால் நாமும் இந்தமட்டும் தான்பொறுத்தோம்
உன்பலத்துக் காற்றாம லொறுத்தோமென் றெண்ணாதே

உயித்தமே பண்ணி உன்னைமிகக் கொல்வதற்கு
சயித்திருந்தேன் சுத்தமனத் தள்ளியிங்கே மீறிவந்தாய்
இனிக்குற்ற மில்லை யென்றே நெடுமாலும்
கனிசிவந்த வாயான் கண்கள் நெருப்பெழவே

உரந்தெழுந்த வார்த்தை சொல்ல மலரோனும்
துரத்தி வெகுண்டவர்போல் துனிகிவிட் டெழுந்துமிக
ஒருவர்க் கொருவர் உறுபூச லாய்விளைந்து
இருவருக் கும்பே ரெதுத்துப் பொருதுதற்கு

விட்டு மீதமிஞ்சி வார்த்தைபல தான்பேசி
கட்டுவிடப் பேசி காவலர்கள் பூவுலகில்
குதித்தார் இருபேருங் கொடுமுடியள் தானதிர
துதித்தார் பெருமாளும் துடைதட்டி யேதுசொல்வார்

முன்னா ளிராக்கதர்கள் முறையிட்டார் நம்மிடத்தே
மன்னா வுனக்காக வந்துநாம் ராட்சதரை
கொன்றுங்கள் தெய்வப் பதவி கொடுத்தோமே
சென்றுங்கள் தெய்வப் பதவியிலே சேர்ந்திருந்து

---

1. மீள்வடிவு எனல் பொருந்தும்

நன்று மறந்தென்னைநீ நய்யாண்டி பண்ணியிப்போ
மன்றில் பொருத வாதாடி வந்தெதிர்த்தாய்
இனியறிவோ மென்று எதிர்த்தா ரிருபேரும்
பனியவரைப் பளீரென்று பகைத்தெதிர்த்து நின்றாற்போல்

பல்கட்டிச் சேர்ந்து மண்ணதிர விண்ணதிர
திக்கெட்டுந் தானதிர திசைகளெட்டுந் தானதிர
இடராசி மாயோன் எடுத்தடியும் வைக்கவுந்தான்
அடவுடனே வேதன் அவனும் வலசாரி

கால்களொடு கால்மாறி கைகளொடு கைசேர்த்து
மேல்களொடு மேல்சேர்த்து வேகமுடன் தானிருவர்
மாது மிகுத்து ஓங்காரங் கொண்டெழுந்து
அல்லுகிற சத்தம் அண்ட கிடாகமட்டும்

நடுங்கி மலைகலங்கி நட்சத் திரமுதிர
கடுங்கோபங் கண்டுங் கதிரோனுந் தான்மறைய
பூமி யதிரப் புவனம் பதினாலும்
சாமிதிரு மாயவனார் தர்க்கமதுக் காற்றாமல்

அரவு தலைமாற அடுக்கண்டந் தான்சுவர
இரவு பகலாகி பகலிரவு போலாகி
இருவருந் தான்பொருதார் இமையோர் நடுங்கிடவே
ஒருவர்க் கொருவர் யெதுத்துஞ் சினந்துகையால்

குத்துகின்ற சத்தமது கோடையிடி போலாகி
எத்துகின்ற கால்களினால் யெடுபட்ட மாமலைகள்
தூளாய் நொருங்கித் துகளாய்ப் பறந்துவிழ
ஆளா யிருவோரும் அடவா யலகுகொண்டு

வலசாரி யாக மாயோ னடிபணிந்து
மலரோ னிடசாரி வருவதுவும் பூவுலகில்
இரவுவந்து மூடுகைபோல் எம்பெருமான் தன்மேனி
இரவுவந்து தோன்றுகைபோல் இயவேந்தர் தன்மேனி

இப்படியே ஓர்நொடிக்குள் இரவுபக லாயிரமாய்
மல்பிடித்துச் சக்கரம்போல் வட்டமிட்டுச் சுத்துகையில்
பூவுலகி லுள்ள புல்பூண்டு சீவசந்து
தாவுமிட மில்லாமல் தயங்குமா மந்தரத்தில்

ஆகையினால் வானவர்கள் அயிரா பதத்தினிடம்
மாயன் வகைகண்டு வந்து முறையிடவே
அவர்கள் முறையிடுமுன் அயிரா பதத்தோனும்
இவர்களுக்கு முன்னே இயம்பினான் தன்சலசம்

ஆனால் சிவனிடத்தில் அபயமிட வாருமென்று
போனார்கள் தேவரெல்லாம் பொன்கயிலை தானோக்கி
அரனே உனக்கபயம் அத்தனே முக்கண்ணனே
பரனே உனக்கபயம் பாருலகி லிப்போது

மாயோனும் வேதாவும் மல்யுத்தம் பண்ணுகிறார்
நாலா வகைசீவன் நாங்கள்முத லெவ்வகையும்
நிக்கவகை யில்லாமல் நீந்திவந்தோர் முன்பாதம்
தக்கதுணை நீரெனவே தானுமே நம்பிவந்தோம்

சூறா வளிகாத்துச் சுழல்காத்துப் போலாகி
நீறாகி லோகம் நெருப்பா யெரியுதய்யா
அந்தரமும் வானும் அச்சழிந்து போகுதய்யா
இந்திரனோ ரஷ்டதிக்கும் எல்லாஞ் சுழலுதய்யா

சந்திரனுஞ் சூரியனுந் தானொளித்துப் போனார்கள்
மந்திரங்கள் வேதமெல்லாம் வகைகெட்டுப் போகுதுகாண்
அடுக்கு நிலைபேர்ந்து அலைகடலூந் தான்சுவறி
உடுக்க ளுதிர்ந்து உயர்முகடுந் தான்கிழிந்து

எல்லாந் தடுமாறி இயங்குதுகாண் மூவுலகம்
நில்லா நிலையில் நிற்கும் பராபரனே
நாதனே எங்கள் நடுக்கந் தவிர்த்தருளும்
வேதனுட போரும் விஷ்ணுவுட தன்போரும்
பார்க்க முடியாது பரனே பராபரனே !

கார்க்க விதுசமையம் கடைக்கண் கிருபையினால்
ஏறிட்டுப் பாருமய்யா இருவருட தன்போரை
கூறிட்டு லோகம் குலுங்குதுகாண் லோகமெல்லாம்
இறைவனே எங்கள் இடுக்கண் தனைக்கார்க்க

முறையோ முறையோகாண் முக்கணரே தஞ்சமென்று
இமையோர் முறையிடவே ஈசுபருந் தானிருந்து
அமையு மமையுமுங்கள் ஆபத்து தீர்ப்போனாம்
என்று சிவனாரும் இருவருட போர்விலக

குன்றுபோல் வடிவாய்க் கொடுங்கனலாய்த் தான்வளர்ந்து
நின்றார் தணல்வடிவாய் நெடியதொரு கம்பமென
ஒன்றாகி லோகம் ஊடுருவித் தான்வளர்ந்தார்
இருவர் தமக்கு இடைவாய் நடுவாகி

உருவன்றி அக்கினியாய் ஓங்காரக் கம்பமதாய்
ஆரு மறியாத அகண்ட பெருவழியாய்
அந்த மலைகண்டு அரியும் அயன்தானும்
சிந்தை கலங்கி திகைத்துநெடு மூச்செறிந்து

அக்கினியைக் கண்டு அகன்றிருவர் தான்விலகி
நின்றார்காண் கண்கள் நீலமது தான்பூத்து
பக்கமெல்லாம் அக்கினியாய் பலமலையும் அக்கினியாய்
திக்கெல்லா மக்கினியாய் சிவந்துதுகாண் லோகமெல்லாம்

எந்த விதமென்று இருவோரும் தான்மயங்கி
வந்த சிவத்தோனை வகுத்தறிய மாட்டாமல்
நொந்திடைந்து நின்றளவில் நோக்க முடன்சிவனும்
இந்த மகிமை இவரறியா ரென்றுசொல்லி

ஞானக்கண் கொண்டறிவார் நல்ல பெரியோர்கள்
ஊனக்கண் கொண்டறிய ஒவ்வா தெவராலும்
பார்க்க முடியாது பாவியே னென்றுசொல்லி
தீர்க்க முடனிருவர் தெளிந்து வகைபேசி

இந்த மலைப்பெருமை யாமறிய வேணுமென்று
அந்த மலையை அடிமுடியுந் தானறிய
தங்களிலே சம்மதித்துத் தானே இருவோரும்
அங்கெழுந்த வேதன் அன்ன வடிவாகி

முடிதேடி யேபறந்தான் முகடுவெளி யூடுருவி
அடிதேடி மாய னாதி வராகமதாய்
மேலேழு லோகம் வேதனும் போயறிய
சீல முடன்பறந்து தேடினான் விண்ணிடத்தில்

கீழேழு லோகங் கேசவனுந் தானடந்து
தேடியுங் காணமல் திரும்பினார் மாயோனும்
வாடி மனதிடைந்து வந்திருந்தா ரம்மானை.

வந்திருந்து மாயன் மனதில் பலநினவாய்
இந்த மகிமைதனை ஈரேழு லோகமெல்லாம்
ஆராய்ந்து தேடி அரைக்கணத்தி லாயிரமாம்
பாராய்ந்து காதவழி ஆராய்ந்து கண்டறியோம்

ஆதி வராகமெனும் அதிரூபங் கொண்டுசென்று
சோதினை செய்து தொல்லுலகி லூடுருவி
கொம்புகளும் தேய்ந்து குளம்புகளுந் தான்தேய்ந்து
சம்பு சிவன்பாதம் தான்காண முற்றாமல்

வருஷ மொருநூறும் மண்ணுலகு மோரேழும்
விரசுகொண் டுயரத்தான மெல்லாம்போ யூடுருவி
இன்னபடி யென்றறியோம் ஈசருட தன்பாதம்
அன்ன முய்த்தோன் அய்ன்காண்ப தேதெனவே

எண்ணி மனதில் இறையோனைத் தானினைந்து
மண்ணி லிருந்து மனதில் தியானமதாய்
ஞானக்கண் கொண்டு நாட்டத்தில் நோக்கமதாய்
மாறாக் கருத்தால் மவுனமாய்த் தானிருந்தார்

பட்சி வடிவுகொண்டு பறந்ததொரு வேதாவும்
கட்சி யொருகாதம் கணப்பொழுதி லாயிரமாம்
வெளிகடந்து சென்று மேலேழு லோகமுமாய்
தெளிவுசற்று மில்லாமல் திகைத்து மனமிடைந்து

அப்பாலும் நூறுநூ றாயிரங் காதவழி
மெய்ப்பாய் வெளிதாண்டி மெய்யசந்து வேதாவும்
சிறகுரெண்டுந் தேய்ந்து செயல்முழுதுந் தான்குறைந்து
இறகசைக்க மாட்டாமல் இருந்து மனதுநொந்து

அண்ட கிடாகமட்டு மாராய்ந்து இன்னமுந்தான்
கண்டதில்லை அக்கினியின் கம்பத்தின் தன்முடியை
இத்தூரம் வந்து இப்படியே அல்லாது
சத்துமது கிட்ட சமீபமது காணாமல்

அளவற்ற சோதிதனை ஆராய்ந்து முத்தாமல்
களப மணிமாயன் கண்டானோ அப்படியே
பொறியாகச் சோதியிது பேச்சுக்கு மெட்டாது
அங்குமிங்கு மொன்றாய் அடிமுடியுந் தானாகி

எங்கும் நிறைந்திருக்கும் மீசுபரரே யல்லாமல்
வேறே உபாயம் விடைவுசற்று மில்லைஇங்கே
கூறே னொருவசனங் கொண்டல்வண்ணன் தன்னுடனே
பகைமுடித்துக் கொண்டதொரு பாவந்துலை யாதெனவே

வகையாய் உறவுசெய்து மாயனுட னான்தானும்
இணக்கமுடன் கூடி இருந்து விடாமலிப்போ
பிணக்குவரப் பண்ணி பிழைமோசம் போனோமே
என்று மலரோன் எண்ணிமனம் புண்ணாகி

ஒன்று முறையாமல் உள்ளமெல்லாம் தான்ஒடுங்கி
இருக்கிற தருவாயில் ஈசர்முடி மேலிருந்து
வருக்கமுள்ள தாழை மலர்தான் வருகிறதே
கண்டு மலரோன் கற்பனையாய்த் தானறிந்து

உண்டுபண்ணிப் பொய்யை உரைக்க மனதிலெண்ணி
பொய்சொன்னோ மானால் பொருந்தவே சொல்லுமென்று
மெய்ப்பாகக் காட்சி விளம்புதற்குக் கேதகையை[1]
வசப்படுத்திக் கொள்ள மனதில் நினைந்துகொண்டு

நிசப்படுத்த வேதன் நேராக வாரதொரு
கேதகை யேநீதான் கிருபைபுட னெங்கிருந்து
மாய்கையாய் வாரீர் வருத்தமென்ன சொல்லுமென்றார்
அப்போது கேதகைதான் அயனே இனிக்கேளும்

இப்போது ஈசுபரனா ரேத்த சடைமுடிமேல்
இருந்து தவறிவிழுந் தீடுபட்டு நான்வாரேன்
பொருந்துவனோ பாவிநான் பொல்லாத காலமதோ
அவதி மிகப்பட்டு அந்தாந்தி லேயலைந்து

வாடி யிளைந்து வருகுரோ மித்தூரம்
நாடித் தளர்ந்து நடை யசந்து காலோய்ந்து
வருகுரோ மப்பா மகரகோடி காலயுகம்
ஒருவரையுங் காணேனா னுன்னையெதிர் கண்டனிப்போ

இன்னம் நிலத்தி லெத்தினைநாள் செல்லுமதோ
தன்மையாய்ச் சென்று களைகயாறி நாமிருக்க
கர்த்தனுட செயலைக் கணக்கிடவும் போகாது
எப்படியோ வென்று இவ்வசனங் கேதகைதான்

செப்பமுடன் சொல்ல தீர்க்கமுடன் நான்முகனும்
நல்லதுகாண் கேதகையே நான்சொல்ல நீர்கேளும்
வல்லதோரு மாயனுக்கும் மாநிலத்தி லெந்தனுக்கும்
வாதுவந்து சண்டை மற்போருந் தான்பொருது

தீதுவந்து முண்டிருவர் செலுத்த[2] முடியாமல்
நீபெரியோன் நான்பெரியோன் என்று சிலகாலம்
வாய்பேசி ரெண்டும் வழக்குரைத்துப் போராடி
மற்பிடித்து ரெண்டும் வலுத்துச் சினமிகுந்து

1. தாழை 2. செயிக்க

வெற்பிடிய லோக மேலேழுந் தானதிர
அடுக்கு நிலைகுலைய அண்டபகி ரண்டமெலாம்
உடுக்கணங்கள் தானுதிர ஒலிதிரையுந் தான்சுவர
பருதி மதிசுழலப் பகிரண்டந் தான்சுழல

நிருதிமுத லஷ்டதிக்கும் நெடியவனுந் தான்சுழல
தேவர்கள் வானவர்கள் திக்கு திசைசுழல
மூவர்கள் ராமுனிவர் முப்பத்து முக்கோடி
யாவர்களும் பாரில் அந்தரமுந் தான்சுழல

சீவ சராசரங்கள் திரிலோகமுந் தான்சுழல
போராடி நின்றோம் புவனந் தனிலிறங்கி
சீராடி யிப்படியாய்ச் சென்று சிலகாலம்
ஒன்றையொன்று நீங்காமல் உட்பூசல் தானினைந்து

நின்றோம் நெடுநாள் நீணிலத்தில் கோவெனவே
அந்த மொழிகேட்டு அரனோ பரனோதான்
வந்து விலக்கவென்று மாய்கையாய்த் தான்தோன்றி
இருவருக்கும் நடுவாய் எழுந்ததுகா ணக்கினியும்

ஒருவருக்குந் தோன்றாமல் ஊடே சுடர்வடிவாய்
வந்ததுகாண் சோதி மலையாய்ப் பருப்பதமாய்
அளந்திது காணா தாகாச முடுருவி
நின்றநெருப் பேதெனவே நிலையறிய மாட்டாமல்

ஒன்றையொன்று பார்த்து உழன்றுமனம் புண்ணாகி
நின்று மயங்கி நிலையள் தெரியாமல்
நன்று புதுமையிது நாமறிய வேணுமென்று
தங்களிலே நாங்கள் சம்மதித்துக் கொண்டேதான்

இங்குவந்த காரணந்தான் இன்றறிய வேணுமென்று
அடிதேடி மாயன் ஆதி வராகமதாய்
முடிதேடி மாயன் மொழிந்து வகைபேசி
கண்டோன் பெரியோன்காண் காணாதான் தான்சிறியோன்

பண்டோ ரறியாப் பரம்பொருளைக் கண்டறிந்தான்
அன்று பெரியோர் அவரவ ரென்றேதான்
என்று வகைபேசி இருவருமே சம்மதித்து
பாதாளஞ் சென்றார் பச்லசமால் கண்டீரோ

மீதான விண்ணகத்தில் வேகமுடன் நான்தானும்
வந்தேனே யிப்பால் வலுவு மிகக்குறைந்து
உந்தனையே கண்டேன் உள்ளமெல்லாம் தான்மகிழ்ந்தேன்
கண்டபொழு தெந்தன் கவலையெல்லாந் தான்தீர்ந்தே

அண்டினே னுன்னைஇப்போ ஆபத்துக் காத்தருள்வாய்
நாரணனுந் தான்மெலிய நமக்கோர் சகாயமென்று
ஆரணனுங் கேட்க அடவுடனே கேதகையும்
ஏதுகாண் சொல்லுமென்று இன்பமுடன் தான்கேட்க

சாதுவாய் நான்முகனும் சாத்தினார் நல்வசனம்
அந்த மொழிகேட்டு அரகார வென்றுசொல்லி
விந்தையுடன் கேதகையும் மெய்சோர்ந்தங் கேதுசொல்வாள்
என்ன விதிப்பயனோ ஈசர்முடி மேலிருந்து

அன்னமே தேளும் அவதிவந்து இத்தூரம்
தவறினேன் கண்டீர் தங்கஇட மில்லாமல்
குவலயத்தில் செல்வக் சொம்பிழந்த மந்தியைப்போல்
ஆகாத பாவி அடியே னொருபொருட்டாய்

வாகாக என்னுடனே வருத்தம்நீர் சொன்னீரே
எங்கும் நிரந்தரமாய் எள்ளுக்கு ளெண்ணையைப்போல்
அங்குமிங்கு மொன்றாய் அட்ங்கலுமா யெவ்வுயிர்க்கும்
நிற்கும் பராபரனை நீக்கியென்ன சொன்னாலும்

தற்கமுடன் கேட்கத் . தகுமென்றார் கேதகையும்
ஆனால் முன்னாளி லமரர்முதல் தேவர்களும்
வானோ ரமுர்தம் வாரிதனில் கடைய
ஆலகால விடம்பிறந்து அகிலமெல்லாந் தான்பாந்து

குாயவிஷஞ் சீறிவரக் கண்டமரர் தானோடி
அரனுக் கபயமென்று அரனாரு மோடிவந்து
பரனுக் கதுபொருட்டாய் ஆபரண மாய்விஷத்தைக்
கொள்ளலையோ ஈசர் சரபவிஷ மீதெனவே

பெரியோருக் கெல்லாம் பேதமென்று தள்ளாமல்
தெரியாதாக் கெல்லாம் தெளிந்து மனந்தேறி
என்னபிழை வந்தாலும் ஏற்பார் பெரியோர்கள்
வீணமென்று கொள்ளார்கள் மேலான நல்லோர்கள்

அடுத்தாரைக் காப்பார்கள் அடைக்கலமாய் வந்தோரை
விடுத்தேதுஞ் சொல்லார்கள் மெய்யதுகாண் கேதகையோ
நமக்கொரு சேதி நான்சொல்ல நீர்கேளும்
உமக்குச் சுகுர்தமுண்டு ஒருசொல் லுரைத்தீராய்

ஈசர்முடி கண்டேனென் றியம்புவேன் மாலிடத்தில்
ஓசையுடன் நீர்தான் ஓமென் 1 றுரையுமென்றார்
ஆபத்து வேளைதனில் அஞ்சாதே என்பவர்போல்
பாவத்தைப் பாராமல் பயின்று உரைக்கலையோ

ஆர்க்கு மொருசமயம் அவரவர்க்கு மிப்படியாய்
பார்க்கவல்லோ வேணும் பாவியேன் நான்தானும்
உங்களுக்கு நானு முதவுவனே பாருலகில்
தங்களுக்குத் தானே தாங்கள் சனப்படவும்

பார்ப்பீரோ நீரும் பாருங்காண் கேதகையை
எப்போ உமைக்காக்க இச்செணங்காண் வேதாவே
பொய்சொல்லக் கேதகையும் பொருந்தியே சம்மதித்து
மெய்சொல்ல வேமறந்து விதியோனுக் 2 காகவேதான்

பொய்சொல்ல வேதுணிந்து புவிதனில் வந்திறங்கி
ஐயமறக் கேதகையும் அன்னமுந்தா னொன்றாகி
மேதினியில் வந்து விஷ்ணுவைத் தான்பார்த்து
ஓதிமம்3 போல்யானும் உயர்வான கம்புகுந்து

---

1. ஆமென் 2. விதியோன் - பிரம்மன் 3. அன்னம்

அரைநிமிடந் தன்னில் ஆயிரங் காதவழி
விரையவே இப்படியாய் வெட்டவெளி யூடேபோய்
கண்டேன் முடிநான் கண்டீரோ சேவடியும்
கொண்டல்வண்ண ரப்போ கோபித்து மனமிடைந்து

பன்றி வடிவெடுத்துப் பாதாள லோகமெல்லாம்
வென்றி யுடன்தேடி மெலிந்துவந்தே னல்லாமல்
காணேன் சிவபாதம் காணவுந்தான் கிட்டாமல்
வீணே திரிந்து வெளியேறி வந்தேன்காண்

முடிகண்டோ மென்று மொழிந்தாயே நீபெரியோன்
அடிகண்டே னென்றால் அனலா யெரிந்திடுவேன்
கண்ணாரக் கண்டோமென்ற சாட்சிதனைக் கொற்பனைதான்
விண்ணோ ரறிய விளம்புவையோ வென்றுரைத்தார்

அப்போது வேதன் அசத்தியமோ என்வார்த்தை
இப்போது கேதகைதான் ஈசர்முடி மேலிருந்து
நான்கண்ட போது நமக்கவர்தான் சாட்சியென்றார்
ஆங்காணும் விஷ்ணுவே அப்போது தான்கூடி

என்றுரைத்த கேதகையும் இவ்வார்த்தை தான்கூற
சென்றிந்தப் பொய்யைச் சிவனறிந்து கோபமதாய்
நெடுக வளர்ந்த நெருப்புமலை தான்கொதித்து
திடுதிடென வேமுழங்கிச் செந்தீ யகோரமதாய்

நெறுநெறென வேமுறிய நேரே படீரெனவே
கிறுகிறெனச் சக்கரமாய்க் கீழேழும் மேலேழும்
லோகமெல்லாம் தான்சுழல நொறுங்கியிடி யேறெனவே
சக்கரமுந் தான்சுவற்றி தரணியெல்லாம் தான்தூளாய்

வெடித்ததுகா ணந்த வெந்தழல்போல் நின்றமலை
இடித்ததுதுகா ணெங்கும் பெருந்தீ யகோரமதாய்
விண்ணுலகி லுள்ளோரும் மெய்கலங்கி உள்நடுங்கி
இறையோனே யெங்க ளீசுபரனே எதுகுற்றம்

முறையோ உனக்கபய மூர்த்தியே காருமென்று
சகலமெல் லாஞ்சீவ சராசரங்க ளுள்ளதெல்லாம்
அகலாத சோதி அரனே உனக்கபயம்
பராபரமாய் நின்றோனே பரனே உனக்கபயம்

தராதரமாய் நின்ற சருவ தயாபரனே
காரு மிதுசமயங் காரணமாய் நின்றோனே
வாரு மிதுச யம் வள்ளலே இப்போது
தீராத வினைதீரச் சித்தம் பொறுத்தருளும்

வாராத குற்றம் வந்தாலு மெங்களுக்காய்
வந்திப்போ காத்தருள வரவேணு மீசுபரனே
தந்திப்போ வாக்குத் தரவேணு மீசுபரனே
அபய மபயமய்யா அஞ்சலென்று காத்தருள்வாய்

சபையதிர நடனம் தாண்டவமாய் நின்றோனே
தாங்க முடியாது தராதரங்க ளுள்ளதெல்லாம்
ஏங்கி இடைந்து இடுக்கண் படுகுதுகாண்
ஆங்கார மெல்லாம் அகோரமெல்லாம் தான்தீர்த்து

ஓங்காரந் தானொடுங்கி உத்தமமாய் நற்குணமாய்
செஞ்சுடர் போலநின்று சிவனுந் தயவுகந்து
அஞ்சலென்று வந்து அானாகு மேதுசொல்வார்
ஏதுகாண் நான்முகனே எம்மைநீர் கண்டமென்று

வாதுசொல்லி மாயனுடன் வழக்குரைத்து நின்றாயே
காணாத நம்முடியைக் கண்டோ மெனச்சாட்சி
வீணான வார்த்தை விளம்பினையே இப்போது
காதாரக் கேளாமல் கண்ணாரக் காணாமல்

கேதகையே நீசொன்ன கிருபமென்ன வென்றுசொல்லி
சற்றே நகைபுரிந்தார் சங்கரனா ராயணரும்
முத்தொளிபோல் சற்றே முறுவலது செய்தளவில்
அண்ட கடாக மகண்டவெளிக் கப்புறமும்

கொண்டலிடி மின்போலக் கொழுகனலுஞ் சோதியுமாய்
விண்டலங்க ளெங்கும் வேனல்வந்து தான்மூடி
கண்டசுரர் அண்டமெல்லாம் காலொடு கால்கள்பின்னி
வீழ்ந்து கிடப்பாரும் மெய்சோர்ந்து நிற்பாரும்

தாழ்ந்து பணிவாரும் தன்மமோ வென்பாரும்
சந்திரனுஞ் சூரியனும் தலைகெட்ட நூலதுபோல்
இந்திரரும் வானவரும் இமையோர் முனிவோரும்
அந்தரமும் வானும் அடுக்கு நிலைகுலைந்து

நந்திமுதல் தேவர்களும் நடுங்கியே மெய்மறந்து
போனது கண்டேங்கிப் பொருமி மலரோனும்
ஆன சவுரியமும் ஆங்கார முள்ளதெல்லாம்
நீங்கி வலுக்குறைந்து நிலத்தில் தலைகவிழ்ந்து

தூங்கி மிகவேங்கி துக்கித்தான் முன்சென்று
அப்போது சிவனாரும் அயனை முகம்நோக்கி
இப்போது பொய்யுரைத்தாய் இவ்வுலகி லுந்தனுக்கு
கோவில் குளம்பூசை குவலயத்தி லில்லையென்று

செப்பிய சொல்மாயன் திருச்செவியில் கேட்டவுடன்
மெய்யுடைய ஈசுபரனை விழுந்து நமஸ்கரித்து
ஆடினான் மாயன் அரனைமிகக் கொண்டாடி
பாடினான் மெய்மகிழ்ந்து பணிந்தே மனமுருகி

ஆனந்தக் கூத்தாடி அருட்கண்ணால் நீர்சொரிந்து
தானந்த மாகிநின்ற சதாசிவமே உன்மகிமை
ஆரறிவா ருன்கோலம் அகண்டமெல்லாந் தானாகி
பேரறியார் ஊரறியார் பெருமைதனை யாரறிவார்

வேரறியார் தூரறியார் மேலறியார் கீழறியார்
ஓரறிவா யெங்கும் ஊடுருவி நின்றோனே
சீரறியா ருந்தன் செயலறியார் யாவர்களும்
நாயே னறியத் தகுமோ நடனமதை

பேயேன் சிறியேன் பிழையேது செய்தாலும்
பொறுத்தருள வேணும் புரமுன் றெரித்தோனே
சிறுத்தொண்டன் தன்மனையில் சென்றமுது கொண்டோனே
அபயம் பொறுத்தருளும் அடியேன் தனைக்காரும்

மெய்யா சரணமென்று விளம்பியே விஷ்ணுவும்
தோத்திரங்கள் செய்து தொழுதோரைக் கண்டுசிவன்
நேத்திரத்தி னால்பார்த்து நெடுமாலைத் தானழைத்து
ஏதுவர முள்ளதெல்லாம் இப்போதே உந்தனுக்கு

சாதுவாய்த் தந்தோம் சந்தோச மாச்சுதென்று
ஈசர் புகழ்ந்துரைக்க எம்பெருமான் தான்மகிழ்ந்து
நேர முடனிருந்தார் நீணிலத்தி லப்போது
பொய்சாட்சி சொன்ன பூவையேநீ கேதகையே

இச்சாட்சி சொன்னமையால் இங்கேநீ நம்மிடத்தில்
வேண்டா மினிமேல் விலக்குமென்று சாபமிட்டார்
தீண்டாமல் கேதகையும் திருவுள மென்றுசொல்லி
ஈசர்மேல் குற்றமில்லை யெம்மாலே வந்தகுற்றம்

பேசக் கணக்கில்லை பிரானே எனப்போனாள்
வேதன் மனமிடைந்து வேகாமல் வெந்துருகி
நானே அடியேன் நடந்ததெல்லாம் குற்றமய்யா
பொல்லாதார் செய்தபிழை பொறுத்தருளு மீசுரனே

வல்லோனே எந்தனக்கு வந்துதுகாண் புத்திமதி
இனிமே லும்நா னியல்பெறவே வேண்டியதாய்
தனியே தனிப்பொருளே தற்காக்க வேணுமய்யா
பாவிக்குச் சாபம் பலித்துவிட்டால் பூவுலகில்

சேவிக்க நாயடியேன் சிந்தைசெய்வ தெக்காலம்
சத்த சமுத்திரந்தான் தான்கொதித்துப் பொங்கிவந்தால்
சுத்த சலம்விட்டுத் துளாவியே ஆத்துதற்கு
மத்ததொரு தண்ணீர் மாநிலத்தி லுண்டோதான்

சற்றுங் கருணைக் கடலே வெளியொளியே
முப்புரத்தை யேயெரித்து மூவரையுங் காப்பாற்றி
அப்புரத்தைக் காக்கலையோ அரனே அவர்க்கிரங்கி
காமனையுந் தானெரித்தாய் கடவுளே அப்போது

பூமனை யேதிருப்பிப் போதமுடன் காக்கலையோ
மார்க்கண்ட னுக்காக மறலி தனைஉதைத்தீர்
தீர்க்க முடனெமனைச் சிறப்பாக வேகாத்தீர்
மூன்று முகமுள்ள மும்மதத்து யானைதனை

தோன்றுமொரு தாருகாவனந் துஞ்சினது சொல்லிவிட்டீர்
ஆனை தனைஉரித்தீர் அடவுடனே தான்போர்த்தீர்
ஏனை ரிஷிவெகுண்டு யெக்கினத்தால் அக்கினியை
கோபமுந் தாபமுமாய் கூட்டியே முச்சுடராய்

தீபமுள்ள அக்கினியைச் சிவனென்றும் பாராமல்
ஏவினா னப்போது எடுத்தீர் மழுவாக
பாவிநான் செய்த பகைதான் நியாயமதோ
மூடலுக்குள் தீயிருக்கும் முகமை தெரியாமல்

காடெனும் போரல்க் கசுமால வருஞானம்
போயிருந்து அப்போ பொறியே கலங்கிவிட்டேன்
கோலியெந்தன் மீதிருந்த குறையெல்லாந் தான்பொறுத்து
காத்தருள வேணுமென்று கஞ்சன் படுந்துயரம்

பாத்திருத்து யீசுபரன் அன்புடனே வேதனுக்கு
அஞ்சலென்று சொல்லி அருளினன்கா ணம்மானை.

வஞ்சமெனும் பூவுலகில் மாமறையோர் வேதியர்கள்
செய்யுந்தவ பூசையெல்லாம் சிந்தித்தோ முந்தனுக்கு
உய்யும் பலபடைப்பும் உகமுமுத லெவ்வகையும்
எப்போதும் போலே இருந்து படையுமென்றார்

முப்போது மீசர்முனிந்தார்காண் வேதியர்க்கு
ஆகையினால் வேதனுக்கும் அச்சுதற்கும் வந்தபடி
மாய்கைபோ லீசர் மலைபோல வெந்தாண்டி
இருவ ருடபகையும் ஈசுபரனே தானறிந்து

ஒருவ ருடனொருவர் உறவா யிருங்களென்று
சேகரித்து நல்ல சிவபதமும் தான்கொடுத்து
லோகத்தி லெப்போதும் லோகத்தி லுள்ளபடி
மாயனுக்கும் வேதனுக்கும் வஞ்சமன்றி வாராமல்

நேயமாய் ஞாயம் நீதியுடன் தான்தீர்த்து
அவரவர்கள் செய்தொழிலே அவரவர் தான்முடித்து
விபரமுடன் தாபிரென்று வித்தனார் சாமுரைத்தார்
அந்த மொழிகேட்டு ஆயனும் அந்தணனும்

விந்தமலர்ப் பாதமதில் விழுந்து நமஸ்கரித்து
எங்கள் தனக்காக எவ்வடிவுந் தானெடுத்து
எங்க ளயமாய்த் தணல்வடிவாய்த் தான்தோன்றி
ரெட்சித்துக் காக்கவந்த நாதா பராபரனே

தேடியுங் காணாத சிவனே பராபரனே
நாடியே நாங்கள் நாட்டமதில் கண்டிருக்க
வேணும் பராபரனே மேதினியி லந்நேரம்
ஆணுவங்கள் தானீங்கி அடியேங்கள் தான்பிழைக்க

பூசை யனுதினமும் புஷ்பமலர் தான்சாத்தி
ஆசை யறுத்து அரனடியைச் சேர்வதற்கு
சிவரூப மாகத் தெரிசினைக்கு நேராக
தற்சுரூபம் காட்டித் தயவருளு மீசுபரனே

இந்த சாரூபம் இப்படியாய்த் தானிருந்தால்
அந்தச் சுரூபம் அறிந்தேது பூசைசெய்வோம்
மீக்க சலமுமக்கு மேனியெல்லாம் நீர்சொரிய
தேகமெல்லா மீன்குலங்கள் சிரசுமேல் புஷ்பமலர்

பூசிக்க வீற்றிருக்கும் புண்ணியனே உம்முடைய
காசிக்குத் துங்காராய்க் கற்பிக்க வேணுமிப்போ
வேதனும் மாலும் விரும்பி யிணையுரைக்க
போத முடனீசர் பூரித் தகமகிழ்ந்து

அக்கினி யாய்நின்ற அந்தனை மிகநிறுத்து
மெக்கிய சாந்தமதாய் மேதினியி லென்னாளும்
நிக்க ஒருமலையாய் நேமித்தார் அம்மானை.

தக்க தொருமலைக்குச் சாத்தினார் நாமமது
அருணவொளி யானதினால் அருணா சலமெனவே
கருணா கடாட்சமதாய்க் கற்பித்தார் பொன்மலையை
அம்மலையி லீசர் அடக்கமாய்த் தானிருக்க

செம்மலை யிலிங்கமதாய்ச் சிவரூப மாயிருந்தார்
இந்தமலர்ச் சோலையளுங் கற்பகமு முண்டுபண்ணி
தெய்வகம் மாளனையும் சீக்கிரமாய் வாவெனவே
அந்த மலையி லயனுந் திருமாலும்

சைவர்க் குகந்ததல மாமருணை யென்று
கோவில் திருப்பணியும் கோபுரமுந் தான்சமைத்து
ஆவலுடன் பட்டணமும் அலங்கார மாய்முடித்து
சிறப்பியு மென்று திருமாலும் நான்முகனும்

அறப்பெரிய தச்சனுக்கு அருளினா ரிவ்வசனம்
அந்தச் சனமே அரைநொடியில் எல்லோமும்
இந்தவித மேமுடித்து ஏகினர்கா ணம்மானை.

வானுலகி லந்தத் தலத்தில் குடியேத்தி
அரம்பையரைத் தானழைத்து ஆடல்செய்யக் கோவிலுக்கு
உரம்பெற்ற தானீறு உகந்துசிவ பூசை செய்ய
மாலு மயனு மகிழ்ந்திருந்தார் அம்மானை.

அருணா சலந்தனிலே அயனுந் திருமாலும்
ஒருநாளும் பேதமற உகந்திருந்தார் கண்டீரே!
என்றுதன்மர் தம்பியர்க்கு எடுத்துரைத்தார் இக்கதையை
சென்று சிலதூரம் செழித்து வழிதுலைய

ராம கதையும் நானிலத்தில் முக்கதையும்
வீமனுக்குந் தம்பியர்க்கும் விபரமாய்த் தானுரைத்து
கஞ்ச மலர்மாயன்மேல் கஞ்சன் வரவழைத்து
வஞ்ச வெனுஞ்சகட்டை வாகாய் உதைத்ததுவும்

அலகை முலையுண்டு அவளுயிரைக் கொன்றதுவும்
உலகந் தனில்மாயன் உயர்ந்த விளாமரத்தில்
என்றால் விளாவெறிந்து கனியதனை யுண்டதுவும்[1]
மருதை உதைத்தளவில் அவன்கட்டாய்த் தானுளன்று

ஒருத்த ரறியாமல் உபாயங்கள் செய்ததுவும்
நச்சரவி லுச்சிதனில் நடித்த கதைதனையும்
அச்சமறத் தம்பியர்க்கு அன்பாகத் தானுரைத்து
வாசமுடன் தன்மர் வருகின்றா ரென்றுசொல்லி

ஆதி கெருடனையும் அருகே வரவழைத்து
நீதியுடன் தன்மர் நினைவறிந்து வாருமென்று
அன்ன மெனும்வடிவாய் அவரே எதிரேபோய்
தன்மையாய் நின்று தர்க்கித்து வார்த்தைசொல்லி

உண்மையென்ன வென்று உடம்புதனை ஆராய்ந்து
தன்மர் தனைநன்றாய் சாட்சியாய்ச் சோதியென்றார்
ஆமென்று தான்கருடன் அன்ன வடிவாகி
ஓமென்று சம்மதித்து உகந்தால விருட்சமதில்

வந்திருந்து தன்மர் வரும்வழியி லன்பாக
இந்தக் கதைப்பயனை ஏதென்று கேழ்க்கவென்று
பேசா திருந்தான் பெரியால விருட்சமதில்
ஆசார முள்ளதன்மர் ஆல மரத்தடியில்

இருந்து கதைபலவும் இளையோர்க்குத் தானுரைக்க
திருந்தவே தம்பியர்கள் செவியுற்றுத் தான்கேழ்க்க
விசாரமெல் லாந்தீர்ந்து மெய்மறந்து தானிருந்தார்
உசர இருந்ததொரு உத்தபுக ழன்னமுந்தான்

மன்னவரே நீங்கள் வருந்தி யுரைத்தகதை
இன்னதென்று சொல்லி எனக்குரையு மென்றுசொல்ல
சீரான தன்மர் சிறப்புடைய அன்னமதை
நேராக நோக்கி நினைத்த கதைதனையும்

---

**16** 1. உதிர்த்ததுவும்

சொல்லுகிறேன் புள்ளன்னமே சுகமாக நீர்கேளும்
என்பெருமாள் தன்பெருமை எல்லாமும் என்னுடைய
தம்பிக்கு நானுரைத்தேன் தாரணியி லேநடந்து
காரணங்க ளெல்லாங் கதையாகத் தான்முடித்து

பூரணமாய்த் தானுரைத்தேன் புண்ணியரே நானினைந்து
எங்கள்தெய் வந்தன்னை எப்போது மேமறவோம்
உங்கள் தெய்வமென்று உரைத்தீரே மன்னவரே
தங்கள் தெய்வமேது தானேது நீரேது

திங்கள்வளர் கானகத்தில் தேடும் வகையேது
என்னவென்று அன்ன மிதவாகத் தான்கேட்க
அன்ன மதுசொல்ல ஆனதன்ம ரேதுசொல்வார்
அண்டம் புவனம் அளந்து நிறைந்தமுதல்

தண்டமின்னூல் வேத சராசரமாய் நின்றமுதல்
எவ்வுயிருந் தானாய் இருந்து கலந்தமுதல்
அவ்வுயிர்க்கும் நின்று அறஞ்செலுத்தி நின்றமுதல்
பாரதப்போர் செய்யப் படையெடுத்த நாள்முதலாய்

சாரதமாய் எங்களுக்குச் சாக்காது நின்றமுதல்
மாயவனு மாயன் வாசன் புவிராசன்
ஆயன் சகாயன் அய்வர்க் கனுகூலன்
அச்சுதற்கு நாங்கள் அடிமை விலையாகி

மெச்சும் புவியாண்டு விஷ்ணுபதந் தான்தேடி
நாயனெங்கே யென்று நடந்து திசைநோக்கி
நேயமுடன் தேடி நெடுகவந்தோ மித்தூரம்
செய்யதொரு வைகுண்டஞ் சேர்வோ மெனவேதான்

அய்யமில்லா நாங்கள் அண்ணல் தனைத்தேடி
வாரோம் வழிதுலைய வாய்த்தகதை தம்பியர்க்கு
பேராகச் சொல்லி பெரியதலந் தேடிவந்தோம்
என்றுதன்மர் சொல்ல இன்பமுடன் அன்னமுந்தான்

ஒன்று மறியாமல் உரைத்தீரே மன்னவரே
மண்ணுலகில் காணாது மலைதனிலுங் காணாது
விண்ணுலகில் காணாது வெளிதனிலுங் காணாது
மெய்யுகந்து நீங்கள் விரைந்துதான் தேடுகிலும்

வைகுண்டங் காண வசமோதா னுங்களுக்கு
சிந்தை கலங்காமல் திரும்புங்க ளூர்தனிலே
விந்தையுடன் போயிருந்தால் வேணுமென்ற தேதுண்டோ
போயிருங்கா ணும்பதியில் புண்ணியரே நீர்தாமும்

உங்கள் தெய்வ மாயனென்றீர் யோனித் தழும்புபட்டு
மானிடவன் றன்னை மாயோ னெனநினைந்து
தென்றல்குள சோலைதனில் தேடிவந்தீ ரித்தூரம்
தேவனே ஆமாகில் சிறந்தவை குண்டமதில்

போதுவனா லென்ன போயிருந்தா லென்னபலன்
மண்ணிலுள்ளோர் தன்மரென்று லாழ்த்துவதும் பார்த்திருந்து
எண்ணரிய வேந்தனிப்போ இருந்துபதி யாளாமல்
வந்தீரே சும்மா மறந்தீரே நற்றவங்கள்

சந்திரரே தன்மஞ் சகலமெல்லாம் விட்டீரே
நாடுதனை யாண்டிருந்தால் நல்லதவஞ் செய்திடலாம்
வீடுபெற லாமெனவே விளம்பி யொருவழக்கம்
கேளாய்நீ அன்னமே கிருபையுட னோர்வசனம்

நாளாய் வெகுவருஷம் நாடிழந்து வந்தகதை
மண்ணாசை பெண்ணாசை மற்றுமுள்ள பேராசை
பெண்ணாசை யத்துப் பிள்ளைமே லாசைவிட்டு
தேடுந் திரவியமும் சேனைமன்னர் தன்னைவிட்டு

வீடுவிட்டுக் காடுறைந்து வித்தகனைத் தானிழந்து
இந்தமட்டு மில்லை இனிமேலும் எப்படியோ
உடலி லுயிரிருந்து உறவுசெய்யு மோராசை
அடரும் பிணிதீர்க்க அஷ்டமும் ஓராசை

அடத்தல் விருத்தல் நகைசுகியும் ஓராசை
கிடத்தி உறக்கங் கேள்விசெய்யு மோராசை
கால்முள்ளுத் தையாமல் காப்பதுவு மோராசை
மேலிலேதும் பூறுதென்று விள்ளாது மோராசை

குளிருக் கனல்தேடி குளிர்காய்வ தோராசை
துளிரு மலரெடுத்துத் தொழுகுவது மோராசை
மேடுபள்ளங் கண்டு விலகுவதும் ஓராசை
காடு செடியெனவே கலங்குவது மோராசை

வெயிலுக் கொருநிழலை விரும்புவது மோராசை
துயிலுதற்கு ஒத்தநிலம் சூதானம் ஓராசை
தாகத்துக் குண்ணுமொரு தண்ணீரும் ஓராசை
நரகதுக்க மஞ்சி நடப்பதுவு மோராசை

அரித்த விடஞ்சொரிதல் அற்பசியு மோராசை
விரித்துபல சாத்திரங்கள் விளம்புவதும் ஓராசை
கரடிபுலி சிங்கங்களைக் கண்டஞ்சும் ஓராசை
குறடுதடி கொண்டுயிரைக் கொல்லுவது மோராசை

இடருவரு மென்னவே எண்ணுவதும் ஓராசை
படரும் பயிர்போகம் பண்ணுவதும் ஓராசை
எப்போதும் மண்ணி லிருக்கவே ஓராசை
ஒப்பாத பெண்களையும் உறவுசெய்யு மோராசை

கன்னல் சென்னல்விட்டுக் கருதுவது மோராசை
புலைகுலைகள் செய்யப் பொருந்துவது மோராசை
மலைகலைக ளேறி மறுகுவது மோராசை
மெய்மறந்து பொய்யுரைக்க விரும்புவது மோராசை

நெய்பா லருந்த நினைப்பதுவு மோராசை
வெளிதாண்டி ஏற்கவனம் விளையாடும் ஓராசை
அழியாமல் கற்பம் அருந்துவது மோராசை
மனைதோறும் பிச்சை வாங்குவது மோராசை

புனலாட வென்று போவது மோராசை
ஒடுக்க மதுகுகையி ஒடுக்குவது மோராசை
எடுக்கும் பலகோலம் எடுப்பதுவு மோராசை
இந்தமட்டும் ஆசை இருக்குதுகாண் பூவுலகில்

அந்தாசை தன்னில் அதிலுமொரு பேராசை
தம்பியரு மெந்தனுக்குந் தானே தெகுட்டாது
என்பெருமா ளாசையென்று எங்கள் தனக்குளது
அளவத்த ஆசையிது அன்னமே எங்களுக்கு

களபமணி மார்பனைக் கண்டால் துயர்தீரும்
ஆசை இதுதீரும் அச்சுதனைக் கண்டாக்கால்
நேச முடன்மகிழ்ந்து நெடுமால் தனைத்தொழுவோம்
என்றுதன்மர் சொல்ல இன்பமுற்று அன்னமுந்தான்

நன்றுகா ணென்று நன்மையுள்ள தன்மரென்று
மனமகிழ்ந்து பட்சி மரத்தைவிட்டுத் தான்பறந்து
வனங்கடந்து நல்ல வைகுண்டம் தான்சேர்ந்து
சென்றுதிரு மாலுடனே தெண்டனிட்டங் கேதுசொல்லும்

ஒன்றுபத்து நூறாய் உண்மையுடன் தன்மயமாய்
மாத்தரிய பஞ்சவர்கள் மனதையெல்லா மாராய்ந்தேன்
பாத்திபர்கள் வேறொருசொல் பத்தவுநான் கேளேநான்
யேத்தவர்கள் வந்தாலும் ஏதுபயம் வந்தாலும்

மாலே துணையெனவே வருகுறோம் ஓர்மனதாய்
ஆலே துயிலுகின்ற அச்சுதரே தஞ்சமென்று
வாக்கு மனமொன்றாய் வருகிறார் பஞ்சவர்கள்
தீர்க்கமுடன் காக்கச் சித்த மிரங்குமய்யா

காத்த சிறையே கடைபோகக் காத்தருளும்
யேற்றவரை முற்றும் ஈடேற உம்மிடத்தில்
இங்கிருக்கப் பண்ணுமய்யா எங்கள் பெருமாளே
செங்கருடன் சொல்ல ஸ்ரீமந்நா ராயணரும்

அங்கங் குளிர்ந்து அய்வர்மே லன்புவைத்து
செங்கண் நெடுமாலுந் திருவாய் மொழிந்தருளி
தன்மருந் தம்பியருந் தடையற நம்மிடத்தில்
சென்மமது கொண்டுவரத் தெய்வவுல கேறாது

இம்மைதனில் சென்மம் இகத்திலே தான்போட்டு
தன்மைசெய்த தாலே நம்மருகே தானிருக்க
நால்வருங் கூடுவிட்டு நல்லவை குண்டமதில்
பால்போலும் நம்மிடத்தில் பட்சமுடன் தானிருப்பார்

சடத்துடனே தன்மர் தறுகாமல் நம்முடைய
இடத்திலே வந்து இருப்பார் இனிதாக
என்று கருடன் இவ்வார்த்தை தானுரைக்க
அன்றலர்ந்த புஷ்பமென ஆழ்வார் மகிழ்ந்திருந்தார்

சக்கரத்தை வாருமென்று தானழைத்துக் கோபாலர்
இக்கணமே சென்று எம்முடைய பஞ்சவர்கள்
காணாமல் நிகலந்து காவலாய் வாருமென்றார்
ஊணாத எட்டெழுத்தைத் தோற்றமுடன் நம்மிடத்தில்

வருவார் சுகம்பெறுவர் வைகுண்டந் தான்சேர்வார்
மருவாருந் தன்மர் வருவார் தனியாக
வார வழிதனிலே மற்றுமொரு விக்கினங்கள்
சீராச யானைபுலி சிக்கமால் நீர்தானும்

பக்கமே வாருமென்று பகவானும் வார்த்தைசொல்ல
சக்கரத்தைப் போமெனவே சாற்றலுற்றார் அம்மானை.

அந்தப் படியே அச்சுதனார் சொல்கேட்டு
இந்தப் பெருவனத்தில் ஏகியதே சக்கரமும்
சக்கரந் தான்வந்த சகாய மிவரறியார்
மிக்கதொரு காடும் வெகுமலையுந் தான்கடந்து

வண்டுளப மேனியனை வாகாக வேநினைந்து
கண்டுதொழ வென்று கடுகித்து டந்துசென்று
சுத்தமுடன் நூறு யோசினை தூரம்வந்து
வித்தின மான வடவால விருட்சமதாய்

போயிருந்தார் பஞ்சவர்கள் புகழ்பெரிய தன்மருடன்
மாயோனே தஞ்சமென்று மகிழ்ந்தாலின் கீழிருந்தார்
இருக்கும் பொழுது இயலார் சக்கரதேவன்
நெருக்கும் விதிவசத்தை நேராய் அறிந்துகொண்டு

தனக்கு வருங்கருமம் தானே தெரிந்துகொண்டு
எனக்கு வருங்கருமம் இப்படியா மென்றுசொல்லி
தன்மர் தமக்குந் தமயன்மார் மூவருக்கும்
வன்மமுள்ள தெல்லாம் வகைவகையாய் இன்னதென்று

தத்துவத்தைப் பார்ப்பளவில் சக்கரந்தா னிந்நமட்டும்
முற்றிலுமே யெந்தனக்கு முடிவுசரி யாச்செனவே
தன்னை யறிந்த சகாதேவ னீதுரைக்க
என்னைத் துணையிழந்தோ மென்று மயங்காமல்

நமக்குள்ள சாத்திரமும் நன்றாகச் சொல்லிவிச்சு
சுமக்குஞ் சுமையென்று துன்பமற்றோ மென்றுசொல்லி
நாரா யணர்பாதம் நாமு மறவாமல்
சீரான வைகுண்டஞ் சேருமென்று தானுரைத்து

அண்ணர்மார் நால்வரையும் அருகே இருமெனவே
எண்ணமற நிச்சயத்தி லிருந்தான் சகாதேவன்
மாலே சரணமென்று மனதில் தியானமதாய்
சாலோக சாமீப சாரூப முந்தெளிந்து

மூலந் தெளிந்ததினால் முட்டிச் சுழிமுனையில்
ஞாலத் திருந்து நான்முகனைப் போற்றிசெய்து

**விருத்தம்**

ஏது மறியே னெனையறியேன் எல்லா உயிர்க்குங் குடையாகி
வாது சிறிய வழக்கோர் மன்றி லிருந்து வலுவுரைத்து

தீது பயிலும் நாயேனைச் செனன மிழந்து வருகவென்று
தூது பரவு மிருப்போனே சுகந்தா முகுந்தா குணைநீயே !

வீமன் விசயன் நகுலனுடன் வேத ஞான தன்மருமாய்
நேம மான வைகுண்டம் நெடியோன் அடியே துணையாக
ராம தாச னெனவேதான் நடந்தா நும்மை நகைசேடி
ஏம தூத னணுகாமல் இதவா யுதவி செய்வாயே!

நாடி தளன்று மதிசிறந்து நடுக்க மிருந்து பிராணனுமே
ஓடி யுழன்று திசைவாயுவு உள்ளே அடங்கி மெய்பதறி
வாடி மனது தடுமாறி மயக்க மிருமா லினைப்புானே
கூடி வரவும் பண்ணாமல் கொண்டாட் கொள்வாய் கோபாலா !

காய மிழந்து நடுவழியில் கருந்து மயங்கி நில்லாமல்
தூய பதமே துணையாகத் தொல்லைப் பிறவிப் பிணிமேலும்
மாய விருள் வளையாமல் வந்தாள் நந்த கோபாலா
ஆப மான வைகுண்டம் அருள்வாய் ஏதும் பெருமாளே !

செனன மரண மிரண்டுமினிச் செகத்தி லுழன்று தவியாமல்
உனது மலர்த்தா ளனுதினமும் உதவி மிகவும் உண்மையதில்
எனது முடிவி லிருபாக மிருக்கும் படியாய் அருள்புரிந்து
தனது பபல்நான் சகாதே வன்சாமி நந்த கோபாலா !

அட்சரமு மியெழுந்து அம்பத்தோ ரெண்டெழுந்தும்
எட்டாய் ரெண்டாய் வட்டமதா ஈரே மூலக மோரெழுத்தாய்
நட்டாய் மட்ட முடிபோக நடுவே நின்ற நாரணனே
விட்டாய் விட்ட குறை முடித்தேன் விந்தை மலர்த்தாள் பெற்றேனே!

அரியெனும் எழுத்தி னாலே அவனியி லுதித்தோம் நாமும்
அரியெனும் எழுத்தி னாலே அருளது தெரிந்து கொண்டேன்
அரியெனும் எழுத்தி னாலே அடைவது முந்தன் பாதம்
(மூன்று வரிகளே உள்ளன)

---

1. சீர்கள் சரியில்லை

ஐவர்க்கு முன்னே வந்து அடைந்துவை குண்டஞ் சேர்ந்து
மெய்நிக்கும் உனது பாதம் விந்தமே பணிந்து பூசை
செய்விக்கு மனது கூர்ந்து சீக்கிரம் என்னை இங்கே
உய்விக்கும் பொருட்டாய் நல்கும் உண்மையே ராம ராமா!

மரண மிழந்து சடமிழந்துன் மலர்த்தாள் துணையாய் வந்துமெந்தன்
கரண மெனது பொறிபுலனால் கலங்கி மயங்கி நில்லாமல்
கிரண வெளிபோல் மாசகற்றி கிருபை யுடைய வைகுண்டம்
சரண பதவி தந்தருள்வாய் சாமி நந்த கோபாலா!

உந்தன் மலர்த்தா ளெந்தனுக்கு உத்த துணையாய் இப்போது
வந்தே யென்றே வரமருளி வருவா யடியேன் மலையாமல்
கந்த னுடனே கணபதியுங் கச்சி உமையாள் உயரகலம்
நந்தா முகுந்தா கோவிந்தா நாரா யணனே நமஸ்காரம்!

## நடை

நாட்டமதிலிருந்து நாரணனை நெஞ்சில் வைத்து
வாட்ட மறச்சிந்தை மயங்காமல் வாயுவதை
முட்டி யனலெழுப்பி முச்சுடரை ஒன்றாக
கூட்டித் திரட்டிக் கொழுந்து முனையாக்கி

நான்முகனைக் கண்டு நமஸ்கரித்து அப்பாலும்
மால்பதத்தைத் தேடி மணிபூர கந்தனிலே
நின்று வணங்கி நெடியோனைப் போற்றிசெய்து
அன்று புரமெரித்த அரனார்வனங் காத்ததிது

வந்து சிவனை வணங்கி அடிபணிந்து
முந்து மயேசுபரன் மூதுரவி சித்தியதில்
கண்டு மயேசுபரனைக் கருத்தில் மிகவணங்கி
தொண்டுபண்ணி யப்பால் தொழுது சதாசிவன்தான்

அக்கினியில் சென்று அடங்கி யெழுங்குகையில்
தாக்கசைந்து சீவன் தமோறி மூலம்விட்டு
பிரிதிவியில் வந்தொதுங்கிப் பேசாதே மேல்நோக்கி
அறுதியெனு மண்ணைவிட்டு அப்புவினில் வந்தொடுங்கி

வைப்புடைய அக்கினிதான் வாயுவிலே வந்தொடுங்கி
வாயுவு சதாசிவத்தில் வந்தொடுங்கி மாயோனை
போயிடைந்து தெண்டனிட்டுப் பூரணமாய் உள்ளடங்கி
தேடிவை குண்டமதில் சேர்ந்துதுகாண் ஆன்மாவும்

ஓடி ஒடுங்கியபின் உடலு மிகக்குழைந்து
கழுத்து விழுந்துழன்று கனத்ததலை தான்சாய்ந்து
அழுத்தமுடன் மண்ணில் அடித்து விழுகுமுன்னே
எடுத்துச் சமர்த்தா யேந்தியே நால்வருமாய்

அடுத்திருந்து சாத்திரங்கள் ஆகமாய்த் தான்முடித்து
நிலத்தி லடக்கியபின் நீலவர்ணா தஞ்சமென்று
ஆலத்தி நாரணனார் அச்சுதற்குத் தான்கேழ்க்க
வந்தான் சகாதேவன் வைகுண்டந் தான்சேர்ந்தான்

நந்தா முகுந்தா நாரணரே நீர்காரும்
மாயோனே என்தம்பி வந்தடைந்தா னுன்பாதம்
ஆயா உனக்கபயம் அச்சுதரே காத்தருளும்
தந்தைதாய் போலாகித் தற்காத்தீ ரெம்பெருமாள்

என்தம்பி வந்தான்காண் காக்க உனக்கபயம்
கண்ணரே காத்தருளுங் காயாம்பூ மேனியரே
வண்ணரே நாங்கள் வருகிறோங் கண்டீரே
என்றுதன்மர் தாமும் இயலான தம்பிரும்

வாழ்த்தி மனந்தேறி மாயனையே தான்போற்றி
ஏத்தித் தொழுது இருகையால் தான்குவித்து
அஞ்செழுத்தால் தேகம் அஞ்சுபஞ்ச பூதமுமாய்
அஞ்சு முகமாய் அக அகண்டமெல்லாந் தானாகி

அஞ்சுபஞ்ச லோகம் அஞ்சுமஞ்சு வர்ணமுமாய்
அஞ்சுமலர் வேந்தனுக்கு அஞ்சம்பு பாணமுமாய்
எங்கும் நிரந்தரமாய் இப்படியாய்த் தானிருக்க
பொங்குபுகழ் பூவுலகில் பொருந்தியே போராகி

ஐவரென்ற பேராய் அன்றளவு மின்றளவும்
தெய்வமென்று நாங்கள் சேர்ந்திருந்தோ மிப்போது
ஐவரி லேயொருத்தன் அங்குவந்தான் கண்டீரே
மெய்வருந்தி நால்வர் வரவிட்ட குறைதீர

எத்தனை நாளோ இப்போதோ இக்கணமோ
அத்தனையும் உன்பெருமை ஆரறியப் போரார்காண்
சித்தமுட னெங்களையும் சீக்கிரத்தில் சேருமய்யா
வித்தகரே வாரோம் விண்ணப்ப மென்றுதன்மர்

விருத்தம்

கேசவா முகுந்தா வாரோம் கிஷ்ண தேவா வாரோம்
ராசகோ பாலா வாரோம் நரசிங்க ரூபா வாரோம்
தாசர்தன் நால்வா வாரோம் தடையிடை யில்லாமல் நன்றாய்
நேசமாய் உனது பாதம் நெடியவா தாரும் காரும்

நாரணர் பாதந் தேடி நால்வரும் நம்பி வாரோம்
வாரணம் யாளி சிங்கம் வல்லியங் கரடி பன்றி
கோரணக் கொட்டி பன்றி கோவிந்தா உந்தன் காவல்
காரண மாக வந்து காத்தருள் செய்கு வாயே ;

நடை

தோத்திரமுஞ் சொல்லித் தொழுது நமஸ்கரித்து
சாத்திரமுஞ் சொல்வேதச் சாதேவ ரைநிறுத்தி
வழிதேடிச் செல்வோ மாயன் தனைத்தேடி
விந்தை மலரெங்கும் வீச்சிதமாய்ப் பூத்து நிற்கும்

கண்டார்கள் கங்கையதை காசி நதிபோல
கொண்டார்கள் தீர்த்தமதைக் கோபாலா வென்றுசொல்லி
அப்பெரிய பொய்கைதனி லாம்பையருந் தேவர்களும்
செப்பமுடன் வந்து தீர்த்தங்க ளாடுகையில்

கன்னியருந் தேவர்களும் கண்டார்கள் நால்வரையும்
மன்னியசீர் கன்னியர்கள் வந்துகரை யேறிநின்று
பார்த்தார்கள் நால்வரையும் பாதாதி கேசமுதல்
வாய்த்தார்க ளென்று மனமகிழ்ந்து கன்னியர்கள்

மாலு மயனு மன்மதனும் போலாகி
வேலும் வடிவுடையோன் விளையாடும் பாவனைபோல்
நால்வரையுங் கண்டு நங்கையர்கள் தங்களிலே
மேல்விழுந்து தான்தழுவ விள்ளாம லுள்ளுடைந்து

மெத்த மயலாகி மெல்லிநல்லார் நால்வரிடம்
உத்தவர்போல் நேராக உகந்துதான் வந்திருந்து
தென்னவரே நீங்கள் தேசமெங்கே நீங்களெங்கே
எந்தநா டெத்தேசம் எங்கேவந்தீர் சொல்லுமென்றார்

விந்துமுறு கன்னியர்கள் விளம்புமென்று கேட்டார்கள்
அப்போது தன்மர் அன்புடனே தானிருந்து
இப்போது சொல்லுகிறோம் யேந்திழையே கேளுமென்றார்
சீரார் குருநாடு தேசமெங்கள் தேசமது

தாராரும் பாண்டுமன்னன் தன்புதல்வர் நாங்களுந்தான்
தெளிவாகி நால்வர் திசைநோக்கி யேநடந்தார்
நடந்தார் வெகுதூரம் நல்லதன்மர் தம்பியரும்
கடந்தார் மலைபலவும் காடும் வனாந்திரமும்

ஊடே நடந்து உகந்து வரும்வழியில்
கோடேறி வீமன் கும்பிட்டு வாய்புதைத்து
அண்ணாவி இப்போ அடியேன்சொல் விண்ணப்பந்தான்
கண்ணான தம்பி கருத்தான சகாதேவன்

விட்டுப் பிரிந்ததென்ன மேதினியில் நம்மையிவன்
கட்டுடனே எந்தனுக்குக் காவலரே சொல்லுமென்று
வீமனுங் கேழ்க்க விளம்புகின்றார் தன்மருந்தான்
பூமனே முன்னாள் பொருதுகின்ற பாரதத்தில்

யேரிட்டு நாள்முகூர்த்தம் பேசினான் சாத்திரத்தில்
சீரிட்டுப் போர்முடியத் திடமுட னரவானை
களம்பெலியென் றேஇவனுங் கணக்கிட்டா ராகையினால்
அளப்பொன்று மில்லை அதுக்காய் இவன்சிடத்தை

பளிதுடரு மென்று பார்மீதி லேகிடத்தி
வழிநடையில் போட்டான் வகைவேறு மில்லையென்றார்
அந்தமொழி கேட்டவுட னாமென்று வீமனுந்தான்
சிந்தை ஏனைநோக்கிச் சேகாமாய் நால்வோரும்

வைகுண்டம் நோக்கி வனத்தூடே செல்லுகையில்
மெய்கண்ட தீர்த்தமென்று விசேஷமாய்த் தானெதிரே
சந்திர காந்தமென்றுஞ் சாந்தமாய் ஓர்மலையில்
இந்திரனவந் தென்னாளும் இருந்துசிவ பூசைசெய்ய

அந்த மலைமீதில் அரியதொரு தீர்த்தமது
ஏராத மாகலியன் இவ்வுலகில் வந்ததினால்
நேராக நாங்கள் நிலைமைவிட்டுத் தானகன்றோம்
மாதுதிரு லெட்சுமிதன் வைகுண்டஞ் சேரவந்தோம்

சாதுவா யுங்களையுந் தான்கண்டோ மிப்போது
எதுவாகத் தன்ம ரிவ்வசனந் தானுரைக்க
ஓதுவார் கன்னியர்கள் உத்ததன்மர் தன்னிடத்தில்
முன்னொருநாள் ஞாய மொழிந்தீர் எனவேதான்

அந்நாளில்க் கேட்டிருப்போம் ஐவ ருடசேதி
வாரீ ருனைப்பயின்ற மாதாவின் சொல்கேட்டு
பாரீர்புரு ஷாமிருகம் அதின்பால் வாங்க
வீமன் தனையனுப்ப மெய்யுடைய வீமனுந்தான்

நேமமுடன் கானகத்தில் நிமிஷமே சென்றுபுக்க
தந்திரத்தி னாலே சப்தமாய்ப் பால்வாங்கி
மந்திரத்தி னாலே வலுவீமன் தான்வரவும்
துடந்து மிருகமது சொன்னபடி தப்பாமல்

அடங்க வலுமிருகம் அலறிப் பிடிக்கையிலே
சதிரி லொருகாலும் வனத்தி லொருகாலும்
எதிர்வந்து பற்றி இழுக்கவே வீமனுந்தான்
தர்க்கமிட்டுக் கொண்டுச் சமராடி நின்றிருவர்

மிக்கபுகழ் தன்மரிடம் விளம்புவோம் ஞாயமென்று
சென்று மிருகந்தான் தீர்க்கமுள்ள வீமனையும்
அன்றுதன்மர் முன்போய் ஆகமுடன் ஞாயமதைக்
கேளுமென்று வல்மிருகம் கிருபையுடன் வீமனுமாய்

வாள்வீரர் ஞாயம் வகையாகச் சொல்லுமென்று
இருவருட ஞாயம் இயல்பாகத் தான்கேட்டு
ஒருவருக்குச் சாங்கமதாய் ஒதுக்கி உரையாமல்
தப்பியென்று சற்றும் தயவுவைத்துப் பாராமல்

அன்புடைய தம்பியுடல் ஆளிலே பேர்பாதி
நிறையாக உன்னுடலை நேராகத் தான்பிளந்து
குறையாம லேறாமல் குடுத்துவிடு தம்பியென்று
தச்சன் தனையழைத்துச் சதிராக நூல்போட்டு

மெச்சவே தான்பிளக்க விரைந்துதச்சன் வந்தமையால்
மிருக மதுகண்டு வெகுவாய் மனமகிழ்ந்து
தறுகாமல் நான்போறேன் தன்மரே உன்தனக்காய்
விந்தமுறு கன்னியர்கள் விளம்புமென்று கேட்டார்கள்

பொறுத்தே னிதுஞாயம் பூவுலகில் கண்டதில்லை
ஒறுத்தே னெனுமிருகம் உயர்கான கந்தனிலே
போனதுவும் கேட்டிருப்போம் புண்ணியவான் தன்மரென்று
ஆனதினா லுங்களைப்போல் அவனிதனி லில்லையென்றார்

பின்னையுமோ வீமன் பிரபலமுங் கேட்டிருப்போம்
முன்னையே பாரதப்போர் மூண்ட சமர்க்களத்தில்
வல்லிடும்பன் தன்னுடனே வலுவான சூரனையும்
சொல்லரிய கீசகனும் திரியோத னாதிகளும்

நல்லசாா சந்தனையும் நாட்டிலுள்ள வேந்தரையும்
வீரமுடன் காலனுக்கு விருந்தெனவே தானளித்த
பாரமுள்ள வீமனுட பராக்கிரமம் கேட்டிருப்போம்
ஈதல்லால் பார்த்தனுந்தான் இளையோனைத் தானோக்கி

பேதமில்லாப் பாசுபதம் பொறுத்ததுவு மில்லாமல்
அசுரர்தனை வென்றதுவும் அமராசிறை மீட்டதுவும்
பசியுடைய அக்கினிக்கு பரிந்தமுது ஈந்ததுவும்
பாலன் வீமனையும் பாராமல் தேத்தரசன்

சூலமதால் கொன்ற துயரமதை வைத்திருந்து
தேத்தரசன் தன்னுடனும் சேரும்பக தத்தனையும்
மாத்தரசர் சேனையயும் மன்னரையும் கொன்றுவென்ற
அருச்சுன னாமென்று அப்போதே கேட்டிருப்போம்

ரிவான ீமதிரிபிப் வாகுடைய சூரனென்று
பரிக்கு நகுலனென்று பாங்குடனே கேட்டிருப்போம்
மத்து நிகர்காலம் வருங்காலஞ் சியகாலம்
முத்துஞ் சகாதேவன் முனிவரென்று கேட்டிருப்போம்

அப்படியே நாங்கள் ஐவருட சேதியெல்லாம்
இப்படியே கேட்டிருப்போம் இன்னமுருக் கண்டறியோம்
அவரவரைக் கண்டு ஆச்சரிய மெங்களுக்கு
இவரிவர்தா னென்று எங்களுக்குச் சொல்லுமென்றார்

மங்கையர்கள் கேழ்க்க மகிழ்ந்துதன்ம ராசனுந்தான்
சங்கையுட பெண்கள் தன்மரென்பேர் கண்டீரே
மெல்லியரே வீமன் விசையனிவன் தானெனவே
சொல்லும் நகுலனிவன் தோகையரே இன்னமுந்தான்

வேதசகா தேவனுடன் மின்னாள் துரோபதையும்
போதமுடன் வைகுண்டம் போய்ச்சேர்ந்தா ரென்றுரைத்தார்
திருந்துமிரு கன்னியரும் தெய்வேந்தி ரன்மகளும்
இருந்துதன்மர் சொன்ன இயல்புதன்னைக் கேட்டிருப்போம்

வாருமய்யா எங்களுடன் வானவர்கோன் தன்னிடத்தில்
சேருமய்யா உங்களுக்குத் தெய்வலோ கந்தருவோம்
பண்ணவரே நாங்கள் மருவி மனையாளாய்
சொன்னபடி கேட்டுத் தொண்டுசெய்வோம் நாங்களுந்தான்

எங்கள் பொருட்டா லெனக்கேளும் மன்னவரே!
தங்களிலே வேள்விசெய்து தவம்பண்ணி நிற்போரும்
அக்கினியி லூசியின்மேல் அணிவிரலைத் தானூன்றி
சித்தெனவே தவசு செய்து முடிப்போரும்

கால்மேலுந் தலைகீழாய்க் கடுந்தவசு நிற்போரும்
பால்போலு மெக்கியங்கள் பண்ணி முடிப்போரும்
தெய்வகன்னி யென்று தெய்வ பதவியென்று
மெய்வருடி யாகம் விரும்பி வளர்ப்போரும்

வேண்டியல்லோ இத்தவங்கள் வேணுமென்று செய்தார்கள்
தூண்டி நினையாமல் சொற்பனத்தில் கேளாமல்
வலியவே நாங்கள் வரவழைத்தால் நீங்களுமே
போய்வாரு மென்று பூரணமா யெங்களுடன்

வந்து புரந்தரனை[1] வணங்கி அனுதினமும்
முந்துதெய்வ லோக முழுதுந் தனக்காக
இருக்கலா மென்று ஏந்திழைமார் தானுரைத்து
வருக்கமு மின்ன வகையுமக்குச் சொல்லுகிறோம்

தீர்க்கமுடன் வைகுண்டஞ் சேரவே வேணுமென்றார்
ஆர்க்கு முடியாது அருந்தவத்தோர்க் கிட்டாது
துறந்தோர்க்கும் நல்ல துறவாத பேர்களுக்கும்
இறந்தோர்க்கு மேதினியில் வானவ ரென்பதுதான்

கேளீர் பூவுலகில் கிருபையுடன் மன்னவரே
ஆளீரோ தேவுலகு அன்பாக எங்களுடன்
ஈசுபர னும்பெண்க ளிருவர் தனையருகில்
வாசமுடன் வைத்து மருவி இருக்கலையோ

1. புரந்தரன்

பாவி கலைமகளைப் பன்னுமறை வேதியனும்
நாவில் தரித்துமவர் நட்பா யிருக்கலையோ
சீதை தனைநெஞ்சில்த் திருமாலும் வைத்திருந்து
கோதை யுடன்கூடிக் குலவி யிருக்கலையோ

தேவேந் திரனும் தேவி இந்தி ராணியுடன்
கோவேந்தன் கூடிக் குலாவி யிருக்கலையோ
ஆத முடன்தவசி லறிவா யிருந்ததொரு
கண்டாசை கொண்டு கலந்தாசை தீரலையோ

பிண்டாசை யெல்லாம் பொறுத்த முனிவர்களும்
நன்றாய்த் தனையறிந்த நாதாக்க ளெல்லோரும்
ஒன்றாசிக் காத்தாரை ஊடுருவக் கண்டோரும்
பூதமோ ரைந்து புலன்பொறியள் தானடக்கி

நாதமொடு விந்து சுழிநடுவினைத் தான்திறந்து
நாடு தனைப்பறித்து நாட்டமுடன் வாட்டமதில்
தேடியமுர்தந் தெவிட்டாது பூண்டிருக்கும்
யோகியளு மிப்போ உலகந் தனிலிறங்கி

போகமெனும் விந்துதனைப் புறம்போக்கி வீற்றிருந்தார்
துறவாகி வந்ததென்ன சொல்லுமென்றார் கன்னியர்கள்
இன்பமுடன் கன்னியர்கள் இவ்வசனந் தான்கூற
அன்புடனே தன்மர் அவர்களுட னேதுசொல்வார்

இதுவெல்லா நீங்க ளெடுத்துரைத்தீ ரிப்போது
ஆதலா லந்த அபசுகவாழ் வைநம்பி
ஈடளித்து நாங்கள் எடுத்த தவங்குலைந்து
கூடழிந்து நாங்கள் கொடுநரகில் வீழ்வதற்கு

சொன்னீரே பெண்காள் சோதினையோ எந்தவிதம்
முன்னீர் பொழிய முகில்வண்ணன் தன்னருளால்
இப்படியுஞ் சொல்லுவரோ ஏந்திழையே எங்களுக்கு
கற்பனையுங் கேழ்க்கக் காரணமோ இப்பொழுது

சீரான வைகுண்டஞ் சேரவென்று போகையிலே
நேராக நின்று நில்லுமென்று சொல்வீரோ
ஒன்று முரையாமல் ஒவியமே நீங்களுந்தான்
நின்றுவிடு மென்று நெடுமால் தனைநினைந்து

வாகுடைய தன்மருந்தான் வாய்த்ததொரு தம்பியரும்
ஏகுவோ மென்று இதவாய் வனத்தூடே
நடந்தார் வெகுதூரம் காடுமலை தான்தேடி
வானோ ரெனல்புவியும் வானகிரி மாமலையும்

போனார்கள் நல்ல புதுமையெல்லாந் தானறிந்து
சேர்ந்த பலநதியள் தீர்த்தமெல்லாந் தானாடி
வாய்ந்ததொரு ருத்ராட்ச மரங்களுடன் சந்தானம்[1]
கற்பகத் தருவுகளும் கண்டுமிகத் தெண்டனிட்டு
தற்புடைய சோலையென்று நடந்தார்கா ணம்மானை.

அந்த மலைக்கப்பால் ஆராய்ந்து சோதினைதான்
வந்தவர்கள் முன்னே வழியில்வெகு வானரங்கள்
கண்டு மகிழ்ந்து காவலர்க ளாரென்று
புண்டரீக மாயனுட பூமிதனி லன்னாளில்

வந்தோங்கா ணுங்களையும் மண்ணுலகில் காணோமே
எந்தநா டெந்தேசம் எங்கிருந்து எங்குவந்தீர்
மன்னாநீ சொல்லுமென்று வானரங்கள் தான்கேழ்க்க
பொன்னாருந் தன்மர் புரையுடையா ரென்சொல்வார்

மன்னுங் குருகுலத்தில் பாண்டுமைந்தர் நாங்களுந்தான்
மண்ணாசை விட்டுவந்தோம் காணவே வைகுண்டம்
அத்தி புரந்திருந்து அச்சுதனைத் தான்தேடி
பத்தியுடன் கானகத்தில் பரிந்துவந்தோ மென்றுரைத்தார்

சீதைமதி[2] வானரங்கள் சேதியெல்லாந் தான்கேட்டு
ஆதலா லெங்கள் அனுமார்க் கிளையவர்தான்

---

1. சந்தனம் 2. சீதமதி

வீமனல்லோ வென்று விசயனுட தேர்தனக்கு
கோமானே வெற்றிக் கொடியல்லோ நாங்களுந்தான்

உம்மாணை யெங்கட் குரியோர்தான் நீங்களுந்தான்
எம்மாணை இங்கே இருந்தீரே ஆமாகில்
நாடுபகை வந்ததென்றால் நாங்களே வெற்றிகொண்டு
ஈடுபண்ணி உங்களுக்கு ஏவல்செய்து கொண்டிருப்போம்

இங்கே இருமென்று எடுத்துரைக்க வானரங்கள்
தாங்கு புகழ்மன்னர் தன்மருந்தா னேதுசொல்வார்
துங்கமுடி ராமருக்குத் தொண்டுசெய்யும் நீங்கள்
கடல்தனையே கல்லணையாய்க் கட்டினதும் நீங்களல்லோ

திறமுடைய ராவணனைச் செயித்ததுவும் நீங்களல்லோ
ஆனதினா லெம்மை அஞ்சாதே என்றுசொன்னீர்
மானமுடன் காக்க வானவர்தா னீங்களல்லோ
உகந்தனிலே மறைகாக்க உங்கள் பாரமென்று

புகழ்ந்துதான் தன்மர் பூரித்து வார்த்தை சொல்லி
மகிழ்ந்துதான் வானரங்கள் வைகுண்ட மாளிகைக்கு
போதமுடன் கேதாரம் போறவழி ஈதெனவே
நீதமுடன் காட்டில் நெடுந்தூரங் கூட்டிவந்து

வந்து துணையாக வானரமுந் தானடந்து
சந்துபயில் வானரங்கள் தாவி வழிகூட்டி
மெத்த மனமகிழ்ந்து விரைந்து வழிகூடி
நற்றவந் தான்தேடி நடந்தார் வனத்தூடே

இயக்கர் பதியும் இராட்சதர்கள் தன்பதியும்
மைக்கம்பு வாயால் வல்வேடர் தன்பதியும்
குலையாய்ப் பழியாய்க் குறவருட தன்பதியும்
மலையில் பலசாதி வாழுகின்றார் தன்பதியும்

நடந்து மலைகடந்து நாற்பத்தெண் காதவழி
மீதான கானகத்தில் வேடமுடன் [1] தான்நடந்தார்
மீதான மூலாக் கினியை நகுலனுக்கு
மெய்கலங்கி உள்ளசந்து விதியினுந் தான்முடிந்து

கைமறந்து காலசந்து கண்ணு மிகச்சுழன்று
வாக்குத் தடுமாறி மதிமயங்கி நாவுலர்ந்து
தற்கத்தின் நின்று தடுமாறும் வேளையிலே
வீமன் விசயன் மிக்கான தன்மருமாய்

பூமன் நகுலனையும் போயணைத்தார் மார்புடனே
கார்மறலி தூதுவர்கள் கடுகிவா வென்றுசொல்லி
போர்நகுலன் தன்னுடனே போராடி வார்த்தைசொன்னார்
தூதுவர்கள் வந்து துடுக்குப் பிலனறிந்து

ஏதுவாய் நெஞ்சில் எட்டெழுத்தைத் தானினைந்து
மாதுதிரு மால்பாதம் மனதில் தியானமதாய்
ஓதுவார் போர்நகுலன் ஒதுங்கவே காலனுந்தான்

விருத்தம்

ஆண்டவா உந்தன் பாதம் அடைக்கலங் காரு மென்றேன்
மாண்டது ரெண்டு பேரும் வைகுண்டம் வந்து சேர்ந்தார்
பாண்டவாள் மைந்தர் தன்னில் பாயற்பரி நகுலன் வாரேன்
நீண்டவா என்முன் வந்து நீதுணை செய்கு வாயே!

தூயதோர் தன்மர் வீமன் துலங்கிய விசைய னுந்தான்
நேயமாய்ப் பின்னே வாரார் நீண்டவை குண்டம் தேடி
மாயவர் கருணை கூர்ந்து வந்துநீர் துணைய தாகக்
காயமுட விற்சீவன்க ளறிந்துணை செய்வாயே!
(வரிசரியில்லை)

பாவியேன் பூமி தன்னில் படுத்துமுடல கிடத்திப் போட்டு
ஆவியென் றுனது பாதம் அடையவே தேடி வாரேன்
தாவியே மறலி வந்து தடைஇடை பண்ணா வண்ணம்
கூவியே நீவா வென்று கோவிந்தா அருள்செய்வாயே!

---

1. வேகமுடன்

திக்கறியேன் திசையறி யேன்(நான்) தெய்வச் செயலை நானறியேன்
மெய்குள் ளோர்சொல் பொருளறியேன் வினையேன் வேண்டி
வருவதற்கும்
பொருள்நீ இதனாகிச் சகல துணையும் நீயெனக்கு
நிற்கும் நிலைகாண் வைகுண்டம் நீயே தஞ்சம் நினைந்தருளே !

பெரிய திருமால வைகுண்டம் பிறவே ஐவர் பிரியமுடன்
உரிய துணையள் தானீந்து அரியே துணையாய் மனதிலெண்ணி
துரிய வெளியுந் தான்கடந்து தோற்ற மொடுக்கம் பராபரத்துள்
விரியுங் கமல பதஞ்சேர வேணு மருள்செய் கோபாலா!

அண்டரு முனிவர்க் கேற்க அகிலமீ ரேழு காட்சி
விண்டோ ருடலிற் சீவன் மெய்மறந் துன்னைத் தேடி
உண்டென நம்பி வாரேன் உத்ததோர் துணை வேறில்லை
மண்டல மாது பாகர் மாயனே துணைசெய் வாயே !

குடிதா னுமக்கு ஐவரென்று கூறும் புவனந் தானறிய
படிநூல் வேத சாத்திரமும் பகரும் பயனும் நீயறிவாய்
நெடிய மாலே ஆதிமூலம் நேசமே பொருளா யெண்ணி
அடியேனும் வாரேன் பாதத் தடைக்கல மென்றுந் தானே !

கண்ணலே கமலக் கண்ணா கரியமா லரியே சோதி
அண்ணர்கள் மூவர் வாரார் அன்புவைத் துந்தன் பாதம்
திண்ணமாய் உதவி செய்து தீவினை யணுகா வண்ணம்
வண்ணமாய் மகிழ்ச்சி கூற எதிர்கொள் பார முனக்கே

களபகஸ் தூரி மாயா கனகமே ருடைய தூயா
துளபமா லிகைசேர் மார்பா துணையெனக் குனது பாதம்
அளவிலாப் பொருளாய் நின்றதொரு அனாதிமகர மூலம்
(ஒரு வரி இல்லை)

சோதியாய் நின்றதொரு சொல்லு மலையன் காணா
ஆதியான் ஆதியுமாம் நடுவோய் அடிமுடியாய்
ஓதியநால் வேதமுமா உள்ளாய்
(பாடல் முடிவு இல்லை)

நீலமாய் எங்கும் நிரந்தரமாய்வா ஆதி
மூலமா யோங்கி மூன்றுலகு முடுருவி
சீலமாய் நின்றதொரு சீர்பாத மெந்தனக்கு
காலமீது வேளைஅய்யா கைதருவாய் கோபாலா !

நடை

கூற்றுவன்தான் வந்துஎன்னைக் கொட்டாலை பண்ணாமே
ஆத்துமத்தைக் காருமய்யா அபய முனக்கபயம்
என்று நகுலன் எட்டெழுத்தை யுச்சரிக்க
அன்று எமதூதர் கண்டனர்காண் அம்மானை !

விண்ணோர் நகுலனையும் விமானந் தனிலேத்தி
மன்னாரும் வைகுண்டப் பதியில்வைத்தார் மெய்மகிழ்ந்து
நகுல னுயிர்போய் நாரணன்தான் தாள்சேர்ந்தான்
பகுமானம் ஈதெனவே பத்திமுத்தி தன்னுடனே

தன்மருடன் தம்பியரும் தயங்காம லுளமகிழ்ந்து
சென்மமெல்லாம் விட்டிழந்து சீக்கரம்போய் நாரணரை
காண்பதுக்குத் தானினைந்து கர்மமெல்லாந் தான்முடித்து
வீண்சடத்தை யேசுமந்து வீட்கெனவே தான்களித்து

அடக்கினார் பூமிதனில் அன்பாய் நகுலனையும்
துடக்கெனவே விட்டெறிந்து துதித்தார் பெருமாளை[1]
அரிநமோ வென்று அச்சுதனைத் தானினைந்து
கரியமால் நாரணரைக் காத்தருள வேணுமென்று

தீர்த்தமது தானாடிச் செய்தருமந் தான்முடித்து
நாற்றிசையுந் தான்பார்த்து நமஸ்கரித்து மூவருந்தான்
போற்றி வணங்கிப் பூரணமாய் உள்மகிழ்ந்து
தோத்திரமும் பண்ணித் தொழுதுதிரு மால்தனையும்

மூன்று சுமையிறக்கி முகுந்தன் தனைநோக்கி
ஆனதொரு வீமனுந்தான் அந்நேர மிப்போது
மான முடநகுலன் மடிந்ததுகாண் கானகத்தில்
ஏதுபட்டே னென்றே என்கோவே சொல்லுமென்றார்

---

1. பெருமாளே என்றுளது பேச்சு வழக்கு

சாதுவுள்ள தன்மர் தம்பியரைத் தானோக்கி
இவ்வுலகில் கற்றகேள்வி யாவர்க்கு மீந்தனன் காண்
பிறருக் குரையாமல் பேசா திருந்ததினால்
திறமுடைய கானகத்தில் சிதைந்தனர்கா ணென்றுரைத்தார்

அந்த மொழிகேட்டு ஆமென்று வீமனுந்தான்
சந்தோச மாகத் தன்மருடன் தானடந்தார்
விசையனுடன் வீமன் மெய்யுடைய தன்மருந்தான்
ஆசையா நெடுந்தூரம் அறுநூறு யோசினையும்

இசையவே தானடந்தார் எய்ப்புகளு மில்லாமல்
திசைகடந்து நோக்கித் தீரமாய் நடக்கையிலே
மற்றுமந்த கானகத்தில் வளகீழ் தானுமென்று
முற்று மிகமகிழ்ந்து முப்பதுயோ சினைதூரம்

படர்ந்துநின்ற ஆலநிழல் பரிவாகக் கண்டவர்கள்
அடர்ந்த நிழல்தன்னில் அவர்க ளிளைப்பாறி
இருந்து திகையறி எண்ணமெல்லாம் தான்தீர்ந்து
வருந்து மணவரசை1 மாசறவே தீர்ந்துதென்று

அந்த மரம்பார்க்கில் அச்சுதனார் பள்ளிகொள்ளும்
இந்த மரமென்று இன்பமாய்த் தான்பணிந்து
அங்கிருந்த மாமுனியை அடிபணிந்து தெண்டனிட்டு
பொங்கிய பூரணமாய்ப் பூரித் தகமகிழ்ந்து

அந்த வனங்கடந்து அப்பாலும் மெய்ப்பாக
இந்தநல்ல மூவர் எண்பதுயோ சினைதூரம்
போனார்க ளப்பாலும் போற வழிதனிலே
தேனாடுஞ் சோலையிலே சிறந்தருளு மேகமென்ன

வாரணம் போலெதிரே வந்துமுன்னே தோன்றிநின்று
காரணமாய்த் தோன்றிக் கனக்க மதம்பொழிந்து
பாரைப் பிளக்கும் பெரும்பறையைத் தான்போக்கும்
காரி லிடியெனவே கதித்துவாய் விட்டுவரும்

1. மண்ணாசை

சினத்து மதமீறித் திடுக்கெனவே தான்வெகுண்டு
வான மளித்தெதிரே வந்ததுவே வாரணமும்
வந்தமத யானையுந்தான் மன்னவர்கள் தன்பேரில்
முந்திச் சினந்து முடுகிவந்து மொத்திடவே

தெண்டா யுதவீமன் சினந்துமத யானைதன்னை
அண்டா தடித்து அஸ்த்திரந்தால் மத்தகத்தில்
குத்தி இருகையால் கொம்பிரெண்டை யும்பிடித்து
வெத்தி மதவீமன் மெலிவுசெய்ய மாட்டாமல்

நிக்கிறான் கண்டீரோ நெடியோன் மகிமை இதா
எய்க்கிறா னென்தம்பி இந்தமட்டும் யானைதன்னை
விட்டுநின்ற போதே விசயரே காரணந்தான்
கிட்டுகின்ற நாளாச்சு கெம்பீரந் தான்போச்சு

சீராக நம்முடைய தேசமது விட்டுவந்து
பாராய் வலுவீமன் பராக்கிரமந் தான்போச்சு
பாரதப் போர்தன்னில் பகைத்த நெறியள்வந்து
சக்கிர வர்த்திமன்னர் தன்னில்நூ றாயிரம்பேர்

அன்றெறிய இந்தமட்டும் அந்தரத்தில் நிற்கலையோ
இன்றெறியும் போது பெலமெங்கே கழிந்துதென்று
சொல்லுகின்ற போது மதயானை துதிக்கைதனை
வெல்லும் மதவீமனை விரைந்துசென்று தான்பிடித்து

கடிய மதயானை கழுத்திலே தானேறி
மடிவுதுற படிகொண்டு மத்தகத்தில் கொத்துகையில்
கையில் நகந்தன்னால் கதறவே தானழுத்தி
நையஒரு சாரி நடத்திவித்தான் வீமனுந்தான்

விந்தையுள்ள தன்மர் மிகமகிழ்ந்து கொண்டாடி
கந்த மிருகமதும் நடக்கு மளவாக
ஒப்பில்லா ஆனைதனை உகந்து நடத்துமென்றார்

மெய்யுடைய வீமன் விரைய நடத்தியபின்
அப்பெரிய வேழம் ஆனையுருத் தான்மாறி
செப்பரிய வேதியன்போல் சிறந்துநின்றான் அம்மானை !

இந்த மகிமையது ஏதென்று தன்மருந்தான்
வந்த வகையேது மறையோனைச் சொல்லுமென்றார்
அந்தமறை யோனுரைப்பான் அவன்வந்த சேதிதனை
அங்குஷ்ட[1] மாயிருக்கும் அகத்திய மாமுனியார்

லிங்க சிவபூசை நேராய் முடிப்பதற்கு
நந்த வனந்தன்னில் நறுமலர்கள் கொய்துவர
விந்தமலர் வாவிதனில் விரைந்துநான் செல்லுகையில்
ஓதிமங்க[2] ளெல்லாம் ஊடலது[3] செய்திருக்கும்

சேதிதனைக் கண்டுமெந்தன் சித்தம் மயலாகி
காத லுடன்மபங்கிக் கண்குளிரப் பார்த்துநின்றேன்
போதமுனி தன்னுடைய பூசை முடியாமல்
சாதகமாய் வேழமெனச் சாபமிட்டா ரெந்தனையும்

அய்யா இச்சாபம் அகல்வதெப்போ வென்றுரைத்தேன்
மெய்யாக உன்முதுகில் வீமன்வந் தேறியபின்
மாறாத சாபமது மாறுமென்றார் மாமுனியும்
வீறான சாபமது வீமரே உன்னாலே
பேறான உந்தனக்குப் பெருமையுமே உந்தனக்கு

போறேநா னென்று புகழ்மறையோன் போனதற்பின்
வேறே நினைவு விசாரமெல்லாம் விட்டொழிந்து
மாலே சரணமென்று மாயோனே காருமென்று
ஆலிலைமேல் பள்ளிகொள்ளும் அச்சுதரே தஞ்சமென்று

கடிய வனங்கடந்து காவலர்கள் மூவருமாய்
முடியே மூங்கில்வனம் முன்னூறு யோசினையும்
வாகாக வேநடந்து மயேந்திரமலை தன்னில்வந்து
ஏகாந்த மாகவேதான் இருந்துசுனை நீராடி

வந்துசுத னென்னு மலைமீதில் தானேறி
புந்தி மிகமகிழ்ந்து பூயமான மாமுனியும்
பாதம் பணிந்து பரிவுடனே தானிருந்தார்
ஏதுநீ ரிங்குவந்தீர் இயம்புமென்றார் மாமுனியும்

---

1. பெருவிரல் உயரம்  2. அன்னப்பறவை  3. கூடல்

தாங்கள்வந்த வாறுதன்மர் தனதாய் முனிக்குரைப்பார்
ஓங்கு முனிகேட்டு உகந்தேது வார்த்தைசொல்வார்
பேறாக யெந்தனக்குப் பெண்களய் யாயிரம்பேர்
மாறாமல் நீங்கள் மணமுடித்து இங்கிருந்து

காடு தனைக்கடந்து காவலரே இப்போது
நாடு தனையாண்டு நம்மிடத்தில் தானிரென்று
பெரியவரைச் சேர்ந்தால் பிறப்பிறப்பை நாள்தோறும்
வரிசையாய்த் தான்வளர்த்து வாழ்வுமிக உண்டாகும்

சூர்முனியைச் சேர்ந்தால் சிறுமை பெரிதாகும்
தார்முனிவன் சொல்லத் தன்மருந்தா னோர்வசனம்
பார்முனியே எங்களுக்குப் பாராசை ஒன்றுமில்லை
கார்முனியே எங்களைநீர் கடைத்தேற வேநினைந்து

எங்களுக்கு வைகுண்டம் இருப்பிடமே அல்லாது
தங்குவது மில்லை தரிப்பதுவும் இங்கில்லைகாண்
கஞ்ச மலர்ப்பாதங் காண விடை தாருமென்று
தஞ்சமென வேமுனியைத் தாளில் மிகப்பணிந்து

பணிந்து விடைவாங்கிப் பாங்காக முவருந்தான்
துடர்ந்துநல்ல மன்னர் துயரறவே தானடந்து
அப்பாலுங் கானகத்தில் அன்பதுயோ சனைதூரம்
மெய்யாக வேநடந்து மெல்லடிகள் கொப்பளமாய்

வருத்தமுடன் தானிருந்து வடவாலின் கீழிருந்தார்
கருத்துடனே அங்குரெண்டு கன்னியர்கள் ஊசியின்மேல்
பாத மதையூன்றிப் பாரில்விழ நீள்சடையும்
நீதமுட னந்த வசி[1] நின்றார் கன்னியர்கள்

கன்னியரைக் கண்டு காவலர்கள் தான்பணிந்து
மன்னவரோ நீர்தான் வந்தவகை யேதெனவே
கன்னியர்கள் சேழ்க்கக் கனத்தபுகழ் தன்மருந்தான்
பன்னியசீர் பாதமதைப் பத்தினியே உத்தமியே

---

1. ஊசி

சீரார் குருநாட்டில் சேர்ந்ததொரு அத்திபுரம்
பாரார் புவியரசன் பாண்டுவுட தன்புதல்வர்
மருவனைய தன்மரென்பேர் வாய்த்ததம்பி மாரீவர்கள்
திருவனையாய் மாதேநாம் செய்தவத்தி லிங்கிருந்தீர்

கண்டபோ தெங்கள் கனகமெல்[1] லாந்தீர்ந்தோம்
தொண்டர் தவம்பெறவேசொல்லுமென்றார் தன்மருமே
தன்மர் மொழிகேட்டுத் தயவுவந்து கன்னிகையும்
இம்மை தனில் வேணுமென்ற தெல்லாமும் நான்தாரேன்

உங்களுக்கு வேண்டியதை உண்மையாய்க் கேளுமென்றார்
எங்களுக்கு வேண்டியது இத்தவமே போதுமென்று
சொன்னவுடன் கன்னியைந் தோத்தமுடன் தான்வாழ்த்தி
மன்னர் பெருமாள் வைகுண்டம் தான்சேருவீர்

என்று விடைகொடுத்து ஏந்திழையும் தானிருந்தார்
அன்று வனங்கடந்து ஆளிகைநீர்ப் பொய்கையெல்லாம்
தீர்த்தங்க ளாடித் திருநாமம் தான்தரித்து
புத்திபெற வேமகிழ்ந்து புகழ்ந்து மிகநடந்து

மேகமள வாய்வளர்ந்த வீரமகேந் திரமென்னும்
மாக முயர்மலைமேல் வந்தவர்கள் தானேறி
அங்குள்ள மாமுனிக ளடிகள் பணிந்தேத்தி
பொங்கு புனலாடிப் புண்ணியர்க ளப்போது

அந்த மலைகடந்து அடவிகளும் தான்கடந்து
நந்திவளர் கோசமலை நாட்டமுடன் தானேறி
பவளமணி மேனியன பரஞ்சுடராம் மாமுனியை
துவள வணங்கித் தொழுதனர்கா ணம்மானை !

அம்மலையில் வாழும் அகத்தியர் புலத்தியனை
வெம்மை விசுவா மித்திரர்வ சிட்டரையும்
மனமருவு காளமுனி வாகனக் கோமுனியும்
சுகமுடன் காசிமுனி சொற்பெரிய கீசமுனி

---

1, கலக்கம் எனல் வேண்டும்

பகருமொரு பேர்பெரிய பரராச மாமுனியும்
சென்று வணங்கித் திருத்தாள் சரணமென்று
நின்று மலையும் நோரய்ச் கண்டுசென்று
நடந்தார் வனத்தூடே நாகமலை தான்கடந்து

அடர்ந்ததொரு காடும் அருவி மலைபலதும்
கடந்து வெகுதூரம் கடுகி நடக்கலுற்றார்
துடர்ந்துவரும் யாளிசிங்கம் தொழுது பணிந்துவர
மகிழ்ந்து கெருடாழ்வார் மலையதுவுந் தான்கடந்து

புகழ்ந்தெண் பதின்காதம் போனார்கள் மூவருமாய்
அவ்விடத்தி லுள்ள அதிசயமுந் தான்பார்த்து
எவ்விடத்துங் கண்டதில்லை இந்த அதிசயந்தான்
கண்காட்சி யெல்லாங் கண்டோங் களிகூர்ந்து

விண்காட்சி காணவேதான் விரைய நடக்கலுற்றார்
நடக்கும் வழிதன்னில் நல்ல மருத்துமலை
தேவர்கள் வந்து திருக்கூட்ட மாயிருந்து
பாவமுந் தீர்க்குமந்த பன்னக சாலையிலே

இருந்து தவிப்பாறி எண்ணமெல்லாந் தானறிந்து
அருந்தும் புனல்மூழ்கி அமுதமள்ளித் தானுணர்ந்து
சிறந்துவளர்ந் தோங்கிநின்ற தென்னவனந் தன்னில்வந்து
துறந்தோர் முனிவர்களைத் தொண்டுபெண்ணி யப்பாலும்

சிந்தை இழந்து திருமாலைத் தானினைந்து
இந்திர கோபமென்னும் யேகமலை மீதேறி
செல்லுகின்ற போதே சித்தாதி சித்தரெல்லாம்
நல்லவர்க ளென்றிந்து நட்பாக வார்த்தைசொல்லி

எங்கிருந்து எங்குவந்தீ ரிம்மூவர் மூவருந்தான்
துங்கமுடி மூவருந்தான் சொல்லுமென்றார் சித்தர்களும்
சித்தர்களுந் தான்கேழ்க்க சீரான தன்மருந்தான்
அத்தரே நாங்கள் அத்திபுரி நகரில்

பாண்டுமன்னன் தன்புதல்வன் பஞ்சவர்கள் நாங்களுந்தான்
வேண்டுமென்பேர் தன்மன் விசையனிவன் வீமனுந்தான்
மாண்டு சகாதேவன் வைகுண்டம் தான்சேர்ந்தான்
மீண்டு நகுலனிப்போ விழுந்தான் பதிசேர்ந்தான்

அஞ்சுபேர் என்னில் அடியேங்கள் மூவருமாய்
மிஞ்சமொரு வைகுண்டம் வித்தகரே சேரவென்று
வந்தோம் வனத்தோடே மலைகடந்து இத்தூரம்
சந்தோஷ மாச்சுதுங்கள் சந்நிதியைக் கண்டவுடன்

இனிமேல்த் துயரேது எத்தனைதா னானாலும்
பனிபதுபோல் நீங்குமுங்கள் பாத தெரிசினையால்
இங்கமுடன் வைகுண்டத்துக்கு எத்தனைநாள் செல்லுமய்யா
அன்புடனே சொல்லுமய்யா அடியேங்கள் போய்ச்சேர

என்றுதன்மர் கேழ்க்க இயலான சித்தர்கள்தான்
அந்தரத்தி லேதெரிந்து ஆகாச மூடுருவி
தந்திரத்து நாற்குளிகை சாதகமா யண்டமெல்லாம்
கவனமா யோடியொரு மார்க்கந் தானுமதாய்

வைகுண்டஞ் சுத்தி வருவோ மறுத்தறியோம்
மெய்யென்று கண்டு விளங்கினும் வந்ததில்லை
அந்தமட்டுங் கண்டறியோம் அச்சுதனை நாம்தானும்
இந்தமட்டும் நீங்க ளெல்லாம் தனைவெறுத்து

நாடுவிட்டு வந்து நவனாதி சித்தரையும்
காடுதனில் கண்டோம் கருத்துடனே உங்களையும்
ஈடுமக்குச் சோடு எதிருண்டோ மன்னவரே
நீடுபுகழ் வைகுண்டம் நீர்பெறுவீர் கண்டீரே

மாயனுட சீர்பாதம் மன்னவரே நீர்பெறுவீர்
தூயதொரு தன்மரென்று சொல்வார்கள் கேட்டிருக்கோம்
கண்டோம்நா முங்களையும் காவலரே இப்போது
விண்டோனு முங்களுடன் மெய்விட்டு வாய்திறந்து

கேதாரந் தூரமல்ல கிட்டச் சமீபமது
பாதார விந்தமதில் பஞ்சவரே சேர்ந்திருப்பீர்
என்றுநவ சித்தர்கள்தான் ஏகினர்காண் அம்மானை.

அன்றுதன்மர் வீமன் அருச்சுனனு மந்நேரம்
செங்கண் மலர்மாது சீதைமகா லட்சுமியுமாய்
பங்கயரே தஞ்சமென்று பார்மீதி லேநடந்தார்
எல்லைகடந் தப்பாலே எண்பதுயோ சினைதூரம்

முல்லைபிச்சி செண்பகப்பூ முளரிவனத் தூடேபோய்
தில்லை வனங்கடந்து செழுந்தீயுள் தான்மூழ்கி
குன்று பருப்பதமுங் கொடுஞ்சுரமுந் தான்கடந்து
சென்று திருமலைபோய் தீர்த்தங்கள் தானாடி

புஷ்ப மலரெடுத்துப் பூசையளும் தான்முடித்து
நிற்பளவி லேவிசயன் நீலவிழி தான்மயங்கி
நெஞ்சயர்ந்து கண்சுழன்று நெடுமால் தனைநினைந்து
குஞ்சர மாமலையைக் குறித்தே அருகில் வந்து

அந்த மலைசேர்ந்து அருள்முனிவர்களைத் தான்பணிந்து
இந்துலவு1 மாமலைமேல் ரிஷிகளைத் தான்பணிந்து
சீருலவு மூவர் சீதமெனும் மாமலைக்கு
பாருலவு தன்மருடன் பாங்காக வேநடந்து

நீண்ட மலையருகே நெடியோனைத் தஞ்சமென்று
ஆண்டவனைப் போற்றி அநேக நெடுந்தூரம்
நந்த வனமும் நறுமலருஞ் சோலையளும்
மந்தாரை பிச்சி மல்லிகைபூங் காவனத்தில்

அந்தமுள்ள பார்த்தனுக்கு அவதிவந்து தோன்றிடுமாம்
காலசந்து மேலசந்து கண்ணு மிகச்சுழன்று
மேலசந்தும் பாசம் மெய்மறந்து நாவறண்டு
அங்கங் குளிர்ந்து அக்கினியுந் தானொடுங்கி

---

1. சூரியன்

பொங்கு சுவாசம் பொறிகலங்கி மேல்நோக்கி
நாடி தளர்ந்து நரம்பு மிகப்பதறி
ஓடி யொடுங்கு முண்மைதனைத் தானறிந்து
பொறிகலங்கி மாயப் போர்விசயன் தானறிந்து

நெறிகலங் கும் நெஞ்சை நிறுத்தி யசையாமல்
இருநான்[1] கெழுத்தை இருதயத்தி லேநிறுத்தி
ஒருநாங்[2] கெழுத்தை உள்ளடக்கி மேல்நோக்கி
நின்றெழுத்தைப் பார்த்து நினவெழுத்தி னாலறிந்து

குன்றெடுத்த மாலே கோவிந்தா வென்றுசொல்லி
அத்தனே எங்கள் ஆதிநா ராயணனே
நித்தனே போற்றியெந்தன் நீலவண்ண னேபோற்றி
மெய்யனே போற்றிஅய்யா விண்ணோர் பெருமானே

அய்யனே போற்றி அடியார்க் கெளியானே
வேதன் தனைப்பயந்த வித்தகனே மெய்ப்பொருளே
பாதந் தனைமறவேன் பச்சைமுகில் மேனியனே
பேயின்முலைப் பாலுண்ட எம்பெருமா னேமறவேன்

போய்மறலி கையில் பிடிபட் டலையாமல்
கண்ணனே எந்தனுட கருத்திலே தானிருந்து
அண்ணரே காரும் அடியேன் சரணமய்யா
ஆயரே அச்சுதரே அடியேன் சரணமய்யா

நேயனே எந்தன் நெடுமாலே சரணமய்யா
மாலை யழகா வடிவழகா சரணமய்யா
சோலை யழகா துணையெனக்கு உன்பாதம்
நம்பினேன் காத்தருளும் நாரணரே தஞ்சமய்யா

வெம்பியுயிர் மாளாமல் விபர மறிவுடனே
ஆதாரம் பார்த்து அடியேன் பணிவிடைதான்
தவமாக ஊழியஞ்செய் தாசனென்று தானறிந்து

---

1 அஷ்டாட்சரம் - ஓம் நமோ நாராயணாய 2. நாராயணா

பத்தவ தாரம் பார்மீதி லேஎடுத்தீர்
வித்தகரே உம்மையுந்தான் விட்டுப் பிரிந்தேனோ
நாரணரே கேளும் நான்விருத்தம் பாடுகிறேன்
காரணரே கார்க்கக் கடவுளரே கண்பாரும்

**விருத்தம்**

கண்ணுங் கருத்து மொன்றாகிக் கவனம் பொறியின் துயர்களைந்து
எண்ணு மெழுத்தும் பாராமல் அஷ்டாச் சரத்தைப் பிரியாமல்
நண்ணும் பரத்தில் அனுதினமும் நாரா யணனே தஞ்சமென்றேன்
விண்ணும் புவியை அளந்துநின்ற விந்தை மலர்த்தாள் தருவாயே

அந்தணர்க் கரசே வேதக் கணமே அளவில்லாத
சுந்தரப் புயனே மாலே சுருதியின் முடிவே இப்போ
உந்தனக் கபயம் அய்யா உத்ததோர் வேளை தன்னில்
எந்தனைக் காரும் வந்து ஏழையேன் மயங்கா வண்ணம்

நாவிக் கமலத் தாசிருப்பில் நடுவே குடியா இருக்கிறயென்
னாவிக் குணர்வு தடுமாறி அறிவே கலங்கி மதிமயங்கி
பாவிக் குனது திருமலர்தாள் பதித்தான் முத்தி பிறவுமுயிர்
சீவிக்கும் போது வைகுண்டஞ் சேர்ப்பாய் காப்பாய் கோபாலா!

தன்ம ரும்பின் வீமனையும் தனியே விட்டு நான்வாரேன்
பொன்மலர் தவிர நீவருவாய் பூத தயவு முனக்கிலையோ
அருமை யறிவாய் முன்னிருந்த அய்வ ருடைய நினைவறிவாய்
பெருமை யுனது பெருமானே பேசா தோடி வருவாயே!

கலங்கும் வேளை தனக்கிரங்கி கலங்கா யென்று வாதீர்க்க
மலங்கு மனத்தை மிகத்திருத்தி மயங்கா வண்ணந் தனைக்காட்டி
இலங்கு வடிவை எனக்கறிய எதிரே வந்து திருநாமம்
அலங்கா ரங்கார் பங்காலும் அரிவோம் நந்தா கோபாலா

திருவடி சரணந் தன்னை தெரிசினை அடியேற் கிப்போ
குருவடி வாக வந்து கோவிந்தா வென்று சொல்ல
பருவடி நின்பே ரந்தப் பங்கயப் பாதந் தந்தால்
ஒருவடி போது யெந்தன் உச்சிமேல் பாதந் தானே!

ஏமனே அணுகா னென்னை இருள்களு மணுகா திப்போ
ராமனே ராமா வென்றால் நாமமு மறவா தாமால்
வீமனுக் கிளைய விசயனே சூர னென் பேர்[1]
சாமிசா ரதியாய் நின்ற தகைமையா லலுகா நின்றேன்

மூவரும் வந்தோம் வந்தோம் முகுந்தனே வானி லுள்ள
தேவரு மறிய வந்தோம் சிறந்தவை குண்டம் தன்னில்
யாவரு மறிய வந்தோம் மருவிய பாஞ்சாலி வந்தாள்
நீவரு நினைவு சொன்னேன் நெடியமா லருள்செய் வாயே!

ஆதியி லுனக்குச் சீஷன் அனுதினம் பிரியா நேசம்
நீதியி லுபய மாகி நெறியறிவு போகு முன்னே
ஆதியு முன்றாள் நிற்கும் பார்த்தனென் றெங்குஞ் சொல்லச்
சேதியு மறியா நந்த கோபனே திருத்தாள் போற்றி!

கடிமறலி தானந் தானும் கமலக் கண்ண னிங்கிருக்க
விடிய வுதித்த கதிர்போலே அரவிந்த மலராம் வைகுண்டம்
நெடிய பதவி உண்டாகும் நீயே அருள்வாய் கோபாலா!
(ஒரு வரி இல்லை)

**நடை**

பத்து விருத்தம் படித்துப் பணிந்தேத்த
முத்துத் திருமால் முழுது மனமகிழ்ந்து
வாசமுள்ள தூதுவரும் வானவரும் வந்தேதிரே
நேசமுடன் பார்த்தனையும் நேராகத் தானழைத்து

புஷ்பக விமானத்தில் பூரணமாய்த் தானிருக்க
செப்பமுட னேரதத்தைச் சிங்கார மாய்நடத்தி
பொன்னுலக மெங்கும் பூம்பந்தல் தானிரைத்து
மின்னுலவு தோரணங்கள் வீதியெங்குந் தானிரைத்து

தோரணங்கள் நீளமுங்கால் சோடித்தார் வாழையினால்
பூரண கும்பமெங்கும் பூரித்தா ரரம்பையர்கள்
ஆலத்தி கற்பூரம் அலங்கரித்தார் கன்னியர்கள்
தாலத் திருவிளக்குத் தானெடுத்தார் பூவையர்கள்

---

1. சீர் குறை

கற்பூர வாசங் கமகமெனத் தான்மணக்க
பொற்புடைய வானோர்கள் பூரித்துச் சூழ்ந்துவர
நாரணனார் தன்பதிக்கு நல்லவழி ஈதெனவே
பூரணமாய் வானோர்கள் போற்றி மிகத்தேற்றி

அசுரர் தனையறுத்து அமரர்பயந் தான்தீர்த்து
விசையனென வானவர்கோன் வேந்தருட் புத்திரனே
காண்டீபத்தால் சூரரையே கட்டாலே வேரறுத்து
வானவருந் தேவர்களும் வந்து மலர்சொரிய

தானவரும் வேதியரும் தன்மஞ்செய மென்றுமவர்
அந்தணர்கள் சூழ்ந்துவர அரம்பையர்க ளாடிவர
கெந்துருவர் கின்னரதர் திம்புரர்க ளாடிவர
தெய்வேந்தி ரன்புதல்வன் தேர்மீதி லேறிவர

கோவேந் திரனோ குபேரனோ யென்பாரும்
திக்கு விசயனோ செலுத்தினா னென்பாரும்
மிக்க புகழ்விசயன் வீரன்கா ணென்பாரும்
தக்க புகழ்செலுத்தும் தனஞ்செயன்தா னென்பாரும்

மைக்கண் ணரம்பையர்கள் வகுத்து மலர்தூவ
அந்தர துந்துமியள் ஆலாத்தி யேந்திவர
தந்திர கின்னரர்கள் சங்கீதம் படித்துவர
சோபனங்கள் சொல்லித் தோகையர்கள் கேட்டுவர

பூவ னருச்சுனனும் புஷ்பக விமானமதில்
தேவர்கள் கொண்டாடச் செயசோப னத்துடனே
மூவர்களுங் கண்டு முத்திபெற்றா னென்றுசொல்லி
தாம னருச்சுனனும் சந்திரன்போ லிந்திரன்போல்

ராமர்வை குண்டமதில் நாராய ணாவெனவே
கொண்டுவந்து வானவர்கள் கோவிந்தா வென்றுசொல்லி
விஷ்ணுவுட தன்பதியில் வீற்றிருவென்று வைத்தார்கள்
வந்தா ரிருந்தார் வைகுண்டந் தான்சேர்ந்தார்

விந்தர்கோ விந்தர்பதம் விசையனுந்தான் சேர்ந்தபின்பு
பார்த்த னுயிரேகப் பார்த்திருந்த தன்மருந்தான்
நேத்திருந்தா ரின்றில்லை நிச்சயமில் லாவுடலைக்
காத்திருந்த கூத்து கழன்றோடிப் போனவழி

பார்த்திருந்த நேசம் பதறாமல் உள்ளடக்கி
வீற்றிருந்த பார்த்தனுக்கு வேணுமென்ற சாத்திரமும்
செய்து முடித்துத் தீர்த்தமது தானாடி
ஏத்த கருமமெல்லாம் இருவருந் தான்முடித்து

சிவனே திருமாலே சிவராமா காருமென்று
ஆயனே அரிராமா அருச்சுனனைக் காருமென்று
தன்மருடன் வீமனுமாய்த் தானிருந்து மாயனையும்
திருமாலே உந்தன் சீர்பாதமே போற்றும்

மறவாம லேநடந்து வருவோம் பதிசேர்வோம்
திறவாக மும்முடைய சீர்பாதங் காருமய்யா
இந்தத் தரணிதன்னில் இருவருக்குந் தான்துணையாய்
வித்தகரே நீர்வந்து வீமனையு மெந்தனையும்

மெய்கலங்கி நில்லாமல் விந்தைமலர்த் தாள்காட்டி
அய்யரே காத்தருளும் அச்சுதரே வாருமென்று
மெய்யுடைய தன்மருமாய் வீமனுடன் தானெழுந்து
வைகுண்டஞ் சேர வழியே நடக்கலுற்றார்

ஓங்குமொரு பட்சிக் கொருசிறகு வீழ்ந்ததுபோல்
தாங்கு மொருசிறகு தனிவீமன் றானாகி
ஒருசிறகு கொண்டு உன்னி வழிகடந்து
தீதல்லா நீள்தருமன் சென்றான் வனத்தூடே

ஓதரிய வீமன் ஒருவனும் பின்னோடே
அன்னவர்கள் நால்வர் அருங்கானி லேமடிய
மன்ன ரிருவோரும் வரிகயிலை தான்சேர்ந்தார்
சேர்ந்திருந்து தங்கள் தியக்கத்தைத் தான்தீர்த்து

வாய்த்தாய வீமன் மனது மிகவுழன்று
தாராருந் தன்மருட தாளிணையைத் தான்தொழுது
சீரான நல்விசயன் சீவித்தா னிவ்வனத்தில்
ஏதய்யா சொல்லு மெனக்கறிய இன்னதென்று

தீதான பாரதத்தில் தேர்ப்பாகன் தானாகி
மேகவண்ணர் தேர்நடத்தி மிகவதினா லிவ்வனத்தில்
தேகமதை விட்டெறிந்து திருமா லிடஞ்சேர்ந்தார்
விசார மினிவேண்டாம் வீமனே என்றுசொல்லி

உசாவு துணை நமக்கு உலகளந்தா னுண்டெனவே
சோடிழந்த பட்சியைப்போல் துயரமெல்லா முள்ளடக்கி
கேடில்லாப் புத்தியுள்ளோர் கிஞ்சுக வனந்தனிலே
கூடியே சென்று குமுதமலர் தன்னையுந்தான்

நாடியே பாதம் நடந்து வெகுதூரம்
துடந்து வனங்கடந்து தொண்ணூறுயோ சினைதூரம்
நடந்து மலைமீதில் நாற்பதுயோ சினைதூரம்

உத்த கருமலையும் ஓமகிரி யென்னுமந்த
அஸ்த்த கிரிமலையும் அவ்வனமுந் தான்கடந்து
வராககிரி மலைதன்னை வந்தடைந்தா ரம்மானை.

நன்றியுள்ள தன்மருமே நாடிச் சினந்தெழுந்து
பன்றியென்று வந்தெதிரே பகட்டிய தட்டுகையால்
பரித்து மிகவீமன் பன்றி தனைப்பிடித்து
திருந்துங் கழுத்தைத் திருகுமந்த வேளையிலே

வேதியன்போல் வந்துநின்றான் மிக்கதொரு பன்றியுந்தான்
நீதியுள்ள தன்மர் நினவே தென்க்கேட்டு
ஓதுவான் வேதியனும் உள்ளப்டி தப்பாமல்
சாதுவுள்ள தன்மரிடம் தானுரைத்தான் வேதியனும்

கருதித் தவம்புரியும் கார்மேக மாமுனிவன்
பருதிக் கலச பருப்பதத்தின் மேலிருப்போன்
தக்கதொரு வேள்விக்குச் சமித்துக்கொண்டு வாவெனவே
சீக்கிரமாய் வாவென்று செப்பினார் மாமுனியும்

சமித்தெடுத்துப் போகத் தாமிசமாய்ப் போச்சுதென்று
கும்படிப்பின் கோபம் கொண்டெழுந்த மாமுனியும்
இச்சாப மிட்டார்காண் யேன[1] வடிவாக
அச்சாபந் தீர்வதெப்போ அருளுமென்று நான்கேட்க

தன்மருடன் வீமன் தனித்து வரும்வழியில்
மின்மருவு தன்மர்தனை வேகித்துச் சென்றெதிராய்
வலுவீமன் கண்டு வாரிப் பிடித்தணைத்து
தலையைத் திருகையிலே தான்தீருஞ் சாபமென்றான்

அதினாலே சாப மகன்றதுகாண் நும்மாலே
வானவர்கள் வைகுண்டம் மன்னவரே சேருமென்று
போனான் மறையோனும் புகழ்பெரிய கானகத்தில்
தேனாருந் தன்மர் சிவனே சிவாயமென்று

இந்திரகிரி சந்திரகிரி யென்னுமொரு மாமலையும்
அந்திரகிரி வாள்மலை அப்பாலுந் தான்கடந்து
ஓங்கி வளர்ந்ததொரு ஓமகிரி தான்கடந்து
மூங்கில் வனங்கடந்து முப்பதின்காத வழிநடந்து

பாங்குடனே பாதாள மூடுருவி யப்பாலும்
தாங்குந் துவாரந் தான்கடந்து அப்பாலும்
வெளியேறி வந்து வீமனுடன் தன்மருவாய்
வளிகூட்டி யேநடந்தார் மலையன் வனங்கடந்தார்

இப்பா லிருநூத் தெண்பதுயோ சினைதூரம்
மெய்ப்பான காட்சியளும் வேணதெல்லாந் தான்பார்த்து
சோமகிரி கண்டு தொழுதங் கடிபணிந்து
நேமமுடன் கானகத்தில் நெடியோனை உள்நினைந்து

ஆரணிய மானதொரு அடவிதனி லேநடந்து
பூரண மானதொரு புஷ்கரணி தானோக்கி
சீர்த்திபெறு சக்கிரகிரி கிரவுஞ்ச மாமலையும்
கார்த்திகை மாமலையும் கடம்பவனந் தான்கடந்து

---

1. பன்றி

அப்பாலுந் தான்கடந்து அகன்று வருகையிலே
அவ்வனத்தி லேநிமித்தம் ஆர்ப்பரித்துத் தான்கூற
இவ்வனத்தி லேநிமித்தம் என்னவென்று பார்ப்பளவில்
தாராரும் வீமனுக்குச் சக்கர மாச்சுதென்று

நேராக வேநிமித்தம் நிசமா யுணர்த்துதென்று
தன்ம ரறிந்து தனியானோ மென்றுசொல்லி
இன்மை[1] தனிலெல்லாம் இழந்தோமே என்றுதன்மர்
விந்தையுள்ள தம்பியரே வீமனே உந்தனக்கு

சந்தையமாய்க் காலஞ் சரியென்று தானுரைக்க
பாரிய சொல்வீமன் பச்சமுடன் தன்மரையும்
ஆரியரே அண்ணாவி அடியேன்சொல் விண்ணப்பம்
உம்மைத் தனியேவிட்டு உடல்உழுந்து[2] யான்போரேன்

கன்ம மதுசொல்லக் கவலை தொலையாது
இறப்பதுவு மெய்யாகும் இருப்பதுவும் பொய்யாகும்
எமக்குப் பயமில்லை என்னுடைய அண்ணாவி
உமக்காக வேமனது உழன்றதுவே அல்லாமல்

வேறே கவனம் விடவும்சற்று மில்லைஅய்யா
கூறே னொருவார்த்தை கோவிந்தா நீயறிவாய்
தனியென்று சொல்லி சடையாமல் நீர்தானும்
இனிய வைகுண்டம் இப்போதே சேருமென்று

கண்ணர் தனைநினைந்து கருத்தில் தியானமதாய்
எண்ணமற அண்ணரேநீர் இருமென்று வீமனுந்தான்
சொல்லும் பொழுது சோத்தியமும் வந்ததுவே
மல்லும்புய வீமனுக்கு மதிமயக்கம் வந்தவுடன்

ஐம்புலனை உள்ளடக்கி அறிவை மிகத்திருத்தி
செம்பதும மாயன் திருத்தாள் சரணமென்று
அரிநமோ வென்னும் அட்டாச் சரத்தையுமே
பிரியாமல் நெஞ்சில் பிடித்தா னிருதாளை

---

1. இம்மை 2. உடல் விழுந்து

## விருத்தம்

ஐவர்க்குஞ் சகாய முன்னாள் அடைக்கலங் காத்த மாலே
தெய்வருக்குத் தெய்வ மாகி தேவரா இருந்த மூர்த்தி
உய்யவர்க் கருளி தென்று முள்ளத்தி லன்பு காட்டி
மெய்வர்க்க மாகி நின்ற வேதநா ரணனே போற்றி !

அருமறைப் பெருமா ளுன்னை அடைந்தவ ரைவ ரென்றே
திருமறை யுடையாய் நால்வர் திருவடி சரணஞ் சேர்ந்தோம்
தருமரும் பிறகே வாரார் தனிவழித் தனியனாகி
வரும்வழி பயமு மில்லை மாயனே வந்து காரும் !

இன்பமும் பொருளும் நீயே இகபர சுகமும் நீயே
அன்பருக் கன்பு நீயே அச்சுதா பச்சை மாலே
துன்பமு மிழந்து நாயேன் சுருதியே பொருளா யெண்ணி
நின்பதி தேடி வாரேன் நெடியவா போற்றி போற்றி !

அருந்தவர்க் கெட்டா மூலம் ஆதியா மனாதி மூலம்
பொருந்துவார் நெஞ்சில் தன்னில் பூரண மான மூலம்
எட்டெழுத் தான மூலம் செகதல மனந்த மூலம்
வருத்தவே வந்த வேளை வைகுண்ட மூலந் தானே !

மாருதப் பிரசண்ட கோர வாயுவின் புதல்வன் வாரேன்
நாரதப் பிரிய ரான நாரணா நந்த கோபா
வாருதி சயனத் தோனே மாயனே போற்றி போற்றி !
(மூன்று வரிகளே உள்ளன)

கர்த்தனே கரிய மாலே காரணா சிவந்த பாதா
முத்தனே முதல்வா பச்சை முகுந்தனே நந்த கோபா
அத்தனே அடியேன் வீமன் அடியினைத் தொழுது வாரேன்
சுத்தனே சுவாமி நாதா சுந்தரா நந்த கோபா !

அளவிலா தனந்த நாதா அரிகரி ராம நாதா
களவினால் வெண்ணெ யுண்ட கரியவா பெரிய மாலே
துளபமே அணியும் மூர்த்தி சோதியே சுருதி வாழ்வே
தளபமே களப வாசஞ் சானகி நேயா போற்றி !

அருகின்ற அஞ்சாய் மூன்றாய் அகண்டமா யருளி நின்ற
கஞ்சமா மலர்த்தாள் காணக் கருதிநான் வருக நேசமத்து
துஞ்சலா லலையா வண்ணம் துணைப்பத மருளி யேநின்
நெஞ்சமே புகுந்து காக்க நீலமா முகிலே போற்றி !

காணவுங் கடவ தாக காட்டவு மீதோன் தன்னை
பூணவு மடியேன் றானும் பொருளெனச் சிரமேல் கொள்ள
தோணவும் நாணமு மகற்றி செல்லவே நடந்துவா கரியமர்லே !
(மூன்று வரிகளே உள்ளன)

முன்னாள் முதல்வன் முகில்வண்ணன் முகுந்தா நந்த கோபாலா
உன்னா ளாகி யிருந்த டியேன்உடலே கிடத்தி உயிர்பிரிந்து
இன்னாள் வந்த படியாலே இப்போ வந்தேன் வைகுண்டம்
தன்னா ளெனவே தற்கார்க்க சரணஞ் சரணம் கோபாலா !

அங்குசக் கரனே போற்றி அரிநம சிவாயா போற்றி
ஏழைபங் காளா போற்றி சங்குசக் கராயுதனே போற்றி
சாரங்க தரனே போற்றி பொங்குபூ ரணனே போற்றி
பூமகள் கணவா போற்றி!
(பாடல் அவ்வளவே உளது)

**நடை**

ஆயனே அச்சுதனே ஆண்ட பெருமாளே
நேயனே என்றோர்க்கு நீதியாய் நின்றோனே
கானகத்தி னுள்ளே கண்மணியாய் நின்றோனே
எனக்கு மதிமயக்கம் இறுதி முடிவாக

உனக்க பயமென்று ஓதினேன் யான்விருத்தம்
கடைக்கண் இருளாகி கறக்கோசை வேறாகி
படைக்கலமுங் கைமறந்து பாரி லுடல்விழுந்து
உடைக்கலமுந் தானிழந்து உயிர்பிரிந்த வரைநோக்கி

அடைக்கலமென் றுந்தனையே அடியேன் மிகநினைந்து
வந்தா லடியேற்கு வைகுண்டந் தந்தருள்வீர்

தந்தாள வேணுஞ் சரணஞ் சரணமய்யா
பேய்கொண்ட நெஞ்சன் புலையனு மானனிப்போ
வைகுண்டஞ் சேர்த்து வைத்தருளும் மாயோனே
பஞ்சாயு தத்துடனும் பரிந்துளப மாலையுடன்

கஞ்சமலர் மாதுகையும் கனகத்திரு மார்புடனே
செம்பொன்மணி மாலையுடன் சிறந்தபசு மேனியுமாய்
ஐம்பொன் முடியில் அங்கடியேன் முன்னைவரவும்
ஆடுங் கெருடன் அரியதொரு வாகனத்தில்

நீடுதிருக் கோலமுடன் நீரிங் கெழுந்தருளி
அடியேன் தனைப்பழைய அடிமையென வேநினைந்து
படியாளும் வைகுண்டம் பதவிதனில் வைத்தருளும்
கட்டழகன் வீமன் கருணைக் கடலாகி
எட்டெழுத்தை உச்சரித்து இறைஞ்சினான் அம்மானை.

மேகவர்ணர் தன்பதத்தை வீமனுந்தா னுச்சரித்து
தாக முடனிமையோர் தங்கள் விமானமதை
கொண்டுவந்து வீமனையும் கூப்பிட் டதிலிருத்தி
விண்டுசங்கு சின்னம் வீராணந் தான்முழங்க

பைகொண்ட நாகமிசை படித்தலின்மேல் பள்ளிகொண்டு
வைகுண்ட வாழ்பதியில் வைத்தனர்கா ணம்மானை.

வீமனும் வைகுண்டம் விரைந்தேகிப் போனதற்பின்
தாமனந் தருமன் தனியாகி உள்ளயர்ந்து
வெம்பி மனமிடைந்து வெந்துமனம் புண்ணாகி
தம்பியரைக் காணாத தனிமை யதுமிகுந்து

கண்ணர் தனைநினைந்து கவலையெல்லாந் தான்தீர்ந்து
இன்றைக் கிருப்பதும்பொய் என்பிறவி என்பதும்பொய்
அன்றைக் கிருந்தபடி அல்லாமல் வேறுமுண்டோ
பூமிதனில் வந்து பிறந்தோம் புவியாண்டோம்

சாமி திருமால் சகாயமது பெற்றிருந்தோம்
ஐவரென்று பாரில் அரசராய்த் தானிருந்தோம்
ஐவரிலே நால்வர் அகன்றார்கள் நம்மைவிட்டு
ஏதுசெய்வோ மென்று இணைந்துருகிக் கொண்டாலும்

மாது மலரோன் வகுத்தபடி யாமிதுவும்
விட்டுப் பிரியாத வீமன் அருச்சுனனும்
மட்டுப் படாநகுலன் வாய்த்தசகா தேவனுந்தான்
மாண்டுவிட்டா ரென்று மயங்கி அழுதாலும்

மீண்டு திரும்பி விரைந்துவந்து நிற்பாரோ
இந்த மயக்கம் இருந்தால் பரலோகம்
வந்தெய்ய மாட்டாதே வைகுண்ட மிப்போது
என்றுதன்மர் தேறி இருந்து தகையாறி

அன்றுதம்பி வீமனுக்கு அருகாகத் தானிருந்து
செய்யுங் கருமமெல்லாம் சீக்கிரமாய்த் தான்முடித்து
உய்யும் பொருள்நமக்கு உலகளந்தார் தானெனவே
சிந்தை தனிலெண்ணித் திருமாலைத் தானினைந்து
சந்தையமாம் வாழ்விதென்று தானடந்தார் அம்மானை

நடந்து வனத்தோடே ராமனே தஞ்சமென்று
கடந்து வெகுதூரம் கைவிட்ட சூத்திரம்போல்
வகைக்குவகை ஈதெனவே வகைசொல்லுந் தம்பியரே!

விட்டுப் பிரிந்து வெறிகொண்ட பித்தரைப்போல்
தட்டுப்பட்டு நின்றலையுந் தாயில்லாக் குஞ்சரம்போல்
முன்னேவல் செய்து முன்னே வழிகூட்டும்
பின்னேவல் செய்யும் பிறவியளைக் காணாமல்

மானத்தைப் பார்த்து மயங்கி வழிதிகைத்து
கானகத்தைப் பார்த்துக் கவலை பெரிதாகி
இறகுதிர்த்த ஈசலைப்போல் ஏங்கி மனந்தளர்ந்து
பிறவி மயக்கம் விறுமையது தான்பிடித்து

வாசமுள்ள தன்மருக்கும் வந்துவகை முடியபின்
நேசம் மறந்து நினவு தடுமாறியொரு
மெய்மறந்து காலசந்து வேறுபட்ட மானதுபோல்
கைமறந்து காலசந்து கண்ணூரண்டு மாசடைய

நாடிழந்து மிந்த நடுக்கம் பிடியாமல்
சோடிழந்து நின்று துயரமே தான்பிடித்து
நல்லறிவு குன்றி ஞான மிருளடைந்து
புல்லறிவு வந்து புலம்புவார் தன்மருமே !

**கொச்சகம்**

அந்திரமே யேகவெளி அம்பரமே அங்கவர்கள்
சந்திரனே சூரியனே தம்பிமார் நால்வருந்தான்
இந்திரனே இறையவனே எந்தவழி வந்தார்சொல்
செந்திருமால் வைகுண்டஞ் சேர்ந்தாரோ சேரலையே !

பாரே பெருவரையே பனிமலையே செண்பகஞ்சேர்
மேரே பரிமளமே மேதினியில் கானகமே
சீரே சிறந்து பொங்கும் சிந்துநதி வாவிகளே
நேரே எனக்கிளைய நெடு வீமன்வரக் காணீரோ !

நாகமே நீள்சாரை அருச்சுனர்க்கு மாவிரியா
பூகமே வானரமே போற்றுஞ்சிறு புள்ளினமே
கானகமே மேகவர்ணர் கண்ணருடன் வைகுண்டத்துக்
கேகவே வீம னிங்கேவரக் காணீரோ (வரிசரியில்லை)

நாக்கரசே கோவே நாகவல்லி பூகவல்லி
நோக்கரிய மூங்கில்களே நூதனமாய் இங்கேயொரு
போக்கரிய வில்லிபுர தானார தானருளும்
ஆர்க்கு மிகுந்தழகன் அருச்சுனரைக் காணீரோ

காட்டுப் புலியே கரடிபன்றி யாளியளே
கேட்ட திகிரிமதக் குஞ்சரமே இப்போது
நாட்டு பரிநகுலன் நாரணரைத் தான்தேடி
மேட்டுக் கிரியேறி விரைந்து வரக் காணீரோ !

ஆடும் மயிலினங்காள் அன்னங்காள் குஞ்சரங்காள்
நீலவண்ணர் தாமிருக்கும் நேச மறிந்த பின்பு
வீடுவை குண்டமென்ற வேத சகாதேவன்
ஓடுவது மிங்கெனக்கு உண்மையாய்ச் சொல்லுவீரே !

ஏதறியேன் யானும் இடமும் வலமறியேன்
தீதறியேன் பொய்யுரையேன் திருவுளமே அல்லாமல்
சூதறியேன் வஞ்சத் துடுக்கறியேன் நீயறிவாய்
மாதுரையும் மார்பாநின் வைகுண்டந் தாருமய்யா

வைகுண்டம் வைகுண்டம் வைகுண்ட மெந்தனக்கு
வைகுண்ட மேகெதியாய் வரவும் வரந்தருவாய்
வைகுண்ட மென்றொருக்கால் வாயினால் தானுரைத்தால்
வைகுண்ட மேபெறும் மாலருள் செய்வாயே !

### விருத்தம்

வழியுந் திசையுந் தீகைத்தென்றே வழிதா னறியத் தெரியாமல்
விழிநீர் சொரிய மெய்சோர விட்டாய் வெட்ட வெளிதனிலே
இளையோர் பிரிந்த நாள்முதலாய் எளியேன் மனது தெளியாமல்
அழியா திருக்கும் பெரியோனே அடியேன் மலையா தருள்செய்வாயே

என்னைப் பிரியா திருந்தார்கள் எங்கே எங்கே வந்தார்பார்
உன்னைப் பிரியா நானிருந்தும் உலையில் மெழுகது போலுருகி
தன்னைப் பிரியா தலைவேனோ தடுத்தாட் கொண்டு வைகுண்டம்
பின்னைப் பதவி எனக்கீருள் பிரியா திருப்பார்க் கருள்வாயே

தாரு மெனக்குச் சீர்பாதம் தனியே வழியில் மலையாமல்
வாரு மெனக்குத் துணையாக வந்தா ரென்று துயர்தீரும்
ஆரு மெனக்குத் துணையில்லை அடியேன் ஒருத்தன் ஆனதினால்
காரு முனது பதஞ்சேரக் கண்பார் நந்த கோபாலா.

நடை

பெருமயக்க மில்லையிங்கே பூமி மயக்கமில்லை
அருள்மயக்க மில்லை அரியதவத் தாசையில்லை
இருள்மயக்க மாய்கை இப்போஏதுந் தெரியாமல்
மருள்மயக்கம் கொண்டு மனது மிகவுழன்று

பித்தனைப் போலாகிப் பிரமை பிடித்தழன்று
அத்த நெடுமால் அரியவை குண்டமதை
நோக்கி வரும்போது நொந்துமனம் புண்ணாகி
தாகத்தி வருவினைக்குத் தம்பிமா ரில்லாமல்

தனியே வழிநடந்து தானங் கொருவனுமாய்
இனியார் நமக்கு எம்பெருமாள் உண்டெனவே
கங்குல்தனி லாலநிழலில் கையே தலையணையாய்
தங்கியே கண்துயின்றார் தன்மருந்தா னம்மானை !

சந்துலவு மன்னவனைத் தானிரையா மென்றுசொல்லி
அய்ந்தலை நாகமது அழுந்தவே தான்விழுங்க
ஆலிலைமேல் துயில்கின்ற அச்சுதநா ராயணனார்
தலைநா ளுரைத்தமொழி தப்பாமல் சக்கரமும்

பத்துமொரு நால்வர் மடிந்ததற்பின் தன்மருந்தான்
பத்துடனே காத்துப் பரிவான சக்கரமும்
வடவாலின் கண்துயிலும் மன்னவனைக் காணாமல்
அடவாக நாகமதை அறுத்ததுவே சக்கரமும்

அரவந் தனைப்பிளந்து அடிவயத்தி லுள்ளிருந்து
தன்மர் தனையெடுத்துச் சாந்தமாய் ஆல்நிழலில்
துலுங்காம லேகிடத்தித் தூரநின்றான் சக்கரமும்
அலுங்காமல் தன்மர் அசதிவெகு நித்திரையாய்

புத்தரவு முண்டதுவும் பூலோகச் சக்கரந்தான்
அந்தரவை ரெண்டாய் அறுத்தெறிந்து போட்டதும்
சற்று மறியாமல் தன்மருங் கண்துயின்றார்
நித்திரையுங் கொண்டு நிருபன் எழுந்திருந்தான்

ஆரறிவால் போலே அண்ணர் தனைநோக்கி
ஊர்க்கமதாய்ப் பாதை ஒருவனுமாய்த் தானடந்து
கல்லுங் காடுங் கடிய வனாந்திரமும்
அல்லும் பகலும் அவசரமாய் வழிநடந்து

திகைத்து மலைத்து திசைகெட்ட மானதுபோல்
தகைத்துத் தனியே தவிப்பாய் இளைப்பாறி
பேச்சுத் துணையும் பின்துணையு மில்லாமல்
மூச்சுவிடச் சற்றும் உத்ததுணை இல்லாமல்

பக்கத் துணையுமற்றுப் பரதேசி போலாகி
துக்கம் சுகம்ரெண்டுமத்துத் துலைதூரம் தானடந்தார்
உன்னி நடந்துதன்மர் ஒன்பதுயோ சினைதூரம்
கன்னி மலைகடந்து கடியவனம் தான்கடந்து

வருணன் மலைகடந்து வாயுமலை தான்கடந்து
தருண நதிகடந்து தவளமலை தான்கடந்து
மிக்கதொரு பொய்கை மிகுந்தே யெருக்குடைய
உத்தரணி கொண்டு புனலாடிப் பூசைபண்ணி

வீமன் விசயனுக்கும் விர்தை நகுலனுக்கும்
தாமன் சகாதேவனுக்கும் தற்பணமுந் சாத்திரமும்
சொல்லி முடித்துச் சூரியனைத் தெண்டனிட்டு
நாலுதம்பி மார்க்கும் நாரணரே உண்டெனவே

தன்துயரந் தீராமல் தனியே வனத்தூடே
என்துயர் தீர எத்தனைநாள் செல்லுமென்று
சிந்தை தனிலெண்ணிச் சிவனே சிவாயமென்று
விந்தையது பாருலகில் மேகவண்ணர் தன்கூத்து

பார்க்கும் பொழுது பலவிதமாய் மாய்கைகளாய்த்
தீர்க்க முடன்தோன்ற தெளிந்துதன்மர் அப்பாலும்
மார்க்கமுடன் செல்லும் வழிதனிலே ஓர்மலைதான்
ஆர்க்கும் புகலரிதாய் அண்ட கிடாகமட்டும்

ஓங்கி வளர்ந்துநின்ற உன்னிதத்தைக் கண்டவுடன்
ஏங்கி மலைத்துநின்று இதுக்குவகை ஏதெனவே
நாலுதிக்கு மோடிநின்று நன்றாக ஆராய்ந்து
காலுக்கெட்டு தூரமெல்லாம் கடவுசற்று மில்லாமல்

வெம்பி உழன்று மெய்மறந்து தன்மருந்தான்
தம்பியரில் லாதிடத்தே தாழ்வுவந்து தென்றுசொல்லி
என்செய்வேன் கோபாலா எவரிடத்தி லேயுரைப்பேன்
முன்செய்த தீவினையே மூதாக்கள் செய்ததுவோ

ஏது மயக்கமினி என்செய்வேன் அந்தரத்தில்
வாது மயக்க மதிமயக்கம் மால்மயக்கம்
சூது திருமால் சோதினையோ இம்மயக்கம்
இப்படியோ என்னை இடருபண்ணிப் பார்ப்பதுவும்

அப்படி யும்மா லடியேன் மலைவேனோ
கண்ணா வுனக்கபயம் அருகே ஒருவரில்லை
அனந்த சயனத்தானே அபய முனக்கபயம்
வனந்தனிலே வந்த வழிமயக்கந் தான்தீர்க்கும்

அபயமென்ற சத்தம் அச்சுதர்க்குக் கேட்டிலையோ
உபயகர சக்கரந்தான் ஒளித்தோடிப் போனதுவோ
சங்குத்தொனி பண்ணுறது சமையமுனக்குத் தானிலையோ
மங்கு மதிமயக்கம் வந்துதோ மாயோனே

ஆயிரம் நாமம் அசந்துதோ என்னாலே
பாயிரமாம் பாயலிலே பள்ளிகொள்ளப் போனீரோ
உன்சித்த மென்று உம்மைநம்பி வந்திடத்தில்
என்சத்தங் கேளாமல் இருந்ததென்ன மாயோனே

தம்பியரு மாண்டு தட்டழிந்து நான்தானும்
சம்பி முகம்வாடித் தவிப்ப தறியீரோ
நம்பினேன் உம்மையென்று நான்வரவும் நீர்தானும்
வம்புசெய்து மென்னை மயக்குவிக்க லாமோதான்

மனதுத் திடமறிய வழிமயக்கி இப்போது
தனதுக் குரிய சமத்தறிய வேணுமென்று
சித்தமே அல்லாது செய்வதுவே றில்லையென்று
சுத்தமாய்த் தன்மர் தோத்திரங்கள் பண்ணியபின்

காத்திருந்த சக்கரமும் கண்ணருட ஏவலினால்
பேத்தெடுத்து மாமலையைப் பெருங்கடலில் போட்டதுவே
ஏக வெளியாகி இடையூறு நீங்கியபின்
போக வழிகண்டு பூரித்து மனமகிழ்ந்து

வேகமுடன் தான்தர்மர் விரைந்து வெளிகடந்து
தாகமுட னாற்காதந் தாண்டியே அப்பாலுற
அஞ்சன மாமலையை அதிலுள்ள குண்டுகளும்
கஞ்சமலர் வாவிகளும் கண்டு புனலாடி

மஞ்சுலவுஞ் சோலை வனமும் பலகடந்து
பஞ்சு மலநீங்கும் பாரமலை தான்நடந்து
சென்றார் வழியூடே சீரான கானகத்தில்
நின்றார் திகைத்து நெடுமாலே எனக்கூற

கானகத்தில் வாழுங் கடியபுரு ஷாமிருகம்
கேட்டவுடன் வந்து கிருபையுடன் தன்மரையும்
ஆராவர் தானென்று அறிவுடனே தான்கேழ்க்க
நீரே இனிக்கேளும் நீதியுடன் சொல்லுகிறேன்

அத்தி புரிநாட்டில் ஆனதொரு பாண்டுமன்னன்
புத்திரன் தன்மர் புண்ணியரே நீர்கேளும்
காசினியில் காலம் கலியுகமும் வந்திடவே
தோசிக் கலியன் தொடராமல் நாங்களுந்தான்

பாஞ்சாலி தானும் பஞ்சவர்கள் நாங்களுந்தான்
வந்தோம் வனத்தூடே வைகுண்டஞ் சேரவென்று
சந்தோச மாயிருந்து தம்பிமார் துரோபதையும்
மாண்டிறந்து முன்னே வைகுண்டஞ் சேர்ந்தார்கள்

ஆண்டிபோல் நானும் பரதேசி யாகிஇங்கே
தனியாகி நானும் தாமரையில் தண்ணீர்போல்
இனியொருவர் காணாமல் இங்குவா உன்னையுந்தான்
கண்டேன் எனக்குக் கவலை தெளிந்துதென்று

விண்டேன் புருஷா மிருகமது தானுரைக்க1
கேட்டு வலுமிருகம் கிலேசமது உண்டாகி
நாட்டுபுகழ் தன்மரேஉன் ஞாயமதுக் கொப்பாகி
இப்புவியில் காணேன் இங்குவந் தீர்தனியே

ஒப்புடைய வீமன் உயிர்த்துணையே யெந்தனுக்கு
வீம னிறந்ததொரு விசாரமெனக் காறாது
நேமமுட னீர்தாம் நீதீயா மெங்களுக்கு
முன்னாள் வழக்கு மொழிந்த தறியாயோ

இந்நா ளுனைமறந்தால் ஈடேற மாட்டேனே
நீதியுள்ள தன்மரிங்கே நெடுந்தூரம் வந்தீரே
சேதியுன் நானும் சிநேகம் மறவாமல்
வருவேன் துணையாக வைகுண்டம் சேரமட்டும்

குருவே சரணமென்னு கோலியே பின்னாக
வார மிருகமதை வகையுடனே தன்மருந்தான்
தேர்வேந்தன் சிந்தை தெளியுமே ஆதரவாய்
எந்தன் மனந்தேற்றி இத்தூரம் வந்தீரே

சந்தோச மாச்சுதிப்போ தாயேநீ போவெனவே
தன்ம ரிவையுரைக்கத் தனிமிருக மேதுசொல்லும்
இன்மைதனில் வைகுண்டம் எவர்சேர்ந்தா ரிவ்வுலகில்
நன்மை தின்மைரெண்டும் நாட்டில் அனுபவித்து

சென்மங் கரையேற செய்வார்கள் தானதர்மம்
கைகண்ட தோர்பலன்தான் காவலனே யான்தாரேன்
அரசு பதிலோகம் அடங்கலுமே உண்டாக
விரசு முடிசூடி வேந்தரைப் போலிருக்க

---

1. தர்மருரைக்க

வைக்கிறே னுன்னை மன்னவரே காணிரென்று
தக்க புருஷா மிருகமது தானுரைக்க
நல்லதென்று தன்மர் நகைத்தேது செப்பலுற்றார்
அல்லவே எந்தனுக்கு அன்பாக வேஉரைத்தீர்

செல்ல வைகுண்டம் சேரவென்று யான்போறேன்
நில்லென்று சொல்லி நிறுத்துவதும் ஞாயமல்ல
தம்பியர் தான்மாண்ட சலிப்பொன்றும் பாராமல்
நம்பி யெனையரசு நாட்டுகிறோ மென்றாயே

நந்த கோபால நரசிங்க ரூபனையே
எந்தவித மானாலும் இதவாக வேநடந்து
விஷ்ணு பதஞ்சேர்ந்து மெய்மகிழ்ந்து யான்தினமும்
கிஷ்ணஅவ தாரமுடன் கிலேசமெல்லாம் தானுரைத்து

பாதம் பணிந்து பரிவுடனே போற்றிசெய்து
நீதமுட னென்னை நீயனுப்ப வேணுமென்று
புருஷா மிருகமுடன் போதயாய்ச் சொன்னவுடன்
புருச முடன்மகிழ்ந்து பூரித்துத் தன்மரையும்

பாங்காகப் பின்தொடர்ந்து பாதை வழிகூடி
நீங்காமல் பாதை நெறியாய் வழிகூடி
ஸ்ரீராமர் வைகுண்டஞ் சேர்ந்திடுவீ ரென்றுசொல்லி
பேராமல் மாமிருகம் பிரியமுடன் தான்தழுவி

போமென்று சொல்லிப் புருஷா மிருகமது
தான்மேவும் வைகுண்டம் தானுமக்குத் தூரமில்லை
மெத்தச் சமீபமினி விசாரமொன்றும் வேண்டாங்காண்
கத்தருட சீர்பாதங் காணீ ரெனவுரைத்து

அனுப்பியே புருஷாமிருகம் அருங்கானில் போனதுவே
தனுப்போலுந் தன்மர் தனுகாம லேநடந்து
அரிய திருமாலே அருகாக என்னுடனே
பிரியாமல் நேரே பின்னே துணையாக

வரவேணு மய்யா வைகுண்ட வாசகனே
தரவேணுஞ் சீர்பாதந் தாருமென்று தன்மர்சொல்லி
நடந்தார் திசைநோக்கி நாற்பத்தெண் காதவழி
நடந்தார் வெகுதூரம் கண்ணரே தஞ்சமென்று

கங்கா தரன்காண் காளகண்ட நாதனென்று
சங்கரனார் தாமுறையும் சத்திசித்தி மாமலையும்
அன்பு திரிகோண மலையருகே வந்துநின்று
என்புருக வென்று இறையோனை நெஞ்சில் வைத்து

விருத்தம்

ஆசை இருந்த பொய்க்கூட்டை அடருங் காமப் பொக்கிஷத்தை
ஓசை இருந்த துருத்திதன்னை உடைந்து வழியுங் கிருமிதன்னை
வாச மிருந்த சலமலத்தை மருவி யடியேன் இத்தூரம்
பாச மொழிந்த பருஞ்சுமையைப் பார்த்தே செலுத்த வருவேனே

எல்லா முனது செயலாக யேக வெளியே தாயகமாய்
நில்லா நிலையில் நின்றோனே நினவு நடுவே அசையாமல்
அல்லா லொருவ னுண்டெனவே அடியேன் மனதி லனுதினமும்
சொல்லால் பெருமை தனையுடைய சுமையோ டவடம் பெறுவாரோ

பிறவித் துணையுந் தனையிழந்து பேய்போல் தனியே கானகத்தில்
அறவே மனது தடுமாறி அடியேன் தெளியா துழன்று
நேடுந் தனியே பொருளென்வே சிவனே உந்தன் கிருபையினால்
உறவாம் பெரிய வைகுண்டம் உடனே அவிடஞ் சேர்வேனோ

ஒன்றாய் இரண்டாய் மூன்றாகி ஓரஞ் செழுத்தாய் உயிர்பலவாய்
நின்றாய் அகண்ட வெளிதானாய் நித்த சுத்த படிகமதாய்
நின்றாய் ஒளிக்கோரொளியாகி நடனம் புரிந்த சிவசிவனே
என்றா லடியேற் கிரங்கியே இப்போ இறைவாஎன்றால் வருவாயே

கோலத் துடனே அடியேனும் குருநாடு தன்னை விட்டேகி
ஞாலத் துடைய துயரமெல்லாம் நன்றாய்க் களைந்து வழிதோணும்
தாலத் துடனே வைகுண்டம் சேர்க்க பதவி தான்சேர
ஆலத் துடையாய் துணைசெய்வாய் அரனே சரணம் சரணமய்யா

திரிகோண மலையருகே தானிருந்து சேர்ந்தேன் ஒழுகுந் திரைமுழ்கி
சிவனே எனத்தொழுது நொந்தேன் திகைத்து வ தேடி நோம்புவிரதம்
மறவாமல் உன்தாள் சரணம் உதவி யிப்போ
உதவி யெனக்குத் தருவாயே

(பாடல் சரியில்லை)

மாரனை விழித்த கண்ணும் மான்மழு தரித்த கையும்
வீரனைப் புரந்த வாகும் விடமிசை யிருந்த காலால்
கோரனை உதைத்த தாளும் குஞ்சர முரித்துப் போர்த்தி
சீரினைத் தெரிய வந்தான் சிவசிவா நமசி வாயம்

என்று மழியாப் பொருளாகி இகமும் பரமுந் தானாகி
அன்று முதலா இன்றளவும் அளவாய் அளக்கத் தீர்த்தமதாய்
நின்றும் நெடிய புவனமெல்லாம் நீயாய் இருந்த பரஞ்சுடரே
என்று மறியேன் உமைபாகா உடையா ருடைய படிகாரும்

காசினி தன்னில் வாழ்ந்து கர்மமே மிகவும் செய்து
பந்திநீர் போல யானும் பாரைவிட் டகன்று செல்வேன்
தேசிக னாகி இந்த சடத்தைச் சுமந்து கொண்டு
வாசினை யுடனே யுந்தன் மலரடி பெறுக வாரேன்

மாயனார் வாழு கின்ற வைகுண்டந் தன்னி லென்னை
ஆயனோ டருகி ருக்க அருளிய கிடாச்சந் தாரும்
தூயனே நமசி வாயச் சோதியே அனாதி மூலம்
நாயனே துணைய தாக நடத்துவாய் நமசி வாயம்

நடை

தொழுது வணங்கித் துதித்த வுடனரனார்
முழுது மனமகிழ்ந்து முன்னின்றார் அம்மானை!

சம்புசிவ ருத்திரனார் தன்மலையில் தீர்த்தமெல்லாம்
தூண்டுமணி ரத்தினகிரிச் சுனையில் புனலாடி
வேண்டுங் கயிலையெனும் வெள்ளிமலைக் கப்பாலும்
ஆரியனார் தன்மலையும் அகண்ட திருப்பதியும்

கூறியதோர் வாளகிரி கொடுமுடியுந் தான்கடந்து
கால்கடிய வேகங் கடுவேக மாய்நடந்து
பால்வடிவு மேனிப் பரஞ்சுடரைத் தானினைந்து
எண்பத் திருகாதம் யேப்பறவே தானடந்து

பண்போற்றும் நேசம் பசுந்துளப மேனியைப்போல்
ஆசைகொண்டு தன்மர் அநேக நெடுந்தூரம்
பாசை பலபேசி பலமிருகம் பட்சியொடு
பேசி நடந்து பெருந்துயரந் தான்தீர்ந்து

தேசிகன்போல் வந்தவரைச் சிவலோகப் பட்சியுமே
இத்துயரத் தோடும் இங்கேவந்தீ ராரெனவே
அத்துயரங் கேட்டு அரியபட்சி தன்னுடனே
இப்புவியி லத்திபுரம் இயலான தன்மரென்பேர்

மெய்யுடைய தம்பியரை விட்டுப் பிரிந்தமையால்
வைகுண்ட வாழ்பதிக்கு வழியறிய மாட்டாமல்
மெய்தளர்ந்து யானும் விசாரமாய் வந்தேன்காண்
தளர்ந்த மனந்தேற்றிச் சலியா திருவெனவே

வளர்ந்தநெடு மால்பதத்தை மனதிலெண்ணிச் செல்லுமென்று
புள்ளதுவுஞ் சொல்லிப் பூரணமாய் உள்மகிழ்ந்து
வள்ளல்திரு வைகுண்டம் மன்னவனே தூரமிலை
கிட்டவது தூரமல்ல கேதாரஞ் சற்றிடங்காண்

சட்டமுடன் தன்மரேநீர் சலியாம லேநடந்து
போமென்று சொல்லிப் பூரித் தகமகிழ்ந்து
நாமெங் கிருந்தாலும் நமக்குநீ யுண்டெனவே
எண்ணி இருப்போங்காண் என்னுடைய புள்ளரசே

புண்ணியரே போமெனவே போகலுற்றார் தன்மரூமே
தன்மர்தனைப் பட்சியுமே தானனுப்பிப் போனபின்பு
மின்மருவுஞ் சோலை வெகுவனமுந் தான்கடந்து
இப்பால் வெகுதூரம் எய்யாம லேநடந்து

அப்பா லிருக்கின்ற அந்த வனந்தனிலே
கிஷ்ணபட்சி யென்னும் கிரணப்பிர காசமதாய்
நீதமுட னங்கிருந்து நீரா ரெனக் கேட்க
சாதுபயில் தன்மராசர் சாத்துவா ருள்ளதெல்லாம்

ஓதும் வயனமெல்லாம் உண்மையாய்க் கேட்டிருந்து
எல்லாங் களித்துமிங்கே இத்தூரம் வந்துவிட்டீர்
பொல்லாங் கினியுனக்கு போச்சுதுகா ணச்சமில்லை
அடுத்தீர் வைகுண்டம் அன்பான தன்மரேநீர்

தொடுத்தீர் பிடித்தீர் துயரமெல்லாந் தான்தீர
எடுத்தீர் தவமுழுதும் ஏகுவதும் வைகுண்டம்
கொடுத்தீர் முதலழிந்தீர் கோபாலர் உண்டெனவே
தன்மம் பலித்ததுகாண் தன்மரே உந்தனக்கு

கன்மமெல்லாம் போயகல கண்ணற்பதம் வந்துதுகாண்
சேமமுடன் வைகுண்டம் சேருவீர் பயமறவே
இம்மை தனிலுங்போல் இப்புவியி லாருமில்லை
ஏரார்ந்த பட்சி எடுத்துமிகச் சொல்லியபின்

நின்றநந் தன்மர் நீயா ரெனக்கேழ்க்க
ஈச னடியார்தா னீசுபரியே தான்வளர்த்த
வாசமுள்ள கிள்ளைதன்னை[1] வதைசெய்தே குகையினால்
கோபமுடன் மாதாவும் கூறியபுள் ளாவையென்றான்

சோபமுடன் சாபமெனச் சூழ்ந்துதென்ற பட்சியுந்தான்
அந்தக் கயிலைவிட்டு அகன்றுநா னிப்போது
இந்தப்படி வைகுண்டம் வீதிவழி யேகிவந்தேன்
செங்கண்ணெடு மாலுடைய திருக்கோல முள்ளதெல்லாம்

பொங்கமுடன் சொல்லிப் பூங்கா வனந்தனிலே
இங்கிருக்கும் பொய்கைதான் என்னதுகாண் மன்னவரே
இந்தத் தலத்தி லினிய தவமிருந்தால்
எந்தப் பலனு எய்திடுங்கா ணிப்போதும்

---

1. கிளி

தாக முடனிருந்தால் தவமும் தவப்பயனும்
மேக வண்ணர்தமை விரைந்துதா னிங்கழைத்து
மவுலி தரித்து மகுட்முடி தான்சூட்டி
பவுரிக மாயுன்னைப் பாராள வைப்பேன்காண்

அரசர் மடந்தையரும் அரம்பையரு முந்தனக்கு
விரசுடனே ஏவல்செய்ய மேவலால் பண்ணிவைப்பேன்
முரசுடைய புன்னா முடிசூடு மென்றுரைக்க
பகருமொரு பட்சியுமே பார்த்துமிகத் தன்மருமே

செகதல முண்டான சேனை தனைநினைந்து
தாரணிமே லாசைவிட்டுச் சற்றுமன மில்லாமல்
ஆரணனார் வைகுண்டம் அடையவென்று போகையிலே
பின்னாசை யற்றுப் பேசுவரோ புள்ளரசே

என்னாசை யானாலும் இனிமேலும் எள்ளளவும்
இல்லைஇங்கே சற்றும் என்மனதுக் கேறாது
கல்லையுரு வாக்கிவைத்த காரணரே உண்டெனவே
பகரு மொழிகேட்டுப் புள்ளரசு மப்போது

இகலுடைய வேந்தோ எந்தன்மொழி நீர்கேளீர்
ஆதிதிரு மாலுடைய அன்பன்காண் நீர்தாமும்
நீதியுடன் தம்பியரை நீநினைந்தால் காரியமோ
வென்றும் நினவும் விசாரமது தானுமன்றி

கூறு மொருநினவு கோவிந்தா வென்றுசொல்லி
பார்த்திபரே தம்பியர்மேல் பாசந் தனையகற்றி
ஏத்தியே மால்பதத்தை இறைஞ்சுமென்றார் அம்மானை

தேறிய முன்னாளி லுன்வினையு மும்மாலே
வேதா விதியை விலக்குவரோ பாருலகில்
என்றுபுள்ளுஞ் சொல்ல இன்பமுடன் தற்மருமே
ஒன்று மறியாமல் உரைத்தீரே புள்ளரசே
ஓங்குபஞ்ச பூதம் ஒன்றோடொன்று கூடாமல்

தூங்கும் மயக்கமென்னுந் துயர்க்கடலி லேவிழுந்து
அழுந்து வினையகற்று மச்சுதனே அல்லாமல்
தொழுந்த தமையார்க்குந் தோத்துமோ புள்ளரசே
என்றுதன்மர் சொல்ல இயலான பட்சியுந்தான்

நன்றுகாண் தன்மரென்று நவின்றேகிப் போனதுவே
பட்சியு மப்பால் பறந்தேகிப் போனவுடன்
அன்றவ் விடம்விட்டு அநேக நெடுந்தூரம்
மன்றலருஞ் செண்பகக் காவனமும் மிகக்கடந்து

திரிகோண மாமலைமேல் சென்றங் கிதவாக
நாகபில மென்னும் திருக்காத்து மாமலையும்
பார்த்து மனமகிழ்ந்து பாலாறு தன்னில்வந்து
சாத்து முருநாலும் சதுர்வேத மாமலையும்

தாராருந் தன்மர் தயவாய் மனமகிழ்ந்து
நீராரும் பாரையின்மேல் சென்றிருந்தார் அம்மானை.

பரிய மலைதன்னில் பன்றியொன்று தான்வரவே
கரிய திருமாலைக் கண்டீரோ பன்றியென்றார்
இவனா ரெனவே ஏதொன்றும் பேசாமல்
கவனமது வேறாகிக் காட்டகத்தி லோடியதாம்

ஓடுமொரு பன்றிதன்னை உத்தமனே போமெனவே
நாடி யொருநினவாய் நடந்தாரவ் வழிகூடி
புலிகரடி யாளிசிங்கம் பேரானை மற்றுமுள்ள
நலிவுகண்டு மண்மேல் நடக்கலுற்றா ரம்மானை.

சேனை யுடைய செகவேந்தர் காத்திருக்க
தானையார் வந்து கண்டார்காண் அம்மானை

ஆதவனுஞ் சென்று அடைந்தவுடன் வல்லிருளில்
போத முடன்தன்மர் பூமியே மெத்தையென
நேமமுடன் கானகத்தில் நெடுமால் துணையெனவே
தாமியல்பாய்க் கண்துயின்றார் தன்மருமே தானசந்து

அங்கே பிரீதி அருண உதையமதாய்
பங்கயம் போலாகிப் பருதிவந்து தோன்றியபின்
வெண்மையுடனே யெழுந்து வேகவதி யாறுதன்னில்
செம்மையுடன் புழுக்கரணி தீர்த்தமே ஆடுதேற்கு

செந்திருவை யொப்பான தெய்வ மடந்தையர்கள்
அந்தந்த தீர்த்த மாடலுற்றார் அம்மானை !

நீராடி கன்னியர்கள் நீள்கரையில் தானேறி
சீராடித் துயிலுடுத்தி சிகையாத்தி யேமுடித்து
பூசையளுந் தான்முடித்து புஷ்ப மலர்தரித்து
தாப முடனிருக்கத் தான்கண்டார் கன்னியர்கள்

பூவுலகில் மன்னன் பொய்கைக் கரையேறி
காவுதனில் வந்திருந்த காரணந்தான் ஏதெனவே
வந்தருகில் நின்று மாதரெல்லாந் தான்கூடி
இந்த வனத்திலே இத்தூரம் வந்ததென்ன

என்றுரைக்கக் கன்னியர்கள் ஈதுரைக்கத் தன்மருமே
மன்றுலகில் யானும் வாசமுள்ள தம்பியரும்
இருந்துலகில் காலம் எல்லாமும் விட்டிழந்து
திருந்துமொரு வைகுண்டம் சேரவென்று வந்திடத்தில்

மடிந்தார்கள் தம்பியர்கள் வனத்திலே நால்வருமே
இடைந்து மனமிடைந்து இங்குவந்தே னானொருவன்
வழியறியேன் நானும் மற்றும் திசையறியேன்
வெளியே தனியாக வேத்துமுக மாகவந்து

களிகூரக் கண்டேன் கன்னியரே உங்களைநான்
தெளிவாச்சு எந்தனக்குத் தெள்ளமுர்தே இப்போது
உங்களைநான் கண்டவுடன் உத்த துணையெனவே
திங்க ளொளியதுபோல் தெரிசித்தேன் கண்டீரே

விந்தமலர் வைகுண்டம் வீடுமே எந்தனக்கு
எந்தநா ளோஅறியேன் எத்தனைநாள் செல்லுமதோ
மாதாக்கள் எந்தனக்கு வழிதானும் நீங்களுமே
ஆதரவாய்ச் சொல்லி அனுப்புமென்றார் அம்மானை.

அந்த மொழிகேட்டு அரம்பையர்க ளன்னேரம்
விந்தமது கேடி விரைந்துவந்தீர் தர்மரேநீர்
அதிலும் பதிமடங்கு அரசனே உந்தனக்கு
சதிரும் பதியுஞ் சர்ப்பத்து வானுலகில்

உம்மை முடிசூட்டி உமக்கேவல் செய்துதிப்போம்
நம்மையுடன் எங்களைநீர் நம்பியே வாருமென்று
கன்னியர்கள் சொல்லக் கருத்துடனே தன்மருமே
மன்னியதோர் பெண்ணரசே மண்ணாசை இல்லையின'

உண்மையாய்ச் செல்லுகிறேன் உத்த தருமமொன்று
தன்மையாய் எந்நாளும் தற்காத்து நின்றதொரு
அச்சுதனார் பாதமல்லால் ஆசைவே றில்லையென்று
நச்சு விழிமாதே நடவுமென்று தானுரைத்தார்

வேந்த னிவைசொல்ல விரைந்துதான் கன்னியர்கள்
சந்தமுடன் கானகத்தில் தானடைந்தார் அம்மானை.

தெய்வகன்னி மாரும் திசைநோக்கிப் போனவுடன்
ஆவ லுடன்தன்மர் ஆயன் பதிநோக்கி
மனோமன சாட்சியதாய் வளருந் திருமாலே
ஆதிப் பொருளான அதிகமகா மூலமதை

வஞ்சியெனு மின்னாள் மாலுமகா லட்சுமியை
நெஞ்சி லனுதினமும் நீங்காமல் வைத்தருளும்
நீலவண்ணர் தம்மை நினைந்து வெகுதூரம்
சீலமுட னோமகிரி சிகரமது தான்தெரிந்து

அங்குமுள்ள தீர்த்தமது ஆடிக் கரையேறி
துங்க முடிவேந்தன் தொண்ணூற்று காதவழி

கடந்தங் கொருவனுமாய் கங்கைமலர் தானேகி
சென்றுகங்கை நீராடி சிவபூசை தான்முடித்து
குன்று மலைகடந்து கோவிந்தா வென்று சொல்லி
கேசவனைத் தேடிக் கிருபையுள்ள தன்மருந்தான்

ராசகோ பாலர் திருநாமமிகு பூங்கருவ
ஆறு தனில்வந்து ஆழமீது தானெனவே
வேறுவழி யெங்கும் விசாரித்துக் காணாமல்
நின்று திகைத்து நெடுமாலைத் தானினைந்து
ஒன்று முரையாமல் உன்னமனம் புண்ணாகி

## விருத்தம்

ஆழியுந் திசையுங் கண்டேன் அக்கரை கடக்க வென்றால்
நீராறு தன்னை இப்போ நீஞ்சவு மாட்டேன் இப்போ
வாளியோர் வீம னில்லை மத்துள்ள தம்பி யில்லை
சூளிய துணையு மில்லை அந்தரா நந்த கோபாலா !

அக்கமும் நீயே யெந்தன் ஆத்துமம் தேகம் நீயே
பக்கமும் நீயே அல்லால் பால்தனை வேறு காணேன்
சிக்கமும் திகையும் நீத்திரை யென்னும் புனலைத் தானே
நீக்கவே நிலத்தோ டொன்று நீயருள் நந்த கோபாலா

வருந்தி உனையே நான்தேடி வரவே வழியில் வெகுமாய்ளக
பொருந்தி மயக்கி மிகப்பதட்டி பொல்லா தெனவே பேராக
திருந்த நினைவில் தானினைந்தால் சிறியேன் அதற்கு ஈடோதான்
அருந்தி உனது பதஞ்சேர அருள்வாய் நந்த கோபாலா

எல்லாப் பாடும் பட்டறிந்தேன் இளையோர் பிரிந்த நாள்முதலாய்
பொல்லாப் பொழிய வேறில்லை பூத்த தயவும் உனக்கில்லை
சொல்லால் பெரிய வைகுண்டம் துரையே உன்னை நாடிவந்தால்
இல்லாப் பகையை எதிர்விடுத்தால் இளையேன் இளையேன்
கோபாலா !

கல்லோ மரமோ துணையெனக்கு காடோ செடியோ துணை
யெனக்கு
அல்லோ பகலோ துணையெனக்கு அகண்ட திருமால் நீயிருந்தால்
வல்லோர் புகழும் பெரியோனே மாயா துணையார் கோபாலா !
(மூன்று வரிகளே உள்ளன)

ஆறுங் குளமும் சிலைபோலே அடருங் கரடி புலிசிங்கம்
ஏறுங் களிறும் பூத்தேனும் இருடை வர்க்காத் தனம்போலே
தூறுங் கடிய இருள்போர்த்த தோண்டி யெதிரே சோர்வுசெய்தால்
தேறுங் கருமம் எந்தவிதம் தெளிவும் திறமும் நீர்தாமே !

நெருடாய் உனது விளையாடல் நேரா யறிவேன் கோலமுதல்
திருடா யுனது திறமறியச் செயலா வுனது தொழிலறிவேன்
வருடார் தனையும் வருடாநீ மாய மாய்வு உபாயமும்நீ
கெருடாள் வாரே உன்சேதி கேட்டே இருப்பேன் கோபாலா !

துடரும் வினையள் துடராமல் துன்பச் சழத்தி லழுந்தாமல்
அடரும் பகைய ளெதிராமல் அருளே பொருளே அடியேற்கு
இடரு மகலத் துணைப்பதத்தை எனது சிரசின்மே லனுதினமும்
படரும் படியாய்க் கிருபைசெய்து பாராய் நந்த கோபாலா !

சீரிய தேவர் போற்றிச் செந்திரு மாலே போற்றி
ஆலிலைத் துயில்வாய் போற்றிப் பாரிய ஆறு தாண்ட
பரிவுடன் பாதை தோன்றக் காரிய மாக வந்தேன்
கண்ணினில் தோன்று வாயே ! (பாடல் சரி இல்லை)

மாமணித் துளப மாலே மார்பினில் இலங்க வெய்யோன்
பூமணி களப மேனி புளகித நளின மாக
நாமணி வயிர முத்து நவமணி புனைந்து மெந்தன்
தாமணிச் சிரமேல் நிற்கும் சச்சிதா நந்த கோபாலா

நடை

நல்ல திருவிருத்தம் நாரணனார் தான்கேட்டு
மெள்ளச் சிரித்து மெய்கலந்து பூரணமாய்

ஆறு தனைப்பார்த்து அமருமென்றார் கோபாலர்
மாறு புனல்சுவறி வழியாகத் தோன்றியதாம்

அந்த வழிகடந்து அப்பாலும் போகையிலே
விந்தை மலர்த்தன்மர் மெய்யறிய வேணுமென்று
நந்தகோ பாலர் நமனை வரவழைத்து
கந்தமருந் தன்மருட கருத்ததனைச் சோதியென்றார்

அந்த மொழிகேட்டு ஆனதொரு மாமறலி
சிந்தை மகிழ்ந்தவருஞ் சீக்கிரமாய்த் தான்மாறி
இளங்குமுடல் வாய்க ளெங்கும் புழுச் சொரிய
சுணங்க[1] னெனும்வடிவாய்த் தோன்றினார் அம்மானை.

வந்துதன்மர் முன்னே வால்தனையே தான்சுருட்டி
நொந்து மனமிடைந்து நோக்கிமுகம் அண்ணாந்து
ஓலமென ஊளையிட்டு ஓடிஓடி யேதிரும்பி
காலடியில் வந்துநின்று காலனெனும் நாய்தானும்

அந்துடலில் புண்தான் அழுகிப் புழுச்சொரிந்து
சேர்ந்துவிட்டேன் மெத்த துன்பவினை தன்னாலே
சாருந் துணையில்லைகாண் சஞ்சலந்தீர்ப் பாருமில்லை
ஆருந் துணையில்லைகாண் ஆதரவு தானுமில்லை

எந்தன் துயர்தீர்க்க இனியாரு மில்லாமல்
உந்த னருகே ஓடிவந்தேன் காருமென்று
இந்தச் சுணங்கள் எடுத்துரைக்கத் தன்மருமே
வாராய் சுணங்கனேநான் வகையுனக்குச் செய்வதென்ன

சீராகச் சொல்லுமென்று செப்பினார் தன்மருமே
சாந்தமுள்ள தன்மரேநீர் தனியொருவ னாகவந்தீர்
நான்துணை யுனக்கு நம்பினேன் உன்பிறகே
வருகுரே னென்னை மனதுவைத்துக் காப்பாய்நீ

அருகே எனைஅழைத்து ஆதரவாய்க் கொண்டுசென்று
நம்பின பேரை நட்டாற்றில் தள்ளாமல்

---

1. நாய்

தம்பிரான் ஆனதொரு தனிமரே லெட்சியென்று
தாழ்ந்து அணங்கள் சஞ்சலமாய் வார்த்தைசொல்ல
அந்தச் சுணங்கனுக்கு அஞ்சலென்று வார்த்தைசொல்லி
மார்க்கமுடன் என்பிறகே வா வென்று தானடந்து

போகயிலே பேராறு பூமிதனி லேபெருக்காய்
ஏத்த வகைகண்டு இவர்கள் மதிமயங்கி
நிற்கு மளவில் நீர்வால்ச் சுணங்கனுந்தான்
அக்கரையி லென்னை அய்யரே கொண்டுசென்று

விட்டுவிடு முந்தனுக்கு வேண்டுஞ் சுகுந்தமுண்டு
கட்டுடனே தன்மர் கருத்தில் மிகமகிழ்ந்து
பேராறு தாண்டவென்று பெருமாள் தனைநினைந்து
தாரேறு தன்மர் தானிறங்கும் ஆறுதன்னில்

வாட்டம் பெற வேசுணங்கன் வாவென் றருகழைத்து
தேட்டமுடன் கையால் சேத்தணைத்துத் தானெடுத்து
மார்பி லணைத்து வயத்தளவு வெள்ளமது
சோர் வறிந்துபார்த்துச் சுணங்கனையுந் தானெடுத்து

வயத்தளவு தண்ணீர் மார்பளவு தான்வரவே
புயத்திலே தானேந்திப் போனார் சுணங்கனையும்
கழுத்தளவு தண்ணீராய்க் கண்டவுடன் தன்மருமே
அழுத்த முடன்சிரசி லன்பாய்ச் சுணங்கனையும்

வைத்துச் சுமக்க வழிந்தொழுக வேகிருமி
மொய்த்து நெளிந்து முகத்து வழியாக
மிருத்த கிருமி வெகுதிரளாய்த் தானூர
முகத்து வழியாக முதுகுநெஞ்சு வாயிலுமே

அள்ளி யெறிவதுபோல் அங்கமெல்லாந் தானெறிய
தள்ளி விடவென்று சற்றுமன மில்லாமல்
அல்ல லறத்தன்மர் ஆத்தில் நடுவாக
செல்லுமள வில்சுணங்கன் செப்பு மொருசேதி

நான்செய்த தீவினையை நல்லவரே நீர்தேளும்
ஊர்சேருங் கோவதையை உண்ணவென்று கொண்டுவிட்டேன்
வேதமறை யோர்தம்மை விரத மழித்துவிட்டேன்
காதலுடன் மங்கையர்தன்னை கற்பை அழித்துவிட்டேன்

நேசமுடன சற்குருவை நிந்தனைகள் செய்துவிட்டேன்
தந்தையாய் மாமன் தமையனுடன் மூத்தோரை
எந்தனுள் ளாக்கி ஏவல்செய்யு மென்றுவிட்டேன்
தூதுசெய்வார் தன்னுடனும் துட்ட ருடன்கூடி

தீதுசெய்யும் பாதகங்கள் செய்துவிட்டே னிப்போது
அழிவழக்குத் தானுரைத்து அரிய மணங்குலைத்து
பழிகொலைகள் செய்துவெகு பாதகங்கள் செய்துவிட்டேன்
செய்தநன்றி கொன்றிருந்தேன் தீவினைகள் செய்துவிட்டேன்

காசினியோர் தங்களுட கட்டை அவிழ்த்துவிட்டேன்
வீதியே கத்திலுள்ள வேள்வி யழித்துவிட்டேன்
அறையி லிருந்தோரை அம்பலமே ஏத்திவிட்டேன்
புறையுடையார் தங்களையும் பொல்லாங்கு செய்துவிட்டேன்

எண்ணரிய பாவமிது எத்தனையோ செய்ததினால்
புண்ணிய ருனமெல்லாம் புழுச் சொரிய உந்தன்மேல்
வைத்துச் சுமக்க வழிந்தொழுக வேசலமும்
சற்றுமனங் கோணாமல் தான்சுமந்து போறதினால்

உமக்குச் சுகுர்தமுண்டு ஒப்புடனே லாபமுண்டு
எனக்கு நரகமுண்டு என்னையுந்தான் நீள்சகத்தில்
போட்டுவிடு முந்தனுக்குப் புண்ணியமும் உண்டாகும்
நாட்டுபுகழ் தன்மரேநீர் நாணமறப் போட்டுவிடும்

பாதகனைப் போட்டு பார்நதியில் தான்மூழ்கி
சாதகமாய் வாசமுள்ள சவ்வாது மிகப் பூசி
துர்க்கந்தம் போக்கி சுகந்தம் மிகபணிந்து
நற்கந்த மாக நடவுமென்றார் அம்மானை

தலைமேல் துரும்பதுபோல் தந்தைமொழி கேளாமல்
பாதகம்நீ செய்தாலும் பழிகொலைகள் செய்தாலும்
ஆதரவாய் உன்னையும்நான் ஆறு கடக்கவிட்டு
போவென்று சொல்லாமல் புல்லறிவு கொண்டுனைநான்

சாவென்று சொல்லித் தளக்குவனோ ஆறுதனில்
வோறொன்றுஞ் சொல்லாமல் வெண்சுணங்கே நீஇரென்று
ஆறொன்று நீஞ்சி அக்கரையில் தானேறி
வந்துநின்று தன்மர் வருந்திச் சுணங்கனுக்கு

நொந்துதோ உன்னுடம்பு ரோமமெல்லாம் புண்ணாச்சோ
வெந்துதோ எந்தன் வெக்கைபட்டு மேனியெல்லாம்
நனைந்துதோ சிந்தை நடுங்கிற்றோ உன்மேனி
என்று சுணங்கனையும் இதவாக இறக்கிவிட்டு

தென்றுசிறு நாய்காலுஞ் செவ்வே பிடித்துருவி
ஆத்தி மிகப்போற்றி அன்பாய் அரவணைத்து
தேத்தி இளைப்பாற்றி தேகமெல்லாந் தான்தடவி
இன்பங் குளுந்துதிப்போ இமதன்ம ராசருக்கு

அன்புடைய மைந்தனுக்கு அழகாகத் தன்வடிவைக்
காட்டி மகிழ்ந்தணைத்துக் கன்னத்தை முத்தமிட்டு
நாட்டிலெந்தன் புத்திரரே நன்மைசெய்தார் தன்மரென்று
கீர்த்தியொன்று புத்திரரே கிடைத்துதுகா ணைந்தனுக்கு

பார்த்திபனே வைகுண்ட பதிதனக்குச் செல்லுமென்று
இமதன்மர் தானும் இமலோகம் போய்ப்புகுந்தார்
நேமமுள்ள தன்மர் நீதியொன்றுந் தப்பாமல்
வீறுடனே இப்பால் விரைந்து வெகுநூரம்

கூறு சிகரக் கொடியென்று மாமலையும்
பாத்துமிந்தி ராணியுட பஞ்சமுத்த பாறை யொன்று
யேத்துமொரு சோடான ரெண்டு மலைகடந்து
மத்துமுள்ள கேணியளும் மலையள் பலகடந்து

உத்த கலமெல்லாம் உண்மையாய்த் தான்பார்த்து
சந்திர கேசமென்னுஞ் சத்தி சிவமலைதான்
இந்திர விமானம்போ லிருக்கு மலங்காரம்
பார்த்துப் பணிந்து பரிவுடனே தானடந்து

சாத்துமொரு மால்தான் தாணிதனில் முன்னாளில்
மண்டலத்தில் மாபலியால் மாய விடைவாங்கி
அண்ட முழுதளந்த அரியோ னவர்பதத்தை
தோத்திரங்கள் பண்ணித் துதித்து மிகப்பணிந்து

ஏத்தி இருந்தானை இருதயத்தி லேநினைந்து
கீதம் பயிலுமிந்தக் கேதார மாமலையும்
ஓதுமொரு முப்பது யோசினை தூரமென்ன
வளந்திருக்கு மந்த வடவால விருட்சமதில்

தாழ்ந்து மிகத்தவழ்ந்து தன்மருமே வந்திருந்தார்
இருத்து தவிப்பாறி எழுந்திருந்து தான்பார்த்து
பொருந்து மிடமும் பொருப்பு மிகக்கடந்து
செவ்வையொத்த கானகமும் சீர்மலையுந் தான்கடந்து

கொவ்வை படர்ந்தமலை கோபுரமுந் தான்கடந்து
தோத்துதிருக் கேதாரம் சோதிமலை கண்டதின்பின்
போத்தியே அப்பதியில் புகுந்திருந்தா ரம்மானை.

மேடைகளும் மண்டபமும் வெற்றிச் சிகரமுடன்
மாடநெடுங் கூடமுமாய் மதிலும்தெரு வீதியளும்
நீடுஞ் சுனையும் நிறைந்ததொரு வாவிகளும்
கூடுஞ் சிவாலயமும் கொண்டல்வண்ணர் ஆலயமும்

நாடுந்திருக் கேதாரம் நாகரிக மானதுவே
ஆடுங் கொடிவேந்தன் அங்கிருந்தா ரம்மானை.

மிக்கவை குண்டமதில் மேவியே சக்கரமும்
திக்குள்ளார் போரால் திருமால் தனைப்பணிந்து
பத்தியுன்மே லாசையல்லால் பார்மீதி லாசையில்லை
மத்துந் தருமன் மலையும்மலைச் சரால்களும்

நீடுயர்ந்த காவும் நிறைந்தமலர்ப் பொய்கைகளும்
காடும் பலசெடியும் கடந்துவந்து இப்பாலும்
மன்னன்திருக் கேதாரம் மாமலையில் வந்திருந்தார்
அன்னவனைக் கார்க்க அடைக்கலங்கா ரென்றுசொல்லி

சக்கரமுஞ் சொல்லிச் சரண மிகப்பணிந்து
மிக்கதொரு சக்கரத்தின் விசனமெல்லாந் தான்கேட்டு
செங்கண்மால் தான்மகிழ்ந்து சீர்தன்ம னுக்கெதிரே
இங்குள்ள வானவர்கள் எதிர்கொண் டழையுமென்றே

அந்தமால் தானனுப்ப அமரர்கோ னிந்திரனும்
முந்தவே முப்பத்து முக்கோடி தேவர்களும்
சித்திவித்தி யாதரும் தேடரிய கெந்துருவன்
சத்தியறி வார்முனிவர் தபோதனர் கின்னரருடன்

கின்னரர் கிம்புருடர் கெமனாதி சித்தருடன்
தேவரிஷி மாதவரும் தெய்வகன்னி மாதருடன்
பாவலரும் பாடகரும் பாங்கான வேதியரும்
வாத்தியங்கள் தான்முழங்க வானவர்கள் தான்கூடி

நோக்கியே தன்மரிடம் நூல்வேத சாத்திரமும்
ஆடலுடன் பாடலுமாய் அரம்பையர்க ளாடிவர
ஏடலருந் தன்மரையும் எதிராகக் காண்பதற்கு
ஓடி வருவாரும் உபசாரஞ் செய்வாரும்

நாடி வருவாரும் நல்லதன்ம ரென்பாரும்
பார்க்க வருவாரும் பரிமளங்கள் தூவுவாரும்
ஏற்கவே வந்து இதுபுதுமை ஏன்பாரும்
வானவர்கள் வந்து மார்க்கமுடன் தன்மரையும்

தானவர்கள் வந்தெதிரே தழுவி உறவணைத்து
வந்தமார் தன்மருடன் மகிழ்ந்து மிகநோக்கி
போகவே நீருமிந்தப் பொய்கையினில் மூழ்குமென்றார்
தேக மகிழ்ந்துதன்மர் திருக்குளத்தில் தான்மூழ்கி

பழைய உருமாறி பசும்பொன்நிறந் தானாகி
அழகான தன்மருக்கு அமரர் மலர்த்தூவி
இந்திரவி மானத்திலே ஏத்தியே தன்மரையும்
தேர்நடத்தி வானவர்கள் சிறப்பாய் மலர்சொரிய

வார்பிடித்து ரெண்டருகும் மடந்தையர்க ளாடிவர
தயக்கமிகு வானோருந் தன்மருமே தேரேறி
இயக்கர் பதிதனிலே ஏகினார் அம்மானை

மன்னவனே இந்நகரில் வந்திருப்போம் வாருமென்றார்
பொன்னகரோ சொல்லப் போர்வேந்தர் மார்க்கமதாய்
என்னுடைய தம்பியர்கள் இருக்குந் தலந்தனிலே
பன்னுமறை வேதியரே பரிவுடனே கொண்டுசெல்லும்

பருதியுட வாசலிது பார்த்திபரே உந்தனக்கு
கருதிமுடி சூட்டுகிறோம் கருத்துடனே நீர்காண
அச்சுதனார் தானவரும் அரியவை குண்டமதில்
சச்சுதர்பால் னான்போக வேணுமென்றார் அம்மானை

அப்பதியைத் தான்கடந்து அமரருடன் மன்னவனும்
செப்பரிய ருத்திரர்கள் சிறந்திருக்கு மன்னகரில்
சென்றுமந்த தன்மருக்குச் சீராய் அமரரெல்லாம்
அன்றுமுடி சூட்டவென்று அருள்செய்தார் வானவர்கள்

ஈடில்லா தென்பெருமான் இருக்கு மிடமல்லாது
வேறே பதியருளும் வேண்டே னினிநானும்
உங்கள் பதிதனிலே உறையுமென்று தானுரைத்தார்
இடுக்கண்வரும் வேளைதன்னில் இமையோரே எங்கள்தம்மை

நடுக்கம் தவிழ்த்துலகில் நயமாக எந்தனையும்
அடுக்கவே காத்தருளும் அச்சுதனார் தன்பதிக்கு
போகவேணு மென்று பொன்னுலகந் தனில்வந்தேன்
தோகைமட மாதினருள் உளந்துமுடி மன்னவனே

தீதில்லா மாநகரில் சிங்கா சனத்திருந்து
மாதர்க ளரம்பையர்கள் வயிரக் கவரியிட
அந்தமுட னங்கிரென்று அமரர்கோன் தான்கூற
இந்தவுல காகாதென்றே யெடுத்துரைத்தார் தன்மருமே

வானோர்க ளந்த மறலிதனை வந்துகண்டு
தீனோ ருடையதன்மர் தேசமெல்லாம் விட்டகன்று
கலிதானும் வந்தமையால் காடுமலை தான்கடந்து
வலியஇந்த மாநகரில் மன்னவனும் வந்தனன்காண்

அழைத்தே அவர்தனக்கு அரிய பதியுமின்று
தழைத்தோங்கி வாழுமென்று சாத்துமென்றார் அம்மானை

மறலியுந் தான்மகிழ்ந்து மைந்தனையு மந்நேரம்
விறலியுளே எங்களையும் விண்ணவரே என்றுரைத்தார்
அந்தகன்பால் தன்மரையும் அழைத்துமுன்னே விட்டார்கள்
வந்து பணிந்ததொரு மைந்தனையும் தான்தழுவி

சிந்தை மகிழ்ந்து இமன் செப்புவார் தன்மருக்கு
உத்தமனே என்பதியை உனக்கருள்வே னிப்போது
எத்திசையும் போற்ற இருமென்றார் தன்மரையும்
அப்போது தன்மர் அன்புடனே ஏதுசொல்வார்

இப்போ துமக்குநான் இன்பமுடன் வேணுமென்றால்
அண்ணல்திரு வைகுண்டம் அடைவதற்கு என்னையுமே
புண்ணியரே அந்த பொன்னகர்க்கு ஏவுமென்றார்
பாசமுடன் நீர்பொருத பாரதப் போர்தனிலே

நேசமுடன் துரோணர் நின்றுசமர் போர்பொரவே
மாமுனிவன் கைச்சிலையின் வலிமைகண்டு மாயோனும்
ஆமுனியே உந்தன் அசவத்தா மன்மடிந்தார்
சொல்வா யெனமாயன் சொல்லென வேநீயும்

அல்லவென்று மாயன் அப்போ வெகுண்டுரைக்க
கோவிக்க நீர்பயந்து கூறுகின்ற பொய்மொழியாய்
தாவிக்கும் பாவமொன்று தானிருக்கும் உன்பேரில்
அத்தோசம் போக அருள்நரகம் போவதற்கு

வைத்தார் மணிமார்பர் மன்னவனே சொல்லுமென்றார்
இன்றேதான் பாருமென்று ஏழு நரகங்களும்
சென்றே மிகக்காட்டி திரும்பியே வாருமென்று
தூதுவனைத் தானனுப்பி சொல்பெரிய தன்மரையும்

போதமும் நீர்தாமும் புண்ணியரே பாருமென்று
பார்த்துவரும் பாதையிலே பலவிதமாய் நாகரீகம்
தோத்துதுகா ணேதெனவே சொல்லுமென்றார் தன்மருமே
கற்பகக் காலில் கமலசிங் காசனத்தில்

சொற்கந் தனிலிருந்து துலங்கு குடைநிழற்ற
பரிந்துதெய்வ கன்னியர்கள் பணிவிடைகள் செய்துநிற்க
தெரிந்துபல ஏவல்தான் தேவர்களுஞ் செய்துநிற்க
விற்பனமாய் வந்துநின்று வேண்டியதெல் லாங்கொடுக்க

களித்தே இருப்பாரைக் கண்டே பிரியமுடன்
செனித்த புகழ்தன்மர் சிறந்த தெனவேதான்
இவர்கள் செய்ததர்மம் ஏதோ வெனக்கேழ்க்க
தவமுடைய கிங்கிலியர் சாற்றுவார் தன்மருக்கு

தக்க தவஞ்செய்து தர்மந் தழைத்தோங்க
துக்கமே பாவந் துலைந்தோ ரிவர்காணும்
ஓதுகின்ற பல்லுயிரும் ஒன்றாக வேபாரில்
நீத முடனடத்தும் நிருப ரிவர்காணும்

சீரி லுயர்கீர்த்தி செலுத்தினோர் காணுமிவர்
விளங்கவே தன்மம் மேதினியில் இப்போது
களங்க மறச்செய்து கண்டோ ரிவர்தானும்
பூசை மயேசுவர பூசையளும் தான்கொடுத்து

விசுதமுள்ள வேதியர்க்கு மீய்ந்தோ ரிவர்காணும்
பார்பெரிய பஞ்சத்தில் பசித்தோர் முகம்பார்த்து
ஏர்ப்போர் தமக்கு மீய்ந்தோ ரிவர்காணும்
அடைந்தோர்கள் தம்மை ஆதரித்தோர் காணுமிவர்

இடைந்தோரைத் தாங்கி இளைப்பாற்றி விட்டவர்காண்
மிகுந்த தவமுனிவர் வேள்வியளைக் காத்தோர்காண்
மறையோர்க்கு நல்ல மாதானம் செய்தோர்காண்
பசித்துவந்தோர் தங்களுக்குப் பாலமுர்தம் ஈய்ந்தோர்காண்

கசித்தி யதுதீர்த்துக் கனகஞ் சொரிந்தோர்காண்
கோதானம் பூதானம் குருபூசை சிவபூசை
பூதான மீய்ந்து புண்ணியமே செய்தவர்காண்
கன்னிகா தானமது காசினியி லுள்ளோர்க்கு

மன்னிய சீதனமெல்லாம் வாகாய் முடித்தோர்காண்
இத்தனையுஞ் செய்து இங்குவந்தார் கண்டீரே
முத்தனிவர் தன்மரே மூர்த்தியே யென்றார்கள்
தன்ம மதுசெய்து தார்வேந்தர் சொர்க்கமதில்

இன்மைதனி லிப்போது இங்குவந்தார் மன்னவர்கள்
குன்றுவது பாழ்நரகம் கொற்றவன்நீ பார்ப்பதற்கு
இன்றுநீர் வாருமென்று ஏகினார் தன்மருடன்
ஒன்றாம் நரகம் ஒருநூறு யோசினையாம்

ரெண்டாம் நரகம் இருநூறு யோசினையாம்
இந்த வகையிலொரு ஏழா நரகமுந்தான்
உந்த யகலமெனு மொருயோ சினைதூரம்
பெருத்த கிருமியளாய்ப் பேருடலு முள்ளதுவாய்

வருத்த மறியாமல் மாண்டாரைத் தான்பிடுங்கி
நெளியும் புழுவும் நிறைந்த உதிரங்களும்
உளையு முதலையுடன் ஊருகின்ற அட்டைகளும்
பாம்புடனே நீர்நாயும் பற்றி இசித்திழுக்க

சோம்புவார் தன்னைத் துயரமுடன் தன்மர்கண்டு
சிவசிவா வென்று செவியிலொரு கையைவைத்து
தவமேதுஞ் செய்திலையோ தம்பி இவர்தாமும்
பொய்யும் பிரட்டும் பொருந்து கொலைகளவும்

செய்யாத காரியங்கள் செய்தோ ரிவர்காணும்
இந்த நரகமதுக் கேழாம் நரகமதை
நாடியே யேழா நரகிலுள்ள பாவங்களைக்
கூடிஇம தூதருடன் கொற்றவருந் தான்பார்த்து

ஏழா நரகமதில் கீழா இருந்துழலும்
பாழா நரகமது பாதாள பாதகமும்
தாளமுடி மன்னவனைத் தான்கண்டு தன்மருமே
பாச முடனருகில் பரிதவிக்கும் நூத்துவரை

வாசமுள்ள தன்மர் வாகுடனே கண்டாராம்
பொல்லாத நூற்றுவரைப் புழுக்க ளிரித்துடம்பை
ஊடுருவி யேதுளைத்து உலாவித் திரிவதையும்
வாடு முடல்கிடந்து மயங்கித் தவிப்பதையும்

கலவி முதலை கடித்துப் பிடித்திழுக்க
மதித்ததொரு நூற்றுவர்கள் மயங்கும் வருத்தமெல்லாம்
கதித்த புகழ்தருமர் கண்டார்கா ணம்மானை.

கண்டவுடன் தன்மர் கலங்கி யுடல்பதறி
அன்ற முடனின்று அரிநமசி வாயமென்று
ஓது முலகம் ஒருகுடைக்கிழ் ஆண்டதொரு
மாதுபயில் மன்னன் மகாநரகுக் காளானான்

என்றுசொல்லித் தன்மர் ஏங்கி மனமிடைந்து
நின்ற தளவில் நெடியதிரி யோதரனும்
விண்டுரைக்க மாட்டாமல் விசாரமா யுள்ளயர்ந்து
கண்டுதன்மர் தன்னைக் கலங்கியே யேதுசொல்வான்

**விருத்தம்**

தம்பித் துனையே யான்செய்த சதிகே டனைத்தும் பொறுத்தருளி
வெம்பித் துயரி லழுந்தாமல் வேண்டி யெனையே கரையேற
நம்பிக் கரத்தா லெடுத்தணைத்து நன்மை பெறவே தன்மரேநீர்
யெம்பி யெனையே வைகுண்டத் திருக்க நினையுந் தவமுனக்கே

யான்செய்த வினையி னாலே அழுந்தினன் நரகில் விழ்ந்து
தான்செய்த தவத்தி னாலே தன்மரேநீ ரிங்கே வந்தீர்
ஊன்செய்த பகையும் வீடி லுடலால் கிடத்திப் போட்டு
வான்செறி உயிர்தான் வாடும் மயக்கமும் தீர்ப்பாய் தம்பி !

முன்னா ளிருந்த பகைவினையள் முழுதும் மறந்து நினையாமல்
இன்னா ளெனது கருதுணையாய் இரங்கிக் கசத்தில் கிடவாமல்
மன்னா வுனது கைதந்து வாவா வென்று கரையேத்தச்
சொன்னால் மறலி யோமென்று துயரந் தீர்ப்பா னுமக்காக

பிறவி மயக்கந் தெளியாமல் பேதக மிகவே நினைந்தேன்
திறவிச் சுகத்தின் பெருமைதனை திரண மளவுந் தோற்றாமல்
அறவே கொடுமை பண்ணிவிட்டேன் அந்தக் கொடுமை நீபொறுத்து
இறவா திருக்கும் வைகுண்டம் எய்தும் படியாய்க் கைதாரும்

பேரால் பெரிய தன்மரென பெற்றாய் பெருமை தன்னாலே
நேரா யானும் கண்மமென்ன நின்ற கொடுமை அதினாலே
பாராய் புவியி லுன்னை யென்னை பகவார் பெரிய பாரிடத்தில்
சீராய் மனது தயவுடனே திறமாய் வந்து கைதாரும்

பஞ்ச வர்கள் அஞ்சுபேர்க்கும் பாஞ்சாலி தனக்கு முடமே
வஞ்சமாய்ச் செய்த பாவம் மட்டல்லசொல்லக் கேளும்
கொஞ்சமாய் நினைத்த புத்தி கொடியதோர் நரகஞ் சேர்ந்தேன்
தஞ்சமென் றுன்னைச் சொன்னேன் தன்மருங் கையைத் தாரும்

சூதினால்க் கபடஞ் செய்து துரத்தினேன் வனத்தில் யானும்
யேதினால் குவல யத்தில் இப்படி நரகம் புக்க
வாதினால் பகையைச் செய்து வங்கிஷ முழுது மாண்டு
தீதினால் நரகஞ் சேர்ந்தோம் செயதன்மா கையைத் தாரும்

மாயனார் தூது வந்தார் மதித்துநான் துதித்தே னில்லை
ஆயனார் மனதுக் கேரா தாகச்சே அரணைத் தோத்தேன்
தூயனா பாதம் போற்றித் தொழுதவர் கெதியே போற்றி
வேயனார்க் காகத் தன்மா விரைந்திரு கையைத் தாரும்

பொறுமை யுடைய தன்மரேநீர் போனா லெனக்குக் கதியில்லை
கிறுமி யுடலைத் துளைக்குதுபார் கெஞ்சி யழுது பரதவிக்க
உறுமி யதட்டி நீர்நாயு முருக்கி முதலை பிடித்திழுக்கச்
சிறுமை நெடுநாள் பட்டலுத்தேன் தெய்வப் பிறப்பே கைதாரும்

வேற்றுமை உனக்கே தப்பா மெய்யுயி ராக்கைக் கெல்லாம்
பார்த்திப னான மூர்த்தி பராபரம் வந்தாய் சேர்ந்தாய்
நாற்றிசை புகழும் கீர்த்தீ நரகம்விட் டகல வென்னை
போற்றியே கரையில் விட்டு இருக்கவை குண்டஞ் சேர்ப்பாய்

உந்தனைக் கண்ட போதே உடலுயிர் மகிழ்ச்சி கூர்ந்தேன்
எந்தனை விட்டுப் போனா எனக்கினி துணைவே றில்லை
சிந்தனை தீர்த்துத் தம்பி திருவுள மறிய நீயும்
வந்தென்னைத் தன்ம ரேநீர் வைகுண்ட மிப்போ சேரும்

**நடை**

தேர்வேந்தன் தானும் செய்ததொரு தீவினையால்
ஓர்கசடு தானும் உன்மனத்தில் காணாமல்
தர்ம நெறியுந் தவமுந் தயிரியமும்
ஒருமையுட னீயிருந்து உற்பனத்தா லும்பரிடம்

வந்தீர் வைகுண்டம் வாழ்பதியுந் தான்தொழுது
முந்திநாள் செய்த மோசமெல்லாம் விட்டுவிடும்
மன்னவனே யான்செய்த வன்மமெல்லாம் விட்டுவிடும்
என்னை நரகம்விட்டு கடேற்றத் தான்பாரும்

ஏராரும் பாவி இவையுரைக்கத் தான்கேட்டு
தாராரும் தன்மர் தயவுடனே தானோக்கி
பேதமறப் பார்த்துநின்று பேர்பெரிய தன்மருக்கு
ஓதரிய கிங்கிலியர் உகந்தேது சொல்லுவார்கள்

புண்ணிய பாவமெல்லாம் பொருந்தவே பார்த்துவந்தீர்
எண்ணி இமன்பக்கலுக்கு யேகுமென்றார் தூதுவரும்
மன்னவனைக் கொண்டு மறலியிடம் நான்போக
அன்னவனைக் கூட்டி அனுப்புமென்றார் அம்மானை.

பார்த்திபன்தான் செய்ததெல்லாம் பாவமே யல்லாது
எத்தியொரு தன்மருந்தான் அவன்செய்த தில்லையோதான்
இவன்சென்மம் பரகெதியி லேவுவது மெப்படித்தான்
தவமுடைய தன்மரேநீர் சாத்துவீ ரென்றுரைத்தார்

திருந்தவே தானதர்மம் செய்திலனே ஆமாகில்
பொருந்தியே நான்செய்த புண்ணியத்தில் பேர்பாதி
மன்னனுக்கு நன்றாய் மகிழ்ந்தளித்தே னிப்போது
சொன்னேன் காண் தூதுவனே நீர்தானும்

பூலோக ராசனையே புழுக்குழியில் விட்டேக
மேலாகத் தூக்கிவிடு மென்றார்கா ணம்மானை

அந்த மொழிகேட்டு ஆனதொரு தூதுவனும்
வந்துமொரு காந்தாரி மைந்தனையே கைதூக்கி
கூசாமல் தானெடுத்துக் கூட்டினார் மன்னனையே
ஆசார மாக அண்ணர்திரி யோதனனை

காராருந் தன்மர் கழுத்தோ டுறவணைத்து
சீராய் மகிழ்ந்து தீவினையெல் லாமகற்றி
தாரி யிமன்முன்னே தான்சென்றார் அம்மானை

இருவரவர் கண்டவுடன் இமராசன் தான்கலங்கி
அருவினையன் மாபாவி அவன்வருவ தேதெனவே
இமதர்மர் கேழ்க்க இயன்றதொரு தூதுவனும்
நேமமுடன் வாய்புதைத்து நின்றேது செப்பலுற்றான்

புகழ்தன்மர் செய்துவரும் புண்ணியத்தில் பேர்பாதி
இகழாதி வேந்தனுக்கு ஈந்தா ரெனவுரைத்தான்
கேட்டு மகிழ்ந்து இமன்கிட்டவே முன்னிருத்தி
வாட்டமில்லா மன்னனுக்கும் மகிழ்ந்துரைப்பா ரம்மானை

அடந்துவினை செய்தோர்கள் அவதி மிகப்படுவார்
நடந்துதவஞ் செய்தோர்கள் நல்ல பதம்பெறுவார்
இன்றேதான் கண்டோமென் றிமதன்மர் தான்மகிழ்ந்து
முன்னே பெரியோர் மொழியவே கேட்டிருப்போம்

ஆயனெடு மாலிவர்க்கு ஐந்தூர் விடுகவென்று
ஈயிருக்கத் தானு மிடமில்லை யென்றான்காண்
தெரிந்தியவன் தான்செய்த தீமை பொறுத்தேதான்
பரிந்ததன்மர் புண்ணியத்தில் பாதிஇவர்க் கீந்ததினால்

ராசரிஷி காணுமிவர் ரெத்தினமுடி சூட்டுமென்றார்
பாசமுள்ள இமதன்மர் பகுந்துரைத்தா ரிவ்வசனம்
இமையோர் மனமகிழ்ந்து ராசரிஷி யென்றுபட்டம்
அமையு முடிசூட்டி அங்கிருக்க வேதருமன்

தோத்தும் நரகம்விட்டு சுத்தத்தி லுள்ளோரே
ஏத்துங் கரையிலென்று இமதருமர் தானுரைத்தார்
வைய மகிழ்தன்மர் வங்கிஷத்தி லுள்ளோரே
துய்யதன்மர் சொல்படிக்கு சொர்க்கத்தி லேத்தினரே

மற்றுந் தருமரையே மகிழ்ந்துநல்ல வானோர்கள்
சுத்தமெல்லாம் பூவுலகில் சூழ்ந்துநிதம் வந்ததுபோல்
சொர்க்கத்தில் தன்மருந்தான் சுத்தமுள்ளோர் தங்களையும்
வர்க்கமுள்ள சொர்க்கமதில் வைத்தா ரெனவேதான்

தேனோர் துடைமார்பன் தெய்வத் தருமனையும்
வானோர்க ளெல்லாம் மகிழ்ந்தனர்காண் அம்மானை.

அந்தகனு மைந்தனையே அன்பாய் முகம்நோக்கி
உந்தனுக்கே இந்த உலகெல்லாந் தான்தருவேன்
அங்கே முடிசூட்டி சொர்க்கந்தனை ஆளுமென்றார்
அங்கே மறலி அருளினார் தன்மருக்கு

தன்ம ரதுகேட்டு சரண மெனப்பணிந்து
சென்ம மிறந்தாலும் செய்தஅறம் போனாலும்
என்பிரா னென்பெருமா னிறையோன்வை குண்டமல்லால்
நம்பியே ஒரிடத்தில் நான்தரியே னென்றுரைத்தார்

மகன்றனக்கு மாமறலி வைகுண்ட மால்பதிக்கு
உகந்துநீ செல்லுமென்று உபசார மாயுரைத்தார்
தந்தைஇவை சொல்ல தன்மர் அடிதொழுது
சிந்தை மகிழ்திப்போ செல்லும்வை குண்டமென்றார்

துடந்துசுற்ற முள்ளவையுந் திரியோ தனன்தனையும்
அடைந்துசொற்கம் சேருமென்று அன்புடனே தானிருத்தி
வானோர்கள் தன்மரையும் மகிழ்ந்து ரதமேற்றி
சேனா பதிதன்மர் சொல்லலுற்றா ரம்மானை.

அந்தர துந்துமிய ளார்ப்பரிக்கும் பேரொலியும்
முந்தின பேரிகையள் முரசினுட பேரொலியும்
எழுகடல்போல் வானுலகில் எத்திசையு மேமுழங்க
வான்பிரம லோகம் வந்தடைந்தார் தன்மருடன்

அகத்தியனும் கோசகனும் அந்தவி லோசனனும்
மகத்துவத்தில் கெவுதமரும் வசிட்டர் பராசருடன்
சொல்லுஞ் சனகன் துருவாசர் காசிபரும்
மல்லுபுய மாருதனும் வருணன்முத லுள்ளோரும்

எட்டுத்திக்குப் பாலகரும் ஏத்த வசுக்களுடன்
கொட்டுசத்தம் லோகமுதல் குமுகுமெனத் தான்முழங்க
மாணிக்கத் தால்சமைத்த வச்சிரமணி மண்டபத்தில்
ஆணிக் கனகமணி அழுத்தியசிங் காசனத்தில்

ஓதுபதி னாலுலகம் உயரப் படைத்தோனே
வேதனும் நன்றாக வீத்திருக்கும் வேளையிலே
தேர்ந்து முனிவர்களும் தேவர்களுஞ் சூழ்ந்துவர
பரிந்துவந்து தன்மர் பணிந்தனர்காண் அம்மானை.

இசைநான் முகத்தோன் இவனாரெனக் கேழ்க்க
நிசமான குருகுலத்து நீள்பாண்டு தன்புதல்வன்
தரும னிவன்தானும் தரணி தனில்கலியன்
பெருமையுடன் வந்ததினால் பேருலகந் தானிழந்து

ஆதி நெடுமா லரிகேச வன்பதத்தை
நீதி வைகுண்டம் நினைந்துவந்தா ரென்றுரைத்தார்
தானவர்போய் தன்மர் தனக்கங் கெதிராக
வானவரே சொல்லுமென்று மாமறையோன் தான்கூற

அழைத்துவந்து முன்னே அடிபணிய விட்டார்கள்
செப்பெரிய நான்முகத்தோன் சிந்தை மிகமகிழ்ந்து
தழைத்தோங்குந் தன்மரென்று சாத்தினார் வானோர்கள்
ஒப்பரிய தன்ம ருலகமதி லப்போது

நன்றாகச் செங்கோல் நடத்தும் விசேஷமெல்லாம்
குன்றாத மாமுனிவன் கூறினான் கேட்டிருப்போம்
நண்ணிசெய்யக் காயமுடன் நன்றாக இங்குவந்தார்
புண்ணியவா னென்றுமிகப் போத மனமகிழ்ந்து

இன்னமும் பூவுலகி லிவர்க்காசை யுண்டெனினும்
பொன்னுலகின் மீதாசை போதவே உண்டெனினும்
இவ்வுலகும் வேண்டியது இப்போ முடிசூட்டி
அவ்வுலகந் தன்னில் அரசாள வைப்பேனான்

வேண்டியது கேளெனவே வேதா மகிழ்ந்துரைக்க
ஆண்டவனே வைகுண்ட மமையுமென்றார் தன்மருமே
ஏதுமெனக் காசையில்லை இமையவரே இப்போது
தாதுரையும் வேதாவை உந்தன்பதத்தைத் தான்வேண்டி

வந்தா னிவனெனவே வானோ ருரைத்ததற்பின்
சிந்தா குலம்படைக்குந் திசைமுகனு மேதுரைப்பார்
தருமன் தனக்குமிப்போ தானவரே வானவரே
பிரமரிஷி யென்றுமிகப் பேரிட் டழையுமென்றார்

அரத்திலுள்ள வரனோரும் அருள்முனிவ நாதர்களும்
தீர்த்தப் பிரமரிஷியென்று செப்பினர்காண் அம்மானை.

மெய்கொண்ட வாழ்தருமன் விரும்பி வருவதற்கு
வைகுண்ட லோகமெல்லாம் வானோ ரலங்கரித்து
நவமணிசேர் மண்டபமும் நற்கனக மண்டபமும்
மன்னுவயி டூரியஞ்சேர் மாணிக்க மண்டபமும்

கந்துங்கடல் முத்துடனே கனகதூண் மண்டபமும்
பற்பரா கம்பதித்த பவழத்தூண் மண்டபமும்
சர்ப்பமெனும் ரெத்தினமணி தானமைத்த மண்டபமும்
துய்யகோ மேதகத் தூண்பதித்த மண்டபமும்

வைய மகிழ்பற்ப ராகத்தூண் மண்டபமும்
சிங்கார மண்டபமும் சீர்பளிங்கு மண்டபமும்
வங்கார மண்டபமும் வச்சிரத்தூண் மண்டபமும்
வீரான பட்டாடை மேல்கட்டி மண்டபமும்

மாறாத கண்ணாடி மாளிகையும் மண்டபமும்
விரைந்து சவரத்தால் மெழுகியதோர் மண்டபமும்
நிரைந்துநல்ல சாந்தால் நிலமெழுகு மண்டபமும்
நந்தா புழுகதனால்[1] நலஞ்சிறந்த மண்டபமும்

மந்தார பிச்சி மலர்வீசு மண்டபமும்
ஆரவே கஸ்த்தூரி யால்மணக்கு மண்டபமும்
ஆத்திரண் டானவராம் அமர்ந்ததொரு மண்டபமும்
கூறுமொரு பொற்கனகம் குவிந்திருக்கு மண்டபமும்

நீண்ட கெருடக் கொடியுடைய நீண்மதிலும்
உப்பரிகை மேடைகளும் உயர்ந்த சிகரமுமாய்
அப்பெரிய தேவ ரலங்கார மாளிகையைத்
தூயதொரு மாணிக்கத்தால்த் தோரணமுந் தானாட்டி

மாயனுட மாளிகையள் வகையா யலங்கரித்தார்
போதவே வீதியெல்லாம் புழுகுமணந் தான்வீசும்
கீத பரிமளங்கள் கெந்தபொடி சந்தனமும்
வாசினை களாக மல்லிகை முல்லைபிச்சி

பேசரிய வெட்டிவேர் பேராய் மருக்கொழுந்து
கமகமென வாசங் களப மொடுதுளபம்
போமெனவே வைகுண்டம் போத அலங்கரித்தார்
மாசிலாத் தன்மருடன் வானவர்கள் தேரேறி

ராசகோ பாலருடன் நகரிதனில் வந்துதித்தார்
மன்னுலகில் வாழ்தருமர் வைகுண்ட வாழ்பதிக்கு
எண்ணிய தேவருட னிங்குவந்தா ரென்றுசொல்ல
கேசவனுந் தான்மகிழ்ந்து கெம்பீர மாகவேதான்

வாச முனிவருடன் மற்றுமுள்ள தேவருந்தான்
சக்கரமுஞ் சங்குந் தரித்தமணி மாலையுடன்
திக்கெங்குங் கொண்டாடச் செங்கருடன் மீதேறி
மாலை துளபமணி மாலைகள் தானணிந்து

---

1. புனுகு

சோலை மலையழகர் சொர்ண மயமாக
வாகனைய தன்மரெதிர் வந்தார்கா ணம்மானை

மாகனக மேனி மாயனெதிர் வந்தவுடன்
அண்டபகி ரண்ட மகண்டமெல்லா மொன்றாக
உண்டதொரு பாதமதில் ஓடிவந்து தன்மருமே
பண்டுநான் செய்த பாக்கியமே இப்போது
கண்டுனது பாதங் கண்குளிரத் தெண்டனிட்டு

விருத்தம்

கண்ட பொழுதே களிகூர்ந்து கர்ம வினையுங் கசடறுத்தேன்
அண்டர் பணியும் பொற்பாதம் அடியேன் பணியத் தவம்பெற்றேன்
தொண்ட னிவனா மென்றுருகிச் சொல்லும் பெரிய வைகுண்டம்
குண்ட மதிலே யெனையிருத்தும் கோவே நந்த கோபாலா

ஆதவா உன்னைக் கண்டேன் அல்லிரு ளகன்று திப்போ
மாதவா யெனது சிந்தை மயக்கமுந் தீர்ந்து திப்போ
சீதவா துளப வாயா தேவகி நந்த கோபா
கீதவா இசைகள் சேருங் கிஷ்ணனார் வைகுண்டஞ் சேர்ந்தேன்

சானகி ராமா ராமா சாரங்க தேவா ராமா
மானகா யயோத்தி ராமா மாதவா வாசு தேவா
ஓனமோ[1] ராமா ராமா உலகினை யளந்த ராமா
தானவா ருனது பாதஞ் சரணமெனக் கண்டேன் கண்டேன்

பட்டேன் புவியி லுழன்றடியேன் பாசங் களைந்தும் வருமளவில்
விட்டே னுணவு தனைமறந்து விரசமுனது வைகுண்ட
மட்டே யறிய நடந்துவந்தேன் மறலி மலரோன் வானவரும்
தொட்டே யழைத்தார் சுகம்பெற்றேன் தொழுதே னுனைநான்
தொழுதேனே

வைகுண்ட வாசல் சேர வருவது எளிதோ உந்தன்
வைகுண்ட மென்று சொன்னால் வருவினை யகன்று போகும்
வைகுண்ட ராச ராசே வடமலை யானே இப்போ
வைகுண்டந் தந்தாய் பெற்றேன் வைகுண்டஞ் சேர்ந்தேன் யானும்

---

1. ஓம் நமோ

**வேறு**

சங்கு சக்கிர ராதவா ராகவ சகார காசிகரா தருமனென்றனை
யருமை செய்தொரு சாமி
வெங்கிட நாயகா எங்கும் நிஷ்கள சுருப மாகிய எம்பிரானும்
தம்பிரான் எனது சற்குரு சரணபொற்பாதம் மறவனே துணை மறவேன்;
பொங்கு பூரண மங்கை மார்பனும் புருஷ மேருவுதார மெண்குண
லங்கிர தார பூசண பொன்
னங்க மங்கமே செங்கண்மாலழ கெங்கணாயகா சிகதர பாருமன்
நாரணா ராமா ராகவ சேத்துமாத மாதவ ராமனே!

**விருத்தம்**

ராமா ராமா அரிராமா கேசவா ராமா ராமாஅனுசா
வாமன ரூபா சவுரியவாம் அகோர மாதவாம தேவ சிவராமனே
நாமமே திருநாம மாயிரம் நாமமாகிய நாரணா
சோம சீதளசோதி நாயகா சோதி மாமலை மாயனே

சுகந்த வாச துளப முகுந்த தோகத் தொக்கு தொக்குதோ
முகுந்த தேவன் . . . . கஸ்த்தூரி மோக முராரே சேசேசே
சுகுத்த குதிகு தாதிகு சரணஞ் சரனூரே
மிகுந்த வாசினை திமிர்ந்த கோமள வெங்கிட கிரிமலையே சரணம்

நாத கீதா ரகுந்தனே கிருபை ராமச் சந்திர விமானமே
போத வேத வைகுண்டமே பதிபுக மெங்கள் பராபரா
ஓத வேத ரூபா
பாதமே கெதியென் றன்ன துயர் கண்டிலேன்
(பாடல் சரியில்லை)

**நடை**

மாயா முகுந்தா மகாபார தந்தனிலே
ஆயாது சீறி யெழுந்தவனை நான்மறைத்து
சீராய் பீமனுக்காய் தேத்தாசனன் தன்னைவென்று
தாரரார் விசயனையுஞ் சாகாமல் காத்தனையே

ஆனைநின்று மூலமென அந்த மடுக்கரையில்
கானில்வந்து அஞ்சலென்று காகுத்த வென்றுசொல்லி
தொழுதான் கருணைவிழி யான துயரமெல்லாம்
அழுதான் கருணைவிழி ஆனந்த நீர்சொரிய

ஆடினான் மெய்மகிழ்ந்து அரிகரி யென்றுசொல்லி
பாடினான் கீதம் பணிந்தா னிருபாதம்
செங்கை மலர்ப்பாதஞ் சேர்வைபண்ணி யேநிதமும்
இங்கிருக்கப் பெற்றேன்நான் என்னதவஞ் செய்தேனோ

என்றுதன்மர் சொல்லி ஏத்துகின்ற தோத்திரத்தை
மண்ணுலவு மாயோன் மனமகிழ்ந்து அன்னேரம்
வாருமென்று தானழைக்க வானவர்க ளந்நேரம்
தானவரும் வானவருஞ் சதுர்முகனு மிந்திரனும்

தேடரி யாததவந் தெரிசிக்கப் பெற்றனையே
ஆடல்புரி தன்மாநீ அரிபாதஞ் சேர்ந்தனையே
என்றுசொல்லி வாழ்த்தி இமையோர் மகிழ்ச்சியுடன்
அன்றுதான் கட்டி யணைத்தனர்காண் அம்மானை

மற்றுமந்த மாயவனார் வானோர் தனைநோக்கி
கொற்றவனைக் கொண்டுசெம்பொன் கோவில்தன்னில்
வையுமென்றார்
பரிந்துதன்மர் கோவில்புக்க பச்சைமால் தான்மகிழ்ந்து
இருந்தங் கிமையோரே யெம்பெருமான் தானனுப்பி

சாந்துபுகழ் தன்மருந்தான் சரணமென்று மாயனையும்
போற்றிநிதம் பூசைபண்ணிப் பொற்கோவில் வீற்றிருந்தார்
ஏற்றதொரு மாய னிருமென்று தானுரைத்தார்
பொய்யில்லா வாசகனே புவிராச மன்னவனே

வைகுண்ட லோகம் வளம்பார்க்க வாருமென்றார்
அய்யன் முகுந்தன் அரிகேச வனுடனே
செய்யபுகழ் தன்மருந்தான் திருமா லுடன்நடந்தார்
கூறரிய மாபலிதன் கோவிலுட வாசல்தன்னில்

வீருடனே தானடந்து மேகவர்ணர் தானும்நின்றார்
மாயோனுந் தன்மருமாய் வாசலில்வந் தாரெனவே
தூயதொரு மாபெலி தூதுவர் போயுரைத்தார்
விரைந்தங்கே மாபெலியும் வேகமா யோடிவந்து

கரைந்து கரைந்துருகி கண்ணா யிரத்தோனை
நாணாமல் தேவர்களும் நான்முகனுந் தான்தேடி
காணாத பாதமதைக் கண்டென் பொருட்டாக
கொடியென் சிறுகுடிலில் கோபாலர் வந்துநின்றார்

அடியேன் பொருட்டாக அய்யாநீ ரிப்போது
இங்கே எழுந்தருள ஏதுதவஞ் செய்தேனோ
சங்கேந்து மாலே சரணஞ் சரணமென்றான்
திருமாலை இங்கிவனார் செப்புமென்றார் மாபெலியும்

குருகுலத்துத் தன்மனிவன் குணமும் பொறுமையுள்ளான்
சாதகமாய் நாள்தோறும் சத்தியவான் தானிவனும்
நீதி யுடையவன்காண் நீநிலத்தில் மன்னருக்கு
தக்க புகழ்நெறியும் தவமு முடையவன்காண்

மிக்கனிவ னெனைக்காண வேண்டியே வந்தனன்காண்
மாபெலி யென்றுரைக்க மாயோனை உம்முடைய
ஏவலினால் யாவருந்தான் இந்திரதருப் போலாகி
தாழ்ந்தோ ருயர்ந்தோராய்த் தானிருப்பார் கண்டீரே

வாழ்ந்தா னிவன்பெருமை மாயனே சொன்னீரே
தங்கமந்தச் செம்பொன் தானிருந்த காகமது
அங்கு மந்தமயம் பொன்னிற மாகலையோ
ஆகிலு மின்னமொன்று அருளக்கேள் மாபெலியே

தாகமுடன் கேளுமென்று காற்றலுற்றார் மாயவனார்
பரிந்துநல்ல வேதியர்கள் பதினாயி ரம்பேர்க்கும்
தெரிந்துமொரு வேள்வி தினந்தோறும் பண்ணிவித்தார்
மற்றுமோ ராயிரம்பேர் மாமறையோர் தங்களுக்கு

நித்தமன்ன தானம் நிறையாய்க் கொடுத்தவன்காண்
நன்றாய் மனுநீதி நடத்து முறைதனிலே
குன்றாம லாறிலொன்று கொண்டா னிவன்தானும்
இல்லா ரிரப்போ ரிளைத்தோர்கள் தங்களுக்கு

பல்லுயிருந் தன்னுயிர்போல் பார்த்தோ னிவன்காணும்
சத்திய வசனந் தவறாமல் பூலவுலகில்
நித்திய மனுநீதி நிலைநிறுத்தும் புண்ணியன்காண்
திங்கள் மும்மாரி சிறந்து மிகப்பொழிய

பொங்கும் புலியும் புல்வாயும் ஓர்துறையில்
உண்ணுமது தண்ணீர்தா னிறவுமிக உண்டாகும்
மண்ணுலகி லிந்த மகிமையிவர் நீதியிது
வழக்காக வீமனுடன் வரும்புரு ஷாமிருகம்

பழக் காருந் தன்மருட பக்கலிலே தான்போக
வந்திருவர் தானும் வழக்கென்று தான்கூற
பிந்திநாள் வீமன் பிளந்துகொள் ளென்றான்காண்
தெரிந்து துரோபதையை திரியே தனன்பிடித்து

பரிந்து துயிலுரியப் பாத்திருந்த நால்வருந்தான்
வில்லம்பு தீட்டி வெகுண்டு யெழுந்திருக்க
வில்லம்பு தன்னை விலக்கியே நின்றவன்காண்
பாரின்மே லாசையற்றுப் பரிந்தே பரகதியை

சேரவே தானிழந்து தீங்கொன்றும் பேசாமல்
ஆவலுட னிங்குவந்தான் அன்பாக நம்மருகில்
மாபெலியே யென்று மகிழ்ந்துரைத்தார் அம்மானை.

என்றளவில் மாபெலியும் இருதயமுந் தான்மகிழ்ந்து
சென்றுதான் தன்மரையுந் சிந்தையுறத் தான்தழுவி
மன்னவரே நீர்தான் வருந்தியே செய்தவத்தால்
இன்னகரில் வந்தாய்நீ என்று மிகப்புகழ்ந்து

உத்தொரு தன்மருக்கு உபசார மாயுரைத்தார்
மத்துமந்த மாயனையும் வணங்கினான் மாபெலியும்
மாபெலியைத் தான்நிறுத்தி மாயோனு மன்பாக
காவலனாந் தன்மரையும் கையுடனே கொண்டுசென்று

பேராத பாற்கானும் பிரகலா தேவனுடன்
தாராரும் நாரதனும் சதுர்வேத மாமுனியும்
உத்தம னான ருக்குமாங் கதனுடனும்
பத்தியுள்ள ஆழ்வார் பன்னிருபேர் தன்னுடனே

வீத்திருக்குஞ் சோலை மேகவண்ணர் தன்கொலுவில்
போத்தியே வானவர்கள் போற்றி யருள்பணிந்து
தங்குபுகழ் தன்மருக்குச் சக்கரமுந் தான்தரித்து
பொங்குதிரு மால்பாதம் போற்றிநின்றார் வானோர்கள்

அங்கவர் தம்மை அச்சுதனார் தான்நிறுத்தி
திங்கள்சூழ் வேந்தனுடன் திருமா லெழுந்தருளி
குளிர்ந்தமலர்ச் சாலைதனில் கோபாலர் தானடந்தார்
அழுந்தருவ ரெத்தினத்தா லலங்கரித்த மேடைதனில்

செல்லும் பொழுது செயல்விசயர் வீமனுடன்
சொல்லுமென்றா ரட்டையருந் தோரா துரோபதையும்
இருவரையுங் கண்டு எதிரே எழுந்தருளி
அரியபொருள் கண்டவர்போல் அரியினுட பாதமதில்

வந்து பணிந்து மலர்கள் மிகச்சொரிந்து
சிந்தை மகிழ்ந்து சேவித்து நிற்பளவில்
தம்பிமார் தங்களையும் தன்ம ரெடுத்தணைத்து
எம்பிரான் சீர்பாதம் இறைஞ்சினோம் போதுமினி

நந்தகோ பாலர் நரசிங்க ரூபனிடம்
விந்த மதில்நடந்து மெய்தளர்ந்து விட்டீரே
என்றுரைத்துத் தம்பியரோ டியல்பாக ஐவருமாய்
மன்றுலவு மாயோனை மகிழ்ந்துரைத்தா ரம்மானை

மன்னவரே நீங்கள் மண்ணாசை விட்டுவந்தீர்
இந்நகரி லிப்போது இருமென்று தானுரைத்தார்
ஆனத்த வாருதிகோ டய்வரையும் நீராட்டி
தானந்த வள்ளல் சாத்தி முடிசூட்டி

மாயவனார் மால்தானும் மனமகிழ்ந்து தான்வாழ்த்தி
நேயமுடன் கொண்டுசென்று நித்திலஞ்சேர் மண்டபத்தில்
அன்பாக நம்மிடத்தில் அருகே இருமெனவே
இன்பமாய் மாய விருமென்றார் அம்மானை.

நாரதனார் தான்முதலாய் நன்முனிவர் தான்கூடி
சீரான நால்வேதந் திருந்தவே ஓதுமென்றார்
வீரசிங் காசனத்தில் மேவியிரு மென்றுரைக்க
பாசுதங்கென வேந்தர் பரிந்துமிக வீற்றிருக்க

வெண்கவரி தான்வீச விருது பலமுழங்க
தங்கமணி மண்டபத்தில் தம்பியருந் தன்மருமாய்
ஏந்திழையாள் தம்மோ டிருந்து பணிமாற
ஆய்ந்த மடமாதர் அரம்பையர்கள் ஆடல்செய்ய

அச்சுதனார் நேசம் அகலாத பஞ்சவர்கள்
மெச்சுபுகழ் வைகுண்டம் வீற்றிருந்தார் அம்மானை.

பொய்யில்லா ராகையினால் புண்ணியமே செய்தமையால்
செய்யும்வெகு தன்மமெல்லாம் தேடியே செய்தபலன்
பருதிமதி காணாத பச்சைமால் தன்பதத்தில்
விருதரசர் பஞ்சவர்கள் மேவினர்கா ணம்மானை.

இவர்பெற்ற பேறுதா ரெவர்பெற்றார் பேருலகில்
கருவறுத்த வஞ்சகர்தான் காணாத விந்தநகர்
கண்டா ரிவரெனவே கனகசபை தான்முழங்க
அண்டர் முனிவோரும் அதிசயமாய்க் கொண்டாட

மெய்கண்டார் கண்டார் வெளியிலொளி யாய்யிருந்து
வைகுண்டங் கண்டார் வாசமுள்ள பஞ்சவர்கள்
என்று கதைசொல்ல ஏத்தசென மேசயனும்
சென்று திருச்செவியின் செவிடுமேது நன்றாக

ஓசை பெறக்கேட்டு உளமகிழ்ந்து தானிருக்க
பாசமுடன் போற்றுகின்ற பழையகரும் பட்டதுவும்
வெண்பட்டு மாகி விறுமையது தானீங்க
பண்பட்டு வார்த்தை பழையபடி தான்பேச

வெறுமை யகன்றுதென்று மேதினியார் கொண்டாட
பொறுமையுள்ள பஞ்சவர்கள் புவியாண்டு விந்தமதில்
போன ததிசயந்தான் புதுமை புதுமையென்று
ஆனசென மேசனுக்கு அறிவந்த தாகையினால்

சத்திய வானாவிசென்று சத்தி விளங்குதென்று
பத்தியுடன் கோவில் பஞ்சவர்கள் கோவிலென்று
கட்டி முடித்துக் கைகுவித்துப் பூசைபண்ணி
திட்டி கழித்துத் திருக்கோவி லாலயமாய்

பூமிதனி லிந்தப் பூலோகங் கொண்டாட
ராமனே ராமாவென்று நாதமணி தானாட
திருவிளக்கு நின்றிலங்க தீபமுடன் ரூபமது
பரிமளங்கள் வீசப் பஞ்சவர்கள் கோவிலென்று

வருவார் பணிய வருவினையள் தானகல
தருவார் துளபமுடன் சந்தான முண்டாக
மெய்யதிய காட்டி விளங்கியே லோகமெல்லாம்
அய்வ ரதிசயங்கள் அன்புடையோர் கொண்டாட

தன்மர் கதையென்று தாரணியி லேதுதிக்க
நோய்கள் பலதீர நொந்த மனங்களிப்ப
பேய்கணங்க ளகலப் பிரமகத்தி தான்தீர
குன்மங் குறைநோவு குலைமுட்டி நீராமை

அஷ்ட்ட குன்ம வாயுவுடன் அடங்காத பீலிகையும்
வெட்டை கரப்பான் வெடிசூலை மேகமுதல்
அட்ட கிரந்திபல சோனசகர மாலையுடன்
அந்திர வாயுவும் அண்டப் பவுத்திரமும்

முந்தி யிடுபுலவி முழங்கால் கரப்பனுடன்
கன்னக் கரப்பன் கடியகண்ட மாலையுடன்
அன்னக் கிறுச்சி யளிநீ ரளிவுமுதல்
பல்குத்துப் பல்லரணை பாண்டுநீ ராம்பலுடன்

உடல்குத் துடம்பிளைத்த லோடுங் கரப்பனுடன்
ஈளை இருமல் இளைப்புப் பெருவயறு
கோழை குவாளை கூடியனீர்ப் பீசமுடன்
வாத கரப்பன் மண்டைப் பொரிகரப்பன்

காதிரைச்சல் கண்புகைச்சல் கண்மா ரடைதல்முதல்
வைப்புப் புதைப்பு வரும்பில்லி சூனியமும்
வெம்புருவ துப்பூ விரணம் பலபலவும்
முகவாதஞ் சன்னி முடங்கல் தலைக்காய்ச்சல்

பகராத பித்தம் பகுத்தாத காசமுடன்
கடுத்த வயறுநோகல் கிண்டிப்புக் கெண்டையுடன்
அடுத்து நடுக்கல் சத்திசந்து வாதமுதல்
வலிப்பாவி சிப்பு வரந்திய லாட்சியுடன்

கலிப்புப் பிளவை கன்னோசி விப்புருதி
சண்டிவலி விப்பிருமல் தாதுநட்ட மானதுவும்
அண்டி வலுக்கோசை நோயந்தா வாயுமுதல்
பருப்படுவன் கில்விசங்கள் பண்டிப்பூத் தெண்டன்வலி

கருப்பனித்தூர் கிருமி கனவுமிகச் சொற்பனமும்
உள்ளுருகி வாட்டும் உடம்பி லெலும்புருக்கி
வெள்ளுவை வெள்ளுதடு வீங்கும் பெரும்பாண்டு
எரிபிளவை சுரிபிளவை யிடுமொன்று மாடுமுதல்

அரிபிளவை சப்பாணி ஆனந்த வாயுவுடன்
கழல்வாதம் குளிர்காய்ச்சல் காச சுவாசமுடன்
அழல்நோய் பொருமலடைப்புநீர் கல்லடைப்பன்
சீதசுரம் பாவை சேட்டுமத்தின் கோட்டாலை

வாதசுரம் பித்தம் வலுத்தசுர மானதுவும்
எழுஞாய றாகி எழுந்த வியாதிமுதல்
பழுஞாய றான பாரிச வாயுமுதல்
தீருமென்று மாயன் திருவாய் மொழிந்தட்டி

ஆருந் தவமுடையோர் அரிகரி யென்றுசொல்லி
வாக்கும் மனமுமொன்றாய் மகிழ்ந்திருந்து தான்கேழ்க்க
பறக்கும் பழிபாவம் பறந்துவிடுஞ் சத்தியமே
என்னதவ மானாலும் இச்சித்துக் கேட்போர்க்கு

சொர்ண மயமாகச் சொரிவாள் துரோபதையும்
பிள்ளைத் தவமும் பெருந்தவமும் தான்கொடுத்து
கிள்ளை துரோபதையும் கேட்டவரந் தானீந்து
நேசமுள்ள காரியந்தான் நிமிசத்தில் வேணுமென்று

வீம னுதவிசெய்ய விசயன் மிகமகிழ்ந்து
சென்று செலுந்தி திசைகளெட்டுங் கீர்த்திகொள்ள
வென்று நகுலன் வெகுதவங்கள் தானீய
மன்று சகாதேவன் மற்றுமுள்ள நோய்பலவும்

பண்ணுமொரு ஞானம்1 பாவையால் தான்தீர்க்க
தன்மர் குருவாகத் தான்கொலுவி லேஇருக்க
சத்தி விளங்கச் சகல பிணிதீர
வெற்றிகொண்ட தன்மரென்று விண்ணுலகும் மண்ணுலகும்

அங்குந்திரு மாலிடத்தில் ஐவர் சிறந்திருக்க
இங்குமய்வர் தானிருந்து ஏற்ற வரங்கொடுகக
பெற்றார் பெருமையென்று பேருலகோர் கொண்டாட
உற்றா ருறமுறையார் உருக்கலந்து பணிமாற

பூங்கோவில் வாசினையன் போதவே தான்மணக்க
தங்க மணிவிளக்குச் சந்நதியில் நின்றிலங்க
சாம்பிராணி வாசஞ் சந்நதியெல் லாம்மணக்க
தேம்பாமல் நாதமணி திருச்சங்கு தான்முழங்க

தீரா வினைதீர்க்கும் திறமுஞ் சவுரியமும்
தாராருஞ் செனமேசன் தானறிந்து போற்றிசெய்ய
பொறுமையுள்ள பஞ்சவர்கள் பூலோகந் தன்னிலிப்போ
வறுமை பிடித்திருந்த மெய்மறதி தான்தீர்ந்தோம்

---

1. அஞ்ஞானம் யெனல் பொருந்தும்

விதிவசத்தை ஆராலும் விலக்கமுடி யாதெனவே
அதிசயமாய்க் கொண்டாடி அத்தி புரநகரில்
வீற்றிருந்து செங்கோல் விளங்கு முடிசூடி
பாத்திபனுஞ் சூழ பாரமன்னர் தான்சூழ

சிங்கா சனத்திருக்கும் செங்கோல் செலுத்துதற்கு
மங்கா வியாசருடன் வாக்கியமுந் தான்கேட்டு
நினைத்து சினமேசன் நெஞ்சுருகித் தான்தேட
அனைத்துயிர்க்கும் வேத வியாசர் அறிவுகந்து

பொன்னுலகம் விட்டுப் பூலோகம் தன்னில்வந்தார்
மின்னுலவு மந்த வேத வியாசரையும்
கண்டு சினமேசன் கண்களிக்கத் தான்போற்றி
தொண்டனுக்குப் புத்தி தோத்தமுட னீருரைத்தீர்

அந்த விபரமதை யானறிந்து பாராமல்
வந்த விறுமைகதி[1] மாத்திவிக்க வேண்டியென்னை
பஞ்சவர்க ளய்வர் பாராண்டு பாரிழந்த
வஞ்சமில்லா வைகுண்டம் வாழ்பதிக்குப் போனகதை

கேளுமென்று சொன்ன கிருபைப் படினானும்
நாளுமொரு மாசம் நன்றாகத் தான்கேட்டேன்
ஆளும் விறுமையது அகன்றுதுகாண் மாமுனியே
கோளும் வினையும் கொடுமையளும் தான்விலகும்

போனதினா லய்வர்கள் புதுமை அதிசயந்தான்
தானமுடன் கோவில் தான்சமைத்துப் பூசைபண்ணி
வானவரே இப்போது வைத்து வணங்குறேன்காண்
என்று செனமேசன் இவ்வார்த்தை தான்கூற

அன்றுகுரு வேத வியாசர் மனமகிழ்ந்து
சத்திய வாய்மை தவறாதா ரிப்போது
நித்தியமா யெங்கும் நிரந்தரமாய்த் தானவர்கள்
இங்கு மிருப்பார் எவ்வுலகுந் தானாள்வார்

---

1. பிரம்மஹத்தி

அங்கு மிருப்பா ராசரோ டாசனத்தில்
நல்லவர் பஞ்சவர்கள் நற்றவம்பெற் றாரெனவே
வல்லபுகழ் மாமுனிவன் மகிழ்ந்துசென மேசனுக்கு
ராசசிங் காசனத்தில் நன்றாய் இருந்துசெங்கோல்

வாச முடன்செலுத்தும் மன்னா வெனவேதான்
வாழ்த்தி விடைகொடுத்து மனமகிழ்ந்து செனமேசன்
போற்றி நமஸ்கரித்துப் பொற்பாதம் பூண்டுகொண்டு
சாத்திய மாமுனியே சரணமெனக் கைதொழுது

### விருத்தம்

பூருவத் தரசு நாட்டி பூவுல கனைத்தும் பூட்டி
வேறுசொற் பகையுங் காட்டி மித்திர பேத மாகி
கூறுமுற் கதையுங் காட்டி குலத்தொழில் புரிய விட்டீர்
பேறுபெற் றைவ ரென்று பெருமையும் முடித்தாய் போற்றி

அடியேன் செய்த பிழைபொறுத்தீர் அரசு நிறுவித் துயர்தீர்த்தீர்
சிறியே னுனது பயலாகி சித்த மிரங்கி யனுதினமும்
வெறியே யகல வகைபுரிந்தீர் விட்ட குறையும் நிறைவேற
குறியாய் மகுட முடிசூட்டும் கோவே எனது குலக்கொழுந்தே

இன்னஞ் சிறியேன் கலியுகத்தில் இருந்து மெலிந்து இடையாமல்
முன்னஞ்சு பேர்க்கும் நூத்துவர்க்கும் மொழியும் விபரம் அதுபோல
வின்னெஞ் சமார் நடுஞாயம் விரும்ப உரைத்து அடியேனை
கன்னெஞ் சறிவு தானதுபோல் தற்காத் தருளுஞ் சற்குருவே

முன்னாள் நடந்த வழிவசமும் முறையு மெனக்குத் தெரியாது
இன்னாள் நடக்கும் விபரத்தால் இருந்து மறந்து சடையாமல்
அந்நாள் கலியன் வந்ததினால் அய்வர் நடந்தா ரரியிடத்தில்
பின்னா ளுமக்கு நானடியேன் பேசா தருமை ஆழ்வாயே

குருகுலத் தரசர்க் கெல்லாம் கொத்தவ ருத்த வேளை
வருகெனச் சமய மென்பேன் வந்தருள் புரிந்து நீரும்
மருவெனத் தடுத்தாட் கொண்டு கொற்றவா அடியேன் மீதில்
தருவெனக் கனக மீயும் சற்குரு நாதா போற்றி

நடை

தோத்திரமுஞ் சொல்லித் தொழுதசன மேசனுக்கு
வாழ்த்தி விடைகொடுத்து மாமுனிவன் தான்போனார்
சாது செனமேசன் தாரணியோர் போற்றிசெய்ய
இருந்தார் கொலுவில் ஏகசிங் காசனத்தில்

வருந்தார் தமக்கு வணங்காக் குடோரியுமாய்
கலியுகத்தி லிந்தக் காரணமாய் நற்கதையை
சலியாமல் கேட்டுத் தான்விறுமை தீருகையால்
பலிதமுள்ள தன்கதையைப் பட்சமாய்த் தான்கேட்டு

எழுதிப் படித்தோர்க்கும் இன்புற்றுக் கேட்டோர்க்கும்
தொழுதுவை குண்டகதை சொல்லி விரித்தோர்க்கும்
வைகுண்ட மென்றொருக்கால் வாயினால் சொன்னோர்க்கும்
மெய்கொண்ட வாசம் விஷ்ணுபத முண்டாகி

வந்த வினையும் வருவினையுந் தான்தீர்ந்து
செந்திருமால் வைகுண்டஞ் சேர்ந்திருப்பார் கண்டீரே
இந்தவை குண்டகதை இயல்பாக முன்னாளில்
சிந்தைமகிழ் சிரங்க ராச ருடசீஷன்

**வெங்கி யருள்வடவன்** விளம்பினா னிக்கதையை
பொங்கிய சொல்தமிழைப் பூரித்து நன்றாக
முதலை முதல்தெரிந்து முற்கதையுந் தான்பார்த்து
ஒருசொற் பொருளை ஒன்றுபத்தாய்த் தான்விரித்து

கருவாக வேதெரிந்து கற்பித்தோன் விற்பனமாய்
திருந்துபுகழ் வைதிகத்தோன் வீரை யாம்பதியான்
பொருந்து தவம்பெற்றான் புகளழகு தன்புதல்வன்
மன்னவனார் பொன்னழகும் மகிபனுட தன்மருகன்

அன்னதரு வானவர்க்கும் அன்புடையோர் தங்களுக்கும்
சொன்ன படிகேட்டுத் தொழுது மிகவணங்கும்
சீஷ ரடியார்க்கும் சீஷனாய்த் தானிருக்க
தாசனென்று கூறித் தமிழினா லிக்கதையை

தேடித்தமி ழாராய்ந்து திருவிருத்தந் தான்கலந்து
பாடிப் படித்தெழுதும் பாரிலுள்ளோர் தங்களுக்கும்
நூத்தன் பதுவிருத்தம் நுணுக்கமாய்த் தான்பாடி
பாத்தன் புருகிப் பனுவலுடன் தான்கலந்து

சேத்தம்பு போல திரட்டினா னிக்கதையை
கோத்திரமுந் தான்வாழக் கூறினான் கூறியசொல்
வாழி மிகவாழி மங்காமல் தான்வாழி
ஆழியசெங் கோல்செலுத்தும் அரசர் மிகவாழி

கேழ்ப்போர் படிப்போர் கிளைஞருடன் தான்வாழி
அன்னசுத்தம் வாழி அனைவோருந் தான்வாழி
சின்னஞ் சிறுபிள்ளையள் செல்வமுடன் தான்வாழி
ஆல்போல் தழைத்து அருகதுபோல் வேரூன்றி

பால்ப்பசுவு முண்டாகிப் பாரில் மிகவாழி
ஓங்கிய நால்வேதம் உயர்குலமுந் தான்வாழி

**விருத்தம்**

அரிகரி ராமா வென்றால் அநேகமாம் செல்வம் சேரும்
அரிகரி ராமா வென்றால் அறங்களும் மிகுந்து வாழும்
அரிகரி ராமா வென்றால் அவர்கள் மெய்ஞ் ஞானியாமே
(மூன்று வரிகளே உள்ளன)

மந்த வாரமும் வைகுண்ட மாலுக்கு
எந்த வாரமும் ஈடல்ல வென்றுதான்
அந்த வாரம் விரத மனுஷ்டித்து
இந்த வாரம் எழுதி முடிந்ததே

மன்னுயிர்க் கெல்லாம் தானும் வைகுண்ட கதையின் வாசம்
தன்னுயிர் போலே லோகத் தராதல மிவையு மாகும்
மன்னுயிர் தேவர் மூவர் விரும்பியே உத்துக் கேழ்ப்போர்
பொன்றுயர் மேரு வாகிப் புகழுடன் புவியில் வாழ்வார்

வாழ்வார்பின் நோவில் லாத ... ... ... ... நெடியமால் கதையைக்
கேழ்க்கத் தாழ்பவரில்லை ... ... ... ... செகத்தினி லிருப்பார் தாமே

மைந்தர்க ளுண்டாம் ... ... ... ...
வந்தநோய் பிணியுந் தீரும்
வைகுண்ட மென்று சொல்லி ... ... ... னும்
நந்தகோ பாலா வென்ன நமனும்வந் தணுக மாட்டான்

... ... ... . நாய்நரி விஷங்கள் தீண்டா நடுக்கிய வாத பித்தம்
... ... ... பாய்புலிசோர ... ... ... ளோடுந் தரணியில்
வாழ்வா ரின்னம்

வைகுந்த அம்மானை முகிந்தது முற்றும்

பவ வருஷம் மாசி மாதம் 13-ஆம் தேதி மகா நட்சேத்திரமுங்கூ ... ... ... ... தேவங்குடியிலிருக்கும் ரெங்க சவுநாயக்கர் ... ... ... ... வேங்கடபதி நாயக்கருக்கு வைகுண்ட அம்மானை ... ... ... முற்றும்.

வாத்தியார் ஆவுடையப்பன்



# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும் சுவடி எழுதியோரும், அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்
10—1—2004

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குனர்
சரசுவதி மகால் நூலகம்

# வைகுந்த அம்மானை

## சுவடி எண் 1368-ல் உள்ள விருத்தங்களின் அகர வரிசைப்பட்டியல்


| | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அக்கமும் நீயே | 299 |
| அங்குசக் கரனே | 280 |
| அடியார்க் கிடறு | 163 |
| அடியேன் செய்த | 330 |
| அட்சரமு மரி | 248 |
| அண்டரு முனிவர் | 261 |
| அத்தனார் சுதனே | 197 |
| அந்தணர்க் கரசே | 272 |
| அந்தணர் வழக்கும் | 113 |
| அந்திரமே | 283 |
| அய்யகோ ராமா | 91 |
| அய்யா கதவு | 197 |
| அய்யோ மறையோன் | 156 |
| அரிகரி ராம | 128 |
| அரிகரி ராமா வென்றால் | 332 |
| அரியெனும் மெழுத்தி | 248 |
| அருகின்ற அஞ்சாய் | 280 |
| அருந்தவர்க் கெட்டா | 279 |
| அருமறைப் பெருமா | 279 |
| அல்ல வெழுந்து | 171 |
| அளவிலா தனந்த | 279 |
| **ஆ** | |
| ஆசை இருந்த | 291 |
| ஆடும் மயிலினங்காள் | 284 |
| ஆண்டவர் நடந்தார் | 113 |
| ஆண்டவா உந்தன் | 260 |
| ஆதவா உன்னை | 319 |

| | பக்கம் |
|---|---|
| ஆதியி லுனக்கு | 273 |
| ஆத்தும் வேத | 146 |
| ஆயனார் தூதன் | 76 |
| ஆயனே நந்த | 170 |
| ஆயுதந் தலைமேல் | 95 |
| ஆவதோர் கால | 80 |
| ஆழியுந் திசையே | 299 |
| ஆறுங் குளமும் | 300 |
| ஆனை முகமு | 197 |
| **இ** | |
| இடைந்தே மனமு | 175 |
| இப்படி அநேக | 146 |
| இப்படி இறையோன் | 84 |
| இப்பிறம் சேதீ | 106 |
| இளையவ ரின்னம் | 106 |
| இன்பமும் பொருளும் | 279 |
| இன்னஞ் சிறியேன் | 330 |

| **உ** | பக்கம் |
|---|---|
| உத்தொருவசனம் | 75 |
| உந்தனைக் கண்ட | 313 |
| உந்தன் மலர்த்தாள் | 249 |
| உருவாய் உருவி | 164 |
| **எ** | பக்கம் |
| எங்குமாய் நின்ற | 80 |
| எல்லாப் பாடும் | 299 |
| எல்லா முனது | 291 |
| என்று மழியாப் | 292 |
| என்னை எமனு | 189 |
| என்னைப் பிரியா | 284 |
| **ஏ** | |
| ஏங்கிநீர் முகங்கள் | 140 |
| ஏதறியேன் யானும் | 284 |
| ஏது மறியே னெனை | 247 |
| ஏமனே அணுகா | 273 |

| ஐ | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஐந்து காமு | 174 | கருத்தைப் பொருளை | 127 |
| ஐவருந் துணிந்து | 127 | கருநிறப் பட்டு | 161 |
| ஐவரு மிருந்து | 74 | கர்த்தனே கரிய | 279 |
| ஐவர்க்குஞ் சகாய | 279 | கலங்கும் வேளை | 272 |
| ஐவர்க்குந் தேவி | 189 | கல்லோ மரமோ | 300 |
| ஐவர்க்கு முன்னே | 249 | களப கஸ்தூரி | 261 |
| ஒ | | கற்பகக் களிறே | 197 |
| ஒன்றாய் இரண்டாய் | 291 | கா | |
| ஒன்று மறியோம் | 163 | காசினி அளந்த | 75 |
| ஓ | | காசினி தன்னில் | 292 |
| ஓங்குரு வாழ்க | 61 | காட்டுப் புலியே | 283 |
| க | | காணவுங் கடவ | 280 |
| கடதட விகடித | 175 | காயமிழந்து | 248 |
| கடி மறலி தானந் | 273 | காயமும் வருமோ | 91 |
| கண்ட பொழுதே | 319 | காளி பகவதி | 200 |
| கண்ணலே கமல | 261 | கு | |
| கண்ணுங் கருத்து | 272 | குடி தானுமக்கு | 261 |
| கரியமா லருளி | 84 | குருகுலத் தரசர் | 330 |
| | | குருகுலத் தோர் | 148 |

| கே | பக்கம் |
|---|---|
| கேசவா முகுந்தா | 251 |
| **கோ** | |
| கோலத்துடனே | 291 |
| **ச** | |
| சங்கு சக்கிர | |
| சரணம் சரணம் | 127 |
| **சா** | |
| சானகி ராமா | 319 |
| **சி** | |
| சித்தசரூபனான | 74 |
| சித்தன் போக்கு | 126 |
| **சீ** | |
| சீரியதேவர் | 300 |
| **சு** | |
| சுகந்த வாச | 320 |
| **சூ** | |
| சூதினால்க் கபட்ஞ் | 312 |
| **செ** | |
| செனன மரண | 248 |

| சொ | பக்கம் |
|---|---|
| சொல்லிய கதையை | 161 |
| **சோ** | |
| சோதியாய் நின்ற | 261 |
| **த** | |
| தப்புடன் சங்கு | 105 |
| தம்பித் துணையே | 311 |
| தம்பிமார் | 83 |
| தம்பியர் நால்வர் | 76 |
| தலையில் விதித்த | 139 |
| தன்மரும்பின் | 272 |
| **தா** | |
| தாது மலாந்த | 200 |
| தாருமெனக்குச் | 284 |
| **தி** | |
| திக்கறியேன் | 261 |
| திரிகோண மலை | 292 |
| திருவடி சரணந் | 272 |
| **து** | |
| துடரும் வினை | 300 |

| | பக்கம் |
|---|---|
| துணையாய் எனக்கு | 201 |
| துந்துமி பிடாரி | 200 |
| **தூ** | |
| தூயதோர் தன்மர் | 260 |
| **தே** | |
| தேச மிழந்து | 127 |
| தேச மிழந்தும் பாராமல் | 163 |
| தேவிய ரமுத | 105 |
| **ந** | |
| நடந்து துயர | 200 |
| நன்றதோர் தம்பி | 84 |
| **நா** | |
| நாகமே நீள் | 283 |
| நாக்கரசே | 283 |
| நாடி தளன்று | 248 |
| நாடி நடந்து | 126 |
| நாதகீதா | 320 |
| நாரணர் நம்மை | 113 |
| நாரணர் பாதந் | 251 |
| நாவிக் கமலத் | 272 |
| நரனோ வசன | 127 |
| **நீ** | |
| நீலமாய் எங்கும் | 262 |
| நீலம் பரந்து | 94 |
| **நெ** | |
| நெருப்பாறுடைய | 170 |
| நெருடாய் உனது | 300 |
| **ப** | |
| பஞ்சமா பாதகங்கள் | 113 |
| பஞ்சவர்கள் | 312 |
| பஞ்சவர்கள் தனக்கு | 188 |
| பஞ்சவர் நூற்றுவர் | 148 |
| பஞ்சவர் பேரன் | 146 |
| பட்டேன் புவியீ | 313 |
| **பா** | |
| பாரத முடியு | 148 |

| | பக்கம் |
|---|---|
| பாரே பெருவரையே | 283 |
| பார்தனை யளந்த | 57 |
| பார்ப்பார் | 91 |
| பாவியேன் பூமி | 260 |
| **பி** | |
| பிறவித் துணையுந் | 291 |
| பிறவி மயக்க | 312 |
| **பூ** | |
| பூருவத் தரசு | 330 |
| **பெ** | |
| பெரிய திருமால் | 261 |
| **பே** | |
| பேரால் பெரிய | 312 |
| **பொ** | |
| பொறுமையுடைய | 312 |
| **ம** | |
| மண்ணுளோர் வாழ்க | 61 |
| மந்த வாரமும் | 332 |
| மந்திரப் பொருளே | 128 |

| | பக்கம் |
|---|---|
| மரண மிழந்து | 249 |
| மனது விறுமை | 164 |
| மன்னுயிர்க் கெல்லாம் | 332 |
| **மா** | |
| மாத்திரைப் போதா | 126 |
| மாமணித் துளப | 300 |
| மாயவ னுலகை | 106 |
| மாயனார் தூது | 312 |
| மாயனார் வாழு | 292 |
| மாரனை விழித்த | 292 |
| மாருதப் பிரசண்ட | 279 |
| **மு** | |
| முன்னாளிருந்த | 312 |
| முன்னாள் நடந்த | 330 |
| முன்னாள் முதல்வன் | 280 |
| முன்னாள் முனிவன் | 156 |
| **மூ** | |
| மூலப் பொருளே | 173 |
| மூவரும் வந்தோம் | 273 |

| யா | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| யான் செய்த வினை | 311 | வாழ்வார் பின் | 333 |
| **ரா** | | வானவரிமையோர் | 113 |
| ராகவா முத்தா | 127 | **வி** | |
| ராமா ராமா | 320 | விட்டுப் பிரிந்த | 95 |
| **வ** | | விதித்த விதியைப் | 161 |
| வக்கிர தந்த | 200 | விதியின் பயனை | 139 |
| வந்த வனத்தி | 189 | **வீ** | |
| வருந்தி உனையே | 299 | வீமனே விசையர் | 114 |
| வருந்து மடியார் | 197 | வீமன் விசையன் | 248 |
| வருவாய் கமல | 201 | வீமன் விசையன் நகுலன் | 76 |
| வல்லபை தனக்கு | 174 | **வே** | |
| வழியில் பயங்கள் | 127 | வேத வியாசர் | 161 |
| வழியுந் திசையுந் | 284 | வேற்றுமை உனக்கே | 313 |
| **வா** | | **வை** | |
| வாச முனிவர் | 197 | வைகுண்டம் வைகுண்டம் | 284 |
| வாரிதூ முலகு | 57 | வைகுண்டவாசல் | 319 |
| வாழ்ந்து வாபர | 113 | | |